


# புதையலும் பேழையும்





"கவிஞர்கோ"

கோவை. இளஞ்சேரன்



"கவிஞர்கோ" கோவை. இளஞ்சேர னாரை அறியாத தமிழர் இலர். எழுத் தாற்றலும் சொல்லாற்றலும் மிக்க செயல் வீரர்.

நாகையில் தமிழ்ச் சங்கம் நிறுவிப் பல புலவர்களை உருவாக்கிய இவரைத் தமிழ்நாட்டரசு "நல்லாசிரியர்" என்று பாராட்டியது.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் நிகழ்த்திய பாரி விழாவில் டாக்டர் கலைஞர் அவர்களால் "கவிஞர்கோ" பட்டம் வழங்கப் பெற்றார்.

'பூம்புகார்க் கலைக்கூட எழுநிலை மாடம்' இவரது புலமையின் ஆய்வுச் சின்னமாக நிற்கின்றது.

"கோவை. இளஞ்சேரன் கவிதைகள்" முதலாக வெளிவந்துள்ள இவரது நூல்கள் தமிழர்க்குப் பயன்சேர்ப்பவை.

தமிழரசு இதழில் வெளிவந்த ஆராய்ச்சிக் கட்டுரைகள் ஆராய்ச்சி மாணவர்க்குப் பாடமாவதற்குத் தக்கவை.

தமிழகப் புலவர் குழுவின் தற்போ தையச் செயலர்.

**சோம. முத்தய்யன்** எம். ஏ.,
பாரத ஸ்டேட்டு பாங்கு,
தஞ்சாவூர்.

# புதையலும் பேழையும்

'கவிஞர்கோ'
கோவை. இளஞ்சேரன்.

தமிழ் நாட்டரசின்
உதவி பெற்ற
பதிப்பு

கலைக்குடில்
வெளியீடு
நாகப்பட்டினம்

**நூல் அளவை :**

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | புதையலும் பேழையும். |
| ஆசிரியர் | : | "கவிஞர்கோ" கோவை. இளஞ்சேரன். |
| பொருள் | : | சொல்; பொருள் ஆய்வு— கட்டுரைத் தொகுப்பு. |
| வெளியீட்டகம் | : | கலைக்குடில் வெளியீட்டகம், நாகப்பட்டினம் – 611 001. |
| வெளியீடு | : | 8 |
| பதிப்பு | : | முதல் |
| தாள் | : | 14. 9 |
| அளவு | : | 21/14 |
| படிகள் | : | 1000 |
| பக்கம் | : | 16 + 256 |
| காலம் | : | 2013—ஆவணி ; ஆகஸ்ட்டு—1982 |

**விலை : நூலகக்கட்டு உரூவா. 21/-**

| | | |
|---|---|---|
| அச்சகம் | : | குருகுலம் அச்சகம், திருமறைக்காடு — 614 810 |
| எழுத்து | : | 10, 12 புள்ளிகள். |
| ஓவியம் | : | அமுதோன், சென்னை. |

விற்பனை உரிமை :

ROCKFORT Publications (P) Ltd.

1, MEERAN SAHIB STREET, MADRAS-2

சென்னை,
அண்ணா பல்கலைக் கழகத்
துணை வேந்தர்
**டாக்டர் வா. செ. குழந்தைசாமி**
*B. E., D. S. S., M. Tech., Ph. D., D Litt.,*
அவர்கள் வழங்கிய

## அணிந்துரை.

பொதுவாக இந்திய மொழிகளில், ஆய்வு நூல்கள் கணிசமான அளவில் வெளி வருவதில்லை. வருவனவற்றுள்ளும் பரந்த பார்வையும், ஆழ்ந்த புலமையும் அணியெனக் கொண்டவை அரிதே யாகும். அவற்றுள்ளும் சொல்ல வந்த பொருளைச் சுவையுடன் சொல்பவை மிக மிகச் சில. ஆய்வு, ஆழ்ந்த சிந்தனை ஆகியன கனமானவை; கடின மானவை. எனவே, சுவையற்றவை என்ற முன் கூட்டிய முடிவில், பலர் அவற்றை அணுகுவதும் இல்லை. இந்நிலையினின்று முற்றிலும் மாறுபட்ட ஒரு படைப்பை, புலவர், 'கவிஞர்கோ' கோவை.

இளஞ்சேரன் 'புதையலும் பேழையும்' என்ற நூல் மூலம் நமக்கு அளிக்கிறார். அவர் புலவர் மட்டுமன்றி, கவிஞரும் ஆவார். எனவே, புலமையும் சுவையும் பொருந்திவந்திருக்கின்றன விருப்பு வெறுப்பற்று உண்மை தேடுவது ஆய்வுப்பணி. உணர்வும் கற்பனையும் உயர்ந்து நிற்பது கவிதையுலகம். இவ்விரண்டின் மரபுகளையும் காத்து நிற்கும் புலவர் கோவை. இளஞ்சேரன் இருவேறுலகினை இணைக்கும் பணியை எளிதாகவும் இயல்பாகவும் செய்திருக்கிறார். பாராட்டப்படவேண்டிய படைப்பு.

சொல், பொருள் இரண்டையுமே தொட்டு இக் கட்டுரைத் தொகுப்பின் ஆய்வு ஊடுருவுகிறது. சொல்லாய்வைச் சுருக்கமாக மூன்று தலைப்புகளில் முடித்துக் கொண்டு, இயல்பாகவே சுவை மிகுந்த பொருளாய்வில் சற்று விரிவாக ஈடுபடுகிறார் ஆசிரியர். சொல்லாய்வின் மூன்று கட்டுரைகளும் பொன்னானவை. பொருண்மை மிக்கவை. அன்னையைக் குறிக்கும் 'அம்மா' என்ற சொல், சிறு மாற்றங்களுடன், பல மொழிகட்கும் பொது என்றே கூறலாம்.

அதன் இயல்பு நிலையை 'அ' என்ற ஒலியின் பிறப்பையும், 'ம்' என்ற ஒலியின் பிறப்பையும், அகர நீட்டமும் மகர மெய்யும் கலந்த 'மா' ஒலியையும் விளக்குவதன் மூலம் நிலைநாட்டும் பாங்கு வியக்கத் தக்கது. தமிழின் ஒலியமைப்பு, சொற் படைப்பு ஆகியவற்றின் அருமை பெருமை பற்றிப் பலவிதமாகப் புலவர்கள் விதந்து எழுதியும் பேசியும் வருகின்றனர். அவற்றைப் படிக்கும்

பொழுது அறிவியல் பார்வை கொண்ட பலருக்கு இக்கருத்துகள் மொழிப்பற்றாலும், முன்கூட்டியே மனத்தில் உறுதிப்படுத்திக் கொண்ட முடிவுகளை நிலைநிறுத்தும் விருப்பாலும் எழுந்தவையோ என்ற ஐயம் எழுகிறது. 'அம்மா' போன்ற கட்டுரையுள் காணும் செறிவும் தெளிவும் அதனை ஒரு சிறந்த ஆய்வு கட்டுரையாக்குகிறது. அடுத்து வரும் கட்டுரைகளான 'சொல்லும் நெல்லும்', 'தலையில் முளைத்த தலைகள்' ஆகியன சொல்லும் பொருளும் இணைந்த கட்டுரைகள். சொல்வதை ஆசிரியர் சுவை குன்றாது சொல்கிறார். அவரது இலக்கியப் பயிற்சியின் ஏற்றம் ஒளிவிடுகின்றது.

தமிழ் இலக்கியம் ஒரு களஞ்சியம். அதைத் தன்னுள் கொண்ட பேழையைத் திறப்போர் முத்தும் மணியும் காண்பர். வரலாற்று விரிவும் காண்பர். இருந்தாலும் பொதுவாக இலக்கியப் புலவர்கள் தமிழ் இலக்கியம்பற்றிப் பேசும் பொழுது சொல் நயம், காட்சி வண்ணனை, கற்பனை வளம், உவமை நயம்—இவற்றை விட்டால் அறநெறிக் கருத்துகள் என்ற பகுதியிலேயே உள்ளத்தைப் பறிகொடுத்தவர்களாய் இருந்துவந்தனர். தமிழ் இலக்கிய ஏடுகளே பண்டைத்தமிழரது அறிவியல், பொறியியல், சமுதாய வாழ்வு ஆகியவற்றையும் அறியத் துணை நிற்கும் சான்றுகள் என்ற பரிமாணம் அவ்வளவாக உணரப் படவில்லை; உறுதிப்படுத்தப்படவில்லை. பேழையில் காணும் ஒன்பது கட்டுரைகளும் சமுதாயம், அறிவியல், பொறியியல், வரலாறு பற்றிய ஆய்வுக்கு உதவும்சான்றுகள் நிறைந்தகளஞ்சியமாய் இலக்கியம் அமைந்திருப்பதற்கு எடுத்துக்காட்டுகளாக உள்ளன.

'பிறந்த நாள்' ஒரு சமுதாயப் பழக்கம் பற்றிய ஆய்வு 'வள்ளுவர் வாழ்விடம்' வரலாற்றுப் பின்னணி கொண்டது. 'குட்டுவன் எடுத்த கோட்டமும்' அத் தகையதே. 'மருந்தில் மலர்ந்த இலக்கியம்' ஒரு மருத்துவ ஆய்வு. 'முடிச்சவிழ்க்கும் சொல்' ஒரு முடிச்சை மட்டும் அவிழ்க்கவில்லை; பல முடிச்சு களை அவிழ்க்க உதவுகிறது.

பண்டைத் தமிழர் கப்பல் கட்டுதல், கடற் செலவு, வேளாண்மைப் பாசனக் கட்டிடங்கள், நகரமைப்பு மனை, மாளிகை அமைத்தல் ஆகிய துறைகளில் அன்றையப் பின்னணியில் நோக்கும் பொழுது, மற்ற இனங்களிலும் உயர்ந்த நிலையினை அடைந்திருந்தனர். அதற்கான தடயங்களை நாம் இதுவரை முயன்று தேடவில்லை. மண்ணில் மறைந்த வற்றை நாம் தோண்டவில்லை. கடலில் அமிழ்ந்த வற்றை நாம் ஆழ்ந்து முழ்கிக் காணவில்லை. நமக் கிருப்பது பெரும்பாலும் இலக்கியச் சான்றுதான். இலக்கியத் துணை கொண்டு, எழுநிலை மாடம் என்ற ஒரு கட்டிட வகையை ஆசிரியர் ஆழ்ந்து ஆய்ந்து எழுதியிருக்கிறார். 'எழுநிலை மாடம்' ஓர் எடுத்துக்காட்டு. இத்துறையில் அறிஞர்கள் ஆய்வுக்கு வாய்ப்புகள் நிறைய உள்ளன. புலவர் கோவை. இளஞ்சேரன் அவர்களது இக்கட்டுரை இதற்கு ஒரு தொடக்கமாக அமைய வேண்டும்.

நமது பண்டைய வரலாற்றுக்கு இலக்கியம் ஓரளவு சான்று பகர்கிறது என்று கூறினேன். இலக்கியம் கற்பனையும், கதையும் நிறைந்தது. எனவே, அதில் வரலாற்று உண்மை தேடும் பொழுது எச்சரிக்கை தேவை. இதை மறுப்பதற்

கில்லை. ஆனால், ஒருசிலர் 'இலக்கியச்செய்தி எவ் விதத்திலும் வரலாற்றுக்குத் துணையாக அமை யாது' என்று வாதிடவும் செய்கின்றனர். இப்படிப் பட்டவர்களை நினைத்துத்தான், இலக்கியங்களில் காணும் நகரங்களைப் பற்றிக் குறிப்பிட்ட சர். சிவசாமி ஐயர் அவர்கள் கீழ்க்கண்டவாறு கூறினார்:

> "It would be absurd to suppose that such description of Cities and Towns in literature were not founded on a solid substratum of truth"

தமிழ் இலக்கியங்களில் வரலாற்றுக்குப் பெருந்துணையாக அமையும் தன்மை கொண்டது சிலப்பதிகாரம். ஆனால், அதில் வரும் ஒரு சில நிகழ்ச்சிகள் நாம் அதை அப்படியே ஒப்புக்கொள் வதற்குத் தடையாக நிற்கின்றன. 'முடிச்சவிழ்க்கும் சொல்', இந்த வகையில் ஏற்படும் பல சிக்கல்களை, நாம் மேலெழுந்தவாரியாக மட்டும் பார்க்காமல், சற்று ஊன்றி, ஆழ்ந்து, நுணுகி நோக்கும் பொழுது தெளிவு காண்பது இயன்ற ஒன்று என்ற பாடத்தை நமக்குப் புகட்டுகின்றது. அது ஒரு முடிச்சை மட்டும் அவிழ்க்கவில்லை. பல முடிச்சுகளை அவிழ்க்க ஒரு பாதையைக் காட்டுகிறது. சிலப்பதிகாரம் போன்ற இலக்கியம் வரிக்கு வரி வரலாறு என்று யாரும் கூற மாட்டார்கள். அப்படியாயின் அது ஓர் உயர்ந்த இலக்கியமாக அமைந்திருக்காது. ஆனால், அதில் கணிசமான வரலாற்று உண்மைகள் கிடைக் கின்றன என்பதையும் மறுக்க முடியாது. எனவே, இவற்றில் 'காட்சி எது, கற்பனை எது' என்று பிரிப்ப

தற்கு 'முடிச்சவிழ்க்கும்சொல்' போன்ற அணுகுமுறை பயன்படும்.

'இனிமைத் தமிழில் இறை வழிபாடு', சமயத் துறையினர் இன்றும் தீர்க்காத ஒரு சமுதாயப் பிரச்சினையைப் பேசுகிறது. வழிபாடு என்ற பரிமாணத்தையும் கடந்த ஒரு முக்கியத்துவத்தையும் இந்தக் கட்டுரையில் காட்டப்பட்டிருக்கும் மேற்கோள் களில் காணலாம். ஆழ்வார்கள், நாயன்மார்கள், கவிஞர்கள், புலவர்கள் ஆகியோர் பலரும் பல சூழ் நிலைகளிலும் 'ஆரியமும், தமிழும்' என்றே குறிப்பிட்டி ருக்கின்றனர். இந்தியத் துணைக் கண்டத்தின் பண்பாடு, பாரம்பரியம், சமயம், தத்துவம், இலக்கியம் ஆகியவற்றுக்கு இரு கண்கள் போன்று அமைந் தவை தமிழும், வடமொழியும். இந்த உண்மையின் அடிப்படையிலன்றி நாம் இந்தத் துணைக் கண்டத் தின் பண்டைய நிலையை முழுமையாக உணர முடியாது. ஐரோப்பிய நாகரிகத்திற்கு எப்படி இலத்தீனும், கிரேக்க மொழியும் அடிப்படைகளோ, அஃதே போன்று, இந்திய நாகரிகத்திற்குத் தமிழும் வடமொழியும் அடிப்படைகள் ஆகும். இதுஎளிதில் உணரக்கூடிய உண்மை. ஏனோ இதில் தொடர்ந்து ஒரு மயக்க நிலை இருந்து வருகிறது. ஆய்வாளர் களும் இந்தியப் பல்கலைக்கழகப் பேராசிரியப் பெரு மக்களும் இதில் எதனாலோ அவ்வளவாக ஈடுபாடு காட்டவில்லை. காட்டியவர்களும், சில உண்மை களைக் கண்டவர்களும் இப்பணியில் தொடர வில்லை.

"தமிழ்ச்சொல் வடசொல் எனுமிவ்விரண்டும்
உணர்த்தும் அவனை; உணரலும் ஆமே"

என்றார் திருமூலர். அவனை உணர மட்டுமன்று; இந்தியத் துணைக்கண்டம் தன்னையும், தனது பாரம்பரியத்தையும் முழுமையாக உணரவும் அவை பயன்படும்.

புலவர் கோவை. இளஞ்சேரன் அவர்களின் கட்டுரைகளிற் காணும் சில முடிவுகள் மேலை நாட்டு மரபு வழி ஆராய்ச்சியாளர்கட்கு ஏற்க இயலாதன வாவும் இருக்கலாம். ஆய்வும், அதன்வழி காணும் முடிவுகளும், கூட்டல், பெருக்கல் வாய்பாடு போன்றனவல்ல. இங்கு முடிந்த முடிபுகள் என்று எவையும் இல்லை. கிடைக்கும் செய்திகள், தடயங் கள் ஆகியவற்றின் அடிப்படையில், சில வாதமுறை களை வைத்து அவரவர் தெளிவிற்கேற்ப எடுக்கும் முடிவுகளே ஆய்வின் கண்டுபிடிப்புகளாகும். செய்தி களும் தடயங்களும் விரிவுபடும் பொழுது முடிவுகள் மாறலாம். பயன்படுத்திய செய்திகள், தடயங்கள் ஆகியவற்றின் தரம்பற்றிய தெளிவுகள் மாறும் பொழுதும் முடிவுகள் மாறலாம். இலக்கியத்தின் துணை கொண்டு தமிழ்ச் சமுதாயம் பற்றிய சில உரிமைகளை அறியும் முயற்சிக்கு, 'புதையலும் பேழையும்'. ஓர் எடுத்துக்காட்டு. முயற்சி பாராட்டத் தக்கது; போற்றத் தக்கது. தமிழகம் வரவேற்க வேண்டும்.

சென்னை
27—7—1982

**வா. செ. குழந்தைசாமி.**

**கட்டுரை மணம் பரப்பிய**
**இதழ்களும் மலர்களும் :**

தமிழ்நாட்டரசின் "தமிழரசு", "சீரணி" இதழ்கள்.

கரந்தைத் தமிழ்ச் சங்கத்துத் "தமிழ்ப் பொழில்".

ஈரோடு, "குறளியம்" இதழ்.

மலைநாட்டுக் கோலாலம்பூர், "தமிழ் நேசன்"
நாளிதழ் ஞாயிறு மலர்.

இலங்கை, "சுதந்திரன்" இதழ்.

நாகைத் தமிழ்ச் சங்க மறைமலையடிகளார்
நினைவு மலர்.

தஞ்சை, பெருவுடையார் கோவில் "சதய விழா மலர்"

சேலம், திருக்குறட் பேரவை மாநாட்டு மலர்.

பெங்களூர், தமிழ் இலக்கிய மன்ற ஆண்டு விழா மலர்.

இவற்றின் ஆசிரியப் பெருமக்கட்கும்
வெளியீட்டாளர்க்கும்
உளமார்ந்த நன்றி

**நூலாசிரியன்**

## குடில் உரை.

"கவிஞர்கோ" கோவை. இளஞ்சேரனாரது நூல்களை வெளியிடுவது கலைக்குடில் வெளியீட்டகம். இப்புதையலும் பேழையும் எட்டாவது வெளியீடு. இது பன்னிரண்டு ஆய்வுக் கட்டுரைகளின் தொகுப்பு நூல். இக்கட்டுரைகள் இதழ்களிலும் மலர்களிலும் பல காலச் சூழல்களில் வெளிவந்தவை,

முல்லை இதழில் கருமணி பதித்த அச்சாக இந்நூற் பதிப்பு அமைந்துள்ளது. பதித்த குருகுலம் அச்சகத்தார் விரும்பும் வகையெல்லாம் ஒன்றி நின்று அச்சேற்றினர். விற்பனை உரிமையைச் சென்னை (இ) ராக் போர்ட்டு பதிப்பகத்தார் ஏற்றுள்ளனர். அனைவர்க்கும் மனமார்ந்த நன்றி படைக்கின்றோம்.

இப்பதிப்பின் தனி அமைப்புகளைக் குறிப்பிட வேண்டும்.

சொல் ஆய்வு, புதையல். அதன் அறிகுறி பானை. பொருளாய்வின் அறிகுறி பேழை. இவை பொது முகப்பாகவும், தனித்தனிப் பகுதிகளின் முகப்புகளாகவும் வண்ண அச்சில் பளிச்சிட்டுக் காட்டப்பட்டுள்ளன.

கட்டுரை ஒவ்வொன்றும் தலைப்பின் விளக்க முகப்பையும், கட்டுரையின் மூலப் பின்னணியையும் பெற்றுள்ளது. ஒவ்வொரு கட்டுரையிலும், நூலின் பெயரும் ஆசிரியர் பெயரும் பதியப்பட்டுள்ளன.

இந்நூற் கருத்துகளில் தோய்வதன் வாயிலாக மேம்பட்ட மரபுகளின் உணர்வைப் பெறவேண்டும் என்னும் விருப்புடன் இதனைத் தமிழ்ப் பெருமக்கள் முன் வைக்கின்றோம்.

**கலைக்குடிலார்.**

# புதையலுக்கு வட்டி பேழை.

சிதைவற்ற எமக்குரிய
சிறுவீட்டை விற்றிட்டோம்; விலைக்குப் பெற்றோர்

புதையலொன்றை அதிற்பெற்றார்;
அஃதறிந்தெம் அன்னைமீ **னாட்சி யம்மாள்**


புதைத்துப்பின் அமைதியுற்றார்;
புகழுடம்பில் நிற்கின்ற அன்னைக் கின்று

புதையலதைப் பேழையுடன்
பொன்னடிக்கே படைத்திட்டுப் போற்று கின்றேன்.


— கோவை. இளஞ்சேரன்.

# புதையலும் பேழையும்

சொல்



பொருள்



## கட்டுரை அடங்கல்.

### சொற் புதையல்:


| | | |
|---|---|---|
| 1. | குழந்தை ஈன்ற அம்மா | 8 |
| 2. | சொல் ஒரு நெல் | 25 |
| 3. | தலையில் முளைத்த தலைகள் | 37 |


### பொருட் பேழை:


| | | |
|---|---|---|
| 4. | பிறந்த நாள் | 57 |
| 5. | வள்ளுவர் வாழ்விடம் | 77 |
| 6. | எளிதிலும் எளிது | 93 |
| 7. | எழுநிலை மாடம் | 111 |
| 8. | மருந்தில் மலர்ந்த இலக்கியம் | 151 |
| 9. | குட்டுவன் எடுத்த கோட்டம் | 167 |
| 10. | முடிச்சவிழ்க்குஞ் சொல் | 183 |
| 11. | கடல் நடுவே காரானை | 209 |
| 12. | இனிமைத் தமிழில் இறை வழிபாடு | 225 |


### பின் அடைவு


| | |
|---|---|
| ஆய்வு முடிபுகள் | 248 |
| நெறித்துணை நூல்கள் | 249 |
| அருங்கருத்துகளின் அகர நிரல் | 251 |

# முன்னுரை

வணங்கி மகிழ்கின்றேன்.

இலக்கியங்களின் இலக்குகளை — நுண்ணிய கருத்துகளை வெளிக்கொணர ஆழத் தோண்ட வேண்டும் ஆம், ஆழ்ந்து ஆராய வேண்டும் ஆராய்வில் அரும்புதையல் கிடைக்கும்; பொன்மணிகள் தோன்றும்.

நாட்டுப் புதையல், உழும்போதும் வெட்டும் போதும் எதிர்பாராமல்கிடைப்பது. ஏட்டுப் புதையல், இருக்கும் இடம் தேர்ந்து வேண்டுகைச் சூழலில் அகழ்ந்தெடுப்பது. பேழை, விலைக்களத்தில் கிடைக்கும். இப்பேழை இன்றியமையாத வேண்டற்பாட்டின் போது தோண்டிக்கண்ட பொன்மணிக்காக வனையப் படுவது.

தமிழ்நாட்டில் பாடு (பிரச்சினை) அடிக்கடி நேர்வது வாடிக்கை. வேண்டும் பாடும் நேரும்; வேண்டாப்பாடும்நேரும். தமிழரது மேம்பட்டகட்டிடப் பாங்கு எது? கண்ணகியார் கோட்டம் எது? இவை வேண்டும் பாடுகள். சிலப்பதிகாரம் கற்பனைக் காப்பியம்; தமிழ்நாட்டில் தமிழில் வழிபடுவதா? இவை வேண்டாப்பாடுகள். வேண்டும் பாட்டிற்கு ஊட்டத்தையும், வேண்டாப் பாட்டிற்குக் ஒடுக்கத்தையும் தர இந்நூற் கட்டுரைகள் அவ்வக்காலச் சூழலில் எழுந்தவை. அச் சூழல்களை அறிவிக்கும் நோக்கில் 'மூலப் பின்னணி' என ஒவ்வொரு கட்டுரைக்கும் ஒவ்வொரு முன்னுரை தந்துள்ளேன். மூலப் பின்னணிகள் படிப்போர்க்குக் கட்டுரைபற்றிய அறிமுக உரைகள். சொல்லாய்வைப் 'புதையல்'

என்றும் பொருளாய்வைப் 'பேழை' என்றும் உருவகப் படுத்தியுள்ளேன்.

மொழிப்பயனை அறியவும், பண்புள்ள மரபு வாழ்வை உணரவும் இப் **'புதையலும் பேழையும்'** பயன்படவேண்டும் என்பது எனது நோக்கம்.

டாக்டர் வா. செ. குழந்தைசாமி பி. ஈ., எம். டெக்., டி. எசு. எசு., பிஎச். டி., டி. லிட்., அவர்கள் வழங்கியுள்ள அணிந்துரை இந்நூற்கு மணிமுடி எனலாம். டாக்டர், பொறியியற் பேரறிஞர் மட்டு மல்லர்; மொழியியலிலும் மனம்பதித்த வல்லுநர். செம்மை வாய்ந்த கவிஞர். தேர்ந்த திறமும், தெளிந்த நெறியும் கொண்ட அவர்களது அணிந்துரையைத் திறனாய்வாகவே காண்கின்றேன். இந்நூலின் தகவை அணிந்துரை தெளிவுபடுத்துகின்றது. அவர்களது பெருந்தகவை எண்ணி நெஞ்சம் நிறைந்த நன்றி படைக்கின்றேன்.

இப்பதிப்பிற்கு உதவிய தமிழ் நாட்டரசையும் தமிழ் வளர்ச்சி இயக்ககத்தாரையும், என்பால் பேரன்பு கொண்டு உதவிய நண்பர்களையும் நெஞ்சில் நிறுத்தி நன்றி கூறுகின்றேன்.

படிப்போர்க்கும், பயில்வோர்க்கும், சுவைப் போர்க்கும் பயன்கொள்வோர்க்கும், உரைத்து மாற்று காண்போர்க்கும் என் நன்றி கலந்த வாழ்த்தை முன்கூட்டி வைக்கின்றேன்.

வணங்கி அமைகின்றேன்.

**கோவை. இளஞ்சேரன்.**

# சொற் புதையல்

[சொல்லாய்வுக்
கட்டுரைகள்]

சொல்லாய்வு ஓர் அகழ்வுப் பணி, மொழிப் புலமையும் நுண்ணறிவும் அதற்குக் கருவிகள். உணர்வு தழுவிய நேர்மை அதன் உரைகல். உழைப்பின் ஊதியம் ஒரு பொன் புதையலாகும். புதையலைச் சிதையாமல் எடுப்பது மொழிக்கு ஒரு பதியம் ஆகும்.

எனவே,

சொற் புதையல் ஒரு பொற்பதியம்.

புதையலில் பொற்கட்டிகள்:

1. குழந்தை ஈன்ற அம்மா.
2. சொல் ஒரு நெல்.
3. தலையில் முளைத்த தலைகள்.

# 1. குழந்தை ஈன்ற அம்மா.

குழந்தையின் குரல் மாந்தர் இனத்தின் முதற் குரல். குழந்தையை ஈன்று புறந் தந்தவள் அம்மா. ஈன்ற 'அம்மா' வைக் குழந்தை ஈன்று தருமோ?

ஈன்று தரும்; சான்று வரும்.

கட்டுரையின்
மூலப் பின்னணி,

## சிங்கப்பூரில் ஒரு வினா.

சிங்கப்பூரில் சாலன் காயூ என்றொரு பகுதி உளது. எனது மலைநாட்டுப் பயணத்தில் அங்கு தமிழ் ஆர்வலர்களுடன் கலந்துரையாடல் நிகழ்ச்சி ஒன்று தி. ஆ. 1997-சித்திரை-25க்கு நேரான 8—5—1966-இல் நிகழ்ந்தது.

ஓர் அன்பர், 'தமிழ் முதன்மொழி என்கிறீர்களே; அத்தமிழின் முதற்சொல் எது?' —என்றார்.

'அம்மா' - என்னும் சொல் அமையும் — என்று சுருக்கமான விடையை அதுபோது கூற நேர்ந்தது.

அதுபற்றிய ஆழ்ந்த நினைவால் எழுந்த ஆய்வு
**"குழந்தை ஈன்ற அம்மா"** வை
ஈன்றது.

வெளியிட்ட இதழ்:
**"தமிழரசு"**, தமிழ்நாட்டரசு வெளியீடு.
தி. ஆ. 2002—ஐப்பசி—15
**1—11—1971.**

குழந்தை
ஈன்ற
அம்மா.

# முதற் சான்று

'அம்மா' என்னும் சொல் மாந்தர் இனத்தின் முதற்சொல். இச் சொல் குழந்தையினது உணர்ச்சி வெளிப்பாட்டின் ஒலி யுருவம். மேலும் 'மாந்தரினத்தின் இயல்புப் போக்கில் எழுந்த மொழி தமிழ்' என்ற உண்மைக்குச் சான்றாகத் திகழ்வது.

இயற்றமிழ் எழுந்த சிறப்பை இயம்ப எழுந்த பாவேந்தர் பாரதிதாசனார்,

"அம்மாவென் றழைத்தல், காகா
 எனச்சொல்லல், அஃகென் றொன்றைச்
செம்மையிற் சுட்டல் என்னும்
 இயற்கையின் செறிவி னாலே
இம்மாநி லத்தை யாண்ட
 இயற்றமி ழேயென் னன்பே!
சும்மாதான் சொன்னார் உன்னை
 ஒருவன்பால் துளிர்த்தாய் என்றே"[1]

—என்று பாடினார்.

---

1 அழகின் சிரிப்பு : தமிழ்: 3

பாட்டின் முதலில் 'அம்மா' என்னும் சொல்லினைப் பா வேந்தர் அமைத்து, அது முதற்சொல் என்பதனைக் குறிப்பில் கொள்ள வைத்தார். "இயற்கையின் செறிவினாலே இம் மாநிலத்தை ஆண்ட இயற்றமிழ்" என்று தமிழ் இயற்கைப் போக்கில் தோன்றிய மொழி என்பதைக் காட்டினார். தமிழை "ஆதிசிவன் பெற்றுவிட்டான்" என்பது போன்ற கதைக்கருத்தை நயமாக மறுப்பவராய்ச் "சும்மாதான் சொன்னார், உன்னை ஒருவன்பால் துளிர்த்தாய் என்றே" எனக் குறித்தார்.

மேலைநாட்டு மொழியியல் அறிஞர் எர்டர் என்பார். "மொழியை மாந்தன் தோற்றுவிக்கவில்லை; இயற்கையில் தோன்றியது" என்றார். இக்கருத்தை, 'மாந்தன் மொழியைத் திட்டமிட்டு வலிந்து உண்டாக்கவில்லை; மாந்த உயிரினத்தின் உறுப்பு இயங்கும் இயற்கைப் போக்கில் மொழி தோன்றியது' என்னும் கருத்தில் கொள்ளலாம். இக்கருத்து எல்லா மொழிகளுக்கும் பொருந்தாது. மிகத் தொன்மை வாய்ந்த சில மொழிகளுக்கே பொருந்தும். நம் தமிழுக்கு நூற்றுக்குநூறு பொருந்தும்.

இயற்றமிழ் (இயல்+தமிழ்) என்னும் சொல்லமைப்பே 'தமிழ் இயற்கைப் போக்கில் இயங்கத் துவங்கிய மொழி' என்னும் உண்மையைச் சொல்கின்றது. 'அம்மா' என்னும் சொல் இவ்வுண்மைக்கு முதற் சான்றாய்த் திகழ்கின்றது. இச்சொல்லின் வழக்காற்றையும் வரலாற்றையும் காண்போம்.

## வழக்காறு

'அம்மா' அழைக்கும் – விளிக்கும் பொருளைத் தரும்சொல். அவ் விளிப் பொருளோடு இச்சொல் இக்காலத்தில் பல முனைகளில் வழங்கப்படுகிறது.

'அம்மா'—எனக் குழந்தை தன் தாயை அழைக்கின்றது.

'அம்மா'—என எப்பருவத்தினரும் தம் தாயை அழைக்கின்றனர்.

'அம்மா'—என எவரும் தாய் முறையில்லாது எத்தாயரையும் அழைக்கின்றனர்.

'அம்மா'—எனஎவரும் எப்பருவப்பெண்டிரையும் அழைக்கின்றனர்.

'பெரியம்மா', 'சின்னம்மா'—என அடைமொழியுடன் பெரிய, சிறிய தாயாரை அழைக்கின்றனர்.

'கண்ணம்மா'—எனப் பெயர்ச்சொல்லின் பின்னே அமைத்துப் பெண்டிரை அழைக்கின்றனர்.

இவ்வாறு பல முனைகளில் விளிப்பொருளில் அமையினும், முதலில் குறிக்கப்பட்ட குழந்தையின் குரல்தான் சொல்லின் மூலப் பொருளுக்கும், முதற் பொருளுக்கும் இயைபாவது. பிறவெல்லாம் பரந்துபட்ட வழக்கால் விரிந்தன. இவ்விரிவில் 'அம்மா' அழைப்புப் பொருளோடு பெயர்ப் பொருளையும் கொண்டது.

'என் அம்மா சமைத்தது'

'உன் அம்மாவைக் கூப்பிடு' —என உரையாடல்களில் 'அம்மா' விளிச்சொல்லாக அன்றி அம்மாவையே குறிக்கும் பெயர்ச் சொல்லாக அமைவதைக் காண்கின்றோம்,

'அம்மா' வைக் குறிக்கும் பெயர்ச்சொற்கள் பல:

"அவ்வை அம்மனை பயந்தாள்
அம்மையே யாயே அன்னை
அவ்வம் இல் ஆயி மோய்தாய்
ஈன்றவள் நாமம் ஒன்பான்"[1]

—எனச் சூடாமணி நிகண்டு ஒன்பது பெயர்களைக் குறிக்கின்றது. இப்பட்டியலில் அமையாத 'ஞாய்' என்னும் சொல்,

"யாயும் ஞாயும் யாரா கியரோ"[2]
"கைம்மிக ஞாயையும் அஞ்சுதி யாயின்"[3]

—என இலக்கியங்களில் 'உன் தாய்' என்னும் பொருளில் அமைந்துள்ளது. மேலும், மரூஉ மொழியாகவும், திரிபுச் சொற்களாகவும் சில சொற்கள் உள.

1 சூடா. நி : மக்கள் : பா, 76 : அடி 1, 2.
2 குறுந்தொகை : பா : 40 : அடி 1
3 கலித்தொகை : பா : 107 : அடி 25,

இச்சொற்களில் 'தாய்' என்னும் சொல் ஒன்றே உலக வழக்கில் பேசப்படுகின்றது. அஃதும் உரையாடல்களில் 'தாய் சொல்லைத் தட்டாதே' என்பது போன்று பெரும்பான்மையும் மேற்கோள் குறிப்பில்தான் பேசப்படுகின்றது. 'உன் தாய் எங்கே; என் தாயிடம் சோறு கேள்' என நடைமுறைப் போக்கில் 'தாய்' என்னும் சொல்லும் வழங்கப்படுவதில்லை. இரவலர்கள் 'தாயே, பிச்சை போடுங்க தாயே' என்று 'ஈன்றவள்' என்னும் பொருட் குறிப்பில் அல்லாமல் கூறுவர். ஈன்றவளைக் குறிக்கும் பிற சொற்களோ உலக வழக்கில்--நடைமுறைப் பேச்சு வழக்கில் இல்லை

'அம்மா' என்னும் சொல்லோ பெயர்ப் பொருளிலேயே பரந்துபட்ட பெருவழக்காய்க் காலந்தோறும், நாள்தோறும், நேரந்தோறும், இல்லந்தோறும் நிறைந்து உலவுகின்றது. மேலும் இச்சொல் பெண்பால் விகுதி ஒன்றான ளகர (ள்) இறுதி பெற்று 'அம்மாள்' என்று தாயைக் குறிக்கும் சொல்லாகவும் நிற்கின்றது. 'கண்ணம்மாள்', 'பொன்னம்மாள்' எனப் பெண்டிரைக் குறிக்கும் சொல்லாகவும் நிற்கின்றது. 'அம்மாள்' என்பதே 'அம்பாள்' எனத் திரிந்து வடமொழியில் இறைவியைக் குறிக்கின்றது. "வடமொழியில் 'அம்பா' என்ற சொல் 'அம்மா' என்ற தமிழ்ச் சொல்லின் திரிபே" எனத் தமிழ்ப் பேரறிஞர் கா. சு. பிள்ளையவர்கள் குறித்துள்ளார்கள். மொழியியற் பேரறிஞர் பாவாணர் அவர்களும்,

> "அம்மை (அம்ம) என்பதின் திரிபே அம்மன்,
> அம்பா [வ] என்பவை"[1]

—எனக் காட்டினார்கள்

**பெயர்ப் பொருள்**

இவ்வளவு பரந்துபட்ட பெருவழக்காற்றுச் சொல்லாம் 'அம்மா' தனக்குரிய இடத்தை இலக்கியத்திலும் நிகண்டிலும் -ஏன்- பெரும்பான்மையான அகர முதலிகளிலும் பெயர்ப் பொருளில் பெறவில்லை. சீவக சிந்தாமணியில் 'கோ அம்மாவாகி' என்னும் தொடரில் 'அரசனுக்குத் தாயாகி' எனப் பொருள் படும் நிலையில் உள்ளது. அவ்விடத்து, செய்யுளின் ஆற்றொழுக்கு நோக்கி நச்சினார்க்கினியர் என்னும் அதன் உரையாசிரியர் "அம் + மா —அழகிய திரு" என்று உரை வகுத்தார்.

---

1 ஒப்பியன் மொழி நூல் ; 204.

'அம்மா' என்பதற்குப் பெயர்ப் பொருள் அச்சொல்லுக்கு, முதற்பொருளன்று. வழக்குப் பெருக்கத்தில் அமைந்ததே. ஆதலின் இலக்கியம் முதலியவற்றில் உரிய இடம் பெறாமை இயல்பாகலாம். ஆனால், 'அம்மா' என அழைக்கும் விளிப்பொருள் அச்சொல்லின் முதற்பொருள். முதற்பொருள் என்று குறிக்கும்போதே அது மூலப் பொருள் அன்று என்பதையும் குறிக்கவேண்டும். அதனைப்பின்னர் காண்போம். மக்கள் எல்லாரும் விளிப்பொருளில் இச்சொல்லை வழங்குகின்றனர். நாள்தோறும் இச்சொல்லால் தாயை அழைக்கின்றனர். அழைக்கும் எண்ணத்தின் வெளிப்பாடாக மட்டும் அன்று; உள்ளத்தில் ஊறிய உவப்பை அழைப்பாக்கி அவ்வழைப் பின் வெளிப்பாடாக இச்சொல் அமைகின்றது. 'அம்மா' என்னும் அழைப்பில், அழைப்போனின் ஆர்வ உணர்வு உள்ளீடாக இசைக்கின்றது. 'அம்மா' என்னும் சொல்லுக்கு இந்த அளவு பொருட் சிறப்பு உண்டு என, அச்சொற்கு இலக்கியப் பொருள் விரிப்பது போன்று பெருமாள் திருமொழி,

"அம்மா என்று உகந்து அழைக்கும்
ஆர்வச் சொல்"[1]

—என்று பேசுகின்றது.

"அம்மா என்று அழைத்தல்"

—என்று பாவேந்தர் விளிப்பொருளைச் சுட்டிச் சிறப்பித்ததை முதலில் கண்டோம்.

"போ அம்மா என்று உரைப்பப் போவேன்"

—என்று திருத்தக்க தேவர் சீவக சிந்தாமணியில் அமைத்துள்ளார்.

இவ்வாறு இங்கொன்றும் அங்கொன்றுமாக 'அம்மா' இலக்கியங்களில் அமைந்துள்ளதேயன்றிப் பரந்துபட்ட ஆட்சியாக இல்லை. 'இல்லை' என்னும் போதே 'இருப்பதற்கு வழியிருந்தும் இல்லை' என்பதைக் காணவேண்டும்.

எவ்வாறு காண்பது?

தாய், தந்தை, மகள், மருகன், அத்தை முதலிய பெயர்களை இலக்கண நூல் முறைப்பெயர் என்று குறிக்கும். தாயைக்குறிக்கும்

---

1 பெரு. திரு: 9 :6

முறைப்பெயர்ச் சொற்களில் ஐகாரத்தை (ஐ) இறுதியாகக்கொண்ட சொற்கள் அன்னை, அம்மை, அம்மனை, அவ்வை என்பன. இவை விளி ஏற்கும்போது 'ஐ', 'ஆ' ஆகி வரலாம். அம்மை, அம்மா ஆகலாம். இதனைத் தொல்காப்பியம்,

"முறைப்பெயர் மருங்கின் ஐயென் இறுதி
ஆவோடு வருதற் குரியவும் உள" 1

எனக் குறித்துள்ளது. ஆயினும், இந் நூற்பாவிற்கு எடுத்துக் காட்டு தந்த உரையாசிரியர்கள் 'அன்னை — அன்னா' எனக் காட்டினார்; 'அம்மை — அம்மா' எனக் காட்டினர் அல்லர். இங்குக் காட்டாத நச்சினார்க்கினியர் சீவக சிந்தாமணியில் இந்நூற்பா வையே காட்டி ''அம்மை — அம்மா என விளியேற்றது'' என்று உரை எழுதினர். ஓர் எடுத்துக்காட்டு கொண்டு மற்றவற்றையும் கொள்ளலாம் என்னும் முறை கொண்டும் சிந்தாமணியில் காட்டி யமை கொண்டும் 'அம்மா', 'அம்மை' யினின்றும் தோன்றியது எனக் கொள்ளலாமோ எனின் அதற்கு ஓர் இடையீடு நேர்கின்றது. 'அம்மை' என்னும் சொல் பின்னே காட்டப்படும் மூலச்சொல்லின் விரிவாய் அமைகின்றது. அதனாலும் அம்மூலச் சொல்லிருந்தே 'அம்மா' தோன்றுவதற்கு உரிய ஒலியை எழுப்பும் உறுப்பினது இயக்கம் பொருத்தமாய் அமைவதாலும் அம்மையிலிருந்து அம்மா தோன்றியது என நிறைவாகவும் பொருத்தமாகவும் கொள்ள இயல வில்லை.

எனவே, 'அம்மா' என்பதன் மூலச்சொல் 'அம்மை' என அறுதியிட்டுக் கூற நிறைவான வகையில்லை.

அவ்வாறாயின், 'அம்மா' என்னும் விளிப்பொருளைத் தரும் சொல்லின் மூலச் சொல் எது? எச்சொல் 'அம்மா' என உருப் பெற்றது? இவ்வினாவிற்குத் தொல்காப்பியம் விடை வகுக்கிறது.

**அம்ம**

'அம்ம' என்றொரு இடைச்சொல் உண்டு. அதற்கு 'இதைக் கேள்' என்பது குறிப்புப்பொருள். அஃதாவது, நாம் பிறரிடம் ஒரு கருத்தைச் சொல்லும் முன் அவர் கவனத்தை நம்மிடம் திருப்பி அவரைக் கேட்க வைத்தற்கு இலக்கியங்களில் அமைந்த சொல் 'அம்ம' என்பது.

---

1 தொல் : சொல் : நூற்பா : 128

எனவே, 'அம்ம' கேட்கவைக்கும் குறிப்புடைய சொல். இச் சொல்லுக்கு இது பொருள் என்பதை,

"அம்ம கேட்பிக்கும்" [1]

—எனத் தொல்காப்பியம் குறிக்கிறது. இலக்கியங்களில் இச்சொல் இப்பொருளில் பயின்று வரும். "அம்ம வாழி, தோழி" என்பது நற்றிணைத் தொடர். இதற்குத் 'தோழி வாழ்க, இதனைக் கேள்' என்பது பொருள். இது போன்று,

"அம்ம வாழி கொண்க" (ஐங்குறு : 139)
"அம்ம வாழி பாண" (ஐங்குறு : 132)
"அம்ம வாழி தும்பி" (குறு : 392)
"இன்னாது அம்ம தோன்றல்" (புறம் : 44)

— என 'அம்ம' இப்பொருளில் வருகின்றது. இவைகொண்டு 'அம்ம' இலக்கியங்களிலும் இடம் பெற்றது. தோழி, தலைவன், பாணன், அரசன், தும்பி, அன்னை முதலிய பலரோடும் உரையாடுங்கால் அமைவது. இஃது இச் சொல்லுக்குக் குறிப்பிடத்தக்க சிறப்பு ஒன்று. இச் சிறப்பை இங்கே குறிக்க வேண்டியதாகின்றது.

இவ்வாறு உரையாடுங்கால் – உரைப்பதற்கு முன், குறிப்பில் பொருள் தரும் சொல்லாக அமைதலின் இஃது உரையாடலை எழுப்பும் — கேட்கவைக்கும் பொருளுக்குரிய சொல்லாய் "உரைப் பொருட் கிளவி" (கிளவி = சொல்) எனப்படும். இதனை,

"அம்ம என்னும் உரைப்பொருட் கிளவியும்" [2]

—எனத் தொல்காப்பியம் குறிக்கின்றது. இச்சொல் பொருளின்றி அசைச்சொல்லாகவும் வரும். இதனை,

"அம்ம என்னும் அசைச்சொல்" [3]

—எனத் தொல்காப்பியமும்,

"அம்ம உரையசை கேண்மினென் றாகும்" [4]

—என நன்னூலும் குறிக்கின்றன.

---

1 தொல் : சொல் : 276
2 தொல் : சொல் : 211
3 தொல் : சொல் : 150.
4 நன் : நூற்பா : 438

"உண்டால் அம்ம உலகம்" என்னும் புறப்பாட்டில், 'அம்ம' வை அசைச் சொல்லாகக் காண்கின்றோம். இவ்வுரைப் பொருட் சொல்லாம் 'அம்ம' தான் 'அம்மா' என்பதன் மூலச்சொல்லாய் அமைகின்றது. 'அம்ம' என்னும் சொல்லின் இறுதி நீண்டு 'அம்மா' என்று ஆவதை ஆன்றோர் ஏற்றுக் கொண்டனர் என்பதைத் தொல்காப்பியம்,

"உரைப்பொருட் கிளவி நீட்டமும் வரையார்"[1]

(வரையார் = நீக்கார்) எனத் தனியொரு செய்தியாகக் குறிக்கின்றது.

இவ்வாறு நீண்டு அம்மா உருப்பெற்ற சொல்லே விளிப் பொருளைத் தருவதாயிற்று. அதற்கும் பின்வருமாறு இலக்கணம் அமைந்தது:

"அம்ம என்னும் அசைச் சொல் நீட்டம்
அம்முறைப் பெயரொடு சிவணா தாயினும்
விளியொடு கொள்ப தெரியு மோரே"[2]

என்னும் நூற்பாவின் முதலடி 'அம்ம', 'அம்மா' ஆவதைக் குறிக்கின்றது. அசைச் சொல் எல்லாம் இடைச்சொல். 'அம்ம' என்னும் இடைச் சொல் நீண்டு 'அம்மா' என ஆயினும், அஃது 'ஈன்றவள்' எனப் பொருள்படும் முறைப் பெயர் ஆகாது என்பதை இரண்டாம் அடி குறிக்கின்றது. முறைப்பெயராகப் பொருள் பெறாதாயினும் ஆராய்ந்து அறிவோர் (தெரியுமோர்) விளிச் சொல்லாகக் கொள்வர் என்பதை இறுதி அடி தெளிவாக்குகின்றது.

இவ்விறுதி அடியின் 'விளியொடு கொள்ப' என்பதற்கு நச்சினார்க்கினியர், 'அம்மா கொற்றா' எனச் சான்று காட்டி "மற்றொரு விளிச் சொல்லோடு கொள்வர்" என்றார். இதனை அவரே சீவக சிந்தாமணி உரையிலும் காட்டி 'அம்மா விளியன்று' என்றார். ஆனால், தொல்காப்பியத்தின் முதல் உரையை வகுத்தமையால் 'உரையாசிரியர்' என்ற தனிச் சிறப்புடன் அழைக்கப் பெற்ற இளம்பூரணர், இதுபோன்றே 'அம்மா சாத்தா' என்று சான்று காட்டி,

"இடைச் சொல்லோடு தோன்றிட்டாயினும்
விளியாகக் கொள்வர் தொல்லோர்"

—என்று குறித்து, அதனை விளக்குபவராய்

1 தொல்: எழுத்து: 213. 2 தொல்: சொல்: 150.

"சாத்தா என்பதே எதிர்முகமாக்குமாயினும் 'அம்மா' என்பதும் அவ்வெதிர்முகமே குறித்து நிற்றலின் விளி யாகக் கொள்ளப்படும் என்பார் (என்று கூறும் தொல் காப்பியர்) விளியொடு கொள்ப என்றார்" —எனக்கூறித் தொல்காப்பியரின் உள்ளக்கிடக்கை 'அம்மா' விளிப்பொருளைத் தருவது என்பதைக் காட்டினார். இதனால், இளம்பூரணர் தொல்காப்பியரது சொற்படி தெரியுமோரின் கருத்தை ஏற்றுத் 'தெரியுமோராக'வும் ஆனார்.

எனவே, அம்மாவின் மூலச்சொல் 'அம்ம' என்பதும், அது விளிப்பொருளில் வரும் என்பதும் தெளிவாகின்றன. இவ்வா றாகவே, அம்மாவின் முதன்மையை 'அம்ம'விடம் கேட்க வேண்டி யவர்களாகின்றோம். அம்மதானே கேட்பிக்கும்!

## வரலாறு.

**அம்மாவின் அம்மா**

'அம்ம' இலக்கியத்தில் பெற்றுள்ள சிறப்பை முன்னே கண்டோம். அஃது இலக்கணத்தில் ஒருவகையான சிறப்பிடம் பெறுகின்றது. பெயர்ச்சொல் விளியேற் கும் மரபைக் கூறும் தொல்காப்பியப் பகுதி 'விளி மரபு' எனப்படும் விளியேற்றற்கு உரிய சொல் பெயர்ச்சொல்லே. எனவே, விளி மரபில் பெயர்ச் சொற்களே குறிக்கப்படும். இவ்விளிமரபில் குறிக்கப்படும் ஓரே இடைச்சொல் 'அம்ம' என்பது. இவ்வாறு இவ்வொரு சொல் தனியிடம் பெறுகின்றது. இஃது அச்சொற்குக் குறிப்பிடத்தக்க இரண்டாவது சிறப்பு.

மேலும், இவ்வியலில் ஆராய்ச்சிக்கு உரியோர்பால் இவ் வொரு சொல்லே சார்த்தப்பட்டுள்ளது. "விளியோடு கொள்ப தெரியுமோரே" என்னும் தொடரை முன்னே கண்டோம். இவ் வகையில் இச்சொல் ஆய்வில் அமைந்து 'அம்மா' என விளி யாவதற்கு ஆராய்ச்சிச் சான்றோர்பால் சான்று பெறுகின்றது. இஃதும் இச் சொல்லுக்குக் குறிப்பிடத்தக்க மூன்றாவது சிறப்பாகும்.

இனி, இத்தகைய சிறப்புகள் கொண்ட 'அம்ம' என்னும் சொல்லை ஆய்வது கொண்டே 'அம்மா' என்னும் சொல்லின் முதன்மையைக் காணலாம்.

தற்கால மொழியியல் அறிஞர்களது 'அம்ம' என்னும் சொல் பற்றிய கருத்துகள் காணத்தக்கன. மறைத்திரு போப் பெருமகனார், *'A Hand Book of the ordinary dialect of the Tamil language'* என்னும் நூலை 1886-ஆம் ஆண்டில் வெளியிட்டுள்ளார். அந்நூல் ஆங்கிலம் அறிந்தோர் தமிழ் கற்பதற்கென உருவாக்கப்பட்ட நூல். செய்யுட் சொற்களின் நோக்கில் அன்றி, பேச்சு வழக்குச் சொற்கள் வழி தமிழைப் பேச வழி வகுக்கும் நூல் அது. அதன்கண் தாயைக் குறிக்க இரண்டு சொற்களை அறிமுகம் செய்துள்ளார். அவை, 'அம்மை, அம்ம' என்பன. தாய் என்னும் பெயர்ப் பொருளைத் தரும் வழக்குச் சொல்லாக 'அம்ம' வையும் அறிமுகம் செய்துள்ளார். அறிமுகம் செய்யும் பகுதியிலேயே தந்தையைக் குறிக்கும் வழக்குச் சொல்லாக 'அப்பா' என்னும் சொல்லை அறிமுகப்படுத்தியுள்ளார். தாய்க்கு 'அம்மா' என்னும் சொல்லைக் காட்டினார் அல்லர். இவைகொண்டு அவர் 'அம்ம' தாயைக் குறிக்கும் பெயர்ச் சொல்லாகக் கருதினார் என்று கொள்ளலாம். அச்சொல்லே ஈறு திரிந்து 'அம்மா' என விளிச்சொல்லாயிற்றெனக் கருதியிருக்கக்கூடும் எனவும் கொள்ள நேர்கின்றது. எவ்வாறெனில், அவர் காலத்தும் 'அம்மா' விளிப்பொருளில் மிகப் பரவலாக வழங்கப்பட்டமை கொண்டேயாகும்.

'அம்மம்' எனுஞ் சொல் தாய்ப் பாலை-பால் மார்பைக் குறிக்கும்.[1]

மொழியியற் பேரறிஞர் பாவாணர் அவர்கள்,

> "அம்மம் – தாயின் மார்பு – என்ற சொல்லினின்றாவது, ஆவின் கன்று கதறல் ஒலியினின்றாவது 'அம்ம' என்னும் சொல் பிறந்திருக்க வேண்டும்"[2]

–என்று குறித்துள்ளார்கள்

'சொல்லினின்றாவது'
'ஒலியினின்றாவது' –என ஐயத்தோடு

---

1 "அரவணையாய் ஆயரேறே
அம்மம் உண்ணத் துயிலெழாயே"
-பெரியாழ்வார் திருமொழி-2 : 1 1-18

2 வடமொழி
வரலாறு : பக்கம் 74

குறித்துள்ளமை கொண்டும் 'பிறந்திருக்க வேண்டும்' என்று குறித்துள்ளமை கொண்டும் 'அம்ம' பற்றிய அறுதியான கருத்தைக் கூற அவர்கள் மனநிறைவு கொள்ளவில்லை என்பது புலனாகின்றது.

இவ்வழியில் வேர்ச்சொல் கண்டு ஆராய்வது எடுத்துக் கொண்ட கருத்திற்கு அரண் அமைப்பதாகும். ஆயினும், அவ்வாய்வு சில அசைகளையும், பல சொற்களையும், அவற்றின் தொடர்பில் பல பொருள்களையும், பல நுணுக்கங்களையும் இயைபுபடுத்தும் ஆய்வாய் விரிந்துசெல்லும். இவ்விரிவஞ்சி வேர்ச்சொல் ஆய்வை இதுபோது நிறுத்தி வைத்து 'அம்ம' என்னும் சொல்லின் எழுத்துக்களை நோக்கும் ஆய்வை இவன் மேற்கொள்ள நேர்கின்றது.

'அம்ம' என்னும் சொல் அ + ம் + ம் + அ என நான்கு எழுத்துக்களின் கூட்டொலி. அகரத்தில் துவங்கி, மகரம் தொடர்ந்து, இரட்டித்து, அகரத்தில் முடிகின்றது. எழுத்துகள் நான்காயினும், ஒலியால் அகரமும் (அ) மகரமும் (ம்) ஆகிய இரண்டையே கொண்டது. இவ்விரண்டு எழுத்துகளின் இயல்பினைக் காண வேண்டும்.

## அகரம்.

அகரம் தமிழில் மட்டுமன்றி அனைத்து மொழிகளிலும் தனிச்சிறப்புக் கொண்ட எழுத்து என்பதை அறிவோம். 'எழுத்தெல்லாம் அகர முதல'. மொழியியலார் அதனைக் 'கனத்தஎழுத்து' என்பர். தமிழ்ப் பேரறிஞர் கா. சு, பிள்ளையவர்கள் 'அகரம் தமிழில் மாற்றம் அடைவதில்லை' என்பதை விளக்கியுள்ளார்கள். அகரஒலி இல்லாமல் எந்த எழுத்து ஒலியும் இல்லை. அனைத்து எழுத்துகளிலும் ஒலியால் ஒன்றி நிற்பது அகரம். வரிவடிவிலும் அத்தகையதாகக் கொள்ள இடம் உண்டு. மொழிப்பொறி அறிஞர் பா. வே. மாணிக்க நாயக்கர் அவர்கள் 'அ' என்னும் வரிவடிவைப் பலவகையாகப் பகுத்துப் பகுத்தவற்றைப் பிரித்துப் பிரித்து இணைத்து, அவ்வொரு எழுத்தைக் கொண்டே 'ஓம்', 'நமசிவாய' 'சரவணபவ' முதலிய மந்திர மொழிகளை உருவாக்கிக் காட்டினார்கள், மேலும், அகரம் பல சிறப்புகளைக் கொண்டதாயினும் இவண் 'அது முதன்மை எழுத்து; மாற்றம் அற்றது; எங்கும் நிறையும் ஒலியையுடையது; எதையும் அமைக்கும் வடிவினது' என்பனவற்றை நினைவுகூரலாம்.

**மகரம்.**

'ம்' என்னும் மகரம் மெல்லெழுத்து ஆறனுள் ஒன்று அதன் ஒலியை நுணுகி நோக்கினால் அவ் ஆறு மெல்லெழுத்துக் களுள்ளும் மகரம் மென்மையாவதை உணரலாம். தமிழ்ப் பண் முறையில் ஏழு இசையில் 'குரல்' என்னும் இசை ஒன்றாகும். இதனைத் திரித்து வடமொழியில் 'மத்தியமம்' என்பர். ஒவ்வோர் இசைக்கும் ஒவ்வோர் உயிர்க் குறியீட்டெழுத்து, மெய்க்குறியீட் டெழுத்து உண்டு. 'குரல்' என்னும் இசையின் மெய்க்குறியீட்டு எழுத்து மகர ஒற்றைக் கொண்டது. குரல் என்னும் இசைப் பெயர்ச் சொல்லில் மாந்தர் குரலின் பொருளும் இயைந்திருப்பதைக் காண் கின்றோம். மாந்தர் குரலிலும் மகளிர் குரல் இனிமையானது. அம் மகளிரது குரலின் பாங்கில் அமைந்ததால் பெயர் பெற்றதே 'குரல்' என்னும் இசை. இவ்வாறு மகளிர் குரல், அதன்கண் எழும் இனிமை ஆகிய இவற்றிற்கு அடிப்படையாக மகரம் ஒளிர்கின்றது. 'ஓம்' என்னும் மொழியில் ஒன்றி நின்று அதற்குக் கூறப்படும் இறைமை, தூய்மை, பயன்மை முதலியவற்றை நிறைவேற்றும் சிறப்புடையது மகரம். மேலும், மகரம், பல சிறப்புகளைக் கொண்ட தாயினும் இவண் அதன் மென்மை, இனிமை, தூய்மை என்பன வற்றை நினைவு கூரலாம்.

இவற்றிற்கெல்லாம் மேலாக, இவ்விரு எழுத்துகளது ஒலியும் எளிய முயற்சியால் தோன்றுவது குறிக்கத்தக்கதாகும். எழுத்துகளின் பிறப்பைக் கூறும் இலக்கணங்கள் இவ்வெளிய முயற்சியினைத் தெளிவுப்படுத்துகின்றன.

"அ, ஆ ஆயிரண்டு அங்காந்து இயலும்"[1]

"முயற்சியுள்,
அ, ஆ அங்காப்புடைய"[2]

அங்காப்பு என்றால் வாயைத் திறத்தல். வாயை திறந்து கூறும் முயற்சி ஒன்றால் அ, ஆ தோன்றும் என்பதே இவற்றின் பொருள். ஆகாரத்தின்ஒலியை அகரத்தைவிட நீட்டவேண்டி உள்ளமையால் அகரம் அதைவிட எளிமையில் தோன்றுவதாகின்றது. பிற உயிரெழுத்துக்களின் பிறப்புகளை ஒலித்து நோக்கினால், அகரம் ஒன்றே எளிய முயற்சியில் தோன்றுவதை அறியலாம்.

1 தொல் : எழுத்து : 85 2 நன் : 76

மகர ஒலி வாயின் மேல் உதடு கீழ் இதழுடன் கூடி நெகிழ்வதால் தோன்றும். இதற்கு இலக்கணம்,

"இதழ் இயைந்து பிறக்கும் பகார மகாரம்"[1]

"மீகீழ் இதழ் உறப் பம்மப் (ப், ம்) பிறக்கும்"[2]

இரு உதடுகளும் கூடல் என்பது, வாய் இயல்பாகஇருப்பதாலேயே அமைவதாகும். அவ்வாறு அமைந்திருக்கும் கூடலை நெகிழ்க்கும் ஒரே முயற்சியால் அங்காத்தலும் அமைந்துவிடுவதால் இவ்வெழுத்துகள் (ப், ம்) பிற மெய்யெழுத்துகள் யாவற்றினும் எளிய பிறப்பை உடையன என்பதை அறியலாம். உயிரெழுத்துகளினும் அகர, ஆகாரம் நீங்கலாக ஏனைய எழுத்துக்களைவிடப் ம் எளிய முயற்சியை உடையன என்பதை இலக்கணமும் ஒலியெழுப்பும் கொண்டு உணரலாம். கூர்ந்து ஒலித்துக் காணின் மகர ஒலி முயற்சிக்கு இரு உதடுகளின் விளிம்புகள் ஒத்துப் பொருந்தி அமைந்திருப்பதைக் காணலாம். பகர ஒலி முயற்சிக்கு மேலுதட்டின் விளிம்பு உள்நோக்கிக் கீழ் உதட்டில் படியும். இதை நோக்கும்போது பகரத்தை விட மகரம் எளிய முயற்சியை உடையது என்பதைக் காணலாம்.

அகரமும் மகரமும் எளிய முயற்சியால் ஒலிக்கும் எழுத்துகள் என்பது தெளிவு. இவ்வெளிய முயற்சியில் 'இவ்விரண்டு எழுத்துகளும் இயல்பாகவே அடுத்தடுத்து ஒலித்தற்குரியவை; ஒன்றையொன்று தொடர்ந்து தோன்றும் இயல்பும் இயைபும் கொண்டவை' என்பனவே இவண் காணத்தக்கனவாகும்.

மேலும், அகரமும் மகரமும் மற்றொரு வகையிலும் தொடர்புடையவை. மெய்யுணர்வுத் துறையில் அகரத்தின் முதன்மையைக் கொண்டு சில மெய்மையை விளக்கும் மெய்யுணர்வுச் சான்றோர், மகரத்தையும் பொருத்தி இணைப்பர். தமிழ்க் கடவுள் எனச்சிறப்பொடு குறிக்கப்படும் முருகனது தன்மையைக் கந்த புராண ஆசிரியர் கச்சியப்பர்,

---

1 தொல் : எழுத்து : 97
2 நன் : 81

"அகரமது ஆதியான
எழுத்தெலா மாகிப் பின்னர்
மகரமும் ஆன மேலோன்"[1]

—என்று விளக்கினார். இதன் கண் அகரத்தைப் போன்றே மகரம் தனிச்சிறப்புடையது என்பதையும், இவ்விரண்டு எழுத்துகளின் தொடர் தொகுப்பில் இறையியல் பொதிந்திருக்கிறது என்பதையும் அறிவித்திருக்கிறார். இக்கருத்தும் இரண்டு எழுத்துகளின் தொடர்பில் இங்கே நினைவுகொள்ளத் தக்கது.

இவ்விரண்டு (அ, ம்) எழுத்துகளும் பிறக்கும் முயற்சியைத் தனித்தனியே கண்டுள்ளோம். அவற்றை இணைத்து நோக்குவோம்.

1. வாயைத் திறந்து ஒலியை உண்டாக்கின் தோன்றுவது — 'அ'
2. அவ்வொலியொடு உதடுகளை இணைத்து மூடின் தோன்றுவது — 'ம்'
3. அவ்வொலியைத் தொடர்ந்து இணைந்த உதடுகளை நெகிழ்த்தால் தோன்றுவது — 'ம'

தொடர்ந்து இவ்வொலிகளால் தோன்றுவது 'அம்ம' தோன்றிய 'அம்ம' நம்மைக் கேட்க வைக்கும் — கேட்பிக்கும். கேட்பிக்கும் 'அம்ம' எளிய முயற்சியின் தோற்றம். எளிய முயற்சியின் தோற்றம் என்பதற்கு மேல், இச்சொல் இயல்பாகத் தோன்றுவது என்பதைக் குழந்தையைக் கொண்டு காண்போம்.

**உடற் கூற்றின் இயல்பு.**

பிறந்த குழந்தையை எழுப்பும் அழுகை ஒலி, கரையும் ஒலியாகும். இக்கரையும் ஒலி வாயைத் திறந்த அளவில் தொடர்வது. குழந்தை பிறக்கும் முன், ஒலித்தல் செய்திராத தொண்டை தெளிவான ஒலியைத் தராது; கரைசல் ஒலியைத் தரும். (கம்மிய தொண்டையைக் கரைசல் தொண்டை என்கிறோம்.) அவ்வொலிக்கு எழுத்துருவைக் கொடுக்க இயலாது. எவ்வகைப் பொருளும் அற்றது. இக்கரைதல், குழந்தை ஒலி

---

1 கந்த புராணம் ; சிங்க ; 437 : 1, 2.

யின் முதற்படி என்னலாம். அடுத்த படி கரையும் ஒலியோடு உதடு களைச் சேர்த்துப் பின் திறந்து ஒலிப்பது. பழகிய தொண்டை யின் திறப்பால் 'அ' ஒலி தொடரும். மூடித் திறக்கின் 'ம்' ஒலி — 'ம' ஒலி தோன்றும். தெளிவான உடல் வளமுள்ள குழந்தைக்கு இரண்டு திங்களிலேயே இவ்வொலி துவங்கும்—துலங்கும். அப் பருவத்திலேயே 'அம்ம அம்ம' என்னும் ஒலிக்கூட்டல் கூடும் இப் பருவத்தில் குழந்தை, தாய் என அடையாளம் கண்டு கொள்ளும் நினைவினது ஆகும். ஆகவே, அதுபோது ஒலிக்கும் 'அம்ம' ஒலி தாயை அழைக்கும் குறிப்பைக் கொண்டதாக அமைகின்றது. எனவே, 'அம்ம' உருவாகும் போதே குழந்தை தான் உரைப் பதற்கு உரிய பொருளாகத் தாயைக் காண்கின்றது. அச்சொல் 'உரைப்பொருட் கிளவி' ஆகிறது. இவ்வுரைப்பொருட் கிளவியாம் 'அம்ம'தான் குழந்தையின் உணர்வு வெளிப்படத் துணைநிற்கும் ஒலிக்கூட்டல் ஆகும். இதற்கு எழுத்துருவம் கொடுக்கலாம். 'தாய்' என்னும் குறிப்புப் பொருளேயன்றி வேறொன்று கொள்வ தற்கு வழி இன்று. வெளிப்படையாகத் தாய்ப் பொருள் இன்றி உதட்டு அசைவால் உருவாகிய இக்கூட்டல் 'அசை'யாகவும் அமைகின்றது. இவ்வமைப்புகளையே இலக்கண நூல்களாகிய தொல்காப்பியமும், நன்னூலும் 'அம்ம' என்னும் சொல்லை "உரைப்பொருட் கிளவி" என்றும் 'உரை அசை' என்றும் விதித்தன.

குழந்தை, மாந்தனின் முதற் பருவம் —முதல் உரு. அது தரும் முதற்பொருளாம் 'அம்ம' இயல்பில் தோன்றும் முதன்மொழி. இம் முதன்மொழியாம் 'அம்ம' என்னும் சொல் தாயை நோக்கிய உணர்ச்சி வெளிப்பாடாய்த் தோன்றியது. குறிப்பில் தாயை உணர்த்துவது. இன்றும் மலைஞாலத்தார் ஈன்றாளை 'அம்ம' என்றே அழைப்பதையும் காண்கின்றோம். மறைத்திரு போப் பெருமகனாரும் இதுகொண்டே குறித்தார் எனலாம்.

ஈன்றாள் முகங்கண்டு அவ்வுணர்வை 'அம்ம' என்னும் ஒலிக்கூட்டலாக்கிய குழந்தை, ஈன்றவளை அழைக்க 'அம்ம'வை நீட்டி, 'அம்மா' ஆக்குவது இயல்பில் நிகழ்வதே. அவ் 'அம்மா' வின் ஈற்றொலி 'மா'. அந்த 'மா' ஒலியே அழைக்கும் பொருட் குறிப்பைக் கொண்டது.

பிங்கல நிகண்டு,

“மா எனல் கூவுதல் வாவெனல் மத்தல்

... ... ... ... ... ... ... ... ... ... ...

அகவ லென்பது அழைத்த லாகும்”[1]

என்று பொருள் வகுத்தது. இஃது இங்கே நோக்கத்தக்கது. அழைக்கும் பொருட் குறிப்பில் உருவான ‘அம்மா’ கால வளர்ச்சியில் ‘அம்மா’ என்னும் விளிச்சொல்லாகி ‘அம்ம’ ‘அம்மா’ ஆகும் என மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தொல்காப்பியம் இலக்கணம் குறிக்க இலக்காயிற்று.

**உணர்வுச் சொல்**

‘அம்மா’ என அழைக்கும் பொருட் குறிப்பில் தாய்மேல் சேய் கொண்ட உள்ளுணர்வின் உள் இசையாக அச்சொல் முரல்கின்றது. அம் முரல்வு பலவகை உணர்வுகளுக்கும் பின்னிசையாய் நிற்பது ஒரு தொடர்பு எனலாம்; ஒரு வியப்பு என்றாலும் தகும். அஃதாவது ‘அம்மா’ என்னும் சொல்லில் பலவகை உணர்வுகள் வழங்கப் படுகின்றன என்பதாம். இவ்வுண்மையை இலக்கியத்தில் பல முனைகளில் அமைந்துள்ள ‘அம்மா’ என்னும் சொல்லின் பொருட் குறிப்பைக் கொண்டு நன்கு காண்கின்றோம்.

“அரங்கத் தம்மா
பள்ளி எழுந்தருளாயே”

(நாலா : திருப்பள்ளி : 1 : 4)

-என்பதில் தந்தையையும் தாயாகக் கொள்ளும் உணர்வைக் காண்கின்றோம்.

“சிற்றடியவர்க்கே குற்றவேல் தலைக்கொண்டு
அம்மா கிடைத்தவா என்று
செம்மாப் புறூஉம் திறம்பெறற் பொருட்டே[2]

இதில் குமரகுருபரரின் செம்மாப்பு உணர்வை அவரது ‘அம்மா’ சொல்லில் காண்கின்றோம்.

---

1 பிங். தி : 1996 : 2, 4

2 மதுரைக் கலம்பகம் : 2 : வரி : 17-19

"அம்மா நம்மேல் பட்டது அருங்கூடற்
பெம்மான் மேற்பட்ட பிரம்படி[1]

–இங்கு ஒரு பெண்ணின் காம உணர்வு வடிக்கப்படுகின்றது.

"வெறும் பொருளதம்மா"[2]

என்னும் திருத்தக்கதேவர் தொடரில் இரக்க உணர்வை 'அம்மா காட்டுகின்றது.

"ஆ அம்மா அம்மா என் அம்மா அகன்றனையே',

என்று அரசி விசையை தன் அவல உணர்வை வடிக்கத் திருத்தக்க தேவர் 'அம்மா, அம்மா' என அடுக்கி வைத்துள்ளார். அவ்வடியின் பின் வந்துள்ள, "என் அம்மா" – 'என் அன்புக்குரியமகனே' என்னும் தாய்ப்பொருள் இல்லாத இலக்கணையாக விளியைத் தருகின்றது.

"தம்மில் இருந்து தமதுபாத் துண்டற்றால்
அம்மா அரிவை முயக்கு"[3]

என்னும் குறளில் 'அம்மா' இன்பத்தினவாம் உணர்வை வடிப்பதாகக் கொள்ள வேண்டும். [அ+மா=அரிவை— 'அந்த அழகிய பெண்' என இங்கும், இதுபோன்ற பிற இலக்கிய இடங்களிலும் பொருள் கூறப்படினும் இவ்விடத்தில் 'அம்மா' என்னும் இடைச் சொல்லாகக் கொள்ளுதற்கு இக்குறள் அமைந்த அதிகாரத்தில் அமைந்துள்ள அண்மைச் சுட்டுச்சொல் ("தீ யாண்டுப் பெற்றாள் இவள்') இவ்விடத்தில் அகரச் சேய்மைச் சுட்டாகக் (அந்த என்று கொள்ளுதற்கு இடம் தரவில்லை.]

'பெற்றோரைக் குறிக்கும் சொற்களினின்று, இரக்கக் குறிப்பு இடைச்சொற்களும், வியப்புக் குறிப்பு இடைச் சொற்களும் தோன்றியுள்ளன.[4] –எனப் பாவாணர் அவர்கள் குறித்துள்ளமை இங்கே இயைத்து நோக்கத் தக்கது.

---

1 மது. க : 57 : 1, 2.
2 சீவ. சி : 2662.
3 குறள் : 1107.
4 முதல் தாய்மொழி பக்கம் : 240,

**மூலமும் முதலும்.** இவ்வாறாகப் பல்வகை உணர்வுகளை வடிக்கும் 'அம்மா' என்னும் சொல் உலகில் பல்வகைஉணர்வுகளுக்கும் தாயாம் அன்னையை அன்பு உணர்வுடன் அழைக்கும் விளிச்சொல்லாக மிளிர்கின்றது.

வழக்காறு கொண்டும், வரலாறு கொண்டும் 'அம்மா'வை

1. ஈன்றவளைக் குறிக்கும் பெயர்க் குறிப்பில் கண்டோம்
2. ஈன்றவளை அழைக்கும் விளிப்பொருளில் கண்டோம்;
3. உள்ளத்தில் எழும் உணர்வுக் குறிப்பில் கண்டோம்;
4. அன்புக்கு உரியாரை விளிக்கும் பொருளில் அமைவதையும் கண்டோம்.

இவ்வாறு படிப்படியாய் வளர்ந்த வழக்காற்றைத் தொகுத்து ஓர் இடத்தே காட்டத் திருத்தக்கதேவர் நினைந்தது போன்று சிந்தாமணிப் பாடல் ஒன்று விளங்குகின்றது. அதனை முன்னர் ஆங்காங்கு தனித்தனியே பிரித்துக் கண்டோம். தொகுத்துக் காண்போம்!

சீவகன் தோழர் அவன் தாய்க்குச் சீவகனது நிகழ்ச்சிகளைக் குறிக்கின்றனர். செய்தி கேட்கும் ஆர்வத்தில் முழுச் செய்தியையும் வாங்குதற்கு முன் சீவகன் இறந்துவிட்டதாக விசயை கொண்டுவிடுகின்றாள். கொண்டு புலம்புகிறாள்:

'கோஅம்மா ஆகிக் குடியோம்பி நின்குடைக்கீழ்
பாவமே செய்தேன் பரிவெலாம் நீங்கினால்
'போ அம்மா' என்றுரைப்பப் போவேன்முன்
போயினாய்;
ஆ அம்மா அம்மா என் அம்மா அகன்றனையே''[1]

–என்பது பாடல்.

முதலில் தாய்ப்பொருளைக் காட்டுவதாகக் ''கோ அம்மா ஆகி'' என, அமைத்தார். அடுத்த விளிப்பொருளை அடுத்துப் ''போ அம்மா'' என அமைத்தார், அடுத்து வளர்ந்த உணர்வுக் குறிப்பை ''ஆ அம்மா அம்மா'' என அமைத்தார். அடுத்த அன்புக் குரியாரை விளிக்கும் குறிப்பில் ''என் அம்மா'' என அமைத்தார்.

---

1 சீ. சி: 1804.

ஈன்றவளாம் விசையை யைக் கொண்டே—அம்மாவைக் கொண்டே —'அம்மா'வை அமைத்தமை வியந்தும் நயந்தும் மகிழ்தற்குரிய அம்மாவின் இலக்கியம் இது.

இதன் மூலச்சொல்லாகிய 'அம்ம' வை ஒற்றி உருவானது 'அம்மை' என்பதைக் காண்போம்,

'அம்ம' வின் இறுதி அ, ஆவாக நீண்டதே 'அம்மா எனத் தெளிந்தோம். அதையொட்டி நோக்கினால் 'அம்ம' வின் இறுதி அ ஒலியுடன் 'ஐ' செறிந்ததே அம்மை. 'ஐ' என்னும் எழுத்து அ + ய் + இ என்னும் மூன்று ஒலிகளின் தொகுப் பொலி. (அய் இ—ஐ) குழந்தையின் உதடுகள் கூடி 'அம்'ஒலியைக் கூட்டி, உதடுகள் நெகிழுங்கால் ஓரளவாய் உள் நோக்கி நெகிழ்ந்து, மேல்வாய்ப் பல்லில் பொருந்தியிருந்த நாக்கு அசைந்து, ஓரத்தை மட்டும் மேல் வாய்ப் பல்லில் பொருத்தி ஒலிப்பதால் ஐ தோன்றும். இதனை,

"அண்பல் முதல் நா விளிம்பு உறல் உடைய"[1]

—எனத் தொல்காப்பியம் வகுத்துள்ளது. 'அம்' என்னும் ஒலித் தொடர்பில் 'ஐ' ஒலி உற 'அம்மை' என்று ஒலிக்கும்.

இயல்பான இவ்வியக்கத்தால் 'அம்ம' விண் தொடர்பாய் 'அம்மை' தோன்றுவதைக் காணலாம். இந்த 'ஐ' யை இலக்கண நூலார் வினை முதல் இறுதி நிலை — கருத்தா விகுதி என்பர்.

தாயைக் குறிக்கும் அவ் அம்மையும் 'அம்மையோ' என வியப்பு உணர்வைக் காட்ட நிற்கும்.

'அம்ம' வின் பின்னொலி 'ஐ' ஆகியதோடு முன்னும் 'ஐ' கூடி 'மைம்மை' என்றாகும். இந்த முன் 'ஐ' குற்றம் எனப் பொருள்படுதலாக அமைந்தது. பெண்ணின் குறை, தாய்த்தன்மை பெறாததாகும். இந்த 'மைம்மை' என்ற சொல் தாய்த்தன்மை பெறாத 'மலடி' என்னும் பொருளைத் தருவதாயிற்று.

"மைம்மையே வந்தி யென்ப மலடிக்கு வகுத்த
பேராம்"[2]

—என்பது சூடாமணி நிகண்டு.

---

1 தொல் : எழுத்து : 86
2 சூடா நி ; மக்கள் : 63 ; 3.

'அம்ம' என்னும் தாய்ப் பொருட் குறிப்பு இவ்வாறெல்லாம் விரிந்து செல்லும். இதுகாறும் கண்டவற்றால்:

'அம்ம' மாந்த இயல்பில் தோன்றிய மூலச்சொல்;

'அம்மா' அதன் தொடர்பில்—அவ்வியல்பில் தோன்றிய முதற்சொல்—என்னும் கருத்தை அறுதியாக்கலாம்; உறுதியாகும்.

இம்முதற் சொல்லாம் அம்மாவை ஈன்றது குழந்தை

அன்றோ? குழந்தை ஈன்ற தமிழ் அம்மா வாழ்க!

## 2. சொல் ஒரு நெல்.

சொல் : மாந்தன் பெற்ற
இயற்கைப் பரிசு;

நெல் : உழைப்பு பெற்ற
உயர்ந்த விருது.

பரிசு விருதாகலாம்;
சொல் நெல்லாகுமோ?

நெல்லும் ஆகும்; பதரும் ஆகும்.

மூலப் பின்னணி

## கூடை முடைவார்
## குறித்த சொல்

தொழிலாளி ஒருவர் மூங்கிற்கூடை முடைந்து கொண்டிருந்தார். தவழ்ந்து வந்த குழந்தை எதனையோ வாயில் வைத்தது. தந்தை,

'பிள்ளை சொலியை வாயில் வைக்கிறான், எடு' என்றார்.

'சொலியா? அது என்ன?, -என்று காண என் கவனத்தைத் திருப்பினேன்.

முற்றிய மூங்கில் இரண்டாகப் பிளந்து கிடந்தது. அதன் உட்பகுதியில் ஒட்டியிருந்த வெண்மையான பட்டுத்தாள் போன்ற சிறு பட்டை பெயர்ந் திருந்தது. அதைத்தான் 'சொலி' என்றார்.

"கழை படு சொலி" என்னும் இலக்கியத் தொடர் நினைவில் எழுந்தது.

'நாட்டுப்புற மக்கள் நாவில் நல்ல தமிழ் உலவும்' என்பதற்கு இஃதொரு சான்று.

'சொலி'யில் 'சொல்' முன்னோடியாக, அரும் மொழி ஊற்றத்தைக் காட்டி நிற்பதை வெளிப் படுத்த முனைந்த ஆய்வின் வடிப்பு,

**"சொல் ஒரு நெல்"**

ஆயிற்று.

வெளியிட்ட இதழ் :
"தமிழரசு", தமிழ்நாட்டரசு வெளியீடு.
தி. ஆ. 2001-புரட்டாசி-30
**16—10—1970.**

சொல்
ஒரு
நெல்.

# தமிழ்ச் சொல்.

"தமிழ் மொழிபோல் இனிதாவது
எங்கும் காணோம்"

— என்னும் தொடரில் பாரதியாரது உள்ளம் பளிச்சிடுகின்றது. இதன் கருத்தில் மிடுக்கு மட்டும் அன்று, மெய்மையும் ஒளிவிடுகின்றது, அம் மெய்மைக்கு முடிசூட்ட முனைந்த பாரதியார்,

"சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே"

— என்று தெளிவாகக் குரல் கொடுத்தார். அவர் குரலுக்கேற்பத் தமிழ்ச்சொல் உயர்வுடையதே. அவ்வுயர்வை எக்கோடியில், எக்கோணத்தில் நின்றும் காணலாம். இங்கு ஒரு கோணத்தில் நின்று காண்போம்.

## சொல்லில் நெல்.

நெல்லைக் குறிக்கப் பல சொற்கள் உள்ளன. அவற்றுள் 'சொல்' என்னும் 'சொல்லும் ஒன்று, நெல்லைக் குறிக்கும் சொற்களாக வரி, சொல், விரீகி, சாலி, யவம்'[1] என்பவற்றைச்

---

1 "வரி சொல்லு விரீகி சாலி வளர்செந் நெல்லாம் யவமும் ஆகும்."
— சூடா. நி : மரப்பெயர் :38.

சூடாமணி நிகண்டு பட்டியலிடுகின்றது. பிங்கல நிகண்டும்[1] இவ்வாறேபட்டியலிடுகின்றது. இவ்வழியில் 'சொல்' என்னும் தமிழ்ச் சொல்லுக்கு 'நெல்' என்றொரு பொருள் இணைகின்றது. நெல்லின் விளக்கத்தைச் சொல்லோடு பொருத்திக் கண்டால் சொல்லுக்கு நெல்லென்ற பொருளால் அமையும் உயர்வு தனித்துத் தென்படும்.

நெற்பயிர் பூத்துக் கருப்பிடித்துக் காயாகவே நின்றுவிட்டால் அது கருக்காய். கரு முற்றினால் 'மணி பிடித்திருக்கிறது' என்பர். முற்றுவது முத்து. இதுகொண்டுதான் 'நெல்லில் முத்து பிறக்கும்' என்றார். முத்து தோன்றும் இருபது இடங்களைத் தனிப்பாடல்[2] ஒன்று குறிக்கின்றது. அவ்விருபது இடங்களில் நெற்கதிரும் ஒன்று. 'மாரியம்மனுக்கு முத்துப் போடுக' என்று ஞாயிறுதோறும் அரிசி கேட்பதை இன்றும் வழக்கில் கேட்கின்றோம்.

முத்தாம் மணியான அரிசி பிடித்துத்திரண்டு விளங்குவதே நெல். இவ்வியைபு கொண்டதே சொல்லும். நெற்பயிர் அடி நிலத்திலிருந்து முளைக்கும்; சொல்லினது மூலமாம் ஒலி அணுவும் அடிவயிற்றிலிருந்து முளைக்கும்; முளைத்த நெல் தழைத்து வளரும். முளைத்த ஒலியணு நிறையுயிர் முயற்சியால் திரண்டு தழைக்கும், தழைத்த பயிர் மண்வளம், நீர், வெயில், காற்று ஆகியவற்றால் பூக்கும்; சொல்லுக்குரிய எழுத்துகளின் உரு, மார்பு, கழுத்து, மண்டையுச்சி, மூக்கு என்னும் நான்கிடத்திலும் மலரும். மலரது கண்ணச் சேர்க்கையின் இணைப்பு முயற்சியால் காய்க்குக் கரு பிடிக்கும்; உதடு, நாக்கு, பல், மேல்வாய் என்னும் உறுப்புகளின் முயற்சியால் சொல்லின் கருவாம் எழுத்துகள் உண்டாகும். நெற்கரு பயிரின் பல்வகை ஊட்டச் சேர்க்கையால் காயாகும்; சொற்கரு தனி எழுத்து, எழுத்துகளின் ஒலிச் சேர்க்கையால் சொல்லுருப்பெறும். நெற்கரு காயாகவே நின்றுவிடின் அது கருக்காய் – பதர் – பதடி; நெல் ஆகாது. சொற்கரு பொருளற்று எழுத்துகளின் கூட்டமாகவே நின்றுவிடின் அது உளறல் – கத்தல் – உறுமல்; சொல் ஆகாது.

கரு முற்றித் திரண்டு பொன்னிறம் காட்டினால் அது நெல்; பொருள் முற்றிக் கருத்து திரண்டு ஒலிநயம் காட்டினால் அது சொல். பாவேந்தர் பாரதிதாசனார்,

---

1 "சொல்லும் விரீகியும் வரியும் சாலியும்
மலமும் நெல்லின் பொதுப்பெயர் ஆகும்"—பிங் : 1973.

2 "அத்தம் சாலி கழை கன்னல் ஆவின்பால்"—தனிப்பாடல்

"கருந்தமிழ்ச் சொல்லுக் குள்ளே
கருத்துக்கள் இருத்தல் போலே" [1]
— என்றார்,

## செஞ்சொல் ஒரு செந்நெல்.

மணிபிடித்துச் செம்மை சான்ற நெல்லைச் 'செஞ்சாலி — செந்நெல்' என்பர். பொருள் முற்றிப் பயன் நல்கும் சொல்லையும் 'செஞ்சொல்' என்பர். சிந்தாமணி ஆசிரியர் திருத்தக்கதேவர்.

'அழகிய சிலவாகப் பகிர்ந்து பின்னிய கூந்தலை உடைய பெண்கள் புனைந்த **செஞ் சொல்**லாலாகிய பாடலாகிய மாலையைச் சூடிக்கொண்டான் சீவகன்' – என்பதை,

"அஞ்சில் ஓதியர் புனைந்த
**செஞ்சொல்** மாலை சூடினான்" [2]
— என்று குறித்தார்

## பயனில் சொல் பதர்

சொல் கருத்துடையதாக அமைவதால் மட்டும் சிறப்பில்லை, பயன் விளைப்பதாகவும் அமைய வேண்டும். அந்நிலையில்தான் சொல் தன் இயல்பில் நிறைவு பெற்றதாகும். பயன் விளைக்காத சொல்லைக் கருக்காயோடு ஒப்பிடுவர்.

'பயன் விளைக்காத சொல்லை மேலும் மேலும் விரும்பிக் கூறுபவனை மாந்தர் இனத்தில் பிறந்தமகன் என்று சொல்லாதே: மக்கள் இனத்துள் தோன்றிய பதடி - பதர் - கருக்காய் என்று சொல்லுக' [3]

— என்றார் திருவள்ளுவப் பெருந்தகை.

---

1 *அழகின் சிரிப்பு; குன்றம்* : 8 : 2
2 *சீவ : சி* : 691
3 *"பயனில் சொல் பாராட்டு வானை மகனெனல்; மக்கட் பதடி எனல்"— குறள்* : 196

உள்ளீடு இல்லாத நெல் பதர்;
உள்ளீடு இல்லாத சொல்லும் பதர்.

காயவைத்துத் தூற்றிப் பதர் போக்கிய நெல்லைத் தூற்றிய 'நல்லநெல்' என்பர் அதுபோன்று பயனின்மை நீக்கியசொல்லைக் கூறவந்த சிந்தாமணி ஆசிரியர்,

"பதர் அறு திருமொழி" 1

— என்றார்.

## சொல் - சொலி.

நெற்பயிரின் தொடர்பிலும் சொல் இடம் பெறுதலைக் காணலாம். நெல்லினது தாளின் உட்புறத்திலும், மூங்கிலினது உட்புறத்திலும் மென்மையாக ஒரு வெண்மைத் தோல் உரியும். அது 'சொலி' எனப்படும். மூங்கிலில் அஃதாவது கழையில் உள்ள அதனைப் புறநானூறு,

"கழைபடு சொலி"2

—என்றும் சிறுபாணாற்றுப்படை,

"காம்பு சொலித்தன்ன"3

—என்றும் குறிக்கின்றன. நெல்லையுடைய தாளைச் சொல்லையுடைய 'சொலி' என்னும் குறிப்பில் காண்கின்றோம்.

## சொல்லும் களையும்.

பயிரின் நடுவே வளரும் புல் முதலியவற்றைக் களை என்கின்றோம். அவற்றைக் களைதலைக் 'களைகட்டல்' என்கிறோம். இக்களைதல்—நீக்குதல் எனபதற்கு வேறு ஒரு சொல் இலக்கியங்களில் கையாளப்படுகின்றது. அச்சொல் 'சொல்' என்பதன் அடியாக அமைந்த 'சொல்லிய' என்பது. 'நண்பனுக்கு நேர்ந்த துன்பத்தைக் களையத் தொடங்கினான்' எனக் குறிக்க வந்த திருத்தக்கதேவர்,

---

1 சீவ. : 2850.
2 புறம் : 383 : 10.
3 சிறுபாண் : 235, 236.

"துணைவனார்க்கு உற்ற துன்பம்
சொல்லிய தொடங்கி னானே"[1]

என்றார். புறாவின் துன்பத்தை நீக்கிய மாமன்னன் சிபியின் செய்தியை,

"புறவின் அல்லல் சொல்லிய"[2]
—என்றார் ஆவூர் மூலங்கிழார்.

"பண்டைச் சாகாட் டாழ்ச்சி சொல்லிய"[3]
—என்பது அவ்வைப் பெருமாட்டியின் தொடர்

களைகட்டலைச் சொல்லொடு இயைத்து முனைப்பாடியார் பேசுகின்றார். அறத்தைப் பயிராக உருவகிக்கும் அவர், இனிய சொல்லை விளைநிலமாக்கி, வன்சொல்லைக் களையாக்கி, உண்மைச் சொல்லை எரு ஆக்குகின்றார்.

"இன்சொல் விளைநிலமா ஈதலே வித்தாக
வன்சொல் களைகட்டு வாய்மை எருவட்டி"[4]
என்பது அவர்தம் பாட்டு

## சொல் நீழலும், நெல் நிழலும்

நெற்கதிர் பல்லுயிர்களையும் உணவு தந்து ஓம்பிப் பசி என்னும் வெம்மை போக்கிப் பேணிச் சுவை என்னும் நிழல் தருவதால் நெற்கதிரை "அலகு உடை நீழல்"[5] என்றார் திருவள்ளுவப் பெருந்தகை.

இதுபோன்றே, மக்களை ஒலி இனிமையால் ஓம்பிப் பேணிச் 'சோர்வு என்னும் வெம்மை' போக்கி 'இனிமை என்னும் நிழல்' தருவது சொல். இச் சொல்லின் பயனைக்கொண்டு 'சொல் நிழல்' என்றனர் கோவூர்கிழார்,

1 சீவ. சி : 1146
2 புறந் : 39 : 1.
3 புறம் : 90 : 7.
4 அறநெறி : 16.
5 "பலகுடை நீழலும் தங்குடைக்கீழ் காண்பர்
அலகுடை நீழ லவர்" — குறள் : 1034.

"சொல் நிழல் இன்மையின் நல் நிழல் சேர"[1]

—என்றார்.

## சோற்றுக்குள் சொல்.

நெற்பயனால் ஆக்கப்படும் உணவைக் குறிக்கச் 'சொன்றி' என்று ஒரு சொல் உண்டு. 'தென்பாண்டி நாட்டார் சோற்றைச் சொன்றி என்றும்....வழங்குவர்'[2] என்று நன்னூல் உரையாசிரியர் 'சொன்றி' என்னும் சொல் திசைச்சொல் என்றார். நிகண்டுகள் யாவும் சோற்றைக் குறிக்கும் சொல்லாகச் 'சொன்றி'யைக்[3] குறித்துள்ளன. இலக்கியங்கள் பலவும் இச் 'சொன்றி'யைப் பேசுகின்றன.

'இழிந்து ஆனாப் பல சொன்றி' —என்பது மதுரைக் காஞ்சி (212)

'சொன்றிப் பெருமலை தின்று' —என்பது கல்லாடம் (10 : 19)

'புன்புல வரகின் சொன்றியொடு பெறூஉம்' — என்பது புறம் ; (197 : 12)

நெல் முதலிய பிற பயிர்களிலிருந்து உருவாகும் உணவைக் குறிக்க அவற்றினும் சிறப்பாக அரிசிச் சோற்றைக் குறிக்க எழுந்த சொல்லாம் 'சொன்றி' யில் 'சொல்' என்பது வேர்ச்சொல்லாக அமைந்துள்ளமை நோக்கத்தக்கது. சோற்றுக்குள்ளே சொல் ஒலிக்கிறது.

## சொல் ஒரு விதை.

நெல் பயிர்; சொல்லையும் பயிராகக் கண்டனர் தமிழ்ச் சான்றோர். நிலத்தில் விதையை வித்தி நெல்லைப் பயிரிடுவது போன்றே செவியில் சொல்லைப் பெய்து பயன் விளைத்தனர்.

---

1 புறம் : 373 : 15.

2 நன் : 273 உரை.

3 "சொன்றி பாத்துக் கூழ் பதம் புகா சோறே"—பிங். நி: 1102

"சொன்றி நிமிரம் மடை கூழ் புழுக்கல்

"ஒன்றிய மூரல் சோறென உரைப்பர்"—சேந். தி: பல்பொருள்.

"சொன்றிய புன்கமொடுசருவசனம்

"ஊண் கூழ் ஓதனம் புகாவே சோறாம்"—சூடா, நி ; 22.

செவியை நிலமாகவும், சொல்லை விதையாகவும், பயன் நிறைவேறுதலைப் பயிர்க் கதிராகவும் உருவகம் செய்தனர் புலவோர்.

> 'வள்ளல்களது செவிகளில் பொருள் விளங்கும் சொற்களை விதைத்துத் தாம் விரும்பிய பரிசைப் பெற்று நிறைவேற்றிக் கொள்ளும் உரம்பாய்ந்த நெஞ்சையுடையோர் பரிசிலர்'[1] –என்றார் அவ்வைப் பெருமாட்டியார்.

பெருஞ்சித்திரனாரும்,

> 'பொய் சொல்லுவதை அறியாத அறிஞனது செவியிடத்து விதைத்த சொல்லாலான பாடல் பயிராக விளைந்தது'[2] என்றார்.

## புலவன் உழவன் ஆகிறான்.

சொற்களை வழங்குதலை நெற்பயிர்த் தொழிலாகக் கண்டனர். கண்டோர், சொல்லை விளைக்கும் புலவனை உழவனாகக் கண்டனர். திருவள்ளுவப் பெருந்தகை "சொல் ஏர் உழவர்"[3] –என்றார். சொல் ஏர் ஆகியது; புலவன் உழவன் ஆனான்.

இதற்குப் பொருத்தமாக அறிவை—புலனை ஏராக வைத்துப் "புலன் உழுது உண்மார்"[4] என்றார் கோவூர்கிழார்.

## உழவுத் தொழில் ஓர் சொல்லாடல்.

இவற்றையெல்லாம் ஒரு சேர நோக்கி ஒரு காட்சி ஆக்குகின்றார் கலித்தொகை ஆசிரியர்:

---

1 "வள்ளியோர் செவிமுதல் வயங்குமொழி வித்தித்தாம்
உள்ளியது முடிக்கும் உரனுடை உள்ளத்து
வரிசைக்கு வருந்தும் இப் பரிசில் வாழ்க்கை" –புறம் : 206 : 2-4

2 "பொய்த்தல் அறியா உரவோன் செவிமுதல்
வித்திய பனுவல் விளைந்தன்று நன்று" —புறம் : 237 : 4, 5.

3 "வில்லேர் உழவர் பகைகொளினும் கொள்ளற்க;
சொல்லேர் உழவர் பகை" —குறள் : 872.

4 "இவரே, புலன் உழுது உண்மார் புன்கண் அஞ்சித்
தமது பகுத்துண்ணும் தண்ணிழல் வாழ்நர்." —புறம் : 46 : 3, 4,

புனலூரில் ஒரு விருந்துக் காட்சி. அவ்விருந்தும் ஒரு கூட்டாஞ்சோற்று விருந்து, உணவை ஆக்குகின்றவர், படைக்கின்றவர், உண்கின்றவர், யாவரும் புலவர். இச்செயல்கள் மட்டுமல்ல. நிலத்தைப் பண்படுத்தி வயலாக்குகின்றவரும் அவரே. நீர் பாய்ச்சுகின்றவரும் அவரே. கலப்பைகொண்டு உழுகின்றவரும் அவரே. நெல்லை விளைத்துப் புதுச்சுவையோடு உணவாக்குகின்றவரும் அவரே. கூடி உண்கின்றவரும் புலவரே.

இதில் ஒரு புதுமை. பயிர்த்தொழிலில் வளவயலை ஆக்குதலும், நீர் பாய்ச்சுதலும், உழுதலும் முதலிய செயல்கள் வெவ்வேறு பருவத்தில் – காலத்தில் – நேரத்தில் நிகழ்பவை. ஆனால், இப்புலவர் செய்யும் உழவுத் தொழிலோ ஒரே நேரத்தில் அனைத்துச் செயல்களையும் கொண்டது.

புலவர்களது பண்படுத்தப்பட்ட வயல் — செவி. ஆம், யாவரது செவிகளுமே வயல். கரம்பை செதுக்கிக் களர் ஒதுக்கித் தள்ளி, வயலைப் பண்படுத்துகின்றமை போன்று, வன்சொல் கேளாமல் செதுக்கி ஒதுக்கிப் பயனில் சொற்களைக் கேளாமல் களைந்து விலக்கிச் செப்பம் செய்யப்பட்டது புலவர்களது செவிகளாகிய வயல். ("செதுமொழி சீத்த செவி செறுவாக") முன்னையச் சான்றோர்தம் பொன்மொழிகளை வைத்து இப்புலவர்கள் பனுவல் பாடுகின்றார்கள். அம்முதுமொழியே நீராகப் பாய்ச்சப்படுகின்றது. நல்ல நூல்களைப் பயின்ற அறிவுடை நாவே கலப்பை. அக்கலப்பைகொண்டு உழுகின்றனர். ("முதுமொழி நீரா புலன் நா உழவர்") புதுமை நயமும் சுவையும் திகழும் புதுமொழிகளாம் ஒன்பான் சுவை உணவைக் கூட்டி ஆர்வமுடன் உண்கின்றனர். இப்புலவர்கள் வாழும் ஊரின் பெயர் என்ன தெரியுமோ? புனலூர். ஊரின் பெயரும் வயலுக்கினிய நீர்—புனல் அமைந்த ஊர். ஊர் புனலாக இருந்தால் கரை வேண்டுமன்றோ? புனலூருக்குக் கரையாக அவ்வூரைக் கோட்டை மதில் சூழ்ந்துள்ளது. ("புதுமொழி கூட்டுண்ணும் புரிசை சூழ்புனலூர்")

கலித்தொகை ஆசிரியரின் வாய்மொழியை ஒன்று கூட்டிக் காண்போம்:

"செதுமொழி சீத்த செவி செறுவாக
முதுமொழி நீரா, புலன்நா உழவர்
புதுமொழி கூட்டுண்ணும் புரிசைசூழ் புனலூர்"[1]

இப்பாடல் அமைந்த பகுதி மருதக்கலி. 'சொல் என்னும் நெல்' விளையும் பாடல் மருதக் (மருதம் — வயல் பகுதியைக் குறிக்கும் பெயர்) கலியுள் அன்றி வேறெங்கு அமையும்?

இவ்வாறு நெல்லோடு சொல், தொடர்பாக ஓரிடத்தில் மட்டும் அமையின் அதனை நிறைவழக்காகக் கொள்ள இயலாது. பலர் உள்ளத்தும் இவ்வெண்ணம் அவ்வப்போது ஊறி நின்றதை இலக்கியங்களில் காணலாம். இவ்வகையில் இளங்கோவடிகளாரது பேச்சைக் கேட்போம்.

செங்குட்டுவன் கனக விசயரை வென்றான். வெற்றியைத் தமிழக மன்னர்க்கு அறிவிக்கச் செய்தான். சோழ பாண்டியர் சம் மாற்றம் சேரனுக்குச் சினத்தினை மூட்டியது. அங்கு அப்போது அமைந்திருந்த மாடலன் செங்குட்டுவனை அமைதிப்படுத்தி அறிவுரை புகல்கின்றான். இவ்விடத்தை வாய்ப்பாகக் கொண்டு இளங்கோவடிகளார் சொற்பயிரை விளைக்கின்றார்:

'மாடல மறையோன் தன் மறை பயின்ற நாவால் செங்குட்டுவன் 'செவி என்னும் வயலை' உழுதான். சிறந்த கருத்துகளை அவ்வயலில் விதைத்தான். விதைத்த, பதப் பட்ட சொற்கள் விளைவைத் தந்தன. அப்பதம் ஒன்று நூறாய் மிகுந்தது. விளைந்ததைச் சுவைத்து நுகரும் வேட்கை கொண்டான் செங்குட்டுவன்'[2]

---

1 கலி : 68 : 3-5.

2 "மறையோன் மறைநா உழுது வான்பொருள்
இறையோன் செவிசெறு வாக வித்தலின்
வித்திய பெரும்பதம் விளைந்து பதம்மிகுத்து
துய்த்தல் வேட்கையின் சூழ்கழல் வேந்தன்"
—சிலம்பு : நடுகல் ; 187-190

மேலே காணப்படும் மாடலன் வாய்வழியான இளங்கோவடிகளார் பேச்சில் நாக்கு ஏராக உழுகின்றது. செவி வயலாகின்றது. பொருள் விதையாகின்றது. பயன் விளைவாகின்றது. வேட்கை உண்ணலாகின்றது.

## சொற்பதம்.

இப்பாடலில் மற்றொன்றும் தென்படுகின்றது. அது 'பதம்' என்னும் சொல் தரும் குறிப்பாகும். 'பதம்' என்றால் 'சொல்' என்றும் பொருள்; 'சோறு' என்றும் பொருள். "கூழ் பதம் புகா, சோறே"[1] என்கிறது பிங்கலம். சேந்தன் திவாகரமும்[2] இப்பொருளை அறிவிக்கின்றது. 'ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம்' என்னும் பழமொழி, பதப்பட்டதால் சோறு 'பதம்' எனப்படுவதை அறிவித்து நிற்கின்றது. இது போன்றே நற்பொருள் கூடிப் பதப்பட்ட சொல் 'பதம்' எனப்படுகின்றது.

இவ்வாறு சொல் பலவகையிலும் நெல்லாய் வளர்ந்து பயிராகும் வரலாற்றின் படிகளில் ஏறுவோம்.

| | | |
|---|---|---|
| சொல் | — | நெல் |
| செஞ்சொல் | — | செந்நெல் |
| வன்சொல் | — | பதர் |
| சொல் | — | சொலி |
| வன்சொல் | — | களை |
| சொல் நிழல் | — | கதிர் நிழல் |
| சொல் | — | சோறு : சொன்றி |
| சொல் | — | வித்து |
| சொல்லும் நாக்கு | — | உழும் ஏர் |
| சொல்லாடல் | — | உழவுத் தொழில் |
| புலவர் | — | உழவர். |

இப்படிகளில் ஏறுங்கால் படிப்படியாகத் தமிழ்ச் சொல்லின் உயர்வைக் காணலாம். நெல்லின் கோணத்தில் நின்று சொல்லைக் காணுங்கால் தோன்றும் சொல்லின் உயர்வை உளத்துக்கொண்டு இக்காலச் சொற்களின் வரலாற்றை ஆய்வது நற்பயன் தரும்.

---

1. *பிங். நி : 1102 : 6.*
2. *"சோறும் வழியும் சொல்லும் காலும்*
   *ஈரமும் சேமமும் புனலும் காலையும்*
   *பாவலர் பதம்எனப் புகரும் கிளவி"*

   *-சேந். தி. : ஒரு சொற் பல்பொருள்.*

# 3. தலையில் முளைத்த தலைகள்.

பிறப்பில் முதல் முளை தலை.

தலையில் ஐம்பொறிகளும்

முளைக்கும்; தலையில் தலைகளே

முளைக்குமோ?

முளைக்கும்; கிளைக்கும்.

## கவர்ச்சித் தலைப்பு.

நாகைத் தமிழ்ச் சங்கத்தில் ஞாயிறுதோறும் திருக்குறள் வகுப்பு நடத்தும் வாய்ப்பு நேர்ந்தது. இவ்வாய்ப்பில், திருவள்ளுவப் பெருந்தகையின் சொல்லாட்சி வியப்பை வளர்த்தது. திருக்குறள் கருத்துப் பேழையாக மட்டுமன்றிச் சொற் புதையலாகவும் விளங்குவதை உணர்ந்தேன்.

தலை, கை, கால் முதலிய உறுப்புச்சொற் களைப் பெய்துள்ள பாங்கு, தமிழின் சொல் லூற்றத்தை வெளிப்படுத்தி மொழியாக்கத்தை யும் வழங்குவதை அறிந்தேன்.

இதனை வெளிப்படுத்தும் வாய்ப்பாக அது போது நாகை வட்டத் தமிழாசிரியர் கழகத் துவக்க விழா அமைந்தது. அதிற் சொற்பொழி வாற்றப் பணித்தனர். கவர்ச்சியான தலைப்பை வேண்டினர்.

**"தலையில் முளைத்த தளைகள்"**

–என அறிவித்தேன்.

அச்சொற்பொழிவின் எழுத்து வடிவம் இது.

வெளியிட்ட இதழ்: மறைமலையடிகளார் நினைவுமலர்.
நாகைத் தமிழ்ச் சங்க வெளியீடு.
தி. ஆ. 2000 —ஆனி—5;
19—6—1969.

**தலையில் முளைத்த தலைகள்.**

## கதைத் தலைகள்

ஒரு கருமலையும் ஒரு நீலக் குன்றும் மோதிக் கொண்டன. கடும்போர் ஒன்று நிகழ்ந்தது. இருள் ஒன்றுதிரண்டு ஒருபுறம் நின்றதே போலக் கருத்த உடற் காளையர்படை ஒருபுறம் நின்று எதிர்த்தது. அதன் தலைவன் கருமலையாய் வீறுடன் மோதினான்.

எதிர்ப்புறத்தில் பகல் ஒருங்கு சேர்ந்து நிற்பது போன்று, சிவந்த நிறப்படை திவந்து தாக்கிற்று. நீலக்குன்று போன்ற இப்படைத் தலைவன் செம்மாந்து தாக்கினான்.

'வில்லுக்கு வில்; அம்புக்கு அம்பு' எனப்போர் மிடுக்கு ஏறி நிகழ்ந்தது. தான் தங்கும் இடம் அறியாது வெற்றி இப்புறமும் அப்புறமும் ஓடி ஓடி அலைந்த நேரம். நீலக்குன்று எய்த ஓர் அம்பு பாய்ந்தது. பாய்ந்த கணை பூவைக் கொய்வது போன்று கருமலையின் தலையைக் கொய்தது. என்ன வியப்பு! கொய்யப்பட்ட இடத்தில் மற்றொரு தலை முளைத்ததாம். அதனினும் வியப்பு,

'கொய்ததோ கொய்யவில்லையோ என்று
காணும் இமை நேரத்தில் மற்றொரு கணை
பாய்ந்து முளைத்த தலையை அறுத்தது'' [1]

அதே விரைவில் அடுத்து ஒரு தலை முளைத்தது.

அறுத்த கணை நீலக்குன்றாம் இராமனுடையது.

முளைத்த தலைகள் கருமலையாம் இராவணனுடையன.

இவ்வாறு தொடர்ந்து அறுக்க முளைக்க, அறுக்க முளைக்க ஓய்வில்லாமல் தலைகள் நூற்றுக்கணக்கில் போய்விழுந்தன. அப் போர்க்களத்தில், பார்த்த இடமெல்லாம் பல தலைகள் வீழ்ந்தன.

இத்தலைகள் கம்பராமாயணத்தில் முளைத்த தலைகள்.

கம்பராமாயணத்தில் முளைத்தால் கந்தபுராணத்தில் முளைக்க வேண்டாவோ? முளைத்தன. பத்து தலைகளைப் பெற்ற இராவணனுக்கு நூறு தலைகள் முளைத்தன என்றால், ஆயிரம் தலைகளைப் பெற்ற சிங்கமுகாசுரனுக்குப் பல்லாயிரக் கணக்கில் முளைக்கவேண்டும் அன்றோ? முளைத்தன. முளைத்த தலைகளும் முழங்கிப்பேசின :

'முருகனே. நீ எத்துணை காலந்தான் ஊடுரு
வும் அம்பை எய்து கிளைத்து முளைக்கும் தலை
களை அறுத்தாலும் மேலும் மேலும் முளைக்கு
மேயன்றி முடிவுறா' [2]

— என்று சிங்காமுகாசுரன் தலை வீரம் பேசிற்று.

---

1 "கொய்தது கொய்தில தென்னும் கொள்கையில்
எய்த அக்கணத் தெழுந்தது ஓர்சிரம்''

— கம்ப: இராவணன் வதை: 153.

2 ''உளைக்குங் கணைதள் ளியுகம் பலநீ
கிளைக்குந் தலைமொய்ம் புகெடுத் திடினும்
முளைக்கின் றதலால் முடிவுற் றிடுமோ
இளைக்கின் றனைநீ கொல்லெனைப் பொருவாய் — க. பு : சிங்கமுகாசுரன் : 427,

"அறுத்திடு தலைகள் வீழ
ஆயிரம் சென்னி வல்லே
மறித்துவந் தெழுத லோடும்" 1

— எனக் கச்சியப்பர் பாடினார்,

இவ்வாறு வியத்தகு நிலையில் முளைத்த தலைகளை விளக்கும் நோக்கம் கொண்டதன்று இக்கட்டுரை. ஏனெனில், இவை தலையில் முளைத்த தலைகள் அல்ல. கழுத்தில்முளைத்த தலைகள் ஒரு தலை விழுந்து, அறுபட்ட கழுத்திலிருந்து அன்றோ மீண்டும் மீண்டும் முளைத்தன?

தலை வீழாமலே நிலைத்திருக்க, அத்தலையில் மேலும்மேலும் தலைகள் முளைத்தால் அது வியப்பினும்வியப்பு; நயப்பினும்நயப்பு. இவ்வியப்பையும் நயப்பையும் சொல்லின் வரலாறாம் மொழியியலில் காணலாம்.

கதையியலில், மூலத் தலை வீழ்ந்து போகும்; முளைத்த தலைகளும் வீழும். இறுதியில் தலையே இல்லாமல்வெற்றுடல்தான் எஞ்சும். இது போர்க் கொலை.

மொழியியலில் மூலச்சொல்லும்நிற்கும்; அதன்கண் முளைத்த கிளைச் சொற்களும் விளங்கித் தோன்றும். காலமெல்லாம் நிலைத்தும் நிற்கும். இது சொற்கலை,

கொலைப்போர்த் தலைகளை விடுத்துக்
கலைச்சொல் தலைகளைக் காணலாம்,

## சொல்லின் தன்மை.

"எல்லாச் சொல்லும் பொருள்குறித் தனவே"2 – என்று தொல்காப்பியர் சொல்லினுடைய உயிரோட்டத்தைக் குறித்தார். தொடர்ந்து, 'சொல் தன்னை உணர்த்தும் தன்மையைக் கொண்டது பொருளைத் தெரிவிக்கும் தன்மையைக் கொண்டது'3 –என்று முன்னோர் வழிநின்று மொழிந்தார்.

---

1 க. பு — சிங்கமுகா சுரன் : 438
2 தொல்: சொல் : 155.
3 "பொருண்மை தெரிதலும் சொன்மை தெரிதலும்
சொல்லி னாகும் என்மனார் புலவர்" —தொல் : சொல் : 156.

சொல் உடல்; பொருள் உயிர்.

உடலில் உயிர் இயங்குவதை இருவகையாக அறியலாம். மூச்சு ஓட்டத்தாலும், நாடித் துடிப்பாலும் வெளிப்படையாக அறிகின்றோம். உடலின் இயக்கத்தாலும், மன உணர்வாலும் குறிப்பாக உணர்கின்றோம்.

> 'சொல் பொருளைத் தெரிவிக்குங்கால் இருவகையாகத் தெரிவிக்கும். பொருளை வெளிப்படையாகத் தெரிவிக்கும்; பொருள் குறிப்பாகத் தோன்றுமாறு நிற்கும்'[1]

—என விளக்கியது தொல்காப்பியம். எனவே, உயிரைப் போன்றது சொல்லின் பொருள் என்றதற்கேற்ப பொருள் சொல்லில் வெளிப்படையாகவும் தோன்றும்; குறிப்பாகவும் தோன்றும்.

சொல்லின் இவ்வியல்புகள் வளம் வாய்ந்த மொழிகள் பலவற்றிற்கும் பொருந்தக்கூடியனவே.

தமிழ்ச்சொல், பொருள் உணர்த்துவதைப் பரவலாகக் காணலாம்; பல துறைகளில் நோக்கலாம்; பல போக்குகளில் அறியலாம்; பல பாங்குகளில் உணரலாம்.

தமிழில் ஒரு சொல்லே பல பொருள்களைத் தரும். ஒரு சொல்லுக்கே பல சொற்கள் உள. இவை திரிசொல் எனப்படும். இத்திரி சொல்லிலும். பெயர்ச்சொல், வினைச் சொல், இடைச் சொல், உரிச்சொல் எனச் சொற்கள் பல்கிப் பெருகும். இத்திரி சொல் மொழி வளப்பத்தைக் காட்டுவது.

மொழிக்கு வளப்பத்தோடு வனப்பையும் ஊட்டும் பணியில் குறிப்பாகப் பொருள்களும் சொற்களும் பங்கு கொள்கின்றன. அவற்றுள், ஆகுபெயர் ஒன்று.

'தலைக்கு ஒரு மாங்கனி கொடு', என்றால் மாங்கனியைத் தலையில் வைப்பான் இலன். தலையைப் பெற்ற மனிதனுக்கே கொடுப்பான். இவ்விடத்தில் 'தலை' என்னுஞ் சொல் தன் வெளிப்படைப் பொருளை உணர்த்தாமல், தன்னோடு தொடர்

---

1 ''தெரிபுவேறு நிலையலும் குறிப்பில் தோன்றலும்
இருபாற் றென்ப பொருண்மை நிலையே'' —தொல் : சொல் : 153.

புடைய மாந்தன் என்னும் பொருளைக் குறிப்பாய் உணர்த்தியது இஃதே ஆகுபெயர்.

இவ்வாகு பெயரைப் போன்றே, அதனினும் நுணுக்கமாக, ஆனால் விரிந்த பாங்கோடு – குறிப்பாகப் பொருளை உணர்த்தும் 'சொல் நிலை' யும் உண்டு. இஃது ஓரளவாய் ஆகுபெயரோடு தொடர்புடையதாயினும் தனித்தும் நோக்கத்தக்க தகுதியுடையது.

## பொருட் கிளை

ஆகுபெயர் தனக்குரிய நேர்பொருளை உணர்த்தாமல் அப்பொருளினின்றும் நீங்காமல் ஒதுங்கி நின்று, ஓர் இயைபோடு வேறொரு பொருளைக் குறிப்பால் உணர்த்தும். 'சொல் நிலை' என்று குறிக்கப்பட்டதோ ஒரு சொல் தனக்குரிய நேர்பொருளை முதலில் வெளிப்படையாக உணர்த்தும். உணர்த்தி, அப் பொருளின் மையத் தன்மையிலிருந்து நீங்காமல் நின்று, குறிப் பால் வேறு பொருளை உணர்த்தும். வேறு ஒரு பொருளைக் குறிப்பதோடு நில்லாமல் மேலும் தொடர்ந்து – தன் மையப் பொருளில் நீங்காது – பொருள்கள் முளைத்துக் கிளைத்துப் பெருக இடந்தந்து நிற்கும். இந்நிலையைச் 'சொல்லின் பொருட் கிளை' எனலாம். ஆகுபெயர் இலக்கணத் துறையது; இப் பொருட் கிளை மொழியியல் துறையது.

வளமான மரம் போன்றது மொழியியல் துறை. மரம் பல பகுதிகளைக் கொண்டது. மரத்தின் மூலப்பகுதி மண்ணுக் குள்ளிருந்து உணவு கூட்டி, உரம் சேர்க்கும் வேர்ப்பகுதி. அடி மரம் உடற்பகுதி. கிளை, கொம்பு, கோடு முதலியன சினைப் பகுதி. தளிர், இலை, மலர், காய் கனி முதலியன பயன் நல்கும் வளப்பகுதி.

மொழிக்கு அடிநிலையான அசைகளும், சொற்களும் மொழி யின் மூலப்பகுதியாம். இதனை மரத்தின் மூலப்பகுதியான 'வேர்' என்னும் சொல்லைக் கொண்டே 'வேர்ச்சொல்' என்கின்றோம். இலக்கிய இலக்கணங்கள் மொழியியலின் உடற்பகுதி. ஒரு சொல்லிலிருந்து பொருள்கள் முளைத்துக் கிளைத்துப் பெருகுதல் மரத்தினது சினைப்பகுதி போன்றது. இதுகொண்டு இம்மொழி யியல் பகுதியைச் "**சொல்லின் பொருட்கிளை**" எனக் குறிப்பதில் இயைபிருக்கின்றது. 'வேர்' என்ற சொல்லை அமைத்து

'வேர்ச்சொல்' என்று குறித்த இயைபிலேயே 'கிளை' என்னும் சொல்லை அமைத்துப் 'பொருட்கிளை' எனக் குறிக்கலாம். மொழியால் தோன்றும் சுவை, நயம், பயன் முதலியன மொழியியலின் வளப்பகுதியாகும்.

சொல்லின் பொருட்கிளையினைச் சான்றோடு விளக்கும் கருத்திலேயே "தலையில் முளைத்த தலைகள்" என்னும் தொடர் அமைக்கப்பட்டுள்ளது. திருக்குறளைக் களமாகக் கொண்டு இதனைக் காணலாம்.

## திருக்குறள் தலைகள்.

**முதல் தலை** திருவள்ளுவப் பெருந்தகை தலை என்னும் சொல்லைத் தனியாகவும், புணர்மொழியில் வைத்தும் ஆண்டுள்ளார். திருக்குறளில் 43 இடங்களில் இச்சொல் வருகின்றது. இவ்வெண்ணிக்கையில் கருத்து ஒன்றும் இல்லை. இச்சொல் திருக்குறளில் **முறையே வரிசையாகத் தொடர்ந்து** அமைந்து ஆங்காங்கு நுணுக்கமாகப் பொருட்கிளைவிட்டுப் பல்குதலே வியந்து நோக்கத்தக்கது; நயந்து மகிழ்தற்குரியது.

"கோளில் பொறியின் குணமிலவே, எண்குணத்தான்
தாளை வணங்காத் **தலை**" (குறள் : 9)

- இக்குறளில்தான் 'தலை' என்னும் சொல்லை முதன்முதலில் காண்கின்றோம். இங்கே குறளின் கருத்துகள் பற்றிய ஆராய்ச்சியின்று, அக்கருத்தினை அறிவிக்கும் பாங்கில் அமைந்துள்ள மொழியியல் கருத்தே இங்கு உய்த்துக் காணப்படுகின்றது.

இக்குறளில் 'தலை' என்னும் சொல் மாந்த உறுப்பாகிய தலையைக் குறிப்பது. அஃதாவது 'தலை' என்னும் சொல் தன் நேர் பொருளை வெளிப்படையாகத் தந்து நிற்கின்றது.

சொல் தரும் வெளிப்படையான பொருள் என்ற நிலையோடு மட்டும் 'தலை' என்னும் சொல் இக்குறளில் அமையவில்லை. 'தலை' என்னும் உறுப்பின் அமைப்பு, அவ்வமைப்பின் இயக்கம், இயல்பு ஆகிய இலக்கணத்தையும் இக்குறள் அறிவிக்கிறது.

வாய், கண், மெய், செவி, மூக்கு ஆகிய ஐந்து பொறிகளையும் கொண்டது தலை. அவற்றுள் ஒன்று குறையினும் தலை குறையுள்ளதாகும். ஐந்தும் அமைந்துவிடுவதால் மட்டும் தலை நிறைவுடையதாகிவிடாது. ஒவ்வொரு பொறிக்கும் ஒவ்வொரு குறிக்கோள் உண்டு. ஐம்புலன்களே ஐம்பொறிகளின் குறிக்கோள்கள். சுவை, ஒளி, ஊறு, ஒலி, நாற்றம் என்னும் ஐந்து அறிவையும் முறையே குறைவில்லாது பெற்று ஐம்பொறிகளும் அமையவேண்டும். அவ்வாறு அமையினும் தலை தன் இலக்கணத்தில் நிரம்பி நிறைவுடைய உறுப்பாகிவிடாது. கண் இருந்து பார்வை இன்றேல் 'குருடு' என்னும் பழுதாகும். பார்வையிருந்து அப்பார்வை கள்ளப் பார்வையாயின் குணமில்லாக் குறையாகும். இதுபோன்றே பிற பொறிகளும் அவ்வவற்றிற்குரிய குறிக்கோள்களை உடையனவாய்க் குணக்குறையற்று அமையவேண்டும். கோள், புலன் இல்லாத பொறிகளில் குணம் இராது. ஆகவே, கோள் இல்லாத பொறி போலக் குணம் இல்லாதது தலை ஆகாது. இவ்வாறு தலையின் இலக்கணத்தை எதிர் மறை முகமாக அறிவிக்கின்றது இக்குறள்.

முதன்முதலில் 'தலை' என்னும் சொல்லைத் திருவள்ளுவர் ஆளும் இவ்விடத்தில் அதன் நேர் பொருளை அப்பொருளுக்குரிய இலக்கண நிறைவோடு காட்டியுள்ள திறம் நயக்கத் தக்கது.

[''தலையின் இழிந்த மயிர் அனையர்'' (964)—என மற்றும் ஓர் இடத்தில் உறுப்பைக் குறிக்கும் பொருளில் தலை அமைந்துள்ளது.]

**தலை முளை**

அடுத்துத் தலை என்னும் சொல்லை,

''விசும்பின் துளிவீழின் அல்லால்மற் றாங்கே
பசும்புல் தலைகாண் பரிது'' (16)

-என்னும் குறளில் தலையைக் காண்கின்றோம். இவ்விடத்தில் 'தலை' என்னும் சொல்' பசும்புல்லினது தலை என அமைந்துள்ளதால் 'முளை' என்னும் பொருளைத் தருகின்றது. இது நேர் பொருள் அன்று ஆகுபெயராய்க் குறிப்பில் வந்த பொருள்.

மாந்தரது உறுப்புகளில் முதலில் தோன்றி உலகத்தை முதலில் கண்ட உறுப்பு தலை. புல்லின் முதல் தோற்றம் முளை.

'முதலில் தோன்றியது' என்னும் இயைபில் புல்லின் முளைக்குத் 'தலை' என்னும் சொல் ஆகி வந்துள்ளது.

முதன் முதலில் 'தலை' என்னும் சொல் 'உறுப்பு' என்னும் நேர் பொருளில் அமைந்தது. அடுத்துக் குறிப்புப் பொருளாய் 'முளை' என்னும் பொருள் முளைத்தது. முளைத்த பொருள் கிளை விடாமலோ போகும்? கிளைகளைக் காண்போம் :

**தலை – சிறந்த அறம்**

மூன்றாவதாகத் 'தலை' என்னுஞ் சொல் அமைந்துள்ள குறள்:

''தென்புலத்தார் தெய்வம் விருந்
தொக்கல் தான்என்றாங்
கைம்புலத்தா றோம்பல் **தலை**'' (43)

— என்பது. 'ஓம்பல் தலை' என்பதற்குப் 'பாதுகாத்தல் சிறந்த அறம்' என்பது பொருள். இவ்விடத்தில் 'தலை' என்னுஞ் சொல்லுக்குச் 'சிறந்த அறம்' என்னும் பொருள் அமைகிறது. இப்பொருள் தலையோடு மிக நெருங்கிய தொடர்புடையதாவதைக் காணலாம் :

உறுப்புகளிற் சிறந்தது தலை. ஐந்து பொறிகளும் தலையிலேயே அமைந்துள்ளன. அப்பொறிகளை இயக்குவதற்குரிய தலைக்கயிற்றைச் சுண்டிக் கொண்டிருக்கும் மூளையும் தலையிலேயே உள்ளது. இவற்றால் தலை சிறந்ததாகின்றது. ஐம்பொறிகளையும் சென்ற இடத்தில் செல்லவிடாது, தீது நீக்கி, அறத்தின் பால் இயக்குவதுமூளை;கோளுடையபொறிகளைக்குணம்உள்ளனவாக்கித் தலை சிறந்த அறத்தினைச் செய்ய வைக்கின்றது. சிறந்த உறுப்பாம் தலை செய்யும் அறம் சிறந்த அறமாக அன்றோ அமையும்? இச்செயலைக்கொண்டு 'தலை' என்னுஞ் சொல்லுக்குச் '**சிறந்த அறம்**' என்னும் பொருள் பொருந்துகின்றது.

இக்குறளை மேலும் ஒருகால் நோக்கின் தென்புலத்தார், தெய்வம், விருந்து, ஒக்கல், தான் எனப் பட்டியல் இடப்பட்டுள்ள ஐந்தும் ஐந்து பொறிகளுக்கேற்ப அமைந்துள்ளமை காணலாம். ஐந்து புலம் என, 'புலம்' என்னும் சொல்புலன்களை நினைவூட்டுகின்றது. ஐம்பொறிகளும் வழுவாது காத்தல் என்பதற்கு ஏற்பக் 'காத்தல்' என்னும் பொருள்தரும் 'ஓம்பல்' என்னுஞ்சொல் அமைந்துள்ளது. இவ்வியைபுகள் நினைந்து சுவைத்தற்குரிய நயங்கொண்டவை,

["இகழ்வார்ப் பொறுத்தல் தலை" (151); 'மாணா செய் யாமை தலை' (317); "நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாம் தலை" (322)என மேலும் மூன்றிடங்களில் தலை இப்பொருளோடு அமைந்துள்ளது.]

**தலை—மேம்பாடு** இச் 'சிறந்த அறம்' என்னும் பொருட் டன்மையின் தொடர்போடு, மற்றொரு பொருளில் அடுத்துவரும் குறளில் தலை அமைந்துள்ளது:

*"இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்*
*முயல்வாருள் எல்லாம் தலை" (47)*

—இக்குறளில் தலை, 'வாழ்பவன்' என்னும் சொல்லோடு இயை கின்றமையால் 'மேம்பட்டவன்' என்னும் பொருளைத் தருகின்றது. மேற்குறித்தபடி தலைக்கு அமைந்த சிறப்பிற்கும், உறுப்புகளில் மேம்பட்டு உயர்ந்து மேலே விளங்கும் நிலைக்கும் ஏற்ப, ஆண் பாற் சொல்லோடு தொடர்ந்து 'மேம்பட்டவன்' என்னும் பொருள் கிளைக்கிறது.

[இப்பொருளோடு தலை வரும் இடங்கள்: "தானம் செய்வாரின் தலை" (295); "கொல்லாமை சூழ்வான் தலை" (325); "எண்ணி உரைப்பான் தலை" (687).]

'மேம்பட்டவன்' என்னும் தன் பொருட்கிளையால் ஆண் மகனை உயர்த்திக் காட்டிய தலை, பெண் குலத்தை உயர்த்தி மேம்படுத்த அடுத்தொருகுறளில் அமைந்துள்ளது:

*"சிறைகாக்குங் காப்பெவன் செய்யும்; மகளிர்*
*நிறைகாக்குங் காப்பே தலை" (57)*

—இக்குறளில் 'தலை' என்னுஞ் சொல் 'சிறந்தது' என்னும் பொருள் தந்து நிற்கின்றது, தலை மேம்பட்ட உறுப்பாய் உயர்ந்து, சிறந்து நிற்பதற்கேற்ப இப்பொருளை இங்கும் தந்து நிற்கின்றது.

[இப்பொருளில் தலை அமைந்த இடங்கள்:
"அறிவினுள் எல்லாம் தலை" (203);
'செல்வத்துள் எல்லாம் தலை" (411);

"வன்மையுள் எல்லாந் தலை" (444);
"பொறுத்தாற்றும் பண்பே தலை" (579);
"கழிநல் குரவே தலை" (657);
"நாடென்ப நாட்டின் தலை" (736);
"வெறுக்கையுள் எல்லாம் தலை" (761);
"தமரின் தனிமை தலை" (814);
"இன்னா செய்யாமை தலை" (852);
"போற்றலுள் எல்லாம் தலை" (891);
"உழந்தும் உழவே தலை" (1031).]

'சிறந்த அறம்', 'மேம்பட்டவன்', 'சிறந்தது' என மேலே அமைந்த பொருள்கள் மூன்றும் ஒத்த பொருள் போன்று தோன்றினும், ஓரளவு வேறுபாடு உடையனவே. அவ்வேறுபாடு 'தலை' என்னுஞ்சொல் சேர்ந்துள்ள தொடர்களால் அமைந்தது. ஆயினும், 'சிறந்த அறம்' என்பது செயலைக் குறிப்பது. 'மேம் பட்டவன்' என்பது செயலால் உயர்ந்தவனைக் குறிப்பது. 'சிறந்தது' என்பது பொதுவில் சிறந்த பண்பை — தன்மையை — பொருளைக் குறிப்பதாகின்றது. இவை, தம்முள் சிறு வேறு பாடு உடையனவாக அமைகின்றன.

**தலையொடு படு**

இதுவரை தனிமொழியாக நின்று பொருட் கிளை விட்ட தலை, இதற்குமேல் புணர்மொழி யில் அமைந்து பொருட்கிளை விடுகின்றது. முன்னே அடைமொழி பெற்றும், பின்னே வினைச்சொல் பெற்றும் பல பொருள்களைப் பெருக்குவதைக் காணலாம்.

'படு' என்னும் முதனிலை கொண்ட வினைச்சொல்லைப் பின்னே இணைத்ததாய்த் 'தலை" என்னுஞ்சொல் அடுத்து வருகிறது.

"பரிந்தோம்பிப் பற்றற்றேம் என்பர், விருந்தோம்பி
வேள்வி தலைப்படா தார்" (88)

—இக்குறளில் 'தலைப்படாதார்' என்பதற்கு 'முற்படாதார்' என்பது பொருள். தலைப்படல், முற்படல் என்னும் பொருளை உடையது. தலை, முன் தோன்றியது என்னும் இயைபில் 'படல்'

கூடி ஒரு சொல் நீர்மையாய் நின்று 'முற்படல்' என்னும் பொருளைத் தோற்றுவிக்கின்றது.

[இப்பொருளோடு தலை வரும் இடங்கள் :

"தலைப்பட்டார் தீரத் துறந்தார்" (348);

"ஆற்றல் தலைப்பட் டவர்க்கு" (269);

"மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்" (356);

"சிலரதன் செவ்வி தலைப்படு வார்" (1289).

அடுத்து,

**தலையொடு பிரிதல்**

'பிரி' என்னும் முதனிலை அமைந்த வினையைப் பின்னே கொண்டு அமைந்த 'தலைப் பிரியா' என்னுஞ் சொல் கொண்டு,

"நயனீன்று நன்றி பயக்கும் பயனீன்று
பண்பில் தலைப்பிரியாச் சொல்" 97

–என்னும் குறள் வருகின்றது. 'தலைப்பிரியா' என்பதற்கு 'நீங்காத' என்பது பொருள். பிரியா என்னுஞ் சொல்லே நீங்காத என்னும் பொருள் கொண்டது. அது வன்மையமைந்த உறுப்பாகிய தலை என்னுஞ் சொல்லோடு கூடி, ஒருசொல் நீர்மைத்தாகி நீங்காத என்னும் கருத்துக்கு வன்மை ஊட்டுகின்றது. இவ்வாறாக, இவ்விடத்துத் 'தலைப்பிரியா' என்னும் சொல் 'எந் நிலையினும் நீங்காத' என்னும் பொருளைத் தருகின்றது.

[இப்பொருளில்,

"செயிரின் தலைப்பிரிந்த காட்சியார் உண்ணார்,
உயிரின் தலைப்பிரிந்த ஊன்" (258);

"பண்பின் தலைப்பிரியா தார்" (810);

"பண்பின் தலைப்பிரிதல் இன்று" (955) –என்னும் இடங்களில் தலைப்பிரிதல் அமைந்துள்ளது.]

அடுத்து,

**ஒரு தலை**

'ஒருதலை' என்னும் சொல்லோடு,

"சொற்கோட்ட மில்லது செப்பம் ஒருதலையா
உட்கோட்ட மின்மை பெறின்" (119)

-என்னும் குறளைக் காண்கின்றோம். 'ஒரு தலையா' என்பதற்குத் 'திண்ணிதாக' என்பது பொருள். ஒன்று என்னும் எண், எண்ணின் தோற்றம். அது பலவற்றினும் ஒன்றைச் சிறப்பித்துக் காட்ட 'ஒப்பற்றது' என்னும் பொருளில் வரும். தலை உறுதியான உறுப்பு. இவ்வுறுதித் தலையோடு ஒப்பற்றதாம் 'ஒன்று' சேர்ந்து 'ஒருதலை' என ஒருசொல்லாய் நின்று ஒப்பற்ற உறுதியாகிய 'திண்ணிது' என்னும் பொருளினைத் தருகின்றது.

[இப்பொருளில் வரும் இடங்கள் :
"ஒருதலையாப் பேர்த்துள்ள வேண்டாப் பிறப்பு" (357)
"ஒருதலையாச் சொல்லலும்" (634)

**கூடல் பெய்தல், செல்லல்,**

தலை அமைந்த குறட்பாக்களாக நாம் அடுத்தடுத்துக் காண்பவை, கற்றார், கல்லார் பற்றிய கருத்தை அறிவிப்பவை :

"உவப்பத் **தலைக்கூடி** உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்" (394) ;

"கல்லா ஒருவன் தகைமை **தலைப்பெய்து**
சொல்லாடச் சோர்வு படும்" (405)

இக்குறட்பாக்களில் அமைந்துள்ள 'தலைக்கூடி' 'தலைப்பெய்து' என்னும் இரு சொற்களையும் மேலெழுந்தபடியாக நோக்கினால் 'சேர்ந்து' அல்லது 'ஒன்றுகூடி' என்னும் பொருளையே தருவதாகப்படும். முன்னது, கற்றாரைப் பற்றிய கருத்துரைப்பது; பின்னதில் கல்லாரைப் பற்றிய கருத்து வந்துள்ளது. முன்னதில், 'கூடி' என்னும் எச்சவினைச்சொல் அமைந்துள்ளது. பின்னதில், 'பெய்து' என்னும் எச்சவினைச்சொல் அமைந்துள்ளது. கூடுதல்–இயைபோடு கூடுதல். பெய்தல்—ஒன்றில்வேறொன்றைவைத்தல்–ஊற்றல் என்னும் பொருளது. இவ்வேறுபாடுகளுடன் நோக்கினால் இரு சொற்களின் பொருள்களும் வேறுபடல் தோன்றும்.

தலைக்கூடல் :— ஐம்பொறிகளும் ஒருங்கு இயைந்து ஒன்றியது தலையாகும். அதற்கேற்பக் கற்றுவல்ல புலவர் இயைபு உடையவராய் ஒன்று சேர்வதைக் குறிக்க இச்சொல் அமைந்துள்ளது. எனவே, 'தலைக்கூடி' என்பதற்கு 'இயைபோடு சேர்ந்து என்பது பொருளாகும்.

தலைப்பெய்து :— தலையை மற்றொன்றில் வைத்தல் போன்று கற்றவர் கல்லா ஒருவனைக் கிட்டுதல் ஆகும். இஃது இயைபில்லாத சேர்க்கை, எனவே, 'இயைபு இல்வழிச் சேரல்' என்னும் பொருளைத் தருகின்றது.

'கூடி,' 'பெய்து' என்னும் ஓரளவான பொருள் ஒற்றுமை கொண்ட சொற்கள் சேர்ந்து 'தலை' என்னும் சொல் அமைந்து தனித்தனிப் பொருள்களைத் தந்தமை போன்று, அடுத்தடுத்து, 'செல்லா', 'வந்த' என்னும் எச்சவினைச் சொற்கள் சேர்ந்த தலையைக் காண்கின்றோம்.

> "தக்காங்கு நாடித் **தலைச்செல்லா** வண்ணத்தால்
> ஒத்தாங் கொறுப்பது வேந்து" (394);
> "தார்தாங்கிச் செல்வது தானை **தலைவந்த**
> போர்தாங்கும் தன்மை அறிந்து" (767)

இவற்றுள், முதற்குறள் 'அரசன் குற்றத்தை ஆராய்ந்து, மீண்டும் அக்குற்றத்தைத் தொடராதபடி ஒறுக்க வேண்டும்' — என்னும் கருத்துடையது. எனவே, 'தலைச் செல்லா' என்பது 'தொடராத' என்னும் பொருளது. தலை ஐம்பொறிகளின் **தொடர்பு** அற்றுப் போகாமல் இயங்குவது என்னும் அடிப்படையோடு இப் பொருள் கிளைக்கிறது.

**தலை - எதிர்வு**

அடுத்த குறள் படைமாட்சி பற்றிய கருத்தைக் கொண்டது இதிலுள்ள 'தலைவந்த' என்னும் சொல் 'எதிர்ந்த' என்னும் பொருளைத் தருவது. தலை, முன் நோக்கி எதிர்முகமாகச் செயற்படுவது. இந்த அடிப்படையோடு 'தலைவந்த' என்பதற்கு 'எதிர்த்த' என்னும் பொருள் அமைகின்றது.

அடுத்து,

> "நிலைமக்கள் சால உடைத்தெனினுந் தானை
> **தலைமக்கள்** இல்வழி இல்" (770)

— என்னும் குறள் தலையைத் தாங்கி வருகிறது. தலைமக்கள் – தலைவர் – படைத் தலைவர் என்னும் பொருளைத் தந்து நிற்கின்றது. தலை, மேலி

ருந்து பிறவற்றிற்கு ஆணையிட்டு நெறிப்படுத்துவது. எனவே, 'தலைமைத் தன்மை வாய்ந்த தலைவர்' என்னும் பொருளோடு இயைகிறது.

**ஒரு தலையும் இரு தலையும்**

இறுதியாக,

தலை என்னும் சொல் அமைந்த குறளாக,

"ஒருதலையான் இன்னாது காமம்
காப்போல
இருதலை யானும் இனிது" (1196)

— என்னும் குறள் அமைகின்றது. இதன் கண் 'ஒரு தலை', 'இருதலை' என்பவற்றில் அமைந்த ஒன்று, இரண்டு, என்பன எண்ணுப் பொருளிலேயே உள்ளன. தலை ஆகுபெயராய்த் தலையை உடையாரை உணர்த்தும் தொடர்போடு எண்ணுப்பெயர் கூடி, சார்பு – பக்கம் என்று பொருள்பட்டு நிற்கின்றது. எனவே, ஒருதலை + ஒருபக்கம்; இருதலை + இருபக்கம் எனப்பொருள்கள் கிளைக்கின்றன.

இடையே,

தலையமைந்த ஒரு குறளைத் தாண்டிவர நேர்ந்தது.

**தலை - கவிழ்வு**

"செறுநரைக் காணின் சுமக்க! இறுவரை
காணின் கிழக்காம் தலை" (488)

என்னும் குறளே அது. இதில் அமைந்த 'தலை' உறுப்பைக் குறிப்பதாய் நின்று 'கிழக்காம்' என்னும் சொல்லோடு தொடர்வதால் இரு சொற்களாகவே நின்று வேறு பொருள் குறிக்கின்றது. 'பகைவர்க்கு இறுதிவரும் வரை பணிக! இறுதி எல்லையில் பகைவர் கவிழ்வர்'—என்பது இக்குறளின் கருத்தாம். 'கிழக்காம் தலை' என்னும் தொடர் 'தலைகீழாம்' — 'தலைகவிழ்ந்து அழிவர்' என்னும் பொருள் தருவதாகின்றது. இருசொற்களையும் இணைத்து ஒரே பொருளாகக் கொள்ளின் 'கவிழ்வர்' என்னும் பொருள் கிளைக்கின்றது. இங்கே தலை உறுப்பையும் சுட்டுவதாய்ப் பின்னர் தொடரால் வேறு பொருளைக் கிளைக்கச் செய்வதால் தனித்துக் காண வேண்டியதாயிற்று. இஃதே இக்குறளைத் தாண்டி வரக் காரணமாயிற்று.

இதுவரை,


ஒரு தலையிலிருந்து பல தலைகள் முளைக்கக் கண்டோம். அத்தலைகளைப் பொருள்களுடன் பட்டியலிட்டுக் காணலாம்:

| | |
|---|---|
| தலை | — தலை (உறுப்பு) |
| தலை | — முளை |
| தலை | — சிறந்த அறம் |
| தலை | — மேம்பட்டவன் |
| தலை | — சிறந்தது |
| தலைப்படல் | — முற்படல்—எய்தல் |
| தலைப்பிரியா | — எந்த நிலையினும் நீங்காத |
| ஒருதலை | — திண்ணிது |
| தலைக்கூடி | — இயைபோடு சேர்ந்து |
| தலைப்பெய்து | — இயைபின்றிச் சேர்ந்து |
| தலைச்செல்லா | — தொடராத |
| தலைவந்த | — எதிர்ந்த |
| தலைமக்கள் | — தலைவர் |
| ஒருதலை; | |
| இருதலை. | — ஒரு பக்கம்; இருபக்கம். |
| கிழக்காம் தலை | — கவிழ்வர் (கவிழும்) |

இவ்வாறு திருக்குறளில் 'தலை' என்னும் சொல் 15 பொருட்கிளைகளை விடுகின்றது. தலையில் முளைக்கும் தலைகளைக் கண்டு வியக்கின்றோம்.

திருவள்ளுவப் பெருந்தகை தலையிலே முளைக்க வைத்திருக்கும் தலைகள் மொழியியலாய் நம்முடன் பேசி நம்மை மகிழ்விக்கின்றன. மேற்காட்டப்பட்டுள்ள பட்டியலின் சொற்கள் அமைந்த குறட்பாக்கள் திருக்குறளில் படிப்படியாக வரிசையில் வளர்ந்து வந்துள்ளதை அவ்வற்றின் எண்களை மீண்டும் நோக்கினால் வியப்பு பிறக்கிறது. படிப்படியாகப் பொருள் கிளைத்துத் தழைக்கின்றமையைக் கூர்ந்து நோக்கும்போது வியப்பு நிலைக்கின்றது. இதுபோன்று மேலும் பொருட்கிளை

விட்டவாறு தமிழ் இலக்கண, இலக்கியங்கள் பலவற்றிலும் தலை ஆட்சி செய்கின்றது. ஆயினும், திருக்குறளில் படிப்படியாகப் பொருள் கிளைத்து விளங்குவது பெருவியப்பாகும். இது போன்று பொருட்கிளைவிடும் பல சொற்களின் பட்டியலைத் தொகுப்பது பயனுடையதாகும்.



# பொருட் பேழை

[பொருளாய்வுக்
கட்டுரைகள்]

பொருளாய்வு ஓர் உழவுப் பணி. உழவெனில் ஆழ உழ வேண்டும்; மண் வளமும் வேண்டும். தமிழ் மண் உலக வாழ்வியலின் ஊற்றுக்கண்; பண்பாட்டு விளைச்சலின் நாற்றங்கால். தமிழ் இலக்கியங்கள் அமுதக் கழனிகள். அவற்றில் அறுவடையாகும் பொருள் களின் தொகுப்பு ஓர் நெற்களஞ்சியம் ஆகும். இக்களஞ்சியம் மணிகளும் பொன்னும் பொதிந்தது.

**எனவே,**

பொருட் பேழை, ஒரு மணிப் பேழை.

பேழையுள் மணிகள் :

1. பிறந்த நாள்.
2. வள்ளுவர் வாழ்விடம்.
3. எளிதிலும் எளிது.
4. எழுநிலை மாடம்.
5. மருந்தில் மலர்ந்த இலக்கியம்.
6. குட்டுவன் எடுத்த கோட்டம்.
7. முடிச்சவிழ்க்கும் சொல்.
8. கடல் நடுவே காராணை.
9. இனிமைத் தமிழில் இறை வழிபாடு.

# 1. பிறந்த நாள்

பிறந்த நாள் உயிர்த்
தோற்றத்தைத் திறந்த நாள்,
அச்சிறந்த நாள் உடற்
காட்சியின் திறப்பு விழா.
அத்திறப்பு விழாவை உலகில்
திறந்தவர் எந்நிலத்தவர்?

இந்நிலத்தவர்; தென்னிலத்தவர்.

மூலப் பின்னணி.

## பிரித்தனில் பிறந்த நாளா?

நண்பர் ஒருவர் ஆங்கில அன்பர். அவ்வன்பு ஆங்கிலர் மரபில் ஆர்வம் உடைமையை ஈன்றது.

'பிறந்த நாள் விழா பிரித்தானியர் உலகிற்கு வழங்கிய பேறு' – என அடித்துப் பேசினார்.

அப்பேச்சு நிகழ்ந்த திங்களில் தஞ்சைப் பெருவுடையார் கோவிலார் இராசராசனது பிறந்த நாளை விழாவாக்க முனைந்தனர்.

அது சதய விழா. விழா மலருக்குக் கட்டுரை வேண்டினர்.

**"பிறந்த நாள்"** பிறந்தது.

மடியேந்திய மலர் :
'சதயவிழா மலர்'
தி. ஆ. 2003—ஐப்பசி–11.
(28—10—1972)

# கோலத்தின் மூலம்.

சேலத்து இருப்பு செருமனிக்குப் போய் ஓலிபெருக்கியாக உருப்பெற்று, மெருகேறிப் 'பள பள' என்று சேலத்திற்கே மீளும். அதன் கோலத்தைக் காணும் சேலத்தார் அதற்குள் சேலம் இருப்பதை அறியார். அக்கோலத்தின் மூலம், சேலம் என்பதை நினையார்.

குருதிக் கொதிப்பு நோயைப் போக்க அமெரிக்க நாட்டிலிருந்து வந்திறங்கிய 'செர்ப்பசில்' மருந்தில் 'சருப்பகந்தி' என்னும் 'பாம்பு நாறி' யாம் நம்நாட்டு மூலிகை இருப்பதை நாம் நினைந்தும் பார்ப்பதில்லை.

இவைபோன்றே, நம்நாட்டுப் பொருள்கள் பல மேலை நாடுகளுக்குச் சென்று உருமாறி வந்தாலும் கரு மாறாமல் உள்ளன. அவற்றை நாம் மேலைநாட்டுப் பொருள்களாகவே கருதுகின்றோம், மேலை நாட்டுப் பொருள் என்பதால் பேரார்வமுடன் பெற்று அந்நாடுகளின் பெருமையைப் பேசிப் பேசி மகிழ்கின்றோம். 'நான் பயன்படுத்துவது தாழ்வான நம்நாட்டுச் சரக்கு அன்று: உயர்ந்த மேல்நாட்டுப் பொருள்'—என்று கூறித் தனி மதிப்பு வந்துவிட்டதாகக் களிக்கின்றோம்.

இவ்வாறே, நம் தமிழகத்தின் பண்டைக் கால மரபுகள்—பழக்க வழக்கங்கள் பல, மேலைநாடு சென்று மெருகுடன் மீண்டுள்ளன. மேலை நாட்டார் நம் மரபுகளைக் கேட்டு ஆர்வங்கொண்டனர்; வந்து கண்டு உவந்தனர்; தாமும் கடைப் பிடித்தனர். காலப்போக்கில் தம் நாட்டின் வழக்காக்கிக் கொண்டனர். தம் மரபாகவே கருதினர். நம்மிடமிருந்து எடுத்துச் செல்லப்பட்டவை அன்னார் மூலமாக நம் நாட்டை அடையும் போது அவற்றின் நலத்தையும் பெருமையையும் நாம் ஒரு புதுமை யாகவே காண்கின்றோம். புதுமைக்குக் காரணம் அறிவியல் வளர்ச்சி என்பதை மறுக்க முடியாது. ஆனால், அப்புதுமைக்குள் நம் பழமை ஒளிந்துகொண்டிருப்பதை அறிவதில்லை. அப்பழக்கம் மேனாட்டாரது என்பதில் ஒருகவர்ச்சி. 'அவரைப்போன்று கடைப் பிடிக்கின்றோம்' என்பதில் ஒரு பெருமை என்னும் நிலையில் அவற்றை மேற்கொள்கின்றோம்.

அவற்றுள் ஒன்று பிறந்த நாட் கொண்டாட்டம்.

இக்காலத்தில் பிறந்த நாள் கொண்டாடுவது என்பது மேனாட்டுப் பழக்கமாகவே கருதப்படுகின்றது. மேலைநாட்டுக் கிறித்துவ மதத்தைப் பின்பற்றும் நம் நாட்டவரும், மேலை நாட்டு நாகரீகத்தைப் பின்பற்றுவோரும், சிறுபான்மையினராகப் பிறரும் பிறந்த நாளைக் கொண்டாடுகின்றனர். மேலை நாட்டு மரபாகவே கருதி, அப்பாங்கிலேயே கொண்டாடுகின்றனர்.

நம் நாட்டு மரபாகக் கருதிக் கொண்டாடப்படுவதும் அற்றுப் போய்விடவில்லை; அருகிக் காணப்படுகின்றது.

## பிறந்த நாள் பொதுவிழா.

ஒருவர் பிறந்த நேரத்திற்குரிய விண்மீனை அறிந்து அவ்விண்மீன் வரும் நாளில் பிறந்த நாளைக் கொண்டாடுதல் நம் நாட்டு மரபு. அந்நாள் அவ் விண்மீன் பெயரால் வழங்கப் படும்.

இக்காலத்திலும், திருவனந்தபுரத்து மன்னர் ஒருவரது பிறந்தநாள் அவர் பிறந்த விண்மீனாகிய சுவாதி விண்மீனின் பெயரால் 'சுவாதித் திருநாள்' என ஆண்டுதோறும் கொண்டாடப்படுகின்றது. அவர் யாத்த இசைப்பாடல்களும் 'சுவாதிப் பாடல்கள்' எனப்படுகின்றன.

தஞ்சாவூர் மாமன்னன் முதல் இராசராசன் பிறந்த நாள் அவன் பிறந்த விண்மீனாம் சதயத்தின் பெயரால் 'சதயத் திருவிழா' வாகக் கொண்டாடப்படுகின்றது. சங்க காலப் பாண்டியன் ஒருவனது பிறந்த நாள் உத்திராட விண்மீன் கொண்டது. அந் நாளில் அவனது விழா நிகழ்ந்தது.

கடவுளர்க்கும் பிறந்த நாள் விண்மீனைப் படைத்து விழா காணப்பட்டது. திருவாதிரைத் திருநாள் சிவபெருமானுக்கும், திருவோணத் திருநாள் திருமாலுக்கும், கார்த்திகைத் திருநாள் முருகனுக்கும் கொண்டாடப்படுகின்றன.

"... ... ... கபாலீச்சுரம் அமர்ந்தான்
ஆதிரைநாள் காணாதே போதியோ"[1]

–எனச் சிவனது பிறந்த நாள் விழாவைத் திருஞானசம்பந்தர் குறிக்கின்றார்.

"கணங்கொள் அவுணர்க் கடந்த பொலந்தார்
மாயோன் மேய ஓண நன்னாள்"[2]

–என்று மாங்குடி மருதனார் திருமாலின் ஓண விண்மீன் விழாவைக் குறித்தார். அவ்விழாவும்,

"ஓண விழாவின் ஒலி அதிர"[3]

–என்னுமாறு ஒலி முழக்கத்தோடு நிகழ்ந்ததைத் திருமழிசையாழ்வார் காட்டுகின்றார்.

ஆடிக் கார்த்திகைத் திருவிழா முருகன் பெயர் சொல்வதன்றோ?

கடவுள் அடியார்க்கும் இவ்விழா அமைந்தது. இராமாநுசர் பிறந்தது சித்திரைத் திருவாதிரையில். இதனை, மணவாள மாமுனிவர் என்பார்,

"இன்றுலகீர் சித்திரையில் ஏய்ந்ததிரு வாதிரைநாள்
என்றையினும் மின்றிதனுக் கேற்றம் என்ன"

–என்று வினா எழுப்பி,

1 ஞான. தே : மயிலாப்பூர் : 4
2 மது. கா : 590, 591
3 நான்முகன் திருவந்தாதி : 41

"சாற்றுகின்றேன் கேண்மின்! எதிராசர் (இராமாநுசர்) தம்பிறப்பால்
நாற்றிசையும் கொண்டாடும் நாள்"[1]

–என்று நாலாபக்கத்திலும் கொண்டாடப்பட்டதைச் சாற்றினார். இது போன்றே சைவ அடியார் யாவர்க்கும் பிறந்த விண்மீனில் விழா எடுக்கின்றனர்.

இக்காலத்தில் அண்ணல் காந்தியடிகள், அறிஞர் பெருந்தகை அண்ணா முதலியோர் நினைவாக அவரவர்தம் பிறந்த நாள்கள் பொதுவிழாவாகக் கொண்டாடப்படுகின்றன. இவையெல்லாம் இறந்த சான்றோர் நினைவாகவும், கடவுள் அருள் பெறும் நோக்கமாகவும் கொண்டாடப்படுபவை. இவையன்றித் தனித்தனியாக ஒவ்வொருவர்க்கும் இல்லந்தோறும் — குடும்பந்தோறும் பிறந்த நாள் விழாக்கள் கடைப் பிடிக்கப் படுவதாகக் காண இயலவில்லை,

கிறித்துவ மதத்தார் ஏசுபெருமான் பிறந்த நாளை 'கிறித்துமசு' என்று ஆண்டுதோறும் கொண்டாடத் துவங்கினர். அப்பழக்கத்தை கிறித்துவத்தார் விரிவுபடுத்தித் தனி ஒவ்வொருவருக்கும் பிறந்த நாளை இல்ல விழாவாகக் கொண்டாடத் தொடங்கினர்.

முகமதிய மதத்தாரும் நபிபெருமான் பிறந்த நாளை 'மீலாது நபி' எனக் கொண்டாடுவர். ஆயினும், அன்னார் தத்தமக்குரிய பிறந்த நாளை இல்ல விழாவாகக் கொண்டாட வில்லை.

## உருவும் கருவும்.

தமிழ் மக்கள் பிறந்த நாளைத் தம் வாழ்வியலில் பெரு நாளாகக் கொண்டனர். அக்கொண்டாட்டம் தனி மாந்தர்க்கு இல்ல விழாவாகவும், மன்னன், சான்றோர் முதலிய தலை மக்கட்குப் பெருந்திருவிழாவாகவும் அமைந்திருந்தது. ஆனால், தனி மாந்தனுக்குக் கொண்டாடும் மரபைக் காலப்போக்கில் கை கழுவிவிட்டனர்.

---

1 உபதேச ரத்தின மாலை.

தனி மாந்தன் பிறந்த விண்மீன் அமையும் நாளன்று நீராடி, வெண்ணிறப் புத்தாடை உடுத்து, விளக்கேற்றி, நெல்லும் மலரும் தூவி வழிபட்டு, (இவ்வழிபாடு தன் குடும்பத்தில் சிறப்புற்று மறைந்த மகளிர் விளக்கு நாச்சியாராகக்கொண்டு நினைந்து போற்றுவது) விருந்தளித்து, வாழ்த்தைப் பெற்று மகிழ்ந்தான் பெரியவர்க்குக் கொண்டாடுவது இல்லாமற்போயினும் குழந்தைகட்குக் கொண்டாடுவதில் கவனங்காட்டினர். இதன் அறிகுறியாகத்தான்,

"நீ பிறந்த திரு நன்னாள்
நன்றுநீ நீராட வேண்டும்
நாரணா ஓடாதே வாராய்"[1]

—எனத் தாய் அழைப்பதுபோன்று பெரியாழ்வார் பாடினார்.

இக்காலத்து மேலைநாட்டுப் பாங்கிலும், பிறந்த நாள் அன்று நீராடி, வெண்ணிறப் புத்தாடை உடுத்தி, மெழுகுவிளக்கு ஏற்றி, உரொட்டிப் பாளத்தை வெட்டி வழங்கி, வாழ்த்தும் பரிசும் பெற்று மகிழ்கின்றனர்.

மேலே குறிக்கப்பட்ட இரு பாங்குகளையும் இணைத்துப் பார்த்தால் இரண்டிற்குமுள்ள பொருத்தம் புலப்படும்.

| தமிழ்ப்பாங்கு : | | மேலை நாட்டுப் பாங்கு: |
|---|---|---|
| நீராடல் | ... | நீராடல் |
| வெண்ணிறப் புத்தாடை | ... | வெண்ணிறப் புத்தாடை |
| மாலை சூடல் | ... | மாலை சூட்டல் |
| விளக்கேற்றல் | ... | மெழுகுவிளக்கு ஏற்றல் |
| பெருஞ்சோறு வழங்கல் | ... | உரொட்டிப் பாளம்வெட்டல் |
| அறஞ்செய்தல் | ... | நன்கொடை ஈதல் |
| பரிசு வழங்கல் | ... | பரிசு பெறுதல் |
| வாழ்த்தைப் பெறல் | ... | வாழ்த்தைப் பெறல். |

இப்பொருத்தத்தில் பண்டைப் பிறந்தநாள் உருமாறியுள்ளதே அன்றிக் கரு மாறவில்லை என்பதைக் காண்கின்றோம்.

இக்கரு எந்நாட்டுக் கரு?

---

1 பெரி. திரு: வெண்ணெய் : 8.

தமிழ்நாட்டுக் கரு.

ஏவ்வாறு?

தமிழ்நாட்டுப் பிறந்த நாள் மரபு நீண்டபெரும்வரலாற்றைக் கொண்டது. அவ்வரலாற்றின் துவக்கம் நமக்குக் கிடைக்கின்ற அளவில் ஏறத்தாழ 5000 ஆண்டுகட்கு முற்பட்டது என்று கூறலாம்.

*'பிறந்த நாள் பெருமங்கல நாள் எனப் படும். பிறந்த நாள் வருங்காலம் போர் நிகழுங் காலமானால் மன்னர் போருக்குரிய சினத்தை நீக்கிப்போரைநிறுத்தச்செய்வர். மக்களுக்கு வரி நீக்கம் செய்து ஈகை புரிந்து அறஞ் செய்வர். வெண்ணிறப் புத்தாடை உடுத்திப் பல்லோர் வாழ்த்தப் 'பெருமங்கலம்'[1] பெறுவர்?*

— இவ்வாறு தொல்காப்பியம் பிறந்த நாளுக்கு இலக்கணம் வகுத்துள்ளது. தொல்காப்பியம் அதன் சொல்லாட்சியாலும் மொழிநடையாலும் கி மு. 3000 ஆண்டுகட்கு முற்பட்டது என்று கணிக்கப்படுகின்றது.

அதற்கு முன்னர் எத்துணையோ பல நூறு ஆண்டுகளின் மரபுகளே இலக்கணம் பெற்றிருக்கும். எனவே, இலக்கணம் பெற்றுள்ள பிறந்த நாள் அதற்கும் மிகத் தொன்மையானது என்று உணரலாம்.

தொடர்ந்து தோன்றிய இலக்கண நூல்களும் இலக்கியங் களும் பிறந்தநாளின் வரையறைகளையும் நடப்புகளையும் விளக்கு கின்றன. பின்னர் ஐயனாரிதனாரால் எழுதப்பட்ட புறப்பொருள் வெண்பா மாலையிலும் பிறந்தநாள் இலக்கணம்உளது.[2] இதனால் இம்மரபு இந்நூலின் காலத்திலும் வழக்கிலிருந்ததை அறிவிப்பதாகும்.

---

1 "சிறந்த நாளணி செற்றம் நீக்கிப்
பிறந்த நதாள்வயின் பெருமங் கலமும்" —தொல் : பொருள் : 91.

2 "அறந்தரு செங்கோல் அருள் வெய்யோன்
பிறந்தநாள் சிறப்பு உரைத்தன்று" : —பு. வெ. மா: பாடாண், 23,

இப்பிறந்த நாள் ஒருவர் பிறந்த விண்மீன், ஆண்டிற்கு ஒருமுறை வரும்போது கொண்டாடப்படுவது பெருவிழாவாகும். அவ்விண்மீன் திங்களுக்கொருமுறையும் வரும் அன்றோ? அந் நாளிலும் பெருவிழாவாக அன்றிச் சிற்றளவில் கொண்டாடப்படும். அச்சிறு நிகழ்ச்சி 'மங்கலநாள் நிகழ்ச்சி' எனப்படும். ஆண்டிற் கொருமுறை கொண்டாடப்படும் பெருவிழா 'பெருமங்கலம்' எனப் படும். 'பெருமை' என்னும் அடைமொழி பெற்றதுகொண்டே இவ் விழாப் பெருமையை உணரலாம்.

இதனை,

> "பெருமங்கலம் என்றதனானே பக்க
> நாளும் திங்கள்தோறும் வரும் பிறந்த நாளும்
> பாடலுட் பயிலாதன உணர்க" [1]

— என்று நச்சினார்க்கினியர் எழுதிய விளக்கம் அறிவிக்கின்றது. இவ்விளக்கம் கொண்டு திங்கள்தோறும் வரும் பிறந்த நாளும் இலக்கியங்களில் பாடப் பெறாவிட்டாலும் கவனத்திற் கொள்ளப்பட்டது என்பதோடு, ஆண்டுப் பிறந்த நாளுக்கு முன், பின் நாள்களும் விழா நாள்களா யின என்பதும் தெரிகின்றன.

இலக்கியங்கள் காட்டும் பிறந்த நாள் பெருமங்கல நிகழ்ச்சி களும் கல்வெட்டுகள் காட்டும் நிகழ்ச்சிகளும் தமிழகத்தில் இஃதொரு பெருமரபாகத் தொடர்ந்து நிகழ்ந்ததை அறிவிக் கின்றன.

இனிப் பிறந்த நாளைக் குறிக்கும் பிற சொற்களைக் காணலாம்.

## வெள்ளணி நாள்.

மங்கல நாள்களில் பிறந்த நாள் பெருமைக்குரிய மங்கல நாள் என்னும் கருத்தில் 'பெருமங்கலம்' எனப்பெயர்பெற்றது.

---

1 தொல் : பொருள் : 91 உரை,

வாழ்நாளில் பிறந்த நாள் ஒரு பெருமைக்குரிய நாள் என்னும் கருத்தில் 'பெருநாள்' என்றும் பெயர் பெற்றது. கல்வெட்டுகளில்[1] ஆங்காங்கே பெருநாளைக் காண்கின்றோம்,

இவ்வழக்கையே இசுலாமிய மதத்தார் நபி பெருமானது பிறந்த நாளைக் குறிக்க ஏற்றுப் 'பெருநாள்' கொண்டாடுகின்றனர்,

புறப்பொருள் வெண்பா மாலை,

"மணமங் கலமே பொலிமங் கலமே
நாண்மங் கலமே பரிசில் நிலையே" (9) –எனப்

பிறந்த நாளை 'நாள் மங்கலம்' என்னும் பெயரால் குறித்தது.

பிறந்த நாள் தூய்மையான நாள் என்பதன் அறிகுறியாகத் தூய்மையான வெண்ணிறப் புத்தாடை அணியப்பெற்றது. இது கொண்டு பிறந்த நாள் 'வெள்ளணி நாள்' எனப்பட்டது.

வடநாட்டினின்று சேரன் செங்குட்டுவன் திரும்பினான். தனது பிறந்த நாளில் தன் தலைநகரில் அமைய வேண்டுமென விரைந்து வந்தான். அதனை உழவர் வாயிலாகப் பாடும் இளங்கோவடிகளார்,

"... ... ... ... மன்னர்
அடித்தளை நீக்கும்! வெள்ளணி நாள்"[2] –என்றார்.

இதுபோன்றே இலக்கியங்கள் பிறந்த நாளை 'வெள்ளணி நாள்' என்று குறித்தன.

தலைவியைப் பிரிந்திருக்கும் தலைவனுக்குக் குழந்தை பிறந்த செய்தியை அறிவிக்க விரும்பும் தலைவி தன்தோழியை அனுப்புவாள். அப்போது அவளைத் தூய வெண்ணிறஆடை உடுக்கச் செய்து அனுப்புவாள். தலைவன் வெள்ளணியைக் கண்டதும் அதனைக் குழந்தை பிறந்ததன் அறிகுறியாக உணர்ந்துகொள்வான்.

---

1 தஞ்சை இராசராசன் கல்வெட்டு
2 சிலம்பு : 27 : 228, 229

இவ்வாறு பெருமங்கலம், 'பெருநாள், நாண்மங்கலம் வெள்ளணிநாள்' எனப் பெயர்களைப் பெற்றுப் பிறந்த நாள் தமிழ் நூல்களில் சிறப்பான இடம் பெற்றுள்ளது.

## இலக்கியம்

பிறந்த நாட் கொண்டாட்டம் சிறப்பாக மன்னர்க்கெனத் தொடங்கிப் பொதுவாகத் தலைமக்கட்கெனத் தொடர்ந்து, நன் மக்கட்க்கும் வளர்ந்தது. இவற்றால் பிறந்த நாள் பற்றிய செய்திகளும் வழக்குகளும் பெருகின. அஃது ஒரு தனிப்பொரு ளாக இலக்கியம் பெறும் அளவில் பெருகியது. பிறந்த நாளுக் கெனத் தனி இலக்கியம் படைக்கப்பட்டது.

பிற்காலத்தில் எழுந்த சிறுசிறு இலக்கியங்கள் சிற்றிலக்கியங் கள் (பிரபந்தங்கள்) எனப்படும். அவை 96 வகைகளாகப் பகுக்கப் பெற்றன. அவற்றுள் 'பெருமங்கலம்' என்பது ஒருவகை இலக்கியமாயிற்று. இது முழுதும் பிறந்த நாள் கருத்துகளையே கொண்டது. பிறந்த நாட் சிறப்பு கருதி எழுந்த தனி இலக்கியம் இது.

## விண்மீனாற் பெயர்.

பிறந்த நாள் விண்மீனின் பெயரால் குறிக்கப்படுவது முன்னரே குறிக்கப்பட்டது. பிறந்தவரும் தம் விண்மீன் பெயரால் அழைக்கப்பெறுவதும் வழக்காயிற்று.

'உத்திரட்டாதியான், பரணியான், ஆதிரையான்' என் றெல்லாம் இலக்கண நூல்களில் காலப்பெயர்கட்குச் சான்றாகக் குறிக்கப்பட்டுள்ளன. இவை மாந்தர் தாம் பிறந்த விண்மீனாற் பெயர் பெற்றனர் என்பதை அறிவிக்கும் ஒருவகைச் சான்றுகள்.

இவைபோன்றே பெயர் பெற்ற புலவர்களைச் சங்க இலக்கியங்களில் காண்கின்றோம். மூல விண்மீனிற் பிறந்தவர் மூலம் + கிழார் = மூலங்கிழார் எனப்பெயரிடப் பெற்றார். 'ஆவூர் மூலங்கிழார், ஐயூர் மூலங்கிழார்' என இருவர் புறநானூற்றில் விளங்குகின்றனர். இடைக்காலத்தில் திருமந்திரத்தை இயற்றிய சைவப் பெரியார் மூல விண்மீனிற் பிறந்தவராதலால் 'திருமூலர்' எனப்பட்டார்.

மாந்தர் தாம் பிறந்த விண்மீனிற் பெயர் பெற்றமை போன்று பிறப்பும் இறப்பும் இல்லாதவர் எனப்பட்ட கடவுளரும் தமக்கென விண்மீன் படைக்கப்பெற்று அதனாற் பெயர் பெற்றனர்.

"ஆதிரையான் ஆதிரையான் என்றே அயருமால்
ஊர்திரைநீர் வேலி உலகு" –என முத்தொள்ளாயிரம் கடவுள் வாழ்த்துப் பாடல் சிவபெருமானை 'ஆதிரையான்' என்ற பெயரிட்டுக் காட்டியது. உலகமே அப்பெயரைச் சொல்லி அயரும் என்றது. பெரியாழ்வார் பாடல்,

"... ... ... ... ... திரு
வோணத்தான் உலகாளும் என்பார்களே"[1] –எனத் திருமாலை 'ஓணத்தான்' பெயராக்கியது.

## பிறந்த நாள் தகுதி.

தமிழ் மக்கள் தம் வாழ்வியலில் பிறந்த நாளுக்குத் தனித் தகுதி ஒன்றை வைத்திருந்தனர். எந்நாளினும் பிறந்த நாள் சிறந்தது. அந்நாளில் பெருநலச் செயல்கள் செய்யவேண்டும் என்பது தமிழர்தம் கொள்கை.

'எந்தப் பகலையும்விட, பிறந்தநாள் பகல்
சிறந்தது. அன்று மன்னனது வெண்கொற்றக் குடை
அருளின் சின்னமாக மிளிரும். மக்கள் அக்குடையினைப்
பாடுக'![2] – என்பதாகச் செயங்கொண்டார் குலோத்துங்க சோழன் பிறந்த நாளைப் போற்றினார்.

சீவக மன்னன் மிக இளமையிலேயே போர் மேற்கொண்டு தன் பகையை வென்றான் என்பதைக் குறிக்கும் திருத்தக்க தேவர்,

---

1 பெரி. திரு : வண்ண மாடங்கள் : 3.

2 எற்றைப் பகலினும் வெள்ளணிநாள்
இருநிலப் பாவை நிழலுற்ற
கொற்றக் குடையினைப் பாடீரே!
குலோத்துங்க சோழனைப் பாடீரே!
–கலி. : ப. களம்பாடியது : 62.

'பிறந்த நாளில் வெள்ளணி அணிந்தபோதே பகை மன்னர் முடியிலணிந்த மாலையைத் தன் காலடியில் கண்டான்'[1] -என்று பிறந்த நாளை வைத்துப் பெருமையை வெளிப்படுத்தினார்.

## பிறந்த நாள் நலம்

பிறந்த நாளில் இல்லம் தூய்மை செய்யப்படும் மன்னனுக்குப் பிறந்த நாள் என்றால் நாட்டின் இல்லங்கள் யாவும் மக்களால் துப்புரவாகும். மங்கலப் பொருள்களால் இல்லத்தை ஒப்பனை செய்வர். துப்புரவு செய்யும் போது இல்லத்தில் சிலந்திகள் கட்டியுள்ள கூடுகளாம் ஒட்டடைகளை நீக்குவர். இதனை முத்தொள்ளாயிரம் மிகச் சுவைபட அறிவிக்கின்றது:

'சோழ மன்னன் பிறந்த இரேவதி நாள் ஒருவகையில் ஓர வஞ்சம் கொண்டது. இந்நாளில் அந்தணராம் செய்தண்மையாளர் ஆவும் பொன்னும் பரிசாகப் பெற்றனர். நாவன்மை மிக்கவர் மலைபோன்ற களிற்றைப் பரிசாகப் பெற்று அதன் மீது ஏறிச் சென்றனர். அவர் களோ நலம் பெற்றனர். ஆனால், அதே பிறந்த நாள் சிலந்தி கட்டிய கூட்டை இழக்கச் செய்ததே'

-என்று பலரைப் பெறவைத்துச் சிலரை இழக்கச் செய்ததாகக் குறிக்கின்றது.

நயமான அப்பாடல் இது;

*"அந்தணர் ஆவொடு பொன்பெற்றார்; நாவலர்*
*மந்தரம்போல் மாண்ட களிறூர்ந்தார்; எந்தை*
*இலங்கிலைவேற் கிள்ளி இரேவதிநாள் என்னோ!*
*சிலம்பிதன் கூடிழந்த வாறு"*

இல்லங்கள் தூய்மையானதை இவ்வாறு வஞ்சப் புகழ்ச்சி யாகப் பாடினார். இல்ல நன்மைபோன்று பல நன்மைகள் மன்னரது பிறந்த நாளால் விளைந்தன. வாட்கண்டன்

---

1 சீவ. சி. 614

என்றொரு மன்னன் பல குறுநில மன்னர்களை வென்று சிறை வைத்திருந்தான். அவனுடைய பிறந்த நாள் வந்தது. யாவரும் சிறை வீடு பெற்றனர். அன்னவர் யாவரும் மன்னனது பிறந்த விண்மீனை வாழ்த்திச் சென்றன. இஃதொரு பழம்பாடற் கருத்து

முத்தொள்ளாயிரம்,

"தேர்வேந்தன் தென்னன் திருஉத்தி ராடநாள்
போர்வேந்தன் பூசல் இலன்"[1]

—என்று மன்னன் போர் ஒழித்ததைக் கூறுகின்றது. போர் நிறுத்தம் என்றால் எத்துணை உயிர்க்கொலைகள் நின்றிருக்கும்? அத்துணையும் நன்மை யன்றோ

இவ்வாறு உண்மைப் போர் ஒழிந்தாலும் பொய்ப்போர் அன்று நடந்தது. அஃதென்ன பொய்ப்போர்? விளையாட்டுப் போட்டியைப் போர் என்றனர். பொதுமக்கள் வாழும் சேரியில்? மன்னன் பிறந்த நாள் விழாவை ஆர்வத்துடன் போட்டி விளையாட்டாகக் கொண்டாடினர்.

"பேரிசை நன்னன் பெரும்பெயர் நன்னாள்
சேரி விழவின் ஆர்ப்பெழுந் தன்று"[2]

—நன்னனது பிறந்த நாள் சேரியினரால் ஆரவார முழக்கத்தோடு கொண்டாடப் பட்டுள்ளது.

கடவுளர்க்கு நடத்தப்படும் பிறந்தநாள் விழாவிலும் இச்சேரி விழாவும் சேரிப்போரும் நிகழும். விளையாட்டுப் போரென்றாலும் வீரத்துடன் நிகழும். போரில் புண்பெற்று வடுப்பெறுதலும் உண்டு.

மக்களது மகிழ்ச்சி நன்மையோடு வேறு நிலைத்த நன்மை களும் பிறந்தநாள் விழாவால் பிறந்தன. அந்நாளில் மன்னர் நல்ல அறக்கட்டளைகளை ஏற்படுத்துவர்.

செம்பியன்மாதேவி என்னும் சோழகுல அரசி தன் பிறந்த நாளிலும், தனது ஐந்து மருமகளாரது பிறந்த நாள்களிலும்

---

1 தொல் : பொருள்: மேற்கோள் பழம்பாடல்
2 மது. கா; 618, 619,

கோவில்களில் வழிபாட்டுக்குமட்டுமன்றிப்பொதுமக்கள் நலனுக்கும் அறக்கட்டளைகளை நிறுவினாள். இவ்வாறு பிறந்தநாளால் போர் நிறுத்தம், சிறைவீடு, பொதுமக்கள் விழா, பரிசுகள் விருதுகள் வழங்கல், இல்லத் தூய்மை, அறக்கட்டளை, அறங்கள் முதலிய பல்வகை நன்மைகள் விளைந்தன.

## விண்மீன் வாழ்த்து.

மன்னரையோ மற்றவரையோ 'நெடுநாள் வாழ்க' என்று வாழ்த்துவோர் பல முறைகளைக் கொள்வர். அவற்றுள் ஒன்று "பிறந்த நாள் விண்மீன் நிலைத்திருப்பதாக" என்றுபிறந்தநாளுக்குரிய விண்மீனை வாழ்த்துவது.

தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனை வாழ்த்தும் மாங்குடிகிழார்,

*"நின்று நிலைஇயர் நின் நாண்மீன்"* [1]

— என்று அவன் பிறந்த விண்மீனையே வாழ்த்தினார். இவ்வகை வாழ்த்துக்கும் பிறந்த நாள் பயன்பட்டது.

இன்னின்ன விண்மீன்களில் பிறந்தால் இன்னின்ன நன்மைகள் விளையும் என்றொரு நம்பிக்கை இருந்தது. இன்றும் சில பழமொழிகள் அதனை அறிவிக்கின்றன.

*'பரணியில் பிறந்தவன் தரணி ஆள்வான்'*
*'அவிட்டத்தில் பிறந்தால் தவிட்டுப்*
*பானையெல்லாம் தனம்'*
*'கேட்டையிற் பிறந்தால் கோட்டையைப் பிடிப்பான்'*

— எனப் பல வழங்குகின்றன. இவையெல்லாம் வாய்ப்புகளேயன்றி வாய்த்தவைகள் அல்ல?

---

1 புறம்: 24 :24.

## பிணிகிடந்தார்க்குப் பிறந்த நாள்.

இத்துணைப் பெருமைகளையும் நன்மைகளையும் கொண்ட பிறந்த நாள் ஏதேனும் ஒரு குறையேனும் இல்லாதிருந்தால் கண்ணேறு பட்டுவிடும் போலும். அதற்கும் ஒரு குறை உண்டு.

ஆடவர் மகளிர் புணர்ச்சி இன்பத்திற்கு இப்பிறந்த நாள் ஒருதடையாயிற்று, ஆசாரக்கோவை இன்னின்ன நாளில் புணர்ச்சி இன்பம் கூடாது என்று விலக்கியுள்ளது. அவற்றுள் ஆடவர் தாம் பிறந்த நாளிலும் புணரக் கூடாது; மகளிர் தாம் பிறந்த நாளிலும் புணரக் கூடாது. அத்துடன் விட்டதா? இருபெருங் கடவுளராகிய சிவனும் திருமாலும் பிறந்தநாள்களாகிய திருவாதிரையிலும் திருவோணத்திலும் புணர்ச்சி கூடாது என்றது. 'அப்படியானால் பிற தெய்வங்கள் பிறந்த நாளில்?' -என்று வினவக்கூடாது. ஆசாரக் கோவை இப்படி விதிப்பு வைத்திருக்கிறது என்பது ஒரு கருத்து.

அவ்வெண்பா இது :

"உச்சியம் போழ்தோ டிடையாமம் ஈரந்தி
மிக்க விரு தேவர் நாளோ டுவாத்திதிநாள்
அட்டமியும் ஏனைப் பிறந்தநாள் இவ்வனைத்தும்
ஒட்டார் உடனுறைவின் கண்" (ஆசா. கோ : 43)

வேறொரு உண்மை:

'நோயுற்றுப் படுக்கையிலிருப்போர்க்குப் பிறந்த நாளில் நோய் மிகும்; கடுமையை விளைக்கும்; சாவையும் தந்துவிடும் என்பர்.

தலைவி ஒருத்தி தலைவனைப் பிரிந்து வருந்துகின்றாள். குளிரேற்றும் வாடைக்காற்று சீறிக்கொண்டு வீசியது. அது அவளுக்கு மேலும் காம ஊற்றத்தை ஏற்றியது. அதற்கு உவமையாக,

"பிணிகிடந் தார்க்குப் பிறந்தநாள் போல
அணியிழை அஞ்ச (வாடைக்காற்று சீறிக்கொண்டு) வரும்"

என்றது முத்தொள்ளாயிரம். தமிழ் மருத்துவ நூல்களும் பிறந்த

நாளில் மருந்தைக் கொள்ளக் கூடாது என்றும், சில மருந்துகள் தீமையையே தந்துவிடும் என்றும் விதிக்கின்றன. இதற்குத் திருத்தக்க தேவர் காட்டும் கதை நிகழ்ச்சி ஒன்று காட்டத்தகுந்தது.

சீவகன் கதையில் பதுமாவதி என்றொரு அரச குமாரி அவளைப் பூஞ்சோலையில் நச்சுப் பாம்பொன்று தீண்டிவிட்டது மருத்துவ ஏற்பாட்டிற்குமுன் அரண்மனைக் கணி வந்தான். நாளும் கோளும் பார்த்து நன்மை தீமையைக் கணித்துச் சொல்லும் அவன்,

'இராகு என்னும் பாம்புக் கோள் நிற்கும்போது பாம்பு கடித்தால் எவராலும் - கடவுளாலும் ஒன்றும் செய்ய முடியாது. இவளுக்கு அந்நிலையில் கடிக்க வில்லை. அதனால் இறப்பு நேராது. அத்துடன் இன்று இவளுக்குப் பிறந்த நாளும் அன்று. அச்சப் பட வேண்டியதில்லை' —என்றான். இக்கருத்தும் 'நோய் கொண்டார்க்குப் பிறந்த நாள் தீங்கானது' என்பதை அறிவிக்கின்றது.

*பாம்பெழப் (இராகு தோன்ற) பாம்பு கொண்டால்*
*பகவற்கு மரிது தீர்த்தல்;*
*தேம்பிழி கோதைக் கின்று (இல்லை)*
*பிறந்த நாள்"* —*சீவ. சி :* 1280

இவ்வாறெல்லாம் காணப்பட்ட கருத்துகளைத் தொகுத்தால் பிறந்த நாள்,

5000 ஆண்டுகளுக்கு முன் கருக்கொண்டு,
மாந்தரது வாழ்வில் விழாவாக நின்று,
இலக்கியத்தில் இசை பெற்று,
இலக்கணத்தில் இயைந்து,
மங்கலத்தில் மலிந்து,
விண்மீனில் விளங்கி,
இல்லத்தை அழகுபடுத்தி,

உள்ளம் உவகை பெற,
வெள்ளணி அணிந்து,
கள்ளணி மாலை சூடி,
அஞ்சுவை விருந்தளித்து,
சிறைக் கதவைத் திறந்து,
செருவெல்லாம் துறந்து,
சேரிப்போர் நிகழ்த்தி,
வாரிப்பரிசு வழங்கி,
அறக்கட்டளை கண்டு,
வாழ்த்தில் வளர்ந்தது;
வளத்தில் மிளிர்ந்தது.

நம்நாட்டுப் பண்டைப் பாடல்கள் முடியுடை மன்னர் குறுநில மன்னர், நிலப்பெருஞ்செல்வர், மேம்பட்ட சான்றோர் ஆகியோர்மேல் பாடப்பட்டவைகளாக உள்ளன. எனவே, பிறந்த நாட் செய்திகளும் அவர்களைப் பற்றியனவாகவே கிடைத்துள்ளன. வழிவழி வந்த தமிழ்மக்கள் பிறந்த நாட்கொண்டாட்டத்தை வளம்படைத்தோர்க்கே உரியதென்று கருதியிருக்கலாம். ஆதனால் பொதுமக்களில் தனி மாந்தற்குக் கொண்டாடுவது விடுபட்டிருக்கும்.

ஆயினும், இன்று நாட்டுத் தலைமக்களுக்குப் பிறந்த நாள் விழா எடுக்கின்றோம். அவ்விழாவையும், அவர்களது தொண்டிற்கும் விருப்பிற்கும் ஏற்பப் பொதுநல விழாவாக்கியுள்ளோம்.

அண்ணல் காந்தியடிகள் நாள் ... சருவோதய விழா.
பேரறிஞர் அண்ணா நாள் ... எளியோர் வாழ்வு விழா.
பண்டித நேரு நாள் ... குழந்தைகள் விழா.
டாக்டர் இராதாகிருட்டினர் நாள் ... ஆசிரியர் விழா.
—எனப் பொதுநல நாள்களாயின.

## 2000 ஆண்டுகளுக்கு முன் ஒரு சதய விழா.

தஞ்சையிலிருந்து சோழ நாட்டைச் சீருடனும் சிறப்புடனும் ஆண்டு புகழ்பெற்ற மாமன்னன் இராசராச சோழன் பிறந்த நாளாம் சதய நாள் விழா கடந்த சில ஆண்டுகளாகத் தஞ்சையில் விரிவாகக் கொண்டாடப்படுகின்றது.

ஏறத்தாழ 2000 ஆண்டுகளுக்கு முன்னும் ஒரு சதய விழா நிகழ்ந்தது.

அது தஞ்சையில் அன்று; தொண்டியில் நிகழ்ந்தது.
சோழனுக்கு அன்று; சேரனுக்கு நிகழ்ந்தது.
இராசராசனுக்கு அன்று; சேரமான் கோக்கோதை மார்பனுக்கு நிகழ்ந்தது.

சேரமான் கோக்கோதை மார்பன் பிறந்த நாள் சதய நாள். அந்நாளில் அவன் வெள்ளணி அணிந்தான். அமைதியின் சின்னமாக அதனைக்கொண்டான் அவனது முரசு முழங்கிப் பின்வருமாறு குரல் கொடுத்ததாம்:

மன்னர்காள்!

இன்று குதிரை பூட்டிய தேரைக்கொண்ட கோதைமார்பன் பிறந்த நாள்.

ஆம், அவன் பிறந்த சதயத் திருநாள்.

இன்று நீர் பாதுகாப்பு நிறைந்தவர் ஆனீர்.

அச்சத்தால் அடைத்திருந்த கோட்டையைத் திறப்பீர்.

நடுக்கத்தால் தழுவாதிருந்த மகளிரைத் தழுவி இன்பத்தைச் சுவைப்பீர்.

கவலையின்றிக் கண்ணுறங்குவீர்.

இம்முரசை நான்கு அடிகளால் முழக்கும் பாடல்:

"ஏமாரு மன்னீர்! எயில் திறமின்; எங்கோமான்
வாமான்தேர்க் கோதை சதயநாள்—ஆமாறு
காமம் நுகருமின்; கண்படுமின்; என்னுமே
ஏம முரசின் குரல்."

இவற்றால் பிறந்த நாள் விழா தமிழ் மண்ணில் முளைத்ததை உணர்கின்றோம். அது நாடு தழுவிய விழாவாகத் தழைத்தது. ஊர்த்திருவிழாவாகவும் இல்ல நல்விழாவாகவும் நிகழ்ந்தது.

காலத்தில் நேர்ந்த இடை வெட்டுகளால் அவைகள் தேய்ந்தன; ஓய்ந்தன.

நாம் தொடரலாம். மரபை மதிப்பிப்பதற்காக மட்டுமன்று, மனத்தைப் புதுப்பிப்பதற்காகவும் கொள்ளவேண்டும்.

குழந்தைகட்குக் கொண்டாடுவதால் அவர்களைப் பெற்ற தாயின் மகிழ்வை நாம் கொள்ளலாம். அவர்கள் நம் அன்பை எண்ணி மலர்வர்.

இளைஞர்க்குக் கொண்டாடுவதால் அவர்களது அகவையை நினைவுபடுத்தி வளர்ச்சி ஊக்கத்தைத் தூண்டியவர்களாவோம். இல்லறத்தார் பிறந்த நாள் விழா இல்லத்தை மணப்பிக்கும். பெரியோர்க்கு விழா நாம் பின்பற்றும் நற்செயல்களை தெறிப்படுத்தும்.

எனவே, இல்லந்தோறும் பிறந்தநாள் காண்போம்.

# 2. வள்ளுவர் வாழ்விடம்.

உலகினுக்கு வள்ளுவரைத் தந்து வான்புகழ் கொண்டது தமிழ்நாடு. தமிழ் நாட்டிற்கு வள்ளுவரைத் தந்து தனிப்பெருமை பெற வேண்டிய பகுதி ஒன்றிருக்கு மன்றோ? அவ்விடத்தைக் கண்டு அடையாளங் காட்ட வேண்டு மன்றோ?

இஃது
அடையாளங் காட்டும்;
தடயமும் கூட்டும்.

மூலப் பின்னணி.

## மேலும் நிலைக்கும்.

திருவள்ளுவர் இரண்டாயிரத்தின் நினைவாகச் சென்னை நகரில் கலைக்கோவில் எழுப்ப அந்நாள் முதல்வர் டாக்டர் கலைஞர் முனைந்தார்.

மயிலாப்பூரிலுள்ள திருவள்ளுவர் கோவிற் பகுதியில் அதனை அமைக்கும் கருத்து ஆயப்பட்டது.

அதுபோது மயிலாப்பூரில் அமைப்பதற்கு அப் பகுதி 'திருவள்ளுவர் வாழ்ந்த பகுதி' என ஒரு காரணங் கூறப்பட்டது சிலரால்.

'வாழ்ந்த இடம் மயிலாப்பூர் அன்று' -எனத் தவத்திரு குன்றக்குடி அடிகளாரும் பலரும் (எளியேனும்) கூறினம். இந்நிலையில் 'மயிலை இல்லையெனில் எவ்விடம்?' எனும் வினா எழுந்தது.

அதற்கென எழுந்த ஆழமான நினைவால் ஆயப்பட்டு முளைத்தது.

**'வள்ளுவர் வாழ்விடம்'**

இதனை வெளியிட்ட சீரணி ஆசிரியர் இனிய நண்பர் திரு சிலம்பொலி செல்லப்பனார் 'இக்கட்டுரைக் கருத்திற்கு - ஒத்த மாறுபட்ட ஆய்வுக் கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன' எனும் குறிப்பொன்றையும் அறிவித்தார்.

அவ்வாறு இனித்தான் வரவேண்டும். அதுவரை இம்முடிபு நிற்கும். அதற்குமேலும் நிலைக்கலாம்.

மறுவெளியீடு
**''தமிழ் நேசன்''**
நாளிதழ், கோலாலம்பூர்.
தி. ஆ. 2002–வைகாசி–17.
1—5—1970;

வெளியீடு :
''சீரணி''
தமிழ்நாட்டரசிதழ்,சென்னை.
தி. ஆ. 2000–தை-1
14—1—1969.

**வள்ளுவர் வாழ்விடம்.**

# புள்ளிகளை நிரப்பலாம்.

திருவள்ளுவப் பெருந்தகை தோன்றி இவ்வாண்டு வரை 2013 ஆண்டுகள் நிகழ்ந்துள்ளன. இக்காலக் கணிப்புக்கு அடிகோலியவர் நிறைதமிழ்ச் செம்மல் மறைமலையடிகளார். இப்போது உலகில் ஏசு கிறித்துவின் பிறப்பு நாளை வைத்தே காலக்குறிப்பு வழங்கப்பட்டு வருகின்றது. அக்கால எல்லைகொண்டு நோக்கினால் வள்ளுவனார் காலம் கி. மு. 31 என்றாகின்றது. இஃது அடிகளாரது கணிப்பு. தமிழ்ப் பேரறிஞர்கள் இம்முடிவை ஏற்றுள்ளனர். எனவே, வள்ளுவப் பெருந்தகையின் கால எல்லை ஏறத்தாழ வகுக்கப்பட்டுள்ளது எனலாம்.

இப்பெருந்தகையரது வாழ்வியற் கதைகள் இன்றும் உலவுகின்றன. எனினும், அவை ஆணிவேர் அற்றவையாகவே உள்ளன.

இப்பெருமகனார் வாழ்ந்த இடம் .... ... ... ... ... புள்ளிகளைத்தான் இட முடிகின்றது. வாழ்ந்த இடம் புள்ளிகளைத்தான் பெறுகின்றதென்றாலும் முற்றுப்புள்ளியைப் பெறவில்லை. புள்ளிகளை நிரப்ப முயலலாம்.

தொன்மைச் சான்றோரது காலத்தையோ வாழ்ந்த இடத்தையோ அறிய இன்றியமையாத சான்றுகள் வேண்டும். தொல்புதை

பொருள்கள், பண்டை இலக்கண இலக்கியக் குறிப்புகள், கல் வெட்டுகள், தக்க இயைபான செவிவழிச் செய்திகள் முதலியவை புறச்சான்றுகளாகத் துணை நிற்பவை. ஆசிரியரது நூலுள் கிடைக்கும் அகச்சான்றுகளே வலிமை தருபவை.

வள்ளுவப் பெருந்தகையரது வாழ்விடத்தை அறியத் துணைக்கு வரும் புறச்சான்றுகள் யாவை? அவை எவ்வளவில் முடிவுகளுக்கு வலிமையூட்டி ஈடுகொடுக்கின்றன? –எனக் காணலாம்.

திருவள்ளுவர் வழங்கிய திருக்குறளைப் போற்றிப் பாராட்டும் வெண்பாக்கள் உள்ளன. வெவ்வேறு புலவரால் பாடப்பட்ட தாகச் சொல்லப்படும். ஒவ்வொரு வெண்பாவும் ஒவ்வொரு மலராகும். அம்மலர்கள் தொடுக்கப்பெற்றுத் திருவள்ளுவப் பெருந்தகைக்கு மாலையாகச் சூட்டப்பட்டுள்ளன. அஃது ஒரு தனி நூல் போன்று 'திருவள்ளுவ மாலை' என்னும் பெயருடன் உள்ளது. அதன்கண் இவரது வாழ்விடத்தைக் குறிப்பாகக் குறிக் குப் பாடல்கள் சில தென்படுகின்றன.

## புறச்சான்றில் மதுரை.

*"மாதாநு பங்கி மறுவில் செந்நாப்*

*போதார் புனற்கூடற்கச்சு"*

*"வைவைத்த கூர்வேல் வழுதி மனம்மகிழத்*

*தெய்வத் திருவள் ளுவர்"*

– என்பன இத்திருவள்ளுவப் மாலையில் உள்ள இரண்டு வெண்பாக்களின் ஈற்றடிகள். முதலிற் காணப்படுவது நாங்கூர்வேள் என்னும் புலவரால் பாடப்பட்டது. 'மாதாநுபங்கி என்னும் சிறப்புப் பெயர் பெற்ற பொய்யில்லா நாவைக்கொண்ட திருவள்ளுவர் **மதுரை நகருக்கு அச்சு** போன்று வாழ்ந்தவர்' – என்று அப்புலவர் குறிப்பிட்டுள்ளார். அடுத்த பாடல் கீரந்தையார் என்னும் புலவரது பாடல். 'கருங்கை ஒள் வாள் பெரும்பெயர்வழுதி என்னும் பாண்டிய மன்னன் மனம் மகிழத் தெய்வத் திருவள்ளுவர் முப்பாலாம் திருக்குறளை மொழிந்தார் – என இப்புலவர்குறிப்பிடுகின்றார். இவைகொண்டு திருவள்ளுவர்' பாண்டி நாட்டு மதுரையில் வாழ்ந்திருக்கலாம் என்று கருதலாம்,

தொண்டைநாட்டுத் திருமயிலை எனப்படும் சென்னை மயிலாப்பூர் திருவள்ளுவர் வாழ்ந்த இடம் என்று, செவிவழிச் செய்திகொண்டும், திருவள்ளுவர் கோயில் அங்குஎழுப்பப்பட்டிருப்பது கொண்டும் குறிப்பர், இவைகொண்டு வெளிநாட்டறிஞர் சீகன்பால்கு என்பார் ''தூயர் தாமசு வாழ்ந்த இடத்தில் திருவள்ளுவர் வாழ்ந்தார்'' எனக் குறித்தார்.

திருவள்ளுவர் தம் வாழ்வைக் குறிக்கும் தொடர்புடைய திருவள்ளுவமாலை, ஞானாமிர்தம், கபிலரகவல், திருவள்ளுவர் கதையைக் கூறும் வெண்பாக்கள், சில சிற்றிலக்கியத் தொடர்கள், தனிப்பாடல்கள் முதலிய யாவும் சொல்லமைப்பாலும் மரபு வேறுபாட்டாலும் பல ஐயங்களை எழுப்புவன. இவற்றை மேலும் ஆய்வதால் ஐயங்கள் வைரம் பாய்ந்துகொண்டே போகின்றன. இவை வழங்கும் கருத்துகள் ஒன்றற்கொன்று வேறுபாடு கொண்டவை; மாறுபாடு உடையவை; முரண்பாடு அமைந்தவை. எனவே, இவற்றிலிருந்து கொள்ளப்படும் சான்றுகள் ஈடு கொடுத்துநிற்பன ஆகா.

'மண்டல சதகம்' என்னும் பெயரில் பல நூல்கள் உள்ளன. அவை அவ்வப்பகுதிகளில் வாழ்ந்த பெருமக்களது சிறப்பைச் சுட்டிக்காட்டி அவ்வப்பகுதிகளின் பெருமை பேசுபவை. அவற்றுள் எம் மண்டலத்திலும் திருவள்ளுவர் வாழ்ந்ததாகக் குறிப்பில்லை. பாண்டி மண்டல சதகத்திலும் குறிப்பில்லை.

பாண்டி மண்டல சதகம்,

> ''வள்ளுவர் மாலை பகர்ந்தாரும்
> பாண்டி மண்டலமே''[1]

-எனத் திருவள்ளுவ மாலையைப் பாடியோரைப் பாண்டி மண்டலத்தோராகக் குறிக்கின்றது. ஆனால், திருவள்ளுவரை அம்மண்டலத்தாராகக் குறிக்கவில்லை. திருவள்ளுவர்தம் பொன்மொழியைப் போற்றி எடுத்தாண்டு[2] வள்ளுவர் பெயரையும்

---

1 பா. ம. ச : 4.

2 ''உழுதுண்டு வாழ்பவ ரேவாழ் பவர்மற் றுலகிலுள்ளார்
தொழுதுண்டு பின்செல் பவரென்று வள்ளுவர் சொன்னவரம்
பழுதின்றி யேகம்ப னாரேர் எழுபது பாடியவர்
வழுவொன் றிலாதவண் வேளாளர் பாண்டியன் மண்டலமே''
—பா. ம. ச ; 2

குறிக்கும் இச்சதகம் அவர் வாழ்விடமாகப் பாண்டி மண்டலத்தைக் குறிக்காதது ஆழ்ந்து நினைத்தற்குரியதாகின்றது.

இவ்வகையாக எல்லாம் நோக்கித் திருவள்ளுவர் தமிழ் நாட்டிலே பிறக்கவில்லை - வாழவில்லை என்னும் முடிவையோ கொள்வது? இம்முடிவு நகைப்பிற்குரியதாகும்.

## திருவள்ளுவரை நாடுவோம்.

வாழ்வியல் பொதுநெறியை நாடி உலகமெல்லாம் சுழன்றாலும் இறுதியில் திருவள்ளுவப் பெருந்தகையை அடைந்து நெஞ்சம் நிறைவு பெறுதல் போன்று அவரது வாழ்விடம் பற்றிய கருத்தைப் பெறவும் அப்பெருந்தகையை நாடுதலே பொருத்த முடையதாகின்றது. அப்பெருந்தகை அருளியுள்ள முப்பாலாம் திருக்குறள் பல்பொருட் பேழை. நாம் பெற்றுள்ள அரும்புதையல்.

அப்புதையலில்,

மணியான சொற்கள் பல தமிழ்நாட்டின் ஒரு பகுதியைத் திருவள்ளுவர் வாழ்விடமாக அடையாளங் காட்டுகின்றன.

சிறப்பான தொடர்கள் சில இப்பகுதியைச் சுற்ற வைக்கின்றன.

ஆங்காங்கு தென்படும் நடைமுறைத் தொழில்கள் சில இப்பகுதியைச் சுட்டி நிற்கின்றன.

எந் நூலிலும் அந் நூலாசிரியர் வாழ்ந்த பகுதியில் பெருவழக்காக வழங்கிய சொற்கள், தொடர்கள், மரபுகள் அமைதல் இயல்பு. அவை அவ்வாசிரியர் வாழ்ந்த இடத்தைக் காட்டிக் கொடுக்கும் அடையாளச் சின்னங்கள் ஆகும். அவ்வடையாளச் சின்னங்கள் வழியே முன்னர் இட்ட புள்ளிகளை நீக்கி நிரப்ப முயலலாம்.

## சொற்கள்.

**ஊருணி.** இவ்வகை அடையாளச் சின்னங்களில் திருக்குறளில் பட்டொளி வீசும் சொல் 'ஊருணி' என்னும் சொல். இச்சொல் ஊர்மக்களால் பருகப் படும் நீரைக்கொண்ட நீர்நிலையைக் குறிப்பது.

"ஊருண் பொதுநீர் ஊருணி யாரும்"[1]

என்று சேந்தன் திவாகரம் என்னும் நிகண்டு பொருள் விரித்துக் காட்டுகின்றது. சில்லிடங்களில் கேணியையும் குறிக்கும். மணக்குடவர் இதற்கு "ஊர்உண்கின்ற கேணி" என்றே பொருள் எழுதினார்.

"ஊருண் கேணி"[2]

**கிணறு-கேணி.**

எனப் புறநானூறும் குறுந்தொகையும் பாடுகின்றன. இச்சொல் செந்தமிழ் நாட்டுச்சொல். செந்தமிழ் நாட்டிலும் இராமனாதபுர மாவட்டத்தில் பெருவழக்காயுள்ள சொல். இன்றும் நடைமுறைச் சொல்லாக உள்ளது. அதே நேரத்தில் தமிழ் நாட்டின் பிறபகுதிகளில் வழங்காத சொல் என்பதையும் உள்ளத்தில் கொள்ளலாம். [மதுரைப் பகுதியில் அருகிய வழக்கு.]

ஊருணியைக் 'கேணி' என்று சான்றோர் குறித்துள்ள தொடர்பில் 'கேணி' என்னும் சொல்லும் சான்றுக்குத் துணையாகின்றது. இச்சொல்லைச் சான்றாகக் கொள்ளும் முன்னர் இது மற்றைய நீர்நிலைகள், நீர் ஊற்றுகள் முதலியவற்றினின்றும் வேறுபட்டது என்பதைக் காணல் நலம்.

'குளம், குட்டை, ஏரி' முதலியவை நீர் தேங்கியே தேக்கப்பட்டோ நிற்கும் நீர்நிலைகள். இவை பரந்த நீர்ப்பரப்பைக் கொண்டவை; கரையுடையவை. 'கேணி' என்பது ஆழமாகத் தோண்டப்பட்டு ஆழத்தினின்றே சுற்றுச் சுவர் எழுப்பப்பட்டு அமைவது. எனவே, 'கேணி' என்பது குளம்போன்றவற்றினின்றும் வேறுபட்டது. ஆனால், கேணியைப் போன்று மிக ஆழமாகத் தோண்டப்பட்டுச் சுற்றிலும் சுவர் எழுப்பப்படுவது 'கிணறு' எனவும் பெயர் பெறும்.

கேணி வேறு; கிணறு வேறு. கிணறு என்பது வட்ட வடிவில் மூன்று, நான்கு முதல் பத்தடி அளவிலும் உள்விட்டம் உடையதாகத் தோண்டப்படுவது. கேணி 15 அடி முதல் 40 அடி வரை நீள அகலங்கொண்டதாக நாற்கோண அமைப்பில்

---

1 சேந். தி : இடப் பெயர்த் தொகுதி.
2 "ஊருண் கேணிப் பகட்டிலைப் பாசி"—புறம் : 392 : 13,
'ஊருண் கேணி உண்டுறை"— குறுந் 399 : 1,

தோண்டப்படுவது. கிணற்றின் சுற்றுச் சுவர் கல்லால் கட்டப் படுவதோடு உறைகள் இறக்கப்படுவது. இதனை, 'உறைக் கிணறு' என்பர். பட்டினப்பாலையும்,

"உறைக்கிணற்றுப் புறஞ்சேரி"[1]-என்கின்றது. கேணி யோ இவ்வாறு உறையாக அன்றிக் கருங்கற்களால் ஆழத்தினின்று சுவர் எழுப்பப்படுவது. கிணற்று நீர் இறைக்கப்பட்டு நீர் ஊறி நிற்பது. இதனை,

"இறைத்தொறும் ஊறுங் கிணறு"[2] என்னும் பழ மொழிப் பாடலும் அறிவிக்கும். கேணி நீர் இறைக்கப்படுவது என்பது மரபில்உள்ளதன்று. கிணற்று நீர்மேலேஉருளும் உருளை அமைக்கப்பட்டு இறைக்கப்பட்டே பயன்கொள்ளப்படுவது.

"எந்திரக் கிணறும்"[3] என மணிமேகலை நீர் இறைக்க உருளைஇடப்படுவதை 'எந்திரம்' எனக் குறித்துக் காட்டி யுள்ளது. கேணி அவ்வாறு உருளையிட்டு இறைக்கப்படுவதன்று. கிணறு குறுகலானது; கேணி அகலமானது. இதன் அகலம்,

"வேட்டச் சீநூர் அகன்கண் கேணி"[4] —எனப் பட்டது.

இக்கேணி பெரும் மாட்டுப் பண்ணை உள்ள முற்றங்களில் அமைக்கப்படுவது உண்டு. பட்டினப்பாலை,

"தண்கேணித் தகைமுற்றத்துப்
பகடு எருத்தின் பல சாலை" (51, 52.)

என்றது இங்குள்ள கேணியை.

"குளிர்ந்த சிறிய குளங்களை" என்று நச்சர் சிறிய குளமாக எழுதினார். நாற்கோணமாக அல்லது வட்டமாகக் கட்டப்பட்ட சிறிய குளமே கேணி.

---

1 பட் : 76
2 பழ : 879,
3 மணி : சிறைக்கோட்டம் : 102.
4 நற் : 92 : 5

கேணி வேறு கிணறு வேறு என்பதை நிகண்டுகளும் பிரித்துக் கூறிப் பேசுகின்றன. மணிமேகலையும்,

"எந்திரக் கிணறும் ... ... கரப்புநீர்க் கேணியும்"[1]
என வெவ்வேறு நீர் அமைப்புகளாக அறிவிக்கின்றது.

மேலே காணப்பட்ட குளம் தமிழ்நாட்டில் எங்கணும் பரவலாக அமைந்துள்ள நீர்நிலை. குளம் என்னுஞ் சொல்லும் தமிழ்நாடு முழுதும் வழங்கப்படும் சொல். திருவள்ளுவர் இச்சொல்லைக் கையாண்டுள்ளார்.[2]

'கிணறு' என்னும் சொல்லும் 'கேணி' என்னுஞ் சொல்லும் எங்கும் வழங்கப்படினும் கிணறு எங்கும் பெரு வழக்காகவும் கேணி இராமனாதபுர மாவட்டத்தின் பெரு வழக்காகவும் பிற இடங்களில் அருகிய வழக்காகவும் உள்ளமை கவனிக்கத்தக்கது.

சிறப்பாக இக்கேணியமைப்பு இராமனாதபுர மாவட்டத்தில் மட்டுமே பழங்காலம் முதல் நடைமுறையில் அமைந்து அன்றாடப் புழக்கத்திலும் உள்ளதாகும், இன்றும் நாற்கோணவடிவில் 20 அடிக்கு மேலும் நீள அகலங்களைக் கொண்டனவாகக் கேணிகள் அமைந்திருப்பதையும் புழக்கத்தில் இருப்பதையும் காணலாம். இக்கேணியில் கீழே இறங்கி நீர் முகந்து வருதற்குக் கருங்கற்களால் நீட்டப்பட்ட படிகள் உள. இவற்றிற்கெல்லாம் மேலாக இக்கேணி என்பது மணற்பாங்கில் மட்டும் தோண்டப்படுவது என்பதை நினைவிற்கொண்டு,

"தொட்டனைத் தூறும் மணற்கேணி"[3]
என்னும் குறளில் கேணி 'மணற்கேணி' எனக் குறிக்கப்படுவதை இணைத்துப் பார்க்க வேண்டும். இது போன்ற கேணி அமைப்பு முற்காலத்தில் பிற மாவட்டங்களில் அமைந்தமைக்குச் சான்றுகள், அறிகுறிகள் இல்லை. பெருங்கிணறுகள் இருந்துள்ளன. பிற்காலத்தில் வடக்கு மாவட்டங்களில் கரம்பை நிலங்களை நன்செய், புன்செய்யாக்கி நீர் பாய்ச்சுதற்கு இதுபோன்ற பெருங்கேணிகள்

---

1 மணி : சிறை : 102, 104,
2 "அளவளாவில்லாதான் வாழ்க்கை குளவளாக்
கோடின்றி நீர்நிறைந் தற்று" — குறள் : 523,
3 குறள் : 396

அமைக்கப்பட்டன. இவை பிற்கால அமைப்பு என்பதால் திருக் குறளில் குறிக்கப்படும் மணற்கேணியாகா.

எனவே 'மணற்கேணி' என்னும் சொல்லும் இராமனாதபுர மாவட்டத்தை அடையாளங் காட்டும் சொல்லாகின்றது.

**மாடு** அடுத்து இராமனாதபுர மாவட்டத்தின் அடிப்படை கொண்டதாக உள்ள சொல் 'மாடு' என்னுஞ் சொல். இதற்குப் 'பக்கம், செல்வம்' என்னும் பொருள்கள் உள[1] 'செல்வம்' என்னும் பொருள்கொண்டும் இங்கே காணலாம்.

சோழநாட்டார்தம் செல்வம் நெல் வயல்களைக் கொண்டு அளவிடப்படுவது. சேர நாட்டார்தம் செல்வம் தென்னந் தோப்பு களைக் கொண்டு அளவிடப்படுவது. பாண்டியநாட்டார்தம் செல்வம் மாட்டு மந்தை. இத்தொடர்பில் 'செல்வம்' என்னும் பொருளில்,

"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடு அல்ல மற்றை யவை"[2]–என்னும் குறள் காணத்

தக்கது. மாட்டு மந்தைகளையே செல்வமாகக் கொள்ளும் மரபு இன்றும் இராமனாதபுரத்துப் பகுதிகளில் உள்ளது. இவ்வகையில் 'மாடு' என்னுஞ் சொல்லும் இம்மாவட்ட வாழ்வில் தோய்ந்த சொல்லாகத் திருவள்ளுவரால் கையாளப்பட்டதாகக் கொள்ளலாம்.

**உறக்கம்.** அடுத்து உறக்கத்திலும் சான்று போன்று 'உறக்கம்' என்னுஞ் சொல் உள்ளது. பிற பகுதியார் யாவரும் கண்அயர்தலைத் 'தூக்கம்' என்னுஞ் சொல் லால் குறிக்கின்றனர். முகவை மாவட்டத்தாரும் அதனைச் சார்ந்த பகுதியினரும் இன்றும் 'உறக்கம்' என்னுஞ் சொல்லையே வாய்ப் போக்கிலும் கூறுகின்றனர். திருவள்ளுவர் 'தூக்கம்' என்ற சொல்லைக் 'காலம் நீட்டித்தல்' என்னும் பொருளிலும்,[3] 'சோர்வு'[4] என்னும் பொருளிலுமே கையாண்டுள்ளார். அவர்

---

1 "வெறுக்கை, மா, பொறி, சீர், விபவம், செல்வம்
விருத்தி, ஆக்கம், திரு, மாடு, இடம், வாழ்க்கை
பெருக்கமும் செல்வப் பெயரெனப் பேசுப"—சேந். தி : பண்புப்பெயர்

2 குறள் : 400.

3 "தூங்குக தூங்கிச் செயற்பால தூங்கற்க
தூங்காது செய்யும் வினை" —குறள் : 672.

4 "கலங்காது கண்ட வினைக்கண் துலங்காது
தூக்கங் கடிந்து செயல்" — குறள் : 668.

காலத்தில் 'தூக்கம்' உறக்கத்தைக் குறிப்பதாக வழங்கப் படவில்லை.

"உறங்குவது போலும் சாக்காடு; உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு"[1]

என 'உறக்கம்' என்பதைக் கண் அயர்தலுக்காகப் பயன்படுத்தியுள்ளமை காணலாம். இச்சொல்லும் ஒரு தனித்தன்மையுடன் முகவை மாவட்டத்தை அடையாளங் காட்டுகின்றது.

'என்ன நோவா? நோப்பாளப் படுகின்றாயே!' — என்றெல்லாம் முகவை மாவட்டத்தார் இன்றும் உரையாடுகின்றனர்.

**நோ, அவம்.**

"நோநொந்து அறனல்ல செய்யாமை நன்று"[2]

—எனத் திருவள்ளுர் பேச்சில் 'நோ' நிற்பதைக் காண்கின்றோம். பிற பகுதியாளர் 'துன்பம்' சீக்கு, கட்டம், என உரையாடுவதையும் இணைத்துக் காணுங்கால் முகவை மாவட்டப் பகுதியில் திருவள்ளுவப் பெருந்தகையின் வாழ்வியல் சுவடு பதிந்திருப்பதை உணரலாம்.

'அவம்' என்னுஞ் சொல் 'வீண், கேடு' என்பன போன்ற பொருள்களில் முகவை மாவட்டத்தார் வாயில் இயல்பாக வழங்கப் படுவதை,

"அவம் அதனை அஃதிலார் மேற்கொள் வது"[3]
"அவம் செய்வார்"[4]

—எனத் திருவள்ளுவர் கையாள்வதோடு இயைபுபடுத்திக் காணலாம்.

இவை போன்று மேலும் பல சொற்கள் முகவை மாவட்ட வழக்கிலுள்ளவை. திருக்குறளில் நின்று திருவள்ளுவருடன் அம் மாவட்டத்தை இணைத்துக் காட்டுகின்றன.

---

1 குறள் : 339
2 குறள் : 157,
3 குறள் : 262,
4 குறள் : 266,

## தொடர்கள், காரணப் பெயர்கள்.

திருக்குறளில் வந்துள்ள இயற்பெயர் 'இந்திரன்' என்னும் ஒன்றே. காரணப் பெயர்களாகப் பல, தனி மொழியாகவும் தொடர் மொழியாகவும் அமைந்துள்ளன. சிலவற்றைக் காண்போம்:

'வகுத்தான்' (குறள் : 377) -என்பது தனிமொழியாக அமைந்த காரணப் பெயர்.

"ஆதிபகவன்" (1)

"வாலறிவன்" (2)

"மலர்மிசை ஏகினான்" (3)

"ஐந்தவித்தான்" (25)

"அடியளந்தான்" (610)

"உலகியற்றியான்" (1062)

"தாமரைக் கண்ணான்" (1103) -என்னும் இவையெல்லாம் தொடர் மொழிகளாக அமைந்துள்ள காரணப் பெயர்கள்.

இவை போன்ற காரணப் பெயர்களை இடுகுறிப் பெயர் களாக முகவை மாவட்டத்திலும் அதனைச் சார்ந்த பகுதிகளிலும் இட்டு அழைப்பது இன்றும் வழக்காற்றில் உள்ளது.

பிழை பொறுத்தான்,

ஊருடையான்,

நாடு காத்தான்.

நாடாண்டான்,

எப்போதும் வென்றான் -என்னும் பெயர்களும் இவை போன்றனவும் மக்கட்குப் பெயர்களாக இடப்பட்டு அழைக்கப் படுவதும் திருவள்ளுவர் வாழ்விடத்திற்கு அழைத்துச் செல் கின்றன.

## தொழில் முறை.

ஒரு நாட்டில் பகுதிக்குப் பகுதி அந்நாட்டு மொழி, அடிப் படை பிறழாது வேறுபட்ட உருவத்தில் வழங்கப்படுதல் மரபு. அதுபோன்று, தொழிலைச் செய்யும் முறையும் அவ்வப்பகுதியின் இயற்கைக்கேற்ப வேறுபடும். தமிழகத்தின் அடிப்படைத் தொழில் உழவுத் தொழில். உலகமே சுழன்றும் ஏர்ப்பின்னது.

**புழுதி உழவு.** நீர்வளம் மிக்க சோழநாட்டுப் பகுதிகளில் உழவுத் தொழில் முறை வேறு; பிற பகுதிகளில் முறை வேறு. இதனை, ஆற்றுநீர்ப் பாய்ச்சலால் தொழிற் படுவது என்றும், வானத்து மழையை எதிர்பார்த்துத் தொழிற் படுவதுஎன்றும் கொள்ளலாம். பின்னதை 'வானவாரி' (மானாவாரி) என்பர்.

ஆற்றுநீரை வயலில் தேக்கிப் பின் உழுதல் முன்னது. பின்னது மழையால் பதப்பட்ட நிலத்தை உழுதல். திருவள்ளுவப் பெருந்தகை,

"தொடிப்புழுதி கஃசா உணக்கின் பிடித்தெருவும்
வேண்டாது சாலப் படும்"[1] –என்கின்றார். 'ஒரு பலம் மண், கால் பலம் ஆகுமாறு உழுது கதிரவன் ஒளியில் காயவிடல் வேண்டும்' என்பது திருவள்ளுவரது கருத்து. இதனைப் 'புழுதி உழவு' என்பர். அதனிலும் காயவிடும் குறிப்பு உன்னத்தக்கது.

நீர்வளம் மிக்க சோழநாட்டு மாவட்டங்களிலும், பிற மாவட்டங்களில் சில பல பகுதிகளிலும் நீர் பாயும் நிலம் உண்டு; வானவாரிப் பகுதியும் உண்டு, முன்னதே பெருகியது; பின்னது அருகியது. முகவை மாவட்டப் பெரும்பகுதி—ஏன்—முழுப்பகுதி என்றும் கூறலாம், புழுதி உழவையே மரபாகக்கொண்டது. இதனைக் கூர்ந்து நோக்குங்கால் திருவள்ளுவப் பெருந்தகையை முகவை மாவட்டத்தோடு இணைத்துக் காணமுடிகின்றது.

இத்துடன் உழவுத் தொழிலில் படிப்படியாகச் செய்ய வேண்டிய பணிகளைத் திருவள்ளுவர் பட்டியலிட்டு வலியுறுத்தும் பாங்கும் கவனத்திற்கொள்ள வேண்டியதாகின்றது. அதனை,

"ஏரினும் நன்றால் எருவிடுதல்; கட்டபின்
நீரினும் நன்றதன் காப்பு"[2] –என்னும் குறளில் காண்கின்றோம். இதன்படி முதலில்,

ஏர் உழுதல்,
எரு இடல், (விதைத்தலும் முளைத்தலும் மழை நீரால் நிகழும்)

---

1 குறள் : 1037
2 குறள் : 1038

களை எடுத்தல்,
நீர் பாய்ச்சல், (இறைவை நீரால்)
காவல் காத்தல்

—எனப் படிப்படியாகக் குறித்துள்ளார். இச் செயல்முறை வரிசையை உற்று நோக்கினால் மேற்குறிக்கப் பட்ட புழுதி உழவுக் கருத்து வலுப்பெறுகின்றது.

**பிடி எரு.** மேலும், அக்குறளிலேயே "பிடித்து எருவும்" என்று எருவைப் பிடி அளவில் குறித்திருத்தல் நோக்கத்தக்கது. சோழநாடு போன்ற பகுதிகளில் எருவைக் குவித்துக் கொட்டிப் பின்னர் வாரி வாரிப் பரவ விடுவதும், கூடையில் அள்ளிக் கொட்டுவதும் பழக்கமாக உள்ளது. பிடி பிடியாகத் தூவும் முறை முகவை மாவட்டத்தை நினைவில் நிறுத்துகின்றது. முகவை மாவட்டத்தைச் சார்ந்த திருநெல்வேலி மாவட்டத்தையும் நினைவுறுத்துகின்றது.

இம்முறை வட ஆர்க்காடு, தென்னார்க்காடு மாவட்ட பகுதிகளிலும் பெருமளவில் கையாளப்படுவதுண்டு. ஆனால் அப்பகுதிகள் தேர்ந்த விளை நிலங்களாக ஆக்கப்பட்ட காலத்தை எண்ணிப் பார்க்கவேண்டும். அப்பகுதிகள் மக்கள் வாழும் நாட்டுப் பகுதிகளாகச் சங்க கால அளவில் மாற்றப்பட்டவை. இக்கருத்தை, கரிகாலன் காடுகெடுத்து நாடாக்கியதையும், அதற்கு முன்னர் இராமாயண, பாரத காலங்களில் இவை காட்டுப் பகுதிகளாகக் குறிக்கப்பட்டமையும், இன்றளவும் அவ்வப் பகுதிப் பெயர்கள் 'காடு' என்னும் சொல்லோடே வழங்கப்படுகின்றமையும் கொண்டு அங்கெல்லாம் உள்ள உழவு முறையை அடிப்பட்ட பழமையாகக் கொள்ளுதற்கு இயலவில்லை.

## முகவை மாவட்டம்.

எனவே, உழவுத் தொழில் முறையை அறிவிக்கும் பாங்கில் பெரும் அளவில் முகவை மாவட்டத்தைத் திருக்குறள் அடையாளங் காட்டி நிற்பதை அறிய முடிகின்றது.

இங்கே குறிக்கப்பட்ட
சொல்லாட்சி,
பெயர்த்தொடர்கள்,
தொழில் முறைகள் கொண்டு கூர்ந்து

நோக்கினால் திருவள்ளுவப் பெருந்தகை வாழ்ந்த இடத்தை அடையாளங் காண முடிகின்றது.

அவ்விடத்தைப் பெருஞ் சுற்றெல்லையாகக் கோடிட்டுக் காட்டினால் அது பாண்டிய நாட்டகமாகவும், அதனையும் கூர்ந்து நோக்கிச் சுருக்கினால் முகவை மாவட்டமும், அதனை அடுத்துள்ள திருநெல்வேலி மாவட்டமும், மதுரை மாவட்டத்தின் சிறு பகுதி கொண்டதாகவும் அமையும். இக்கருத்திற்கு மேலும் சில மரபுகள் இயைந்து வருகின்றன. அவையும் ஆராயப்பெறின் கருத்து உறுதிபெறும்.

இக்கட்டுரை திருவள்ளுவரது வாழ்விடத்தை அறிய அவா வும் முனைப்புக் கட்டுரையே. பல்கிப் பெருகியுள்ள திருக்குறட் கருத்துகளைத் தொடர்ந்து ஆராயவேண்டும். அவ்வப்பகுதி யில் வாழும் புலவர் பெருமக்கள் இவ்வாறு இயைந்து வருப வற்றைக் கூர்ந்து காணவேண்டும். மிக விரிவாகவும் ஆழமாக வும் கண்டறிய வேண்டிய ஆய்வாகும் இது. ஆயும் போதில் மாவட்டப் பற்றிற்கு இரையாகிவிடக் கூடாது. கூர்த்த ஆய்வு களால் வாழ்விடப்பகுதியின் சுற்றெல்லையைச் சுருக்குவோமாயின் திருவள்ளுவர் வாழ்ந்த நேரான இடத்தையே அடையாளங் கண்டுவிட முடியும்.

இவ்வாய்வினால், திருவள்ளுவப் பெருந்தகையைக் காணும் பேற்றைப் பெற இயலாதெனினும், அவர்தம் வாழ்விடத்தையா வது காண்கின்றோம் என்று அமைதிபெறுவது மட்டுமன்று, பல சொற்களுக்கும் தொடர்களுக்கும் மரபுகளுக்கும் தெளிந்த பொருளைப் பெறவும், அவற்றை வாழ்வியலில் நடைமுறைப்படுத்தி வாழ்வைச் செம்மை செய்து கொள்ளவும், உலகினர்க்கு எடுத் துரைத்து வாழ்வித்து இன்புறுத்தவும் பயன்படும்.

அவற்றைவிட, தவறான சொற்பொருள்களால் திருவள்ளுவப் பெருந்தகை கருதிக் கூறிய கருத்தை நழுவ விடாமல் காக்கவும் நேரும்.

'தூங்குதல்' என்பதற்குப் பிற்காலப் பொருளாகிய 'கண் அயர்தல்' என்பதைக் கொண்டால்,

"தூங்குக தூங்கிச் செயற்பால" என்பதற்குக் 'கண்' அயர்ந்து உறங்கிக் கொண்டே செய்பவற்றிற்கு உறங்குக! என்றன்றோ பொருள் கொள்ள நேரும். எனவே இட ஆய்வு திடப்பொருளைத் தரும்.

இவ்வாறு திருவள்ளுவப் பெருந்தகையை ஒரு சிற்றெல்லைக்குள் அகப்படுத்த முயன்று வென்றாலும், அப்பெருந்தகை உலகத்தார் உள்ளமென்னும் எல்லை கட்ட முடியாத பரந்த பேரெல்லையில் திகழ்பவரேயாவார்.

# 3. எளிதிலும் எளிது.

ஓயாப் பயணம், அறிவியலால் எளிது; உயர்கலை, ஒன்றிய பயிற்சியால் எளிது; உடல் நலம், நடைப் பழக்கத்தால் எளிது; உயர்ந்த வாழ்வு, ஒழுக்கத்தால் எளிது; ஒழுக்கம், அறிவுரையால் எளிதா?

சொல்வோர் திறத்தால்
எளிதிலும் எளிது.

மூலப் பின்னணி.

## கடியது அன்று.

நாகப்பட்டினத்திற்கு அண்மையில் மஞ்சட்கொல்லை என்றொரு சிற்றூர் உள்ளது. அங்கு வாழ்பவர் நண்பர் திரு தி. சாமிநாத முதலியார். அவர் 'மனத்துக் கண் மாசி'லாதவர். செல்வத்தில் 'பெருந்தகையார்'. 'பண்பறிந்தாற்' றுபவர். 'பொய்யா விளக்'கினர். மெய்ப்பொருள் காணும் அறிவு' டையார். 'கருமம் சிதையாமல் கண்ணோடு' வார். 'அளவறிந்து வாழ்' பவர். இவற்றால் நிறைவாழ்வினர்.

ஒரு முறை உரையாடும் போது 'குறள் நெறிகள் கடுமையானவை'. என்றார். இஃது அவர் தம்மை மறந்து கூறியது.

அதுபோது 'குறள்நெறி கடியது அன்று; எளியதே, எனச் சில காட்டினேன். இதனை விளக்கமாக எழுத வேண்டும் என்னும் எண்ணம் பொதிந்தது.

பெங்களூர்த் தமிழ் இலக்கிய மன்றத்தார் தம் ஆண்டு விழாவிற் பேச அழைத்தனர். 'எளிதிலும் எளிது' எனத் தலைப்பெழுதினேன். பட்டிமன்ற நடுவராக்கி மலருக்குக் கட்டுரை வேண்டினர்.

**'எளிதிலும் எளிது'** எழுத்தாயிற்று

வெளியீடு :
ஆண்டுவிழா மலர்,
பெங்களூர்த் தமிழ் இலக்கிய மன்றம்.
தி. ஆ. 2000; கி. பி. 1969.

எளிதிலும் எளிது

## முயற்சியும் சுவையும்.

உள்ளத்தாலும் செவியாலும் கண்ணாலும் சுவைக்கத் தமிழை மூன்றாக கண்டவன் தமிழன்; முத்தமிழாகச் சுவைத்து மகிழ்ந்தவன். இதுபோன்றே வாயாற்சுவைக்க வேறு மூன்றையும் கண்டான். அவை முக்கனிகள். மா, பலா, வாழைக்கனிகள் இல்லாத விருந்து விருந்தாகாது. சுவைகளில் தேர்ந்த இக்கனிகளை உணவிற் கண்டு சுவைத்ததோடு மட்டுமன்றி வழக்கிலும் வைத்துப் பேசிக் களித்தவன்.

பலாக்கனியது சுவையின் பெருமையை விளக்கும் போக்கில் வேறு ஒரு கருத்தையும் விளக்க, 'பலாக்கனியில் ஈ மொய்த்தாற் போல'—என உவமையாக்கிப் பேசினுன்.

'மாங்கனி போன்ற கன்னம்'—என்று இன்பத் தினவோடு உவமை யாக்கினுன்.

இவ்வாறு இரண்டு கனிகளையும் சுவை மகிழ்வோடு பெருமைகளாக உவமை கூறியவன் வாழைக்கனியை உவமையில் வைத்து வழங்கிய வழக்கு ஒரு சுவை; மற்றொரு கருத்தையும் கொண்டதாகின்றது. 'வாழைப் பழச் சோம்பேறி' — என்று சோம்பேறிக்கு உவமையாகக் கொண்டதுதான் உன்னத் தக்கது.

அதனையும் மேலும் பெருக்கி 'உரித்த வாழைப்பழச் சோம்பேறி' —என்றமையும் இணைத்து உன்னத் தக்கது.

இரண்டு கனிகளை ஒவ்வொரு நலத்தைச் சிறப்பிக்க உவமையாக்கியவன் வாழைக்கனியை மட்டும் ஏன் ஓர் எள்ளற் சிறப்பிற்கு உவமையாக்கினான் என்பதை எண்ணின் மாந்தர் இயல்பின் ஓர் உண்மை புலப்படும்.

முக்கனிகளையும் உண்டு சுவை காண்பதற்கு நாம் கையாளும் செயல்களை நோக்குவோம்:

பலாக்கனி அளவிற் பெரிது; சுமை உண்டு. மேலும் முள் உண்டு. இவை இரண்டையும் தாங்கிச் சுமந்து கொணர்ந்தால் எளிதிற் பிளக்க முடியாத தடித்த தோல் உண்டு. தனிக் கருவி கொண்டு முழு வலுவுடன் பிளந்த பின்னர் வலிய திரள் கோது உண்டு. அத்துடன் ஒட்டும் பால் உண்டு; சக்கை உண்டு; உள் கோது உண்டு; கொட்டையும் உண்டு. இவற்றை எல்லாம் தாண்டிய பின்னரே சுளையை உண்டு சுவைக்கலாம். சுளையின் சுவை பெருமுயற்சிக்குப் பின்னர்தான் கிடைக்கும்.

மாங்கனிக்கு இத்துணைப் பெருமுயற்சி வேண்டுவதின்று. மேலே தோலுண்டு. பக்குவமாக உண்போர் அதனை நீக்கினால், சிலவற்றில் உள்ளே நார் உண்டு; புளிப்பும் உண்டு. இவை இல்லையென்று கண்டாலும் கொட்டை உண்டு. கொட்டை தள்ளின் சுவை உண்டு. மாங்கனியைச் சுவைப்பதில் பலாக்கனி யினும் முயற்சி குறைவு.

வாழைக்கனிக்கு மேல் தோலுண்டு. தோலை நீக்கினால் சுவை கண்டு மகிழலாம். முன்னிரண்டு கனிகளிலும் முயற்சியைக் குறைவாகவே கொள்வது வாழைக்கனி.

இவ் எளிமையைக் குறிக்கொண்டே — எதனையும் எளிதாகவே நுகர விரும்புவோரைக் கருதியே — சோம்பல் மேல் ஏறிக்கொண்டிருக்கும் சோம்பேறிக்கு உவமையாக்கப்பட்டது வாழைக்கனி. தான் சோம்பல்மேல் ஏறும் முயற்சியையும் விடுத்துத் தன்மேல் சோம்பலை ஏறவிட்ட சோம்பேறிக்கு உரித்த வாழைப் பழத்தினை உவமையாக்கினான் தமிழன்.

இதன்கண் ஒளிந்திருக்கும் உண்மை 'மாந்தன் எதையும் எளிதிற் சுவைக்கும் இயல்புடையவன்; எளிதிற் பயன்கொண்டு மகிழ விரும்புபவன்'— என்பதே.

இவ்வுண்மைக்குச்சான்றோரும், அறிஞரும், தேர்ந்த உழைப்பாளரும் விலக்கானவர். ஆனால், பண்டைச்சான்றோர் மாந்தனின் எளிதிற் பயன்கொள்ளும் தன்மையை நன்றாக உணர்ந்தவர். தாம் கூறும் அறவுரைகள் எளிதாக நடைமுறைப்படும் முறையை உள்ளத்திற்கொண்டே அறக்கருத்துகளை வெளியிட்டனர்.

## பாரதி எளிமை.

ஓர் எளியவன் அறஞ்செய்ய விரும்பினான். சிறு முயற்சியும் இன்றி எளிதிற் செய்யும் அறம் ஒன்றை அறிய விரும்பினான். பாரதியாரைப் புதுச்சேரியில் கண்டான். நேரே உசாவினான்:

[இது உண்மை கலந்த கற்பனை]

'கவிஞர் பெருமானே! பாரதிப் பாவலனே! யான் அறஞ் செய்யவிரும்புகின்றேன். மிக எளிதாகச் செய்யத் தக்க ஒன்றைக் கூறுக'—என்றான்.

பாரதி : வா, பாண்டியா; அப்படியா? "இன்னறுங்கனிச் சோலைகள் செய்"யலாமே.[1]

எளியவன் : அதற்குச் செடிகொடிகள் வளர்க்க வேண்டுமே; பெரும் முயற்சி வேண்டுமே.

பாரதி : "இனிய நீர்த்தண் சுனைகள் அமை"க்கலாம்.

எளி : குளம் தொட்டன்றோ வளம் பெருக்கவேண்டும். வெறுங்கை முழம் போடாதே, பாவலரே?

பா : "அன்ன சத்திரம் ஆயிரம்" வைக்கலாம்.

எளி : சோறு சமைக்க வேண்டும்; நூறுநூறாகப் பணம் வேண்டும். பெரும் முயற்சி ஆகுமே.

பா : "ஆலயம் பதினாயிரம் நாட்டலாம்"

எளி : இதோ பார் பாரதி! எளிதாக ஒன்று சொல் என்றேன். மிக அரிதானவைகளையே சொல்லி என் சினத்தைத் தூண்டுகின்றாய்.

---

1 பாரதியார் கவிதைகள் : வெள்ளைத்தாமரை : 9.

பா ; பாண்டியா! இவற்றைச் செய் என்று நான் சொல்ல வில்லை. இவற்றை விட எளிதானது சொல்வேன்,

எளி : அப்படிச்சொல்க! என்ன அது?

பா : ''ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவி''

எளி : என்ன? எழுத்தறிவிப்பதா? அதற்கு அறிவு வேண்டும். அஃதும் செறிவாக வேண்டும். சொல்லுக்கு எளிதாக இருக்கிறது. செயலுக்கு அருமை; மிக அருமை.

பா : நட கால்களால் அன்று; மனத்தால் நட. இடத்தால் அன்று; காலத்தால் நட. முன்னோக்கி அன்று; பின்னோக்கி நட. ஓராயிரம் ஆண்டு பின்னோக்கி நட. ஒரு பெரியவரைக் காண்பாய். அவர் உனக் கேற்ற எளிதான அறத்தைச் சொல்வார். போடா, பாண்டியா போ!

கேட்ட எளியவன் மனத்தால் ஆயிரம் ஆண்டுகள் பின்னோக்கி நகர்ந்தான்.

## திருமூலர் எளிமை.

ஒரு தாடித் துறவியரைக் கண்டான்.

எளி : தாத்தா. அறம் செய்ய ஆர்வம் கொண்டுள்ளேன். எளிதாகச் செய்யத் தக்க அறம் ஒன்றை அருளுக,

தாத்தா : பேரா, வாழ்க நீ! அறம் செய்யும் எண்ணம் வந்ததே அதற்காக நீ நூறாண்டு வாழ்க! எளிதான அறந் தானே? வில்வ மரத்திலிருந்து இலைகளைக்கொய்து சிவபெருமானுக்குப் போடு. அஃதே அறம்; மிக எளிதான அறம். மேலும் யாவருக்கும் ஆகும் அறம்.

எளி : தாத்தா! மரத்தில் ஏற வேண்டும். இறங்க வேண்டும். சிவ உருவைத்தேடி நடக்க வேண்டும் போட வேண்டும். இத்துணை முயற்சி என்னால் முடியாது.

தாத்தா: வேண்டாம் விடு. மரம் ஏற வேண்டாம். நடக்கும் வழியில் புல் முளைத்திருக்கும். பக்கத்தில் ஆ இனம் மேயும். அதற்குப் புல்லில் ஒரு வாய் போடு. எளிதானதுதானே?

எளி: குனிய வேண்டும்; பிடுங்க வேண்டும்; நிமிர வேண்டும்; முட்டாத மாடாகப் பார்க்க வேண்டும்; முடியாது.

தா: வேண்டாம். நீ உணவு உண்பது உண்டன்றோ? சோறு கிடைத்து உண்ணும்போது ஒரு கைப்பிடி சோறு இல்லாதவருக்கு இடு. இஃது எளிதில் ஆகக் கூடியதுதானே?

எளி: தாத்தா! என் பாட்டனார் 'எச்சிற் கையாற் காக்கை ஓட்டாதவர்'. நான் 'ஈரக்கையால் ஈ விரட்டாதவன்' மகன். எங்கள் உடைமையைப் பிறர்க்கு ஈவது என்பது எங்கள் தலைமுறைப் பகை. அதைச் செய்ய மாட்டேன். அப்படிச் செய்து எங்கள் குலத்திற்குப் பழி தேட மாட்டேன்.

தா: அப்படியா! வாய் திறந்து பேசுவாய் அன்றோ? அவ்வாறு பிறருடன் பேசும்போது இனிய சொற்களைக் கூறு. இதில் முயற்சி இல்லை. மிக எளிது

எளி: இஃதும் முயற்சி உடையதுதான். வாயைத் திறக்க வேண்டும். பல்லில் நாவை வைத்துத் தொண்டை ஆவியைப் போக்கி அன்றோ பேச வேண்டும்! அதனிலும் இனிமை வேண்டும் என்கிறீர். தாத்தா, என்னால் செய்யக் கூடியது அன்று உமது அறிவுரை.

அயர்ந்து போன அந்தப் பெரியவர் திருமூலர்:

பேரா! இவை முடியாதன என்றால் நட! கால்களால் அன்று; மனத்தால் நட! மேலுமோர் ஆயிரம் ஆண்டுகள் பின்னோக்கி நட! எம் முன்னோர் ஒருவரைக் காண்பாய். உனக்கேற்பன கூறுவார்; போ!

(எளியவன் புறப்பட்டான்.)

திருமூலர்: பேரா! எதற்கும் இந்தப் பாடல் உன் உள்ளத்தில் இருப்பதால் குறைவில்லை. நினைவிற் கொள்க!

"யாவர்க்கு மாம்இறை வற்கொரு பச்சிலை,
யாவர்க்கு மாம்பசு விற்கொரு வாயுறை;
யாவர்க்கு மாம்உண்ணும் போதொரு கைப்பிடி;
யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரை தானே!"[1]
—என்றார்.

இவற்றினும் எளிமையானதை நாடிய எளியவன் ஆயிரம் ஆண்டுகள் பின்னோக்கி நடந்தான்.

## திருவள்ளுவர் எளிமை.

திருவள்ளுவப் பெருந்தகையைக் கண்டான்; கேட்டான்:

தந்தையே! எளிதாகச் செய்யத்தக்க அறம் ஒன்றை அருளுக.

வள்ளுவர்: மகனே! அறமே எளியதுதானே. உள்ளத்தில் குற்றம் இல்லாதிருத்தலே அறம். அவ்வளவுதான் அறம். இந்த அறத்தினைக் கொள்க; செய்க!

எளி: தந்தையே! உள்ளத்தில் குற்றமில்லாமல் இருப்பதா? முன்னர் யான் கேட்டவற்றைவிட இது எளிதுதான். ஆனால், மனத்தைத் தூண்டிச் செயல்புரியச் செய்வது என்பது அத்துணை எளிதாகக் கூடியது அன்று. இதைவிட எளிதாக ஏதேனும் உண்டோ?

திரு: (புன்னகை பூத்தவாறே) மகனே! இதைவிட எளிதானது கிடைத்தால் செய்! கிடைக்காது போனால் மீண்டும் வா!

மிகச் சோர்ந்துபோன எளியவன் மனத்தால் காலத்தை முன் நோக்கித் திரும்பினான். வழியில் தாயுமானவரைக் கண்டான்; வினவிப் பார்த்தான்.

---

1 திருமந்திரம் : 252

அவர்: "சும்மா இரு" என்றார்.

துள்ளிக் குதித்தவாறே: இஃதன்றோ எளிதான அறம். இதனையே செய்வேன். செய்வதற்கென்ன இருக்கிறது? சும்மா இருப்பேன். நல்லதே சொன்னீர் அடிகளே! நன்றி; வருகின்றேன்.

## சும்மா இரு.

எளியவன் குதிப்போடு தெருவழியே நடந்தான் எதிரே கோவில் அறங்காவலர் ஒருவர் வந்தார். அவன் குதிப்பைக் கண்டு வியந்தார். உசாவினார்:

தம்பி! மகிழ்ச்சிக் கடலிலே மிதந்தபடி போகிறாயே.! என்ன கண்டாய்?

எளி: எளிதான அறம் செய்யக் கண்டுகொண்டேன். அதற்காகப் போகின்றேன்.

அறம்: என்ன அது? யானும் அறியலாமோ?

எளி: சும்மா இருப்பது.

அறம்: அப்படியா? அவ்வாறு இருக்கும் ஒருவரைத்தான் நீண்ட நாள்களாகத் தேடிக் கொண்டிருக்கின்றேன். என்னொடு வா! எங்கள் கோவில் கல்வெட்டு ஒன்றில் கோவிற் பணியாளர்க்கு வழங்குதற்குரிய சோற்றுப் பட்டைகள் பற்றி ஒரு பட்டியல் உள்ளது. அப்பட்டியலில் 'திருப்பதியம் ஓதுவார்க்குப் பத்துப் பட்டைகள்' என்று தொடங்கி இறுதியில் 'சும்மா இருப்பவருக்கு மூன்று பட்டை' என்று இருக்கின்றது. இதுவரை அப்படி ஒருவர் கிடைக்காமையால் கவன்று கொண்டிருக்கின்றேன். வந்து கோவில் மண்டபத்து இடைநாழியில் அமர்ந்து சும்மா இரு. உனக்கு அறம் செய்ததாகவும் ஆகும். மூன்று பட்டை சோறும் கிடைக்கும். கல்வெட்டை நிறைவேற்றிய அறமும் உன்னைச் சேரும். நிறைவேற்றிய மகிழ்ச்சிக்கு எனக்கு உதவியாகவும் அமையும். வா என்னுடன்!

எளியவன் துடிப்போடு பின்தொடர்ந்தான். எளியவனை அழைத்துப்போய்க் கோவிலின் இடைநாழியில் அமர வைத்தார்

அறம் : தம்பி! பகல் 12 மணிவரை இங்கே உன் அறத்தைச் செய்! சும்மா இரு! யான் வந்து ஆவன செய்வேன்.

எளி : அவ்வாறே அறம் செய்வேன். சும்மா இருப்பேன். தாயு மானவரோடு தங்களுக்கும் நன்றி.

அறங்காவலர் போனார். எளியவன் அமர்ந்தான். மணி 12 ஆயிற்று. போனவர் வந்தார்.

அறம் : தம்பி! சும்மா இருந்தாயா?

எளி : ஆம், இருக்கின்றேனே! நீங்களுந்தான் பார்க்கின்றீர் களே. ஒன்றுமே செய்ய வில்லை. எழுந்து நிற்கவும் இல்லை. அப்படியே 'சும்மா' அமர்ந்தே இருக்கின்றேன்.

அறம் : இந்தப் பக்கமாக எவரும் போனார்களோ?

எளி : எவர் எவரோ போனார்கள். குழந்தைகள் போயின. குமரிகளும் போயினர். குமரர்களும் போயினர். பெரியவர்களும் போனார்கள்.

அறம் : போனார்களா? பார்த்தாயா? ஏன் பார்த்தாய்? நீ சும்மா அன்றோ இருக்க வேண்டும்? கண்ணால் சும்மா இருக்கவில்லை நீ. போகட்டும். ஏதேனும் கேட்டாயோ?

எளி : பெருவங்கியம் இசைக்கக் கேட்டேன். தேவாரம் இனி மையாக இசைக்கும் போது கேட்காதிருக்க முடியுமா என்ன? சுவைத்துக் கேட்டேன். தொடர்ந்து நானும் பாடிப் பார்த்தேன்.

அறம் : காதால் கேட்டாயா? செவியால் நீ சும்மா இருக்க வில்லை. பாடிப்பார்த்ததால் வாயாலும் சும்மாஇருக்கத் தவறிவிட்டாய். இஃதோ வேட்டியின் நூலை உருவிப் போட்டிருக்கின்றாய். அழுக்கு உருண்டை திரட்டிப் போட்டிருக்கின்றாய். மெய்யாலும் சும்மா இருக்க வில்லை. தம்பி! மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐந்து பொறிகளாலும் நீ சும்மா இருக்க வில்லை. அவற்றையெல்லாம் முழுமையாகச் செயல் புரிய வைத்துள்ளாய். ஐம்பொறிகளையும் அடக்கி

நினைவையும் ஒடுக்கி ஒரு நிலைப்படுத்தி இருப்பதே சும்மா இருப்பதாகும். தாயுமானவப் பெரியார் சொன்ன அறம் பொருள்கொண்டது. நீ அதன்படி ஒழுகவில்லை. எழுந்து ஓடு! உனக்குச் சோற்றுப் பட்டை வழங்கக் கூடாது. எழு; போ!

விரட்டினார் அறங்காவலர். அலறிப் புடைத்து எழுந்தவன் மனத்தைத் தூண்டிவிட்டான். திருவள்ளுவப் பெருந்தகை காலில் விழுந்தான்,

## மீண்டும் திருவள்ளுவர்.

'தந்தையே! தாங்கள் குறித்த அறமே எளிது. உள்ளத்தில் குற்றம் இல்லாமல் ஒழுகும் அறமே செய்ய விழைகின்றேன், அஃதே சிறந்தது' என்றான்.

திருவள் : மகனே! பிற எல்லாம் வெளி ஆரவாரச் செயல்களாகும். அறம் ஆகா. உணர்ந்த மகனே, நீ வாழ்க!

எளி : அறிந்தேன் தந்தையே! அவ்வாறே செய்வேன். வருகின்றேன். நன்றி; வணங்குகின்றேன்.

திரு : மகனே, சற்றுநில்! ஒன்று வினவாமல்போகின்றாயே? 'மனக்குற்றம் என்றால் என்ன' என்று நீ வினவவில்லையே?

எளி : ஆம், அதனையும் அருளுக!

திரு : பிறர் ஆக்கம் கண்டபோது பொறாமை கூடாது. அப்பொறாமை வழி எழும் அவா கூடாது. அவ்வவா ஏதுவாக மூளும் சினம் கூடாது. அச் சினத்தால் வரும் இன்னாச் சொல் கூடாது. இவை நான்கும் நீங்குவதே உண்மை அறம்[1]. இந்த ஏட்டைப் பெற்றுக்கொள். மேலும் சில வழிகளும் பயன்களும் உனக்குக் கிடைக்கும். சென்றுவா மகனே!

எளி : வணங்கி அமைகின்றேன், தந்தையே!

---

1 "அழுக்கா றவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா வியன்ற தறம்" — குறள் : 35

> "மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்;
> ஆகுல நீர பிற" [1]

இக்குறள் எனது உள்ளத்தை நிறைவாக்கியுள்ளது. அவ்வாறே நடப்பேன்.

திருவள்ளுவப் பெருந்தகை எளியவனை ஓரக்கண்ணால் பார்த்து மகிழ்ந்தார். வாழைப்பழச் சோம்பேறிக்கு வாழைப் பழத்தில் ஊசி ஏற்றுவது போன்று எளிதான அறத்தைப் புகுத்தினார். அரிதானதை எளிதாகக் சுட்டிய அச்சான்றோர், இன்றும் நம்மிடையே கருத்தால் நிலைத்துள்ளார்.

எளிமையில் எளிமையாய், அருமையின் அருமையாய்த் திகழ்வதன்றோ திருக்குறள்.

## நபிபெருமான் எளிமை,

மக்களை நல்வழியில் வாழவைக்க விரும்பிய பெரியோர் எவரும் எவ்வகையிலும் அதனை நிறைவேற்றவே முனைந்துநின்றனர். தமது விருப்பத்திற்கு மாறானவற்றையும் ஓரளவில் விட்டுக் கொடுத்தேனும் நன்னெறிகளை இயன்ற அளவில் கடைப்பிடிக்கச் செய்வதே சான்றோரது நோக்கமாகும்.

நாடு, காலம் வேறுபட்டிருப்பினும் சான்றோர் எவரும் ஓர் இழையோட்டமான உணர்வைக் கொண்டிருந்ததை நாம் உணர முடிகின்றது.

நபிபெருமான் 'முகம்மது சல் அல்லாகு வ சல்லம்' அவர்கள் விட்டுக் கொடுத்தும், வாய்ப்புகளை இயைபாக்கியும்அறநெறிகளைக் கடைப்பிடிக்கச் செய்யும் மனப்பாங்குடையராக விளங்கினார்.

அரபிய நாட்டு மக்கள் இறைச்சி உணவை இன்றியமையாததாகக் கொண்டவர்கள். பாலைநிலம் வெப்ப நாடாகையால் பயிர்ப்பச்சை உணவை – காய்கறி உணவைப் பெரிதும் பெறும் வாய்ப்பில்லாதவர்கள். கோழி, ஆடு, குதிரை, ஓட்டகம் முதலிய வற்றின் இறைச்சி அம்மக்களுக்கு இன்றியமையாது வேண்டப்படும் உணவுப் பொருள்கள். இவ்வுணவு முறை அருட் பாங்கிற்கு

---

1 குறள் : 34

மாறுபட்டதுதான். அருளில் நிறைந்த நபியவர்களது உள்ளம் இக்கொலை உணவில் நிறைவாகத் தோய்ந்திருந்ததாகக் கூற முடியாது. உயிர்களது துன்பங்களை எண்ணி உருகும் அவர் உயிர்க்கொலைபற்றிய மாறுபட்ட கொள்கையையே கொண்டிருந் தார் எனலாம்.

ஒரு முறை ஒருவர் நபியவர்களை அணுகினார். தம் வீட்டில் விருந்தினர் பலர் வந்துள்ளனர் என்றும், அன்னார்க்கு எவ் வகையான உணவளிப்பது என்றும் உசாவினார். அவர் அதனை நபிகள்பால் வினவியதன் நோக்கமே ஒருமுறை நபி பெருமான் உயிர்க்கொலைபற்றி அறிவித்த கருத்தின் எதிரொலியேயாகும்.

வந்தவர் : நபி பெருமானே! விருந்தினர் வந்துள்ளனர். நான் என்ன இறைச்சி உணவை, எப்படிப் படைப்பது?

நபி : இதற்குமுன் விருந்தினர் வந்திருப்பாரே!

வந் : வந்துள்ளார்கள். நால்வர் முன்னொருமுறை வந்தார்கள்.

நபி : அப்போது எப்படி விருந்து செய்தீர்?

வந் : இரண்டு கோழி அடித்து விருந்து செய்தேன்.

நபி : அப்படியா? ஏன் ஒரு வான் கோழியை அடித் திருக்கலாம்.

வந் : பின்னொருமுறை பத்துபேர் வந்தார்கள். அப்போது இரண்டு வான்கோழிகளை அடித்தேன்.

நபி : இரண்டை அடித்திருக்க வேண்டியதில்லை. ஓர் ஆட்டை அடித்திருக்கலாம்.

வந் : 20 பேர் ஒருமுறை வந்தபோது இரண்டு ஆடுகளை அடித்தேன்.

நபி : அப்போது ஒரு குதிரையை அடித்திருக்கலாம்.

வந் : குதிரைகளும் அடித்திருக்கின்றேன். ஐம்பது பேர் வந்தபோது இரண்டு குதிரைகளையும் பத்து கோழி களையும் அடித்தேன்.

நபி : அப்படிச் செய்திருக்க வேண்டியதில்லை. இரண்டு குதிரைகளையும் ஓர் ஆட்டையும் அடித்திருக்கலாம். இப்போது எத்துணை குதிரைகளை அடிக்கலாம் என்று நினைக்கிறீர்?

வந் : குதிரைகள் இல்லை. பத்து ஆடுகளை அடிக்க எண்ணினேன்.

நபி : வேண்டா; பத்து ஆடுகளுக்கு ஒப்பாக ஒரு ஒட்டகத்தை அடித்து விருந்து செய்க! சென்று வருக!

நபி பெருமான் இறைச்சி உணவை நீக்க முடியாத சூழலை உணர்ந்தவர். ஆயினும், அவரது உள்ளுணர்வு உயிர்க்கொலையில் ஊன்றவில்லை. ஆனாலும், சூழலுக்கேற்பவே நெறிப்படுத்த எண்ணிக்கொலைவிழும் உயிரின் எண்ணிக்கையைக் குறைக்கும் பாங்கைக் காண்கிறோம்.

## சாத்தனார் எளிமை.

சாதுவன் என்ற வணிகன் நாகர் இனத்தான் ஒருவனுக்கு அறவுரை புகலும் நிலை வந்தது. நாகர்களில் ஓர் இனம் நாகரீகமற்ற காட்டுப்போக்கு கொண்டது. மாந்தர் உடலையே தின்னுபவர்கள். அவர்கள்பால் சிக்கிக்கொண்ட சாதுவன் தனது திறனால் நாகரை நெறிப்படுத்தும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொண்டான்.

அம்மணமாக — எலும்பு மேட்டின்மேல் — அதேநிலையில் ஒருத்தியை அணைத்தவாறு — கையில் கள் கலயத்துடனும் பச்சை இறைச்சியுடனும் அமர்ந்திருக்கும் நாகர் தலைவன்:

> கள்ளையும் இறைச்சியையும் கைவிடச் சொல்கின்றாய். இவற்றை விட்டால் நாங்கள் வாழ முடியாது. ஆனாலும், நீ கூறும் அறிவுரையைக் கடைப்பிடிக்கவே விரும்புகின்றேன். எனவே, எமது பழக்க வழக்கத்திற்குப் பொருந்துமாறு சில நெறிகளைச் சொல்!

சாதுவன் : உன் மனமாற்றத்தை நல்லதாகவே கொள்கின்றேன். உனக்குத் தக்கவற்றைச் சொல்கின்றேன். இறைச்சி உணவைக் கொள்ளும் நீ; மாந்தர் உடல் இறைச்சியை நீக்கிவிடு! எவரேனும் கலம் உடைந்து உன்னிடம் சிக்கினால் அவரைக் கொல்லாமல் காப்பாற்று! விலங்குகளின் இறைச்சி உணவைக் கொள்க! அவ்விலங்குகளிலும் முதிர்ந்து கிழமாகிய விலங்குகளையே அடித்து உண்க![1]

நா. த. : நல்லது. இங்கே எம்மால் கடைப்பிடிக்கக் கூடியவற்றையே சொன்னாய்; நன்றி.

மணிமேகலைக் காப்பியத்தில் ஆசிரியர் சாத்தனார் இவ்வாறு நெறிப்படுத்தும் பாங்கை அமைத்துள்ளார். கொலை தீமையாயினும் அதனிலும் ஒரு நல்வாய்ப்பை ஏற்படுத்துவது சான்றோர்தம் இயல்பு. இதனைப் பெருஞ்சான்றோர் பால் காண்கின்றோம்.

## மாற்று வழி எளிமை.

எவ்வாறாயினும் நல்லறங்கள் செயற்பட விரும்பிய பெரியோர் எளியதாகக் கூறுதல், விட்டுக்கொடுத்துக் கூறுதல் என்னும் இனிய பாங்குகளைக் கையாண்டனர். அவற்றுள்ளும் நூற்றுக்கு நூறு எளிதிலும் எளிதாக நிறைவுற்றுத் திகழ்வது திருக்குறள் என்னலாம். விட்டுக் கொடுத்தல், கடுமையைக் குறைக்கும். மாற்று வழி சொல்லல் ஒருமுறை. இது சிக்கலை அவிழ்க்கும். ஒவ்வொரு கடுமைக்கும் ஒவ்வொரு மாற்று வழி வெவ்வேறிடங்களில் திருக்குறளில் வைக்கப்பட்டுள்ளது.

'இல்லைஎன்று ஒருவன் கேட்டால், தான் இல்லாதவன் என்று சொல்லாமல் கொடுக்க வேண்டும். எப்படி? இருந்தால் தானே கொடுப்பதற்கு' என்று கேட்கத் தோன்றும்.

'ஒப்புரவு செய்வது சிறந்தது. அதனால் கேடு வராது; வரும் என்றாலும் அக்கேட்டைத் தன்னை

1 முத்துவிளி மாஒழித்து எவ்வுயிர் மாட்டும்.
தீத்திறம் ஒழிக' —மணி: 16 : 117, 118

விலைக்கு விற்றாவது வாங்கிக் கொள்ளலாம். ஒப்புரவை அறியாதவன் பிணம்' -என்றுள்ளார். இவை கடுமைதாம்.

இக்கடுமைக்கு மாற்று :

"உளவரை தூக்காத ஒப்புர வாண்மை
வளவரை வல்லைக் கெடும்" (480)

என்பதில் உள்ளது. 'மலை போன்ற செல்வமும் அளவறியாது ஒப்புரவாற்றினால் விரைந்து அழிந்து விடும் எனவே, அளவறிக' என்பது மாற்று அன்றோ?

'இரவச்சம்' என்றொரு அதிகாரம்வைத்து அதற்குமுன்னரே 'இரவு' என்றொரு அதிகாரம் வைத்தது மாற்றைச் சொல்லி ஆற்றச் சொல்வதாகும்.

'ஆவிற்கு நீர் கொடு என்று கேட்பதே நாவிற்குந் தாழ்வு' என்பது கடுமைதான். ஆனால்,

'இல்லை என்று கரவாமல் கொடுப்பவரைப் பார்த்துக் 'கொடு' என்று இரக்கலாம்' என்று முன்னமே மாற்று அமைத்துள்ளார். அப்படியே அவன் இல்லையென்று சொன்னாலும் பழி நம்மேல் அன்று என்பதை,

"கரப்பின் அவர் பழி;
தம் பழி அன்று"

-என்றது ஒரு பெரும் ஆறுதலைத்தரும் மாற்று வழியாகும்.

ஓரிடத்தில் கடுமை காட்டி மற்றோரிடத்தில் மாற்று காட்டுவது மட்டுமன்று, ஒரு குறட்பாவிலேயே இரண்டையும் வைத்தார்.

ஒருவன் தகாத செயலைச் செய்துவிட்டான். அவனே அதனை நினைந்து பார்க்கின்றான். 'என்ன இப்படிச் செய்து விட்டோமே, என்று தனக்குத் தானே இரங்குகின்றான். திருவள்ளுவர் குரல் கொடுக்கின்றார்;

"எற்றென்று இரங்குவ செய்யற்க"
'செய்து விட்டேனே'

—என்றான்.

'செய்து விட்டாயா அதனால் என்ன? வருந்தாதே.

"மற்றன்ன செய்யாமை நன்று"

'அப்படியென்றால்?'

'செய்தது போகட்டும். மேலும் ஒருகால் அதுபோல் செய்யாமல் இருந்தலே நல்லதாகிவிடும்' —என்றார்.

"எற்றென் றிரங்குவ செய்யற்க; செய்வானேல்
மற்றன்ன செய்யாமை நன்று"[1]

—என்னும் ஒருகுறள்விதிப்பையும், அதற்கு மாற்றையும்கொண்டது.

ஒருவர் கேட்கிறார்:

'தனக்குத் துன்பம் செய்தவரைத் தண்டிக்க வேண்டு மென்றால் அவர்க்கு நன்மை செய்யவேண்டும் என்கிறீர்களே. இஃது எளிதா?'

'எளிதல்லாமல் இருக்கலாம்மகனே! எல்லாரிடமும் அவ்வாறு நடக்க வேண்டும் என்பது அன்று. துன்பம் செய்தவன் பண் பில்லாத கீழ் மகன் என்றால் நீ அவனுக்கு நன்மை செய்ய வேண்டாம். அப்படி நன்மை செய்வது நன்மையே அன்று; தவறும் ஆகும்'.

"நன்றாற்ற லுள்ளும் தவறுண் டவரவர்
பண்பறிந் தாற்றாக் கடை"

என்று ஒரு மாற்று கூறியுள்ளேனே' என்பது போன்றன்றோ இக்குறள் குரல் கொடுக்கின்றது.

அறிவுரையால் நல்லவை செயற்பட வேண்டும் என்னும் அடித்தளமான கருத்துடனேயே திருக்குறளைத் திருவள்ளுவர் யாத்ததாக எங்கும் காண்கின்றோம். அதற்கெனவே எளிதாகக் கூறும் பாங்குடன் விட்டுக் கொடுத்து விதிகாட்டும் உத்தி அவர்தம் கவனத்தில் இருந்திருக்கின்றது.

---

1 குறள் : 655.

அத்துடன் மாற்று கூறும் முறையையும் கவனத்திற் கொண்டுள்ளார்.

'திருவள்ளுவப் பெருந்தகையே ஆயிரம் வேண்டா! அத்துணையும் கேட்க நேரமேது? செய்ய வலிமையேது? ஒன்றேஒன்று கூறுக!' —என்று கேட்டார்போலும்ஒருவர்.

"ஒன்றாக நல்லது கொல்லாமை"

—என்றார். கேட்டவர் இசைந்திருப்பார். 'கொலை கொடியது தான். அஃதொன்றைச் செய்தால் போதுமன்றோ' என்று கேட்டவர் கருதுவதாகத் தோன்றிற்று.

'அத்துடன் மற்றொன்றை ஒன்று சேர்த்துக் கொள்ளேன். மற்றொன்றும் அதனைச் சார்ந்ததுதான். வேறு அன்று.'

" பொய்யாமை நன்று" என்றார்.

கேட்டவர் சிறிதளவில் முகஞ் சுளிக்கக் கண்டு, 'ஏன்? மற்றொன்று கடுமையாகப் படுகின்றதோ' என்றார்.

'பின் என்ன? பொய் சொல்லாமை என்பது வாழ் வியலில் சற்றுகடுமைதான். எல்லாவற்றிலும் உண்மையே சொன்னால் என்ன ஆவது?

'ஏனப்பா? சொன்னாலென்ன? உண்மை ஒன்றும் கடுமை அன்றே! தீமை இல்லாத சொல்வதுதானே உண்மை?

'ஆம், ஆனாலும் உலகியலில் எல்லாவற்றிற்கும் ஒத்து வராது.'

'ஒத்துவராத இடத்தில் பொய் சொல்லேன்.' பொய் சொல்லலாமோ?'

'சொல்லலாம். உலகியலில் நல்ல நன்மைஉண்டாகும் என்றால் பொய் சொல்வதே உண்மை பேசுவதுதான்'.

"பொய்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கும் எனின்"

—என்றார்.

இவ்வகையாலெல்லாம் திருவள்ளுவர் எளிய வழி சொன்னவர். அதனையும் விட்டுக் கொடுத்துச் சொன்னவர். அதனையும் மாற்று வழி காட்டிச் சொன்னவர். இவை போன்றவற்றால் திருக்குறள் தரும் அறிவுரைகள் எளிதிலும் எளிது.

# 4. ஏழுநிலை மாடம்

கிழமைகள் ஏழு, கோள்களால், இசைகள் ஏழு, ஒலி நுணுக்கத் தால். பிறவிகள் ஏழு, உயிரின வளர்ச்சியால். மாடத்தில் ஏழு எதனால்?

ஆறால்; காலக் கூறால்.

மூலப் பின்னணி:

## மன நிறைவு முத்திரை.

பூம்புகாரில் சிலப்பதிகாரக் கலைக்கூடம் பூத்துக்கொண்டிருந்தது. கலைக்கூட முகவாயிற் கோபுரத்தை அமைப்பதுபற்றிய கருத்துரைகள் விரிந்தன; வரைபடங்கள் வந்தன.

> 'கண்ணகி கோவலன் கலவி, எழுநிலை மாடத்தில் கனிந்தது, கோவலன் மாதவி குலாவல், எழுநிலை மாடத்தில் குனித்தது. எனவே, முகப்பு எழுநிலை மாடமாக முகிழ்ப்பதே முழுப்பொருத்தம்'

—என்னும்

எனது கருத்து படைக்கப்பட்டது. அந்நாள் முதல்வர் டாக்டர் கலைஞர் 'எழுதித் தருக' என்றார். எழுதித் தந்தேன்; ஏற்றார். எழுநிலை மாடம் எழுந்தது.

ஏற்றமாகத் தோற்றமளித்துக்கொண்டிருக்கும் எழுநிலை மாடம் எழக் கரணியமான கட்டுரை இது. இஃது எனக்கொரு மன நிறைவு முத்திரை; மதர்ப்புச் சித்திரை - எழுநிலைமாடம் சித்திரை நிலவில் திறக்கப்பட்டதன்றோ...!

முத்திரையைப்பதித்த இதழ்:
**''தமிழரசு''**
தி. ஆ. 2003—தை—2; தை—16: மாசி—16
(15—1; 1—2; 1—3—1972)

எழு
நிலை
மாடம்

# குகை முதல் வீடு வரை.

மலைக்குகை மாந்தனது முதல் வீடு. மரக்கிளை அவனது மறு வீடு. கிளைகளில் கழிகளைப் போட்டுப் பரண் கட்டி இடம் அமைத்துக் கொண்டது அவனது முதல் கட்டு + இடம்= **கட்டிடம்**. மேலே மரத்தில் தழைத்து வளர்ந்த தழைகளே அக் கட்டிடத்தின் மேற்கூரை. 'கூர்' என்பதற்கு மிகுதி என்பது பொருள். தழைகளை மிகுதியாக உடையது **'கூரை'** எனப்பட்டது உச்சி கூர்மையாகத் தோற்றமளித்ததாலும் 'கூரை' என்பது. பொருத்தமாயிற்று.

மரத்திலிருந்து நிலத்தில் இறங்கியது அவனது மறு கட்டிடம். மரத்தின் உச்சி தொடங்கித் தழைத்து வளர்ந்த தழை தாழ்ந்து பரவி, மழைக்கும் வெய்யிலுக்கும் காப்பாக அமைந்ததைக் கண்டே தமிழன் கூரை கட்டக் கற்றுக்கொண்டான்.

நிலத்தில் தழைகளால் கூரை கட்டிப் பக்கங்களில் கழிகளை நட்டுச் சுவராக அமைத்து முதல் இல்லம் கண்டான் தமிழன். இத் தழைக் கூரையை, இலக்கியம் **'உவலைக் கூரை'** என்று குறிக்கும். உவலை என்றால் தழைக்கொத்து. தமிழர் நாகரீகம் அடைந்த காலத்திலும் இந்த உவலைக் கூரை அமைக்கும் பழக்கம்

இருந்தது. போருக்குப் படையெடுத்துச் சென்று காட்டுப்பகுதியில் பாடிவீடு அமைத்துக் கூடாரம் கட்டுவர். அதன் கூரையாகக் காட்டுமரத்துத் தழைகளை வேய்ந்தனர். அதற்குள் வீரர் இரவில் ஒடுங்கி உறங்கினர். இதனை,

> "... ... ... ... ... ... கடுங்கண் மறவர்
> உவலைசெய் கூரை ஒடுங்க"

—என்று புறப்பொருள் வெண்பா மாலை (வெண்பா 169) என்னும் இலக்கண நூல் பேசுகிறது.

இதுபோன்று உவலைக் கூரை அமைந்த பாடிவீடுகள் வரிசையாகப் பல அமைந்து தெருவாக விளங்கிற்று. பாடிவீடுகள் எதிர் எதிரில் வரிசையாக ஒழுங்கோடு இருந்தன என்பதை,

> "உவலைசெய் கூரை ஒழுகிய (ஒழுங்குபட்ட)தெரு"

—என்று முல்லைப்பாட்டு(29) பாடுகிறது.

'இலையும் தழையும் வேயப்பட்ட கூரை இல்லங்கள் "குரம்பை"[1] எனப் பெயர் பெற்றன. இலைகளால் வேயப்பட்ட குரம்பை "**இலைவேய் குரம்பை**"[2] எனப்பட்டது. பின்னர் புல்வேய் குரம்பையாக வளர்ந்தது. இலையைப் போன்று கூரையாகத் தருப்பைப் புல்லால் வேயப்பட்ட குரம்பை "**புல்வேய் குரம்பை**"[3] எனப்பட்டது. பெரும்பாணாற்றுப் படை என்னும் நூல் ஒரு 'புல்வேய் குரம்பை'யைப் பின்வருமாறு காட்டுகின்றது:

> 'வெண்மையான வஞ்சிமரக் கொம்புகளையும் காஞ்சி மரக்கொம்புகளையும் கழிகளாகப் பரப்பி, நாணல் தட்டைகளை வரிச்சுக் கம்புகளாக வரிசையில் வைத்துத் தாழை

---

1. "வேழம் காவல் குரம்பை"—பெரும்பாண்: 51.
2. "இலைவேய் குரம்பை உழையதட் பள்ளி"—மது. கா: 310.
   இலைவே குரம்பைத் நவா முனிவர் இருந்தார் —பெரி. திரு: 271
3. "அகலுள் ஆங்கண் கழிமிடைந்து இயற்றிய
   புல்வேய் குரம்பைக் குடிதொறும் பெறுகுவிர்,,—மலை; 438.

நாரால் கட்டித் தருப்பைப் புல் வேயப்பட்ட தாழ்ந்த வாரியைக் கொண்ட குரம்பை,[1]

இப் 'புல்வேய் குரம்பை'யை அடுத்துத் தினைத்தட்டை வேயப்பட்டதும் குட்டையான கால்களை உடையதுமான 'தினைத் தாள் குரம்பை' உருவாயிற்று. இக்காலத்தும் தினைத் தட்டை வேயப்பட்ட இல்லங்களைத் தமிழகத்துத் தென்மாவட்டங்களில் காணலாம்.

பின் **ஓலைக் குரம்பை** பிறந்தது. ஈச்ச ஓலை வேயப்பட்டது. ஈச்சமரத்து ஓலை முள்ளோடு கூர்மையாகத் தோன்றிய கூரை, **'முள்ளம்பன்றியினது முதுகு**, போன்று இருந்த'[2] தாகப் பெரும் பாணாற்றுப்படை ஆசிரியர் உருத்திரங்கண்ணனார் உவமை கூறியுள்ளார். ஓலை வகையைச் சேர்ந்தவற்றில் அகலமான மடலை உடைய பனைமட்டை வேயப்பட்டது, பனைமட்டை நீர் கசியாமல் ஓடி வழிய ஏதுவாய் அமைந்தது. பனையோலை வேயும் பழக்கம் இன்றும் பரவலாகவும், பெருவாரியாகவும் இருப்பதைக் காண் கின்றோம்.

அடுத்து, வளமான தென்னையினது பழுத்து **வாடிய மடலாம்** ஓலையைக் கீற்றாகப் பின்னி வேயும் பழக்கத்தைக் கொண் டனர். இதனை,

> "வண்தோட்டுத் தெங்கின் **வாடுமடல்** வேய்ந்த
> ... ... ... ... ... ... ... உழவர்
> தனிமனைகள்"[3]

— என்று குறிக்கின்றது.

---

1 "வேழம் நிரைத்து வெண்கோடு விரைஇத்
தாழை முடித்துத் தருப்பை வேய்ந்த
குறியிறைக் குரம்பை" —பெரும்பாண் : 263 – 265.

"இருவி (தினைத்தட்டை) வேய்ந்த குறுங்கால் குரம்பை"
— குறி. பா : 15.

'புற்குரம்பைச் சிற்றில் பல நிறைந்துளதோர் புலைப்பாடி"
—பெரி. பு: திருநாளை : 6,

2 "ஈத்திலை வேய்ந்த எய்ப்(முள்ளம்பன்றி)புறக் குரம்பை
மான்தோல் பள்ளி மகவொடு முடங்கி" —பெரும்பாண்: 88, 89

3 பெரும்பாண் ; 353, 355,

இவ்வாறு குறிஞ்சி மலையில் தொடங்கிய குகைக்கூரை, முல்லைக் காட்டில் இலை, புல், தட்டை வேயப்பட்ட கூரைகளாய் வளர்ந்து, மருத வயலில் தென்னங் கீற்று வேயப்பட்ட கூரை யாயிற்று,

பசிய தழைகளால் ஆகிய குரம்பை 'குடில்' என்றும் உலர்ந்த ஓலைகளால் ஆகிய குரம்பை 'குடிசை' என்றும் காலப் போக்கில் வழங்கப் பெற்றன.

இக்கூரை வீடுகள் சிற்றில்லங்கள். சற்றுமேட்டு நிலத்தில் அமைந்தவை. அதிலும் திண்ணை அமைப்பிருந்தது. இவற்றை யெல்லாம் அறிவிப்பது போல் சூடாமணி நிகண்டு,

*"திட்டையே திண்ணை சிற்றில் கூரையாம்"*
*(இடப்பெயர் : 55)*

என்கின்றது.

இதற்குமேல், மாந்தர் பொருந்தி வாழ (மன் = பொருந்து தல்) மன் + ஐ = மனை எழுந்தது. இஃது இடம் பெயர்தல் இன்றி நிலைத்த இடம் ஆனமையாலும் (மன் = நிலைத்தல்) மனை ஆயிற்று.

இம்மனை சுடுமண்ணாம் செங்கற்களால் நிலைப்பாய் உயர மாகக் கட்டப்பட்டுச் "சுடுமண் ஓங்கிய நெடுநிலை மனை"களாக (மணிமேகலை: மலர்வனம் புக்க காதை: 127.) வளர்ந்தன.

இவை யாவும், 'வாழும் இடம்' என்னும் பொருளில் இல்லங் கள் ஆயின. மருட்டும் விலங்குகள், மழை, வெய்யில், புறத்தே செய்யும் தொழில் முதலியவற்றினின்றும் விடுவிக்கும் உறையுள் என்னும் பொருளில் வீடுகள் (விடு— விடல்—வீடு) எனப்பட்டன.

## மாளிகை-வளமனை தோன்றியது.

சுற்றிலும் அடைக்கப்பட்டு வாயிலைக் கொண்டதாய் எழுந்து வளர்ந்த இல்லம் — வீடு — மனை பலவகைப் பகுதிகளை உடையதாக வளர்ந்தது. முன் மண்டபம், தெற்றி (திண்ணை), கூடம், தாய்க்கட்டு, அடுக்களை என வகை பெற அமைக்கப்பட்டு வானத்தை அளாவியதாக எழுந்தது. உள்ளே

காற்றுக்கு வழி வகுக்கப்பட்டது. மெல்லிய காற்றை வாங்கி நல்லோசையோடு தரும் சிறு சிறு புழைகள் (துளைகள்) அமைந்தன. இதனை மாங்குடி மருதனார்,

> "வகைபெற எழுந்து வானம் மூழ்கிச்
> சில்காற்று இசைக்கும் பல்புழை நல்லில்"

—என மதுரைக் காஞ்சியில் (357, 358) விளக்கியுள்ளார். 'வானம் மூழ்கும்' என்பதற்கு ஏற்ப அவரே,

> 'பருந்துகள் தங்கி மகிழும் பலவகைப்பட்ட மாட்சியுடைய நல்ல இல்லம்'[1] —என்று விவரித்துள்ளார்.

இத்தகைய 'நல்லில்' பலவகை மாட்சிகளும் பெறத் துவங்கியது.

இத்தகைய நல்லில்லும் மனைகளும் சுண்ணம் பூசப்பட்டும் வண்ணம் தீட்டப்பட்டும் காட்சிக்கு இனியவையாகச் சுற்றுச் சுவர் பெற்று வளமனை ஆயின; அகழியும் அரணும் பெற்று அரண் மனை ஆயின.

> 'வெள்ளி போன்று விளங்கும் வெண்மையான சுண்ணாம்பு வாரிப் பூசப்பட்ட சுவர்கள் உருவாயின. நீலமணி போன்று திரண்ட உறுதியான தூண்கள் நிறுத்தப்பட்டன. செம்பாலே செய்யப்பட்டது போன்று நெடிய சுற்றுச் சுவர்கள் எழுந்தன. நல்ல அழகான பூங்கொடிகள் ஓவியமாகத் தீட்டப்பட்டன. மூல அறையாகக் கருவறை (இதில் இல்லுறை தெய்வங்கள் இடம் பெறும் போலும்) ஒன்று அமைக்கப்பட்டது.'[2]

—இவ்வாறாக உருவான காட்சிக்கினிய நல்ல இல்லத்தை (காண்பின் நல்லில்) நக்கீரர் நெடுநல்வாடையில் விளக்கி

---

1 "குறும்பல் குழுவின் குன்றுகண் டன்ன
பருந்து இருந்து உகக்கும் பன்மாண் நல்லில்"—மது. கா: 501, 502

2 "வெள்ளி யன்ன விளங்கும் சுதையுரீஇ
மணிகண் டன்ன மாத்திரள் திண்காழ்ச்
செம்பியன் றன்ன செய்வுறு நெடுஞ்சுவர்
உருவப் பல்பூ ஒருகொடி வளைஇ
கருவொடு பெயரிய காண்பின் நல்லில்"
—நெடு. வா: 110—114.

யுள்ளார். இம்மனைகளில் ஓப்பனைகள் செல்வ நிலைக்கேற்பப் பெருகின.

இத்தகைய மாளிகைகள் வளமனைகள். இப்பெரு மனைகளின் உள்ளே எத்துணை பகுதிகள்! 'அட்டில், கொட்டகாரம், பண்டசாலை, கூடகாரம், பள்ளியம்பலம், உரிமையிடம், கூத்தப் பள்ளி என அடுத்தடுத்து அமைப்புகள் இருந்தன. இதனை இறையனார் அகப்பொருள் உரை (நூற்பா 21) காட்டுகிறது. இவற்றுள் அட்டில் = சமையற்களரி ;கொட்டகாரம்—பண்டசாலை—சரக்கறை. கூடகாரம்—மேல்வீடு; பள்ளியம்பலம் — படுக்கையறை; கூத்தப்பள்ளி — கலையறை.

ஒரு திண்ணையைச் சிலப்பதிகாரம் பின்வரும் கருத்தில் வண்ணிக்கின்றது.

'மரகத மணியும் வயிரக் கல்லும் அழுத்திப் பதித்த ஆயப்பலகை; அதன்மேல் பவளத்தால் திரண்டெழுந்த தூண். பசும்பொன் பட்டை பெற்ற திண்ணை மேடை[1]

—இவ்வகைச் செல்வச் செழிப்புடன் எழுந்த மனை – வளமான மனை, 'மாளிகை' எனப் பெயர் பெற்றது. இத்தகைய மாளிகையின் வாயிலில்,

'பொன்பூண் கட்டிய யானைத் தந்தங்கள் இணைக்கப் பட்டு, ஒளிவிடும் பருத்த முத்து மாலைகள் தொங்க விடப்பட்டு, மங்கலம் பொறித்த மகர தோரணம் மாலைகளாக வளைவில் கட்டப்பட்டனவாம்'[2]

இவ்வகை மாளிகை 'நெடுநிலை மாளிகை' எனப்பட்டது.

இம்மாளிகைகளின் முகப்புகள் கண்கவர் சிற்பங்களைக் கொண்டு விளங்கின. அச்சிற்பங்கள்,

---

1. *"மரகத மணியொடு வயிரங் குயிற்றிப்*
*பவளத் திரள்கால் பைம்பொன் வேதிகை*
*நெடுநிலை மாளிகை;*
2. *கடைமுகத்தி யாங்கணும்*
*கிம்புரிப் பகுவாய்க் கிளர்முத் தொழுக்கத்து*
*மங்கலம் பொறித்த மகர வாசிகை"*

*சிலம்பு : இந்திர : 147—151.*

'சிற்ப வல்லுநரால் வெண்சுதையால் செய்யப் பட்டவை. உலகத்து உயிர்களுக்கெல்லாம் உவமை காட்டுவன போல் ஊர்வன முதலாகத் தேவர் வரை பல்வகைப் பிறப்பின் வடிவங்கள் பொம்மைகளாகச் செய்யப்பட்டு அமைக்கப்பட்டவை.'[1]

—இவ்வாறு சாத்தனார் காட்டுகிறார். இன்றும் செட்டிநாட்டில் நகரத்தார் மனைகளின் முகப்பில் இது போன்ற சுதைப் பொம்மைகள் அமைக்கப்பட்டிருப் பதைக் காணலாம்.

மாளிகையின் வாயிற் கதவுகள் பல்வகைத் கலைத் தொழி லோடு மிக உயரமாக, நெய் பூசப்பட்டு, '**நெடுநிலைக் கதவு**'களாக விளங்கின. மாளிகையின் வெளிப்புறம் இத்துணைச் செல்வச் செழிப்பைக் காட்டுவதாக வனப்போடு அமைக்கபட்டதெனின் உள்ளமைப்புகளின் சிறப்பை உணரலாம்.

மாளிகையின் மேற்கூரையாக வளைந்த மண் ஓடுகள் – சுடப் பட்டவை வேயப்பட்டன. உள்ளே காற்று வருவதற்கு இரண்டு மண் ஓடுகளை மாற்றிப் பொருத்தி மானினது கண் போன்று அமைத்தனர். அம் மான்கண், காற்று வரும் வழியாகையால் "**மான்கண் காதலர்**" (கால் = காற்று; அதர் = வழி.) எனப்பட்டது

"மான்கண் காலதர் **மாளிகை** இடங்கள்"

(சிலப்பதிகாரம்: 5 : 8.) காவிரிப்பூம்பட்டினத்தில் பெருகியிருந் தனவாம்.

காலப்போக்கில் ஓடு வேய்ந்த மனை 'மச்சு' என்றும், குடிசை 'குச்சு' என்றும் வழங்கப்பட்டன.

பரவலாக இடங்கொள்ளும் பாங்கில் மனைகளையும் மாளிகைகளையும் கண்ட தமிழனது உள்ளம் உயரப் போக்கிலும் உயரத் தொடங்கியது. சுடுமண்ணாம் செங்கல் கொண்டு உயரமான தூண்களை அமைத்து அந் 'நெடுநிலைக் கந்தில்' (கந்து — தூண்) தெய்வ உருவங்களைப் படைத்தான். அது

---

1 "மையறு படிவத்து வானவர் முதலா
எவ்வகை உயிர்களும் உவமம் காட்டி
வெண்சுதை விளக்கத்து வித்தகர் இயற்றிய
கண்கவர் ஓவியம்" — மணி : மலர்வனம் : 127 — 130.

'கடவுள் எழுதிய நெடுநிலைக் கந்து' எனப்பட்டது. இவ்வாறு உயரமாக எழுந்தவை பலவும் 'நெடுநிலை' என்று இலக்கியங்களில் குறிக்கப்படுகின்றன. 'நெடுமை' என்பது உயர் வளர்ச்சியைக் குறிப்பது. 'நெடு நெடு என்று வளர்ந்தது' என்று வழக்கில் பேசுவதையும் அறிவோம். சில இடங்களில் நீட்சியையும் குறிக்கும். இந்த நெடுமை முயற்சியை அடுத்து,

"சுடுமண் நெடுமதில் சுற்று"

(புறப்பொருள் வெண்பா மாலை: 113.) உருவாகியது. இது சுற்றுச்சுவர் என்றும் மதிற்சுவர் என்றும், அரண் என்றும் நிலைக்கேற்பப் பெயர் பெற்றன. 'சுடுமண் ஓங்கிய நெடுநகர் வரைப்பு" எனப் பெரும்பாணாற்றுப்படை (405) அரண் சூழ்ந்த நகரைக் குறிக்கின்றது.

அரிய சான்றோர்க்கும், அரசர்க்கும் கணவருடன் மாய்ந்த கற்புடைப் பெண்டிற்கும், இறந்தோரில் சிறந்தோர்க்கும், சிறு தெய்வங்களுக்கும் கல்லறைகளும் கோட்டங்களும்,

"குறியவும் நெடியவும் குன்றுகண் டன்ன
சுடுமண் ஓங்கிய நெடுநிலைக் கோட்ட"[1]

-மாக எழுந்தன. அந்நெடுநிலையாகவே மண்ணால் பூத உருவங்களை அமைத்தனர். இக்காலத்தும் ஐயனார், பிடாரி கோட்டங்களில் மண்ணால் அமைக்கப்படும் நெடுநிலை வடிவங்களைக் காண்கின்றோம்.

## மாடம் எழுந்தது.

இவ்வாறு வான் நோக்கி உயர்த்திக் கட்டுவதில் தமிழனது எண்ணம் வளர்ந்தது. இவ் எண்ணத்தால் 'மாடம்' என்னும் கட்டட (கட்டு + அடம்) அமைப்பு பிறந்தது. தழையையும் புல்லையும் ஓலையையும் வேய்ந்து கட்டிய மனைகள் நிற்க ஒன்றும் வேயாது கட்டிய 'வேயா மாடம்' தோன்றியது. வேயா மாடத்தை,

"தட்டு ஓடு இட்டுச் சாந்து வாரப்பட்டது" என்று உரையாசிரியர் அடியார்க்கு நல்லார் விளக்கியுள்ளார். 'கற்றை முதலியவற்றால் வேயாது சாந்திட்ட மாடம்' என்பது நச்சினார்க்கினியர் விளக்கம். புகார் நகரம்,

1 மணி ; சக்கரவாளம் ; 58, 59

"வேயா மாடமும் வியன்கல இருக்கையும்
மான்கண் காலதர் மாளிகை இடங்களும்"[1]
-கொண்டு திகழ்ந்ததாம்.

இந்த வேயா மாடம் மிக உயரமாய் அமைந்தது. ஏறுவதற்கு ஏணி சார்த்தி ஏற முடியாத அளவு விண்வரை உயரமாய் அமைந்தது.

இவ்வேயா மாடம் களிமண்ணால் ஆகிய பெருங்கற்களால் ஓட்டப்பட்டவை. இதனை "... ... தகு மண்ணீடு மருவிய வேயா மாடம்" என்னும் சூடாமணி நிகண்டு (இடப்பெயர் : 52) கொண்டும் அறியலாம்.

மாளிகை வேறு; மாடம் வேறு. மாளிகை வேயப்பட்டும் வேயப்படாமலும் அமையும் வளமான நல்லில்லம். மாடம் வேயப்படாத ஓட்டுக் கட்டிடம். நம் வீட்டு முன் வாயில் நிலையில் இரு பக்கங்களிலும் விளக்கு வைப்பதற்காக இரு புரைகள் இருக்கும். அவற்றிற்கு 'மாடப்புரை' என்று பெயர். அவற்றை மாடங்கள் என்றே வழங்குகின்றோம். மேல் வளைவாக ஒன்று கூடும் கட்டிட அமைப்பே 'மாடம்' எனப்பட்டது.

அக்காலத்தில் ஓர் ஊரின் சிறப்பு மாடத்தாலும் குறிக்கப் பட்டது.

"மாடம் ஓங்கிய மல்லல் மூதூர்"[2]

என்றார் நக்கீரர். மாடத்திற்குச்சிறந்த ஊர் மதுரை. இலக்கியங்கள் மதுரையை மாட அடைமொழியுடன் குறிக்கின்றன.

"மாட மதுரையும் பீடார் உறந்தையும்"-சிலம்பு ; வேனிற் காதை ; 4
"மாட மதுரையும் தருகுவன்" -புறம். 32 ; 5
"மாடமலி மறுகிற் கூடல்" -திருமுருகு : 71.
"மாடமலி மறுகிற் கூடல் ஆங்கண்" -அகம் : 346 : 20
"நான் மாடக் கூடல் மகளிரும் மைந்தரும்" -கலி : 92 : 65
"நான்மாடக் கூடல் நகர்" -பரி : தி : 6 : 4
"மாடம் பிறங்கிய மலிபுகழ்க் கூடல்"- மது. கா : 429.

'நான்மாடக் கூடல்' என்பது மதுரைக்கு ஒரு சிறப்புப் பெயர்.

---

1 சிலம்பு : இந்திர : 7, 8.
2 நெடு. வா : 29

"பிறங்குநிலை மாடத்து உறந்தை" —எனப் பட்டினப் பாலையும் (285)

"பிறங்குநிலை மாடத்து உறந்தை யோனே" —எனப் புறநானூறும் (69) உறையூரை மாடப் பெருமையுடன் சிறப்பிக்கின்றன.

மாடங்கள் பலவகைப்படும்:

'வீரர் உறங்கும் மாடம், திரைப்பொருள் கிடக்கும் மாடம், மகளிர் தம் அழகிய அணிகலன்களை வைக்கும் மாடம் முதலியன எங்கும் நிறைந்திருந்தன. இவை இல்லாத இடம் இல்லை' —என்று சீவக சிந்தாமணி (53) செப்புகின்றது. ஒவ்வொரு மாடமும் முகில் தோய்ந்த குன்று போன்று பல பெருகியிருந்தன என்பதை "மாட ஈட்டகம்" என்று இந்நூல் குறிக்கின்றது.

இம்மாட அமைப்பில் படகுகளும், மிதவைத் தெப்பங்களும் கட்டப்பட்டன. அவை "நீரணி மாடம்" என்றும், "மாடப் புணை"[1] என்றும் பெயர் பெற்றன.

## மாண்புடைய மாடம்.

மாடம் மாண்புள்ள வளமனையாகத் திகழ்ந்தது. 'மாடம்' என்னும் சொல்லே 'மாண்புடையது' என்னும் பொருளைக் கொண்டது. 'மாண்' என்பது அதன் மூலச்சொல். அது மாடு— மாடம் — மாடி என வளர்ந்தது.

'சேண்' என்றால் 'நெடுந்தொலைவு' என்னும் தன்மையைக் குறிக்கும். அது 'சேடு' என்றாகி, நெடுந்தொலைவை உடையது, என்னும் எல்லைப் பொருளைக் குறிக்கும். 'சேடு', 'சேடி' ஆகித் 'தொலைவில் உள்ள இடம் — நாடு' (சேடி=விஞ்சையர் நாடு மணிமேகலை : 17 : 21) எனப் பொருள்படும்.

'கோண்' = வளைவு; கோடு = வளைவை உடையது. கோடி —வளைந்த பொருள்.

---

1. "நீரணி மாட வாவி நேர்ம்புணை நிறைத்து" சீவ. சி : 2654.

இவை போன்றே,
மாண் — மேம்பட்ட பெருமை;
மாடு — மேம்பட்ட பெருமையை உடையது;
மாடி — மேல்நிலை இடம். –என்று பொருள் வளர்ந்தது.

'**மாடு**' என்னும் சொல் பல பொருள்களைத் தருவது. இங்கு இடம், பக்கம், செல்வம், பொன் என்னும் பொருள்கள் நான்கும் இயைந்து நிற்கும் சொல்லாகி மேம்பட்ட நிலையைக் குறிக்கின்றது.

கூடு — கூடம்; பாடு — பாடம் என்றாவது போல, மாடு — **மாடம்** என்றாயிற்று. மாடம் என்பது 'மாடு' என்னும் சொல்லில் இயைந்த நான்கு பொருள்களுக்கு ஏற்ப வாழ்வியலுக்கு வளமான **இடமாய்**, மாளிகையின் **பக்கமாய்**, **செல்வ**ச்செழிப்பின் சின்னமாய், **பொன்** பேழையாய்த் திகழ்ந்தது.

இம்மாடம் முன்னே கண்டதுபோன்று ஒருநிலையாகவும் (ஒரு மாடி) மேன்மேல் அடுக்கடுக்காகப் பல நிலைகளாகவும் கட்டப்பட்டது, அக்கால மாடம் மலைபோன்று காட்சி அளித்ததாம். முகில் கூட்டம் படியும் அளவில் உயரமாய் விளங்கிற்றாம்.

"மலையென மழையென மாடம் ஓங்கி"
— மலை : 484.

"மலையென மருளும் மகிழ்செய் மாடம்"
— பொருந் : 84.

"மழையாடும் மலையின் நிவந்த மாடமொடு"
— மது. கா : 355.

"வான்தோய் மாடத்து வரிப்பந்து அசைஇ"
— பெரும்பாண் : 333

"புயலடையும் மாடங்கள்" — பெரியபுராணம் —
திருநாளை : 5

இவைபோன்றுபல இலக்கியங்களும் மாடத்தின் உயரப் பெருமையைக் குறிக்கின்றன. மாடத்தில் உயரே ஏறுவதற்கு ஏணிப்படி உயர்த்தி நிறுத்தப்பட்டிருந்தது. அதற்கு நகைச்சுவைபட உவமை கூறினார் உருத்திரங்கண்ணனார் :

'வானம் வீழ்ந்துவிடாமல் ஊன்றி முட்டுக்கொடுத்தது போன்று ஏணி சார்த்தப்பட்டிருந்தது. ஏற அருமையாய், விண்ணைக் குத்துவது போன்று உயர்ந்து வளர்ந்த மாடத்தில் இரவில் ஏற்றப்பட்டுக் கொழுந்துவிட்டு எரியும் விளக்கு, கடலில் வரும் கலங்களை அழைக்கும் **கலங்கரை விளக்கமாக** இருந்தது.'[1]

இத்தகைய மிக உயர்ந்த மாட நிழலில் சிற்றுண்டிகள் விற்கப்படுவதை,

> *"மாடநிழலில் பண்ணியம் விற்பார்"*
> *–என துரைக் காஞ்சி காட்டுகிறது.* (405, 406)

இத்தகைய மாடங்கள் வீதியின் இரு மருங்கிலும் அமைந்திருந்தன. வீதி ஆறு போன்றும், பக்கங்களில் அமைந்த மாடங்கள் ஆற்றின் இருகரைகள் போன்றும் தோற்றமளித்தன.

இம்மாடங்களை மாளிகையுடன் கட்டி அமைப்பர். மாடத்துடன் கட்டப்பட்ட மாளிகை '**மாடமாளிகை**' எனப்பட்டது. மாளிகையின் முன்னரும், மருங்கிலும், உட்புறத்தும் மாடம் கட்டப்பட்டது. மாளிகையின் வாயில் **கோபுரம்** போன்றும் அமைக்கப்படும், அம் முகப்பை மாடமாகவும் அமைத்தனர்.

இதனை,

"கோபுரமின்றி வாசலை மாடமாகவும் அமைத்தலின் மாடம் என்றார்"[2] — என மதுரைக்காஞ்சியின் உரையில் நச்சினார்க்கினியர் விளக்கிக் கூறினார்.

கன்னிப் பெண்கள் உறையும் மாடம் "**கன்னி மாடம்**"[3] எனப்பட்டது. இதனைத் திருத்தக்க தேவர் "**தன்னக மாடம்**"

---

1 *"வானம் ஊன்றிய மதலை போல*
*ஏணி சாத்திய ஏற்றரும் சென்னி*
*வான்பொர நிவந்த வேயா மாடத்து*
*இரவின் மாட்டிய இலங்குசுடர் ஞெகிழி*
*உரவுநீர் அழுவத்து ஓருகலங் கரையும்"*
— பெரும்பாண் : 346 - 350.

2 *மது. கா ; 355 உரை.*

3 *"காவலன் நெஞ்ச மென்னும் கன்னிமாடம் புகுந்து"*
— *சீவக. சி : 714*

("தானக மாடம்") எனக் குறித்தார். இம்மாடமும் நீர் நிலைகளின் நடுவிலும், நீர் நிலைக்குள் நீட்டியும் கட்டப்பட்டிருந்தது என அறிகின்றோம். இதனை அத்திருத்தக்க தேவரே,

'மகளிர் நீர்நிலையில் கட்டப்பட்ட மாடத்தின் மேல் அடுக்கில் ஏறி அங்கிருந்து நீரில் பாய்வர். நீர் ததும்பித் தெறிக்குமாறு பாய்ந்து நீராடுவர். இக்காட்சி தோகை மயிற் கூட்டம் வானத்திலிருந்து இறங்குவது போன்று இருந்தது"[1]
— என வண்ணித்தார்.

இக்காலத்தும் நீர் நிலைக்குள்ளும், நீர் நிலைக் கரைகளிலும் பல நிலை மாடங்கள் அமைந்திருப்பதைக் காணலாம். இதுபோது திருவையாற்றில் அரசர் தமிழ்க் கல்லூரியாகத் திகழும் கட்டடம் மூன்று அடுக்கு மாடக்கட்டடம். இம்மாடம் காவிரி யாற்றின் கரையில் — காவிரியாற்றுக்குள் நீட்டிக் கட்டப்பட்டுள்ளது. இம்மாடம் அரச கன்னியர்க்காகச் சரபோசி மன்னனால் கட்டப்பட்டது. அக்காலத்தில் கன்னியர் இம்மாடத்திலிருந்து பாய்ந்து நீராடியிருப்பர். இக்காலத்தில் கல்லூரிக் காளையர் பாய்ந்து நீராடுகின்றனர்.

## எழு நிலை மாடம்.

நெடுமையாய் உயர்ந்த நிலையில் கட்டப்படும் மாடம் 'நெடு நிலை மாடம்' என்று குறிக்கப்பட்டது, முன்னர் 'நெடு நிலைக்கந்து', 'நெடுநிலைக் கோட்டம்' எனப்பட்ட கட்டுகளின் வளர்ச்சியே இந்த 'நெடுநிலை மாடம்' எனலாம், அடுக்கடுக்காக மேல் நிலையில் கட்டப்பட்டதால் இது 'நிரைநிலை மாடம்' எனவும் குறிக்கப்பட்ட து.

இவ்வாறு 'நெடுநிலை மாடம்' என்றும் 'நிரை நிலைமாடம்' என்றும் குறிக்கப்படும் மாடம் ஏழு நிலைகளை — அடுக்குகளைக் கொண்டதாய்க் கட்டப்பட்டது.

ஏன் ஏழு நிலைகளில் கட்டப்பட்டது?

---

1 "தானக மாடம் ஏறித் தையலார் ததும்பப் பாய்வார்
வானகத் திழியும் தோகை மடமயிற் குழாங்கள் ஒத்தார்"
— சீவ. சிந் : 2658.

இப்படியொரு வினா என் உள்ளத்தில் எழுந்தது. இவ்வினாவிற்கு விடை காணுதல் ஒரு நல்ல ஆய்வாயிற்று.

இவ் ஆய்வினால் புலப்பட்ட விளக்கங்கள் பழந்தமிழ்ப் பெருமகனின் வாழ்வியல் செம்மையை உலக அளவிலும் உயர்த்திக் காட்டுவன ஆகின்றன.

இக்காலத்துப் பொறியியல், அறிவியலை மணந்து பெற்றெடுத்து வளர்த்துவரும் கட்டிடக் கலை 'அம்மாடியோ' என வியக்கத்தக்கது. மூக்கின் உச்சியில் சுட்டு விரலைச் சேர்த்து அகல விழிந்து வியக்கத் தக்கது. 300 மாடிகள் கொண்டனவாகப் பல்வகைக் காலநிலைக்கேற்ற அமைப்புகளுடன் — நினைத்தால் நினைத்தபடி நிகழ்த்தும் பொறியமைப்புகளும் கொண்டவை இக்கால மேல் நாட்டு மாடங்கள். ஆயினும், இவை நம் பழந்தமிழ் நாட்டு ஏழு நிலை மாடத்திற்கு ஈடாகா என்றால் கேட்போர்க்கு நகைப்பே தோன்றலாம். சொல்வோனை ஏளனமாக எண்ணத் தோன்றும். ஆனால், இஃது உண்மை என்பதைக் காட்டுவதும் நாட்டுவதுமே இக்கட்டுரை.

மேல்நாட்டுப் பலநிலை மாடங்கள் இயற்கை வாய்ப்புகளையும், வனப்புகளையும், வாழ்வுத் துணைகளையும் செயற்கைப் பாங்கில் ஏற்படுத்தித் தருவன. அவை உடலுக்கு நிலைப்பான நலத்தைத் தரும் என்று உறுதியாகக் கூற இயலாது. பழந்தமிழ் நாட்டு எழுநிலை மாடம் இயற்கை நலங்களை இயற்கைப் பாங்கு சிதையாமல் அப்படியே துய்க்கச் செய்யும் அமைப்புகளைக் கொண்டது. காலத்திற்கும் நேரத்திற்கும் ஏற்றபடி இயற்கையின் பயனைக் கொள்ளும் வகையில் கட்டப்பட்டது.

இவ்வமைப்புதான் புதுமையும் பெருமையும் மிக்கது. 'எழுநிலை மாடம்' என்பது ஏழு அடுக்கு மாடி வீடு. ஒவ்வொரு அடுக்கும் முன் குறிக்கப்பட்டது போன்று மேல் வளைவாய் ஓட்டப்பட்டு, மேல்தளம் மட்டமாய்ப் பூசப்பட்ட ஓட்டுக் கட்டடம். முதல் அடுக்காம் கீழ் தளம் சரக்கு அறை. இது வாழ்வுக்கு வேண்டப்படும் அடிப்படைப் பொருள்கள் நிறைந்த பண்டாரம். **மேன்மேல் ஆறு மாடிகள் எழுவானேன்?**

தமிழர் ஓராண்டுக் காலத்தை இரண்டிரண்டு திங்கள் களாகப் பகுத்து ஆறு பருவங்களாகக் கொண்டனர்:

| | |
|---|---|
| சித்திரை, வைகாசி | — இளவேனிற் பருவம் |
| ஆனி, ஆடி | — முதுவேனிற் பருவம் (கோடைக்காலம்) |
| ஆவணி, புரட்டாசி | — கார்ப் பருவம் (மழைக்காலம்) |
| ஐப்பசி, கார்த்திகை | — கூதிர்ப் பருவம் (நடுக்கும் குளிர் காலம்) |
| மார்கழி, தை | — முன்பனிப் பருவம் (விடியற்காலப் பனி) |
| மாசி, பைங்குனி | — பின்பனிப் பருவம் (அந்திப் பனி)[1] |

இவ் ஆறு பருவங்களில் இளவேனில் பருவம் தமிழகத்து வாழ்வியலுக்கு இனிமையான இன்பப் பருவம். இக்காலத்தில் இப்பருவம் இரு திங்கள் தள்ளி மாற்றமடைந்துள்ளது. ஆனால், கீழை நாடாம் மலைநாட்டில் இன்றும் இளவேனிலாகச் சித்திரை, வைகாசி அமைந்துள்ளன. இளவேனில் அல்லாத பிற பருவங்கள் வாழ்வில் ஒவ்வொரு வகையில் இடையூறு தருவன. அவ்விடையூறுகளைக் குறைத்து நலமாக்கும் பாங்கில் இந்த எழுநிலை மாடத்தில் மேல் ஆறு மாடங்களும் அமைக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு பருவத்திற்கும் அததற்குரியதாகக் கட்டப்பட்ட மாடத்தில் உறைந்து வளமான – நலமான பயன் துய்த்தனர். எல்லாப் பருவகால வாழ்வையும் சுவையுடையதாகவே வைத்துக் கொண்டனர்.

அழிவற்ற மிகப்பெரும் செல்வம் படைத்தோரே இம் மாடங்களை அமைத்துக்கொண்டனர். பழந் தமிழகத்துப் பெரு நகரங்களில் இவ் வெழு நிலை மாடங்கள் பல்கி நிறைந்திருந்தன. எழு நிலை மாடத்தின் பொதுவான வளங்களைத் தமிழ் இலக்கியங்கள் கொண்டு அறியலாம்.

"ஏழுயர் மாட மூதூர்"[2] —என்று பாடினார்

வில்லிபுத்தூரார். அழகின் அணிகலமாய் அமைந்த எழுநிலை மாடம் நல்ல கலைத் தொழிலுடன் விளங்கியது. மேல் மாடங்களிலேயே நீரூற்றுகள் அமைக்கப்பட்டிருந்தன. இதனைக் கொங்குவேளிர் என்னும் குறுநிலமன்னர்,

1 "காரே கூதிர் முன்பனி பின்பனி
சீரிள வேனில் வேனி லென்றாங்கு
இருமூ வகைய பருவம்; அவைதாம்,
ஆவணி முதலா இவ்விரண் டாக
மேவின திங்கள் எண்ணிச் கொளலே" –அணியியல் நூற்பா.

2 வில். பா : நிரைமீட்சி : 118

"ஏரணி அமைந்த எழுநிலை நல்வினை
நீரணி மாடம்"[1] —என்றார். (இங்கு குறிக்கப்படும் நீரணி மாடம் முன்னர் கண்ட படகு அன்று.)

'அகிற்புகை வெண்மையாக ஆவிபோல் பெருகி உள்ளிடம் எல்லாம் நிறைந்து விம்மி வெளிவரும் மாடம்' —என்பதைச் சீவக சிந்தாமணி (2840)

"இன்னகில் ஆவி விம்மும் எழுநிலை மாடம்" —என்கிறது

"இடம் சிறந்து உயரிய எழுநிலை மாடம்' —என்னும் முல்லைப்பாட்டிற்குத் (86) "தனக்குள்ள இடமெல்லாம் பொன்னாலும் மணியாலும் சிறப்புப் பெற்று உயர்ந்த ஏழு நிலையினையுடைய மாடம்" —என்று நச்சினார்க்கினியர் உரைவிளக்கம் தந்துள்ளார்.

இம்மாடங்களில் 'அரமியம்' என்னும் நிலாமுற்றங்கள் இருந்தன என்பதை,

"நிரைநிலை மாடத்து அரமியம்" —என்று மதுரைக் காஞ்சியும் (451) சிலப்பதிகாரமும் (2:27) ஒன்று போலச் செப்புகின்றன. நிலாமுற்றங்களே அரமியம் என்பதை,

"அரமியம் நிலா முற்றம் ஆகுமென்ப" என்னும் சேந்தன் திவாகரத்தாலும் அறியலாம்.

மாடத்துச் சுவர்களில் பூவேலைப்பாடுகள் ஓவியமாகவும் சுதையாகவும் வடிக்கப்பட்டிருந்தன. மலர்க்கொடிகள் படர விடப்பட்டிருந்தன. பெரிய சுடுமண் தொட்டிகளாம் தாழிகளில் நீர் நிரப்பப்பட்டு நீர்ப்பூக்களாகிய குவளையும் செங்கழுநீரும் வளர்க்கப்பட்டன. இது இக்காலத்துத் தொட்டிச் செடி வளர்ப்பு போன்றது. மாட வளைவுகளில் முத்து மாலைகள் முறையாக நாற்றித் தொங்கவிடப்பட்டிருந்தன. பருவ நிலைக்கேற்பக் காற்றைப் பெறவும், பெறாமல் அடைக்கவுமாகப் பல்வகையான மான்கண் காலதர், சாளரம், கால்போகு பெருவழி, நேர்வாய்க் கட்டளை (சாலேகம்) என்னும் பலகணி வகைகள் அமைக்கப்

---

1 பெருங் 1 : 38

பட்டிருந்தன. வாயில்கள் யானைத் தந்தங்கள் அணிசெய்யப் பட்டு மகர வாசிகைகள் இடம் பெற்றிருந்தன. பலகணிகளில் மாலைகள் தொங்கவிடப்பட்டிருந்தன. பல்வகை இசைக்கருவி கள் இருந்தன. யவனர் நாட்டினின்றும் வந்த அழகிய பாவை விளக்குகளும் இரும்பு விளக்குகளும் ஆங்காங்கே இடம்பெற்றிருந் தன. மகளிர் பந்தாடும் சிற்றிடங்கள் அமைக்கப்பட்டிருந்தன.

"பெறற்கரும் சிறப்பின் துறக்கம் (வீட்டுலகம்)
ஏய்க்கும்

... ... ... ... ... ... ... ... ... ... ...

... ... ... ... ... ... ... ... ... ... ...

... ... ... ... ... நெடுங்கால் மாடம்" —என்று பட்டினப் பாலை (*104, 111.*) பாடும் அளவில் வீட்டுலகமே (சுவர்க்கம்) போன்று இன்பக் கொள்கலமாய் எழுநிலை மாடம் அமைக்கப் பட்டிருந்தது.

பிற்காலத்து வள்ளலார் இராமலிங்க அடிகளும் இவ் ஏழு நிலைமாடத்தைக் குறித்து வியந்து பாடியுள்ளார். பொன்னம்பலக் காட்சியை காணும் அவர் அப்பொன்னம்பலத்தை எழுநிலை மாடத்தின்மேல் கண்டாராம். எவ்வாறு கண்டாராம்?

'ஒளிமலை ஒன்றின்மேல் வீதி உண்டாச்சுது — வீதி நடு வொரு மேடை இருந்தது — மேடைமேல் அங்கொரு கூடம் இருந்தது',

"கூடத்தை நாடஅக் கூடம்மேல் ஏழ்நிலை
மாடம் இருந்ததடி — அம்மா — மாடம் இருந்ததடி;

ஏழ்நிலைக் குள்ளும் இருந்த அதிசயம்.

என்னென்று சொல்வேனடி — அம்மா — என்னென்று சொல்வேனடி" —என ஏழ்நிலை மாடத்தைக்கண்டு வியக்கின்றார் அந்த ஏழ்நிலை அடுக்கு ஒவ்வொன்றிலும் ஒன்பது மணி ஒளிகள் முறையே உயர்ந்து உயர்ந்து ஒளிர்வதாக வியக்கின்றார். இவ்வாறு பாடப்பட்ட பாடல் உடம்பையே பொன்னம்பலமாகக் கண்ட நுண்பொருள் கொண்டது. இக்கருத்துடனேயே

வள்ளலார் தாம் எழுப்பிய புதுமைக் திருக்கோவிலில் ஏழுவாயில் அமைத்து ஏழு திரையிட்டார்.

உரன்வலராம் சித்தர்களும் உடம்பினுள் ஓடும் உயிர் மூச்சின் ஓட்டம் ஏழு படிகளில் உயர்வதாகக் கண்டனர். அவ் ஏழையும் வயிற்றுமூலம், நீரகம், கொப்பூழ், நெஞ்சீரல், தொண்டைக் குழி, சுழிமுனை, மண்டையுச்சி என அடிவயிற்றினின்று மேல் மேல் அடுக்காக வகுத்தனர். உயிர் மூச்சு இவ்வேழு அடுக்குகளிலும் ஏறி உயர்வதாகக் குறித்தனர். அதனையும் ஒரு கட்டட அமைப்பே போல் எழுநிலை அடுக்கு மாடமாக உருவகம் செய்தனர்.

உரன்வலர் உள்ளத்தில் எழுந்த இக்கருத்தும், வள்ளலார் வாய் மொழியும் நம் பழந்தமிழரது எழுநிலை மாடத்தின் நிழல் களே எனலாம்.

## ஆறு பருவத்திற்கு ஆறு மாடி.

எழுநிலை மாடங்கள் இன்பமாகப் பொழுது போக்குவதற் காகவே கட்டப்பட்டவை. பருவ கால மாற்றங்களின் இடையூறு தோன்றாமல் செல்வச் செழிப்புள்ள கணவன் மனைவி கூடியிருந்து மகிழ்ந்து புணர்ச்சி இன்பத்தைத் துய்ப்பதற்காகவே அமைக்கப் பட்டன. இன்பத்தில் முடிசூடும் புணர்ச்சி, நிலா ஒளியில் நிகழ்வ தாக இருந்தது. இதற்கு வாய்ப்பாக எழுநிலை மாடங்களில் 'நிலா முற்றங்கள்' அமைக்கப்பட்டிருந்தன.

நிலா முற்றம் என்பது மேல் கூரை மூடப்படாத திறந்த மாடி இடம். நிலவின் ஒளியில் படிவதற்கும் இந்த முற்றம் பயன் படும். காதல் மேவியவர் நிலா ஒளியில் கட்டிலில் புணர்வர். ஆண், பெண் புணர்ச்சியை நாகரீகமாக 'நிலவுப்பயன்கொள்ளல், என்று குறித்தனர். இவ்வாறு நாகரீகமாகக் கூறுதலை இலக்கணம் 'இடக்கர் அடக்கல், என்று குறிக்கும்.

இந் 'நிலவுப்பயன் கொள்ளுதலை' இலக்கியங்கள் ஒருங்கு நின்று பேசுகின்றன:

"நிலவுப்பயன் கொள்ளும் நெடுவெண் முற்றத்து"
—நெடு. வா : 95

"வெண்ணிலவின் பயன் துய்த்தும்"— பட். பாலை : 114

"நிலவுப் பயன் கொள்ளும் நெடுநிலா முற்றம்"
–சிலம்பு : 3 : 31.

"சுடர் வெண் நிலவின் தொழிற்பயன் கொண்ட
மிசைநீள் முற்றம்" –பெருங் : 1 : 33

"பங்கயச் செங்கண் எம்மான்
பால் நிலாப் பயன் கொண்டு" –பாகவதம்.

இவ்வாறு பல இலக்கியங்களும் நிலவில் புணரும் புணர்ச்சியை 'நிலவுப் பயன் கொள்ளல்' என்று பெருமையாகப் பேசுகின்றன.

தற்கால நாகரீகப் பாங்கிலும் திருமணம் நிறைவேறியபின் செல்வவளம் மிக்கோர் மேற்கொள்ளும் காதல் இன்பப் பயணம் 'தேன் நிலவு' எனக் குறிக்கப்படுவதைக் காண்கின்றோம். இஃதும் 'நிலவுப் பயன் கொள்ள' வின் நிழல் எனலாம்.

நிலவுப் பயன் கொள்ளும் நிலா முற்றங்கள் எழுநிலை மாடத்தில் முன்புறத்திலும் பின்புறத்திலும் நீட்டி அமைக்கப் பட்டிருந்தன.

எழுநிலை மாடத்தை 'இன்ப வளமனை' எனலாம்.

இனி, இந்த இன்ப வளமனை எவ்வாறு பருவங்களுக்கு ஏற்ப அமைக்கப்பட்டிருந்தது என்பதைக் காணலாம்.

கண்ணகியும் கோவலனும் திருமணம் முடிந்த பின்னர் எழுநிலை மாடத்தில் அமர்ந்து கூடிஇன்பமாகக் காலங்கழித்தனர்.

மாதவியினது மாளிகையிலும் எழுநிலை மாடம் இருந்தது. கோவலனும் மாதவியும் அதிற் கூடி இன்ப வாழ்விலேயே திளைத்தனர். இஃதே போன்று சீவகன் காந்தருவதத்தையுடனும் உதயணன் வாசவதத்தையுடனும் எழுநிலை மாடத்தில் கூடி இருந்ததாக அவ்வவ் இலக்கியங்கள் வண்ணிக்கின்றன.

கோவலன் மாதவியுடன் ஊடல்கொண்டு பிரிந்ததும் மாதவி தனித்துத் துயரம் அடைந்து,

"நெடுநிலை மாடத்து இடைநிலத்து ஆங்கோர்
படையமை சேக்கைப் பள்ளியுள் வீழ்ந்த" [1]

---

1 சிலம்பு : 18 : 69.

தைக் கோசிகன் என்னும் மறையவன் பேச்சாகச் சிலம்பு பேசுகின்றது. இவ்வடிகளைச் சிலம்பின் உரையாசிரியர் அடியார்க்கு நல்லார்,

"எழுநிலத்தையுடைய மாடத்து நாலா நிலத்து ஒரு படுக்கையமைந்த சேக்கையிடத்தே மயங்கி வீழ்ந்த செய்தியும்"

—என்று விளக்கியுள்ளார்.

இவ்விளக்கங்கொண்டு நெடுநிலைமாடம் என்பது எழுநிலை மாடம் என்பதையும் அதன் இடைநிலம் என்பது நான்காவது மாடி என்பதையும் அறியலாம். "நெடு நிலை —எழுநிலை; "இடைநிலம்—நாலா நிலம்" என மனையறம்படுத்த காதையிலும் குறிப்புரை எழுதியுள்ளார்.

மாதவி கோவலனைப் பிரிந்து மயங்கியது வைகாசித்திங்கள். அஃதாவது இளவேனிற் பருவத்தின் இறுதி நாள்கள். எவ்வாறெனில், இந்திரவிழா சித்திரைத் திங்கள் முழுமதியில்தொடங்கி 28 நாள்கள் நிகழும். இறுதி விழாவாகக் கடல் விளையாட்டு விழா நிகழும். அவ்விளையாட்டைக் காணச்சென்ற போதுதான் கோவலன் மாதவி ஊடலுக்குக் காரணமான கானல் வரி நிகழ்ந்தது. எனவே, வைகாசித்திங்கள் இளவேனிற் பருவத்தில் மாதவி நான்காவது மாடியில் இருந்தாள் என்றாகிறது. எனவே, இளவேனிற் பருவத்தில் தங்குவதற்கென அமைக்கப்பட்டது நான்காவது நிலம் என்றாகிறது.

மேலும்,

திருமணம் முடித்துக்கொண்ட கண்ணகியும் கோவலனும் இன்பம் நுகரக் கொண்ட இடத்தைச் சிலப்பதிகாரம்,

"கயமலர்க் கண்ணியும் காதற் கொழுநனும்
மயன் விதித் தன்ன மணிக்கால் அமளிமிசை
நெடுநிலை மாடத்து இடைநிலத்து இருந்தார்கள்" [1]

— எனக் குறிக்கின்றது.

அந்நாள்கள் இளவேனிற் பருவத்தின் இறுதி நாள்கள். அடுத்து

1 —சிலம்பு : 2 : 11 — 13.

முதுவேனிற் பருவம் தொடங்க உள்ளது. மாடத்தின் ஒவ்வொரு நிலமும் சிறந்த படுக்கையறைகள் அமைந்த பள்ளியறை கொண்டது. அதனால். அவ்வந் நிலம், அவ்வப் பருவத்துப் பள்ளியறையாக — பள்ளியாகக் குறிக்கப்பட்டது. கோவலன் கூடாது பிரிந்தபின் மாதவி எழுநிலை மாடமாகிய,

*"வானுற நிவந்த மேல்நிலை மருங்கின்*
*வேனில் பள்ளி ஏறி" னாளாம்.*[1]

—இங்கு இளவேனில் பருவத்தில் தங்கும் நான்காம் நிலம் 'வேனிற் பள்ளி' எனப்பட்டது. பருவத்திற்கேற்ப மாடிகள் அமைக்கப்பட்டதை இவ்வடிகளுக்கு எழுதிய உரையில் அடியார்க்குநல்லார் பின்வருமாறு புலப்படுத்தியுள்ளார்:

> "பருவத்திற்குப் பொருந்த வானிலேயுற உயர்ந்த மேனிலையில் (மாடியில்) ஒருபக்கத்து நிலாமுற்றத்தே யேறி"

இவ்விளக்கம் நோக்கத்தக்கது. பருவத்திற்கு ஏற்ற பாங்குடன் அடுக்குகள் அமைந்தன என்பதை அறிய இவ்வுரை விளக்கமே ஒளி காட்டுகின்றது. இவ் ஒளிகாட்டும் வெளிச்சத்துடன் தொடர்ந்து பருவ அடுக்குகளைக் காண முடிகின்றது.

அடுத்து,

முன்னே, கண்ணகியும் கோவலனும் நெடுநிலை மாடத்தில் இடை நிலமாம் நான்காவது நிலத்தில் இருந்தவர்கள் அங்கு புகுந்த தென்றலைச் சுவைத்துக் காமஉணர்ச்சி மேலீட்டால்,

*"விரைமலர் வாளியொடு வேனில்வீற் றிருக்கும்*
*நிரைநிலை மாடத்து அரமியம்"*[2]

(நிலாமுற்றம்) ஏறினார்கள் என்று குறிக்கப்படுவதால் இளவேனிற் பள்ளிக்குமேல் நிலாமுற்றம் அமைந்த முதுவேனிற் பள்ளி நிலத்தில் ஏறியதாகும். இதன் உரையும்,

---

1 *சிலம்பு* : 8 : 17, 18.
2 *சிலம்பு* : 2 : 26, 27.

"அவர் காதல் மிகுதலாலே இடைநிலத்து (நான்காவது) நின்றும் மேல் நிரைத்து வகுத்த நிலங்களில் மணத்தினையுடைய மலர்வாளியோடே காமன் வீற்றிருக்கும் மேல் நிலமாகிய (ஐந்தாவது நிலம்) நிலாமுற்றத்தின் மேல் ஏறியென்க" — என்று விளக்குகின்றது.

எனவே,

ஐந்தாம் நிலம் முதுவேனில் பருவத்திற்கு உரியது.

இதற்குச் சான்றாக மேலும் ஒரு குறிப்பு கிடைக்கின்றது. கூதிர்ப் பருவத்தில் காதலரைப் பிரிந்த மாதர் பிரிவுத் துன்பத்தால் நொந்து ஊது உலை போன்று பெருமூச்சு விட்டு,

"வேனிற் பள்ளி மேவாது கழிந்து
கூதிர்ப் பள்ளிக் குறுங்கண் அடைத்து"[1]

ஒடுங்கினராம். இவ்வடிகளில் வேனிற்பள்ளியினின்றும் "மேவாது" என்று கூறப்பட்டுள்ளதால் அதன்மேல் மேவுமாறு அமைந்தது ஐந்தாவது நிலம். அது கோடைப்பருவத்திற்கு—முது வேனிற் பருவத்திற்குரிய மாடியாகும். இக்குறிப்பாலும் ஐந்தாவது நிலம் முதுவேனிற் பருவத்திற்குரிய மாடி ஆகின்றது. (இளவேனிலும் முதுவேனிலும் 'வேனில்' என்று குறிக்கப்படுவது உண்டு. வேனிற்பள்ளி என்பது போன்று கூதிர்ப்பருவத்திற்குரிய மாடி 'கூதிர்ப்பள்ளி' எனப்பட்டதை மேற்குறிக்கப்பட்ட இரண்டாம் அடியில் காண்கின்றோம். இவ்விடத்தும் அடியார்க்குநல்லார்,

"இளவேனிற்காலத்திற்கு அமைந்த நிலாமுற்றத்தின் (மேல்) மேவாது ஒழிந்து கூதிர்க்காலத்திற்கு அமைந்த இடைநிலத்து ஒடுங்கி" —என்று விளக்கினார். இங்கு இடைநிலம்" எனப்பட்டது நான்காவது நிலமாகிய இளவேனிற் பள்ளிக்கும் இரண்டாவது நிலமாகிய கார்ப்பள்ளிக்கும் இடைப்பட்ட மூன்றாவது நிலமாகும். "வேனிற்பள்ளி மேவாது கழிந்து" என்பதில் "கழிந்து" என்றதை நோக்கவேண்டும். 'கழிந்து' என்பது 'இறங்கி' என்று இங்கு பொருள்படும். கீழிறங்கிக் கூதிர்ப்பள்ளிக்கு வந்ததாகக் குறிக்கப்பட்டதால் நான்காவதன் கீழ்நிலமாகிய மூன்றாவது நிலம் கூதிர்ப்பள்ளிக்கென அமைந்ததாகும்.

---

1 சிலம்பு : 8 : 60, 61.

அடுத்து,

இரண்டாவது நிலம்பற்றிக் காணலாம்.

சீவக சிந்தாமணியில் மன்னன் சீவகன் தன் உரிமை மகளிரொடு முதுவேனிற் பருவத்தில் விளையாடியமை குறிக்கப் படுகின்றது. அக்காலம் முதுவேனிற் பருவத்தின் இறுதிக்காலம். அடுத்து, கார்ப்பருவம் தொடங்கும் அறிகுறியாக மழை தொடங் கும் அறிகுறிகள் தொடங்கின. முகில் இடித்து முழங்கியது. இடிகேட்டு அஞ்சிய உரிமை மகளிர் மன்னனைத் தழுவிக் கொண்டனர். கார்ப்பருவம் தொடங்கியதை உணர்ந்த மன்னன் மகளிருடன்,

> 'முதுவேனில் பள்ளியினின்றும் இறங்கிக் கீழ்நிலை யாகிய இரண்டாவது அடுக்கில் இனிய அகிற்புகை மணக்கும் படுக்கையில் அமைந்தான்.' இதனை,

"இழிந்து கீழ்நிலை இன்னருஞ் சேக்கைமேல்"[1]

மகிழ்ந்தான் என்று கூறியது சிந்தாமணி. இதுகொண்டு அடித் தளத்திற்கு மேல் உள்ள இரண்டாவது நிலம் கார்ப்பருவ மாடி என்று கொள்ள முடிகின்றது.

அதே சிந்தாமணி முன்பனிப் பருவத்தில் சீவகன் தங்கியதை,

"மாமதி உரிஞ்சும் ஒண்பொனின்
மாடக் கீழ்நிலை மகிழ்ந்து வைகினார்"[2] —என்று

குறிக்கின்றது. "மாமதி உரிஞ்சும் மாடம்" என்பது உயர்ந்து மேலிருக்கும் ஏழாவது நிலத்தைக் குறிக்கும். அம்மாடத்தின் கீழ் என்பதால் ஆறாவது நிலம் ஆகிறது. எனவே, ஆறாவது நிலம் முன்பனிப் பருவ நிலமாகிறது. பின்னே குறிக்கப்படும் கருதுக்களாலும் இக்கருத்து வலியுறும்.

எஞ்சி நிற்பது ஏழாவது நிலம். அது பின்பனிப்பருவ நிலம் ஆக வேண்டும்.

---

1. சீவக. சி: 2678 2. சீவக. சி: 2689

இச்சான்றுகளால்,

கீழ்த்தளம் — சரக்கு அறை;
இரண்டாவது நிலம் — கார்ப்பருவமாடி;
மூன்றாவது நிலம் — கூதிர்ப்பருவ மாடி;
நான்காவது நிலம் — இளவேனிற்பருவ மாடி;
ஐந்தாவது நிலம் — முதுவேனிற்பருவ மாடி;
ஆறாவது நிலம் — முன்பனிப்பருவ மாடி;
ஏழாவது நிலம் — பின்பனிப்பருவ மாடி

—என வரையறை செய்து கொள்ள முடிகின்றது. இவ்வரையறைக்குப் பல உரையாசிரியர்களது கருத்துரைகளும் முத்திரையிடுகின்றன.

## பருவகாலப் பக்குவப் பள்ளியறைகள்.

ஒவ்வொரு பருவத்திற்கும் ஒவ்வொரு அடுக்கு என்பது பெயரளவில் மட்டும் ஒதுக்கப்பட்டது அன்று. ஒவ்வொரு மாடியும் பருவத்தின் தட்ப, வெப்ப நிலைக்கேற்ற கட்டட அமைப்பைக் கொண்டது. பருவத்திற்கு ஏற்ப இயற்கையில் தட்பமும் வெப்பமும் எழும் அன்றோ? அவற்றை உள்ளே உறைவோர்க்கு நலம் பயக்கும் அளவில் கொடுக்கவும், தீமை தராத வகையில் தடுக்கவும் வாய்ப்பாக ஒவ்வொரு நிலமும் - மாடியும் அமைக்கப்பட்டிருந்தது. எழுநிலை மாடத்தை உருவாக்கியோர் வெறும் கல்லடுக்கும் கொத்தர் அல்லர். சிற்ப நூல் அறிவில் தேர்ந்த அறிஞர். அன்னார் ஆய்ந்து வகுத்து அமைத்தது எழு நிலை மாடம்.

"நூலோர் சிறப்பின் முகில்தோய் மாடம்"

— என்று சிலப்பதிகாரம் (14 : 97) குறிக்க "சிற்ப நூல் வல்லோரானே சிறப்பித்துச் செய்யப்பட்ட உயர்ந்த மாடங்கள்" என்று உரை வகுக்க மேம்பட்டு விளங்கியவை எழுநிலை மாடங்கள்.

பருவத்திற்கு ஏற்ற கட்டட அமைப்பு மட்டும் அன்று. அவ்வப் பருவத்திற்குப் பயன்படும் பொருட்களும் அந்தந்த அடுக்குப் பள்ளியறைகளில் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன.

இன்பம் துய்க்கின்ற எழில்மிக்க குமரரும் குமரிகளுமாம் கணவர், மனைவியர் மீன்கொடியையுடைய மாரவேளது (மன்மதனது) படைகள் எனப்படுவர். அன்னார் பருவத்திற்கும் நாளுக்கும் நேரத்திற்கும் ஏற்பப் "புகர் அறுகோலம்" [1] செய்து கொள்வர். "புகர் அறுகோலம்" என்றால் 'ஒரு சிறு புள்ளி அளவு குறையும் அற்ற ஒப்பனை(அலங்காரம்)' என்பது பொருள். இவ்வாறு கோலம் கொள்ளுதல் அடியார்க்குநல்லாரால்,

> "அக்காலத்திற் ஏற்பன உடுத்தும், முடித்தும்,
> பூசியும், பூணுதல்"

— என்று விவரிக்கப்பட்டுள்ளது.

பருவத்திற்கு ஏற்றதும் அப்பருவத்தில் நேரத்திற்கு ஏற்றதுமான உடைகளை உடுப்பர். பருவத்திற்கு ஏற்ற கூந்தல் முடியிட்டு, பொருத்தமான மலர்களை முடிப்பர். ஏற்ற மணப்பொருள்களைப் பூசிக்கொள்வர். ஏற்ற அணிகலன்களை அணிந்து கொள்வர். எனவே, ஒவ்வொரு அடுக்கிலும் அததற்குரிய உடைகள், கொண்டைகள், மலர்கள், மணப்பொருள்கள், பூச்சுப் பொருள்கள். அணிகலன்கள், இசைக்கருவிகள் கலைப் பொருள்கள் தட்டுமுட்டுப் பொருள்கள் முறையாக வைக்கப்பட்டிருந்தன. அவற்றை முறையே நாமும் காணலாம்.

சங்க இலக்கியங்கள், சிலப்பதிகாரம், மணிமேகலை சிந்தாமணி, பெருங்கதை முதலிய இலக்கியங்கள் காட்டும் கருத்து வழியே அடுக்கடுக்காக ஏறிப் பள்ளியறைகளைக் காண்போம். தும்மாமல், கனைக்காமல், ஓசையிடாமல், பெருமூச்சுவிடாமல் காண வேண்டியவற்றை மட்டும் கண்டு வருவோம்.

## இரண்டாவது நிலை மாடம்.

**கார்ப்பருவப் பள்ளியறை.**

எழுநிலைமாடத்தைக் காண நாம் கார்காலத்தில் புறப்பட்டிருக்கின்றோம் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். மாடத்தின் வெளியில் நின்று பார்த்தாலே ஏழாவது மேல் அடுக்கில் கார்முகில்கள் படிந்திருப்பது தெரிகின்றதன்றோ? அதனால்தான் அவ்

---

1 "மகர வெல்கொடி மைந்தன் சேனை
புகரறு கோலம் கொள்ளும் என்பதுபோல்"
— சிலம்பு : 8 10, 11.

அடுக்கில் கார்ப் பள்ளியினை அமைக்காமல் கீழ் அடுக்கைத் தேர்ந்துள்ளனர் போலும். மக்களுக்குப் பெரும் இடையூறு இன்றிக் காதலருக்கு இனிய குளிரைத் தரும்பருவம் கார்ப்பருவம். அதனால் தான் அடுக்கில் புகும் வாயில் மிக உயரமும் இன்றி, மிகத் தாழ்வும் இன்றி அளவாக அமைக்கப்பட்டிருக்கின்றது. கதவுகளைப் பார்வையிடுக! பொருந்துவாய் தெரியாமல் மூடும் நிலையில் உள்ளன. கதவுகளின் பலகைகள் ஈரத்தை வாங்கிக்கொள்ளாத தைல மரங்களால் ஆகியிருப்பவையாகக் காண்கின்றோம். உள்ளே புகுகின்றோம். கிழக்கிலும் மேற்கிலும் மட்டும் அளவான புழைகளை உடைய சாளரங்கள் காட்சியளிக்கின்றன. அவற்றையும் மூடுவதற்குச் சிறு கதவங்கள் அமைக்கப்பட்டுள்ளன. சாளரங்களில் மணிமாலைகள் தொங்குவன கண்களைக் கவர்கின்றன அன்றோ?

அதோ, மணிக்கால் கட்டில் கிடக்கின்றது. அதன்மேல் மெத்தென்ற அணை கிடக்கிறது. அதன் மேல் பட்டு விரிக்கப்பட்டுள்ளது. அதன்மேல் மலர்கள் தூவப்படவில்லை. ஒரு மூலையில் மெல்லிய அகிற்புகை எழுந்து படுக்கையில் படிந்து மணக்கிறது: படுக்கைக்குக் 'கதகதப்பு' மூட்டுகிறது. அதோ, அப்பேழையில் சிவந்த நிறப் பட்டாடைகள் எழிலோடு உள்ளன. அவற்றின் அண்டையில் மேகலை மின்னுகின்றது. பவள மாலையும், செம்மணி பதித்த அணிகலன்களும் நிறைந்துள்ளன. செம்மை நிறம் பொருந்திய குடசம், செங்கூதாளம், குறிஞ்சி மலர்கள் கொய்து வைக்கப்பட்டுள்ளன.

> 'மகளிர் கொங்கையில் பூசிக்கொள்ளக் குங்குமக் குழம்பு உள்ளது. சிவந்த கொடுவேரி என்னும் மலரால் கட்டிய மாலை உள்ளது. மேனியில் பூசிக் கொள்ள மணக்கும் சிந்தூரப்பொடி உள்ளது.'1

—இவையெல்லாம் தம்மைக் கொள்வார் வரவை எதிர் நோக்கிக் காத்துக் கிடக்கின்றன. எல்லாம் சிவப்பு. நீர் சேர்ந்த குழம்பு ஆன பூச்சுப் பொருள்களைக் காணவில்லை. மழைக்காலம் அன்றோ? யாவும் பொடிகளாகவே உள்ளன.

---

1 "குங்கும வருணம் கொங்கையின் இழைத்துச்
செங்கொடு வேரிச் செழும்பூம் பிணையல்
சிந்துரச் சுண்ணம் சேர்ந்த மேனியில்
அந்துகிர்க் கோவை அணியொடு பூண்டு"—சிலம்பு : 14 : 90—93.

அதோ, குழல் பொன்பூண் கட்டப்பட்டு உள்ளது. வங்கியம் இதோ தொங்குகின்றது. ஆவஞ்சி, குடுக்கை என்னும் தோற்கருவிகள் அதோ மாட்டப்பட்டுள்ளன.

'கம்'மென்ற் மணத்தோடு வெந்நீராடுதல் போன்ற உணர்வும் ஊறுகின்றதன்றோ? 'அவன்' வருகின்ற தேர் ஓசை கேட்கின்றது. காத்துக் கிடக்கின்ற 'அவள்' அவனை இங்கேதான் வரவேற்பாள். அவனும் இங்கேதான் நேரே ஏறி வருவான். நாம் மேலே ஏறிவிடுவோம்.

## மூன்றாவது நிலை மாடம்.

**கூதிர்ப்பருவப் பள்ளியறை.**

அடைமழை கொட்டுகின்றது. நம் தாடைகள் ஒன்றோடு ஒன்று அடித்துக்கொண்டு தாளங் கொட்டுகின்றன அன்றோ? கூதிர்ப் பருவம் அன்றோ? இந்தப் பருவத்தைக் 'குன்றையே குளிர வைக்கும் கூதிர்க்காலம்'[1] என்பர். நம் உடம்பு உதறத் தொடங்கிவிட்டது. உள்ளே போனால் உதறல் போய் விடும். வாயில் மிகத் தாழ்வாக உள்ளது. பணிந்துதான் போக வேண்டும். குனிந்து புகுந்து வருக! இருளாக உள்ளது. நடுவே தொங்கும் 'இரும்பாலே செய்யப்பட்ட விளக்கில் எண்ணெய் ஈரத்திரி'[2] ஒளிவிடத் தொடங்கிவிட்டது. கிழக்கிலும் மேற்கிலும் அமைந்த 'கூதிர்ப்பள்ளியின் குறுங்கண்' சாளரம் வெளியே சிறு துளையாகவும், உள்ளே விரிந்து வரும் வாயாகவும் அமைந்துள்ள அமைப்பு கூதிர்க் குளிருக்கு வாய்ப்பானது. இக்குறுங் கண்ணுக்கும் அடைப்பான்கள் உள்ளன.

கதவின் நிலைகள் மிகத் திண்ணியனவாய் உள்ளன. இரட்டைக் கதவுகள் திறக்கப்பட்டதும் தாமே மோதி மூடிப் பொருந்திக் கொண்டுள்ளன. மோதும் விரைவில் தாழ்கள் இறுகிக்கொண்டதைக் காண்க! இக்காலக் குளிர்பதன அறைக் கதவைப் போன்று உள்ளன அன்றோ? திறக்கும் நேரத்தில் குளிர் புகுந்தால் என்ன ஆவது? இக் கதவைப் பார்த்துத் தான் நக்கீரர்,

'திண்ணிலைப் போர்வாய்க் கதவம் தாழொடு துறப்ப' (நெடுநல்வாடை :62, 63) என்று பாடினார்.

---

1 "குன்று குளிர்ப்பன்ன கூதிர்ப் பானாள்" — நெடு. வா : 12.

2 "இரும்புசெய் விளக்கின் ஈர்ந்திரிக் கொளீஇ" நெடு. வா : 42,

அதோ பெரிய கட்டில் கிடக்கின்றது. மேலே மிக மென்மையான அமளி (மெத்தை) கிடக்கிறது. தொட்டால் மாவில் கைவைத்தது போன்ற மென்மை எப்படி வந்தது? காரணம் உள்ளே பஞ்சு அடைக்கப்படவில்லை. பஞ்சு குளிர் ஈரத்தை வாங்கிக்கொள்ளும் அன்றோ? அதனால், இரண்டு அன்னங்கள் புணர்ந்த போது உதிர்ந்த தூவி (அடிப்புற இறகு) இறகுகளை உள்ளே அடைத்துள்ளனர். மென்மைக்கு மென்மை; ஈரத்தையும் வாங்காது. இயற்கை வெதுவெதுப்பை உடையது.

"துணைபுணர் அன்னத் தூநிறத் தூவி"
(நெடுநல்வாடை : 132)

"என்புருகி மிக்க அன்போடு (அன்னங்கள்) புணர்தலின் சூட்டிற்கு (அடிவயிற்று இறகிற்கு) மென்மை பிறக்கும் என்பது தோன்ற துணைபுணர்அன்னத் தூநிறத்தூவி என்றார்"

– என்று நச்சினார்க்கினியர்

எழுதிய உரை விளக்கம் மென்மைக்குக் காரணத்தைக் காட்டுகின்றது.

அன்னங்கள் புணர்ந்த சின்னம் என்பதிலே இக்காதல் அன்னங்களுக்கு ஒரு புத்துணர்வு எண்ணம் ஏற்படும் போலும். இப் படுக்கை மேல் கஞ்சி தோய்ந்த மெல்லிய ஆடை படிந்துள்ளது. தடித்ததும் நீர்க்கோப்புகள் இல்லாததுமான இதழ்களையுடைய மெல்லிய சருகுபோன்ற மலர்கள் இதோ உள்ளன. அவையும் சிலவே. ஏனெனில், கூதிர்க் குளிரில்,

"கூந்தல் மகளிர் கோதை புனையார்
பல்லிருங் கூந்தல் சின்மலர் பெய்"[1] து கொள்வர்.

கார்ப்பருவப் பள்ளியில் உள்ளமை போன்று சுண்ணப் பொடிகள் நிறைந்த சிமிழ்கள் அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. ஒப்பனை செய்துகொள்ளும் போது உருவத்தைக் காட்டும் பளிங்கு ஆடிகள் உள்ளன. சுண்ணப் பொடிகள் இக்கால 'முகத் தூளி' (Face Powder) போன்றவை, அவற்றைப் பீச்சுக் குழலில் அடைத்துப் பீச்சி உடலில் படியவிடுவர். ஈரக் குழம்பான மணப் பூச்சுகள் இல்லை.

1 நெடு வா : 53, 54.

மயிர்க் கம்பலங்கள் உள்ளன. தடித்த நீலநிறப் பட்டாடைகள் பேழைகளில் உள்ளன. மாணிக்க மணிகள் பொருந்திய மேகலைகள் உள்ளன. அதோ அந்த மூலையில் வாய் குறுகிய தண்ணீர்க் குடுவை உள்ளது. பெயருக்குத்தான் அஃது அங்கே உள்ளது. கடுங்குளிரில் தண்ணிய நீரையோ பருகுவர்? "யாவரும் தொகுவாய்க் கன்னல் (குடுவை) தண்ணீர் உண்ணார்" என்கிறது நெடுநல்வாடை (65). ஆனால், அதோ அம் மூங்கில் குடுவையில் மெழுகால் பூசி மூடிய பழைய தேறல் (தேன்) உள்ளது. அது நாள்பட்ட தேன். நாக்கில் வைத்தால் தேள் கொட்டியது போன்று குளிரெல்லாம் பறக்கும். இத்தகைய தேனைத் "தேள்கடுப்பு அன்ன நாள் படு தேறல்" என்கிறது புறநானூறு (392). அந்த 'வண்டுகள் மொய்த்த தேனை ஆவலோடு பருகினால் புத்துணர்ச்சி பெருகும்'.[1] அதனால், குளிர் பெரிதாகத் தோன்றாது.

இத்துணை நேரம் இங்கிருந்தோமே குளிர் தெரிந்ததோ? ஏன் தெரியவில்லை? அதோ அந்த மூலையை நோக்குக! மூலையை மறைத்து ஒரு துணித் திரை தொங்குகின்றதன்றோ? அதற்குத் "தடவுத் திரை" என்று பெயர். அந்தத் திரைமறைவில் பெரிய சுடுமண் தடா — தடவு — சால் இருக்கிறது. அங்கு ஓர் ஏவற்பெண் அமர்ந்து நெருப்பை மூட்டுவதற்கு மயிர்ச் சந்தன விறகைப் பயன்படுத்துகிறாள். அவ்விறகு தொட்டால் தண்ணென்று குளிர்ச்சியாக இருக்கும். சூடு பிடித்தால் மணக்கும். தீப்பிடித்ததும் தடாவில் வைரம் பாய்ந்து முற்றியதாய்க் கருமை நிறமுள்ள அகிலையும், கண்டுசருக்கரை (அயிர்) என்னும் மணப்புகைப் பொருளையும் இட்டு வைத்துள்ளாள்.

"தண்ணரும் தகர முளரி நெருப்பமைத்து
இருங்காழ் அகிலொடு வெள்ளயிர் புகைப்ப"[2]

—என்று நெடுநல்வாடை (55, 56.) குறிப்பதை இங்கே கண்ணாரக் காணலாம். சாலிலிருந்து எழுந்த வெப்பம் மணப்புகையுடன் பரவுகிறது. அத் 'தடவுத் திரை' 'புகையையும் வடிகட்டி வழங்குகின்றது'. அதோ ஏவற்பெண் எழுந்துவிட்டாள்.

---

1 "வண்டு மூசு தேறல் மாந்தி மகிழ்சிறந்து
துவலைத் தண்டுளி பேணார்" —நெடு. வா : 33, 34.

2 நெடு. வா : 55, 56

'அன்னோர்' வரும் நேரம் போலும். 'அன்னோர்' வந்து கூதிர்ப்பள்ளிக் குறுங்கண்ணை அடைத்துத் தம்மை மறக்கப் போகின்றனர். நாம் நம் பயணத்தை மறக்காமல் மேலே செல்வோம்.

## நான்காவது நிலை மாடம்.

**இளவேனிற் பள்ளியறை.** இந்த இளவேனில் அடுக்கில் ஏறிய உடனே ஓர் உவகைப்பெருக்கு உடலில் ஊர்கிறது. இன்பக் கிலுகிலுப்பு எவருக்கும் எழும். இதனை ஒரு தனியமைப்பான கலைக்கூடம் எனலாம். எவ்வளவு பெருவளம் விளங்குகின்றது இப்பள்ளியில்! அவ்வளவு நுணுக்கங்களையும் காண நேரம் இல்லை. குறிப்பாகக் கண்டு மீளலாம்.

மேல்தளம் உயரமாக உள்ளது. சுவரெல்லாம் வெண்சுதைப் பளபளப்பு; வழவழப்பு. சுவரில் பல்வகைப் பூத்தொழில்கள் மின்னுகின்றன. சுவர்களில் எங்கும் 'மான்கண் காலதர்கள்' உள்ளன. 'மணம் வாய்ந்த தென்றல் நேரம் பார்த்து இன்னிசை யோடு நுழைதற்கு ஏற்ற சிறு துளைச் சாளரங்கள்' உள்ளன.

அவை,

> "மாலைத் தாமத்து மணி நிறைத்து வகுத்த
> கோலச் சாளரங்கள்"[1]

வீதி உலாக்களையும் இயற்கைக் காட்சிகளையும் கண்டு உவக்க வாய்ப்பாகப் பார்வைப் பக்கத்தில் அமைந்த "நேர்வாய்க் கட்டளைகள்"[2] என்னும் சாலேகங்கள் உள்ளன. இவை திறந்த பாங்கின. தென்றல் காற்றைத் தருவதற்கென்றும் அமைக்கப் பட்டவை இவை. கட்டடத்தில் வெளிப்புறம் புடைப்பாகத் தேரின் தோற்றத்தில் அமைந்தவை நேர்வாய்க் கட்டளைகள். கட்டடத் தின் இரு பக்கத்தும் இவை அமைக்கப்பட்டிருக்கின்றன.

---

1 சிலம்பு : 2 : 22, 23.

2 "வேனிற் பள்ளித் தென்வளி தரூஉம்
நேர்வாய்க் கட்டளை திரியாது" — நெடு. வா : 61, 62.

கதவின் அமைப்போ தனிக் கலை கொண்டது. கதவின் பிடி குவளை மொட்டுப்போல அமைந்து, பொன்பூண் கட்டப்பட்டு, மாணிக்கம் பதிக்கப்பட்டது. கதவின் துளைகள் மலர்க்கொடிப் பாங்கில் மலர்ந்து விளங்குகின்றன.

அறையின் நடுவே வட்டமான கட்டில் கிடக்கிறது. அதன் அமைப்பையும் தன்மையையும் கூர்ந்து நோக்க வேண்டும்.

'மழமழ' வென்று திரண்டு வெண்மையாக விளங்கும் கட்டில் கால்களைக் கூர்ந்து நோக்குக! தனக்குச் சமமான களிற்றுடன் போர்க்களத்தில் பொருது வெற்றிபெற்றதாய் நாற்பது ஆண்டு அகவையுடைய களிற்றினது தந்தத்தால் செய்யப்பட்டவை அக்கால்கள். அத்தந்தங்களும் களிற்றிலிருந்து வெட்டி எடுக்கப்படாமல் தாமே விழுந்தபின் பயன்பட்டவை. கட்டிலின் சட்டமெல்லாம் முன் குறிக்கப்பட்டமை போன்ற தந்தத்தில் கடையப்பட்டவை. அச்சட்டங்களின் மேல் புலித்தோல் உறையாக இணைத்துத் தைக்கப்பட்டுள்ளது. கால்களின் அடிப்பகுதிகள் மகளிரது பால் நிறைத்த கொங்கைகள் போன்று குடங்களையும், அவற்றின் கீழே உள்ளி போன்ற குமிழையும் கொண்டவை. சுற்றிலும் அழகாகத் தோன்றும் மிகச்சிறிய முத்துகள் கோக்கப்பட்ட தொங்கல்கள் தொங்கி அசைகின்றன. பொன் தகட்டால் இலை, கொடி, பூத் தொழில்கள் செய்யப்பட்டுள்ளன. அரிமா வேட்டைபோன்ற உருவங்கள் மயிர்கொத்தால் வடிக்கி அமைக்கப்பட்டுள்ளன. காலின் குடங்களில் மார்புக் கச்சு போன்று தைக்கப்பட்டுள்ளமையால் இதற்குக் 'கச்சுக் கட்டில்' என்றும் பெயர். 'பாண்டில்' 'வட்டக்கட்டில்' என்றும் இக்கட்டிலை வழங்குவர். நச்சினார்க்கினியர் இக்கட்டிலை,

"பொலிவுபெற்ற நிறத்தையுடைய கச்சாலே நடுவுவெளியான இடம் மறையும்படி கோக்கப்பட்டுக் குற்றமற்று 'கச்சுக்கட்டில்' என்னும் பெயரையுடைய **பாண்டில்**"

—என விளக்கினார்.

ஆண்டாள் "கோட்டுக்காற் கட்டில்" (திருப்பாவை: 19) என்று பாடினாள்.

இத்தகைய கலையும் பெருமையும் நிறைந்த கட்டிலின் மேல் போடப்பட்டிருந்த மெத்தை அடுக்கு காணத்தக்கது.

ஒவ்வொன்றும் 'சிறுபூளை செம்பஞ்சு' 'வெண்பஞ்சு, அன்னத்தூவி' ஆகியவை தனித் தனியே அடைக்கப்பட்டது. மெல்லிய வெண்மை நிறத் துணி விரிப்பின்மேல் முல்லை இதழ்கள் பக்குவமாகத் தூவப் பட்டுள்ளன. இது "பூவணைப் பள்ளி" எனப்படும்.

கட்டிலின் மேற்கட்டில் தீட்டப்பட்டுள்ள ஓவியம் உரோகிணி என்னும் விண்மீனை முழுமதி அணையும் எழில் கொண்டது. மேற்கட்டியினின்றும் மலர் மாலைகள் தொங்கவிடப்பட்டும் வளை வாக அமைக்கப்பட்டுக் கவினோடு கம்மென்று மணக்கின்றன. இக் கட்டிலையே ஒருநாள் முழுதும் பார்த்துச் சுவைக்கலாம். படுத்துப் பார்த்தால் எழ மனம் வராது.

இவ்வறைக்கு அமைப்பான ஒளியைப் பாவை விளக்கு வழங் கிக்கொண்டுள்ளது. இவ்விளக்கம் 'யவனர் செய்தது; கலைத் தொழில் நிரம்பியது; மாட்சிமைப்பட்டது'[1] விளக்கும் கண்களை ஈர்த்து உள்ளத்தைக் கவர்கின்றது.

வடக்குப் புறத்தில் நீராடும் முற்றம் உள்ளது. அதில் அருவிபோன்று நீர்ஊற்று பனிநீரைச் சிதறுகிறது. அம்முற்றத் தில் ஒரு பெரிய தடா உள்ளது. அதில் நீராடுவதற்காக 32 ஓமா லிகை ஊறி, இளவெயிலில் இளஞ்சூடு ஏறிய மணநீர் நிறைந் துள்ளது. பக்கத்தில் அமைந்த புரையில் கதுப்பிலே தடவிக் கொள்ளுவதற்குரிய தைலம் நிறைந்த குப்பி உள்ளது. தேய்த்து நீராட நெல்லி அரைத்த சாந்து உள்ளது.

அடுத்துள்ளது ஒப்பனை அறை. நீராடியதும் மகளிர் கூந்தலையும் ஆடவர் குஞ்சியையும் உலர்த்த, சந்தன நெருப்பில் அகிற்புகையை ஆவிபோல் வெளியிடும் வெண்கலத் தாழி உள்ளது. கூந்தலுள்ளே விரலாலே நீவிப் பூசிக்கொள்ள வார்த்த புழுகு, ஆண்கள் தூவிக்கொள்ளக் கருப்பூரப்பொடி உள்ளன. மணச் சுண்ணங்கள் உள்ளன.

பூத்தொழில் செய்யப்பட்ட பலவகை உடைகள் உள்ளன, மெல்லிய பட்டுடைகள்; பஞ்சாடைகள்; சிலந்தி நூல்போலும் வெண்பட்டு நூலால் ஆன மேலாடைகள் பேழைகளில் உள்ளன. குளிர்ச்சிக்குப் புகழ்பெற்ற கொற்கை முத்து மாலைகளும், அணி

---

1 "யவனர் இயற்றிய வினைமாண் பாவை" நெடு. வா: 110,

களும் பல பாங்குகளில் உள்ளன. பிற பொன், மணி, அணிகளும் சந்தனப் பேழைகளில் புன்முறுவல் காட்டுகின்றன.

வடக்கு மூலையில் இமய மலைக் கல்வட்டம் பதிக்கப்பட்டுள்ளது. அது வடநாட்டாரிடமிருந்து வாங்கிய உயர்ந்த, நல்ல நிறம் வாய்ந்த வட்ட வடிவமான கல். பக்கத்தில் பொதியமலைச் சந்தனக் கட்டைகள். இக்கட்டைகள் அக்கல்லில் தேய்த்து அரைக்கப்பட்டுப் பூசிக்கொள்ள எடுக்கப்படும்.[1] பொதியில் சந்தனம் குளுமையின் தாய். அத்துடன் இமயத்துக் கந்தகக் கலப்புடைய கல் தேய்ந்து உடலுக்கு நலத்தையும் மெருகையும் ஏற்றும். இவை இரண்டையும் இணைத்த தமிழர்தம் பாங்கும் திறனும் எண்ணிச் சுவைக்கத்தக்கன. இமயக் கல்லானாலும் பொதியில் மரம் தேய்த்து விடும் என்பதைக் காட்டும் கருத்தில் அமைத்தனர் போலும். வன்மையை மென்மையாலும் வெல்லத்தெரிந்தவரன்றோ தமிழர்!

மருகிய சந்தனத்தை ஆடவர் மார்பில் பூசிக்கொள்வர். பெண்கள் மார்பிலும் தோளிலும் பூசும் தொய்யில் குழம்பு காலில் தீட்டிக்கொள்ளும் செம்பஞ்சுக் குழம்பு நிறைந்த பொன் கிண்ணிகள் உள்ளன. முழு உருவத்தையும் காட்டும் பல்வகைப் பளிங்கு ஆடிகள் ஆங்காங்கே ஒழுங்காக நேருக்கு நேர் பொருத்தப்பட்டுள்ளன.

இஃதோ 'ஓவியம் தீட்டிய உறையிடப்பட்டு, செழுங்கோட்டில் மலர் சூடி, மைத்தடங்கண் மணமகளிர் போல் வனப்பெய்திய' சகோட யாழ் படுத்திருக்கிறது. பல இயங்களும் (இன்னிசைக் கருவிகள்) பார்க்கின்றன. தோற்கருவிகள் தூங்குகின்றன.

மேலும் உள்ள கலை அமைப்புகளைப் பின்னொருமுறை பார்ப்போம். உள்வழியாகப் பின்னே பார்த்தால் நிலா முற்றம் தெரிகின்றது. முன் இருஅடுக்குகளிலும் இல்லாத அமைப்பு இது. இளவேனிற் பருவத்துச் சித்திரை நிலவு சித்திரக்குலவு அன்றோ? அதைச்சுவைக்க இங்கே 'மணிக்கால் அமளி' கிடக்கிறது. இக்

---

1 "வடமலைப் பிறந்த வான்கேழ் வட்டத்து
தென்மலைப் பிறந்த சந்தனம் மருகும்"—சிலம்பு. 3 : 37, 38.
"வடவர் தந்த வான்கேழ் வட்டம்
குடபுல உறுப்பின் [சந்தனம்] கூட்டுபு நிகழ்த்திய
வண்டிமிர் நறுஞ்சாந் தணிகுவம்"—அகம்; 339: 16—18.

கட்டிலின் அமைப்பு கச்சுக் கட்டிலின் அமைப்பில் வேறுபட்டது. இதிலும் கலையமைப்பின் நிறைவு நிற்கிறது. நிலாமுற்றத்தின் மேலே முல்லைக்கொடி பந்தலிட்டுள்ளது. இவ்விடத்தில் தான் 'நிலவுப் பயன்' கொள்வர்.

பக்கத்தில் நீர்த் தொட்டியில் குவளையும் செங்கழுநீரும் மலர்ந்துள்ளன. அதன் பக்கத்தே வரிப்பந்தாடும் மேடை உள்ளது; கழங்காடும் தெற்றி உள்ளது.

இளவேனிலில் இங்கேயே உறையும் 'அன்னோர்' நம் வருகையால் ஒதுங்கியுள்ளனர். இனியும் அவர்களைக் காக்கவைப்பின் அவர்கள் உள்ளம் வெடித்துவிடும். அவ்வெடிப்புக்கு இடமில்லாமல் நாம் முதுவேனிற் பள்ளியறையைக் காணச் செல்வோம்.

## ஐந்தாவது நிலை மாடம்.

**முதுவேனிற் பள்ளியறை.** நாம் படியில் ஏறுகிறோம். கோடை வெப்பம் நம் உடலில் ஏறுகிறது. பள்ளிக்குள் புகுந்தால் வெப்பம் புறமுதுகிட்டுக் கப்பமும் கட்டி ஓடும் இம் முதுவேனில் அடுக்கு இளவேனில் அடுக்கு போன்றே அமைந்துள்ளது. ஒரு மாற்றம்; அங்கே முகப்பின் நடுவில் அமைந்த சாளரம் இங்கே இல்லை காற்று போவதற்குத் திறந்த வெளியாய் வளைவுகளாகக் கட்டப்பட்டுள்ளதைக் காண்கின்றோம். இது 'கால் போகு பெருவழி' எனப்படும். கட்டடத்தின் இப்பள்ளியில் வீசும் காற்று தடங்கலின்றிப் போவதற்குரிய திறந்த வழி இது. இதனை மணிமேகலை,

> *"சாளரம் ஒழிந்த கால்போகு பெருவழி"*[1]

-என்று குறிக்கின்றது.

இவ்வமைப்பு, வருங் காற்றினை ஓடவிட்டு வெப்பத்தைக் குறைப்பது போலும். இப்பெருவழியாம் திறந்த கூடத்தில் ஒரு பூவணையை இட்டு மாலைக் காலத்தில் கூடி இருந்து உவப்பர்.

இக் கால்போகு பெருவழியின் இரு பக்கங்களிலும் பெரும் அறைகள் போன்ற கூடங்கள் இரண்டு எதிர் எதிராக

---

1 மணி 4.58.

அமைந்துள்ளன. அவற்றுள் இளவேனிற் பள்ளியைப் போன்றே சாளர அமைப்புகள் உள்ளன. பிற பொருள்களும் அவ்வவ்வாறே உள்ளன. முன் காணப்பட்ட ஆடைகளோடு 'பாம்பு உரித்துப் போட்ட சட்டை போன்று' மெல்லியதாகப் பளப்பளப்பான அறுவை ஆடைகள் உள்ளன. 'தென்கடல் முத்தும், தென்மலைச் சந்தனமும்' நிறைந்துள்ளன. வடபுறக் கூடத்தில் சந்தனக் குழம்பு நிறைந்த தொட்டி ஒன்று உள்ளது.

'முதுவேனிற் காலத்து ஞாயிற்றுக் கதிரின் வெப்பம் தாக்குவதால் வெம்பி, இம் மேல்மாடியில் சந்தனக் சேற்றில் குளிப்பது'[1] போன்று பூசிக்கொள்வர்; பூசிக் கொண்டு வெப்பத்தைக் குளுமையாக்கிக் கொள்வர். பலவகை மணமலர்கள், வண்டுகள் சூழ உள்ளன. முல்லை, மல்லிகை மாலைகள் நிறைய உள்ளன. மகர யாழ் உள்ளது. கைவினை வல்ல கம்மியர் செய்த 'ஆலவட்டம்' உறையிடப்பட்டுச் சுவரில் மாட்டப்பட்டுள்ளது. மயிற் பீலியும் மண நார்களும் பின்னப் பட்டுக் கலைத் தொழிலோடு அமைந்த இது, பெரிய விசிறியாகும். இதை ஒருவர் நின்று இரு கைகளாலும் பிடித்து வீசவேண்டும்.

இவ்வடுக்கிலும் நிலா முற்றம் அமைந்திருப்பதைக் காண்கின்றோம். இஃதும் 'நிலவுப் பயன் கொள்ளும் நெடுவெண் முற்றம்' ஆகும். இங்கும் இளவேனிற் பள்ளி அமைப்பையே காண்கின்றோம்.

தென்புறக் கூடத்தில் முத்துக்களால் அமைந்த அமளி மேல் 'அன்னோர்' இருக்கின்றனர் போலும். ஓசையிடாமல் உயரே ஏறுவோம்.

## ஆறாவது நிலை மாடம்.

**முன்பனிப் பள்ளியறை.** என் பின்னே ஏறி வருகிறீர்கள் அன்றோ? நீங்கள் வருவது தெரியவில்லை. காலைப் பனி மூட்டம் மறைக்கின்றது. முன்பனிப் பருவம் அன்றோ? எங்கு நோக்கினும் வெள்ளை ஆவி போன்று பனி மூடி உள்ளது.

1. "வேனில்வாய்க் கதிர் வெம்பலின் மேனிலைத்
தேனுலாம் குளிர் சந்தனச் சேற்றிடை" -சீவ. சி. 2669

இப்பள்ளி, காலதர் முதலிய சாளரங்கள் இன்றிச் சிறு சிறு புழைகளை ஆங்காங்கே கொண்டு விளங்குவது. அவை வெளிப்புறத்தினின்றும் மேல் நோக்கிய புழைகளாய் உள்ளமை பனிவாடை உள்ளே புக இயலாமல் செய்கின்றன. உள்ளே வைர மணிக் கலங்கள் உள்ளன. ஆடைகள், சலசலக்கும் பட்டு களாக உள்ளன. எளிதில் கிடைக்காத எலிமயிர்க் கம்பலங்கள் அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. அங்குள்ள கணப்புக் கலத்தி லிருந்து வெளிவரும் மணப்புகையால் அக்கம்பலங்கள் சூடு ஊட்டப்பட்டுள்ளன.

"கொங்கு விம்முபூங் கோதை மாதரார்
பங்கயப் பகைப் பருவம் (முன்பனிக்காலம்)
வந்தென
எங்கும் இல்லன எலிமயிர்த் தொழில்
பொங்கு பூம்புகைப் போர்வை மேயினார்"[1]

—எனத் திருத்தக்க தேவர் பாடினார். மலர்களும் மாலைகளும் அதிகம் இல்லை. சில மலர்களையே கூந்தலில் பெய்து கொள்வர்.

இங்கே புது அமைப்பு ஒன்றைக் காண்கின்றோம். மாடத்தின் கிழக்கில் முன்னே நீட்டிக் கட்டப்பட்ட முற்றம் ஒன்று தெரிகின்றது. இது நிலாமுற்றம் அன்று. இளவெயில் முற்றம். விடியலில் பனி பெய்யத் தொடங்கியதும் குளிர் வாடை நடுக்கும். காலையில் ஞாயிறு கதிர்களை விரித்ததும்,

"வளமனை மகளிரும் மைந்தரும் விரும்பி
இளநிலா முன்றில் இளவெயில் நுகர"[2]

(சிலம்பு : 14 ; 103, 104) இந்தமுற்றத்தில் அமர்வர். அதற்கேற்ற இருக்கைகள் உள்ளன. கதிரவன் தோன்றியதும் மிக உயரத்தில் எளிதாக இளஞ்சூட்டு ஒளியைப் பெறும் நோக்குடன்தான் இந்த முன்பனிப் பள்ளியை ஆறாவதாக அமைத்துள்ளனர். இது பொருத்தமே. பனி கொட்டும் மேலை நாட்டில் வெள்ளையர் 'வெய்யில் காய்வது' போன்று நம் தமிழர் இப்பருவத்தில் காலைக்

---

1 சீவ. சி : 2680
2 சிலம்பு : 14 : 103, 104

கதிரில் மூழ்கியுள்ளனர். குளிர்தரும் முத்தும் சந்தனமும் இங்கு தென்படவில்லை. பிற ஒப்பனைப் பொருள்களும் கலைப் பொருள்களும் உள. 'அன்னோர்' வெயில்காய வருவர். வருவதற்குள் நாம் மேலே சென்று விடுவோம்.

## ஏழாவது நிலை மாடம்.

**பின் பனிப் பள்ளியறை** அந்தி வந்துவிட்டது. அதனை முந்திக் கொண்டு பனி புகுந்துவிட்டது. ஏழாவது அடுக்கில் நிற்கின்றோம். 'பனிக்காலம் கொடியது என்பார்களே' அப்பனி இப்பனிதான். உதடுகளை வெடிக்க வைக்கும் பனி இது. 'அன்னோர்' உதடுகள் வெடிக்கலாமோ?

இப்பனியைத் தடுக்கும் வகையில் சுவரில் சுண்ணங்கள் பூசப்பட்டுள்ளன. குறுங்கண்களை உடைய புழையும் அடைப்பான்களால் அடைக்கப்பட்டுள்ளது.

கலைமிகு கட்டில்மேல் சேக்கை மெத்தென்று சிவந்த எலி மயிர்க் கம்பலத்தால் போர்த்தப்பட்டுள்ளது. நெய் ஊற்றித் திரியிட்ட இரும்பு விளக்கு எரிகின்றது. அரத்தப் பட்டு உடைகள், ஆடைகள் நிறைந்துள்ளன. அவ்வாடைகள்,

'செந்நெருப்பையே உண்ணுவது போன்ற எலி மயிரால் நெய்யப்பட்ட ஆடைகள், அந்நெருப்பே போலக் கம்பலங்களால் ஆக்கப்பட்டுள்ளன'[1] இவற்றைச் சீவகன் தாங்கினான் என்று சிந்தாமணி பேசுகின்றது.

தொண்டியிலிருந்து கப்பலில் வந்த,
''அகிலும் துகிலும் ஆரமும் வாசமும்
தொகுகருப் பூரமும்'' (சிலப்பதிகாரம் 14 : 109, 110) உள்ளன. இப்பொருள்கள் பலவகைகளாக விரியும். அவை பின் வருவன :

4 வகை அகில்; 36 வகைத் துகில்; 7 வகை ஆரம்;

15 வகை மணம்; 14 வகைக் கருப்பூரம். இவற்றுள் குளுமையற்ற பொருள்கள் உரிய சிமிழ்களிலும் பேழைகளிலும்

---

1 ''செந்நெ ருப்புணும் செவ்வெ லிமயிர்
அந்நெ ருப்பள வாய்பொற் கம்பலம்'' —சீவ. சி. 2686

உள்ளன. வெண்மை மலர்களோ மாலைகளோ இல்லை. 'தமால மாலை' என்று கூறப்படும் பச்சிலை மாலைகள் உள்ளன.

இவ்வடுக்குக்கு வாயில் ஒருபுறத்திலேயே உள்ளது. இடமும் குறுகியுள்ளது. மேல் தளம் மேல்நோக்கி வளைந்த ஓட்டுகள் கூடிய மண்டபமாக உள்ளது. முகப்பில் சுதையால் ஆக்கப்பட்ட கலைத்தொழில் அழகூட்டி விளங்குகிறது. தளத்தின் மேல் இருபுறமும் சிறு கோபுர அமைப்பு உள்ளது.

'அன்னோர்' உதடு வெடிக்காமல் உள்ளேயே உறங்குக, 'அன்னோர்' வாழ்க! இப்பெருமனையாம் எழுநிலை மாடத்தை வாழ்வியற் கலைப் பெருங்கூடமாக ஆக்கிய தமிழினம் வாழ்க என்று இம்மேல்நிலையில் நின்று வாழ்த்துவோம்.

மலையடிவாரத்தில் தவழத் தொடங்கிய இக்கட்டுரை மலை முகடு போன்ற மாடத்தில் நிறைவேறுகின்றது.

முற்கால இலக்கியச் சான்றுகளுடன் காணப்பட்ட இவ்வெழு நிலை மாடத்தை மறுமுறையும் மனக்கண்ணால் கண்டு, இக் கால வானுயர் வளமனைகளுடன் கூர்ந்து நோக்கி, உண்மை, நலம் கண்டு ஒப்பிட்டால் பழந்தமிழ்க் கலை உயர்ந்து விளங்கு வது புலனாகும்.

இங்கே ஒன்றைக் குறித்தல் வேண்டும். தமிழ்நலம் கருதும் தமிழ்நாட்டரசு சிலப்பதிகாரத்தின்பால் நெஞ்சார்ந்த காதல் கொண்ட டாக்டர் கலைஞர் அவர்களை முதலமைச்சராகப் பெற்று அடைந்த பேறுகள் பல. அவற்றுள் ஒன்று பூம்புகாரில் எழுப்பப்பட்டுள்ள 'பூம்புகார்க் கலைக்கூடம்.' அதன்கண் கால மெல்லாம் நிலைத்திருக்குமாறு சிலம்புக் காட்சிகள் கற்சிற்பங் களாக வடிக்கப்பட்டுள்ளன. இஃது ஓர் இலக்கியக் கற்கூடமாகும். இந்நிலையில் இது உலக முதல் அமைப்பு என்னலாம். ஓர் இலக்கியத்திற்கு முழுமையான கற்கலைக்கூடமாக எழுந்துள்ள இது உலகத்தில் முதலாவது.

இப்பூம்புகார்க் கலைக்கூடத்தின் முகப்பு, நான் இங்கே கண்டறிந்து விளக்கிய எழுநிலை மாட முகப்பாக எழுந்து நின்று, தமிழனின் கட்டடக் கலையைக் காட்டிக் கொண்டுள்ளது.

அது இம்முத்திரைக் கட்டுரையின் சித்திரக் கல்வெட்டு.

# 5. மருந்தில் மலர்ந்த இலக்கியம்.

மருந்து உடல் நோய்க்குப் பகை; இலக்கியம், உயிர்க்கு ஊட்ட உணவு. உடலும் உயிரும் ஒன்றிய நலத்திற்கு மருந்தும் இலக்கியமும் இணைந்து துணை நிற்பவை. இலக்கியத்தில் மருந்து மலரும்; மருந்தில் இலக்கியம் மலருமோ?

மலரும்; மிளிரும்.

மூலப் பின்னணி.

## நினைப்பென்னும் நெடுங் கிணறு.

வீரன் மார்பில் பெற்ற போர்ப் புண்ணை இலக்கியம் 'விழுப் புண்' என்று பாடும்.

எனது ஆறாவது அகவையில் ஒரு பெரிய ஆடிக் குப்பியை அணைத்தவாறு குப்புற விழுந்தேன். மார்பில் பெரும் புண்ணாயிற்று.

ஆத்திசூடி உரைகாரர் கோ. வைத்தியலிங்கனாராம் எனது தந்தையார் 'எனது கடைக் குட்டிப் பையன் 'ஒற்றில்லாத விழுப்புண்' (விழு புண் - விழுந்ததால் உண்டான புண்) பெற்ற வீரன்' என நயம்பட உரைத்தார்களாம்.

இலக்கியப் புலமையோடு மருத்துவப் புலமையும் பெற்ற அவர்களே அப்புண்ணை மூலிகை மருந்து மூலம் ஆற்றியவர்கள்.

இவ்விலக்கியப் பேச்சும் மூலிகை மருந்தும் எனது அடிமனத்தில் அழுந்திக் கிடந்தன.

புறநானூற்றில் தோயன்மாறனது போர்வடுக்களுக்கு 'மருந்து கொள்ளப்பட்ட மரம் போல' என்னும் இலக்கிய வடிப்பைப் படித்தபோது அடிமன நினைப்பு உரம் பெற்றது.

ஞானசம்பந்தர் நினைப்பை 'நெடுங் கிணறு' என்றார்.

'தமிழரசு' இதழார் தமிழ் மருத்துவக் கட்டுரை வேண்டியபோது "நினைப்பென்னும் நெடுங் கிணற்" றிலிருந்து ஊறிய நீர்.

**"மருந்தில் மலர்ந்த இலக்கியம்"** — ஆயிற்று

வெளியீடு :<br>"தமிழரசு"<br>தி. ஆ. 2002 – சித்திரை — 17<br>**1—5—1971;**

# புகழின் கண்

கொங்கு நாட்டில் ஈர்ந்தூர் என்றோர் ஊர் உண்டு, இஃது ஈரோட்டுக்கு அண்மையில் அமைந்துள்ள ஊர். இந்நாளில் 'ஈஞ்சூர்' என்று வழங்கப்படுகின்றது. சங்க காலத்தில் அவ்வூர்த் தலைவன் ஒருவன் சிறந்து விளங்கினான். அவன் பெயர் தோயன்மாறன், அவனுக்கு அரியணை இல்லை. ஆனால், மக்களது மன அணை உண்டு. பெருஞ்செல்வனும் அல்லன். ஆயினும், 'இல்லை' என்று வந்தோரை 'இல்லை' என்று விடுக்காதவன். கட்டான உடலுரமும், முட்டாத நெஞ்சுரமும் கொண்டவன்.

தன் மன்னனுக்குப் பகைவரால் இடையூறு நேர்ந்தால் அவ்விடையூற்றைத் தன் இடையூறாக ஏற்று விரைந்து சென்று மன்னனது துன்பத்தினைத்தீர்த்து வந்தான். தன் மன்னனுக்குத் துணையாக நாடு காவலுக்குச் செல்வான். நேரும் போர்களில் முன்னணித் தலைவனாக நின்று வெற்றி தேடித்தருவான். அவன் பங்கு பெறாத போர் இல்லை. அவன் உடலில் வேல் குத்தாத இடம் இல்லை. வாள் வெட்டாத உறுப்பில்லை. அம்பு பாயாத பகுதி இல்லை. இவையெல்லாம் அவன் முதுகைப் பதம் பார்த்தன அல்ல. இவ்வகையில் அவனது உடம்பினைச் சுவை காணாத இரும்பு இல்லை. போர்க்காயங்களால் வடுப் பெறாத தோல்பகுதியும் அவன் உடம்பில் இல்லை.

போரில் வீரர், முகத்திலும் மார்பிலும் தோள்களிலும் பெறும் புண் 'விழுப்புண்' எனப்படும். அப் புண்ணை நாள் தோறும் பெறுவதில் வீரருக்குத் தனிஉவப்பு. விழுப்புண் பெறும் நாள்தான் வாழும் நாள் எனக் கருதினர். 'விழுப்புண் படாத நாள் வழுக்கி வீணான நாள் என்று அந்நாளை வாழ்நாள்களில் ஒன்றாகக் கணக்கிடாமல்' ஒதுக்கி விடுவராம். இதனைத் திருவள்ளுவர்,

"விழுப்புண் படாத நாளெல்லாம் வழுக்கினுள்
வைக்குந்தன் நாளை எடுத்து"[1]

இப்புண்ணைச் சிறந்த புண் — விழுப்புண் என்றார். மனோன்மணீய ஆசிரியரோ,

"புண்ணோ! புகழின் கண்ணே"[2] எனப்
"புகழின் கண்" என்றார்.

விழுப்புண் காய்ந்து வடுவாகும். வீரர்க்கு இவ்வடுக்கள்,

'வெற்றியின் அறிகுறி; வீர உரிமையின் அறிகுறியாக உறுப்புகளில் எழுதப்பட்ட எழுத்துகள்'[3] —என்றார் செயங்கொண்டார். மனோன்மணீய ஆசிரியர் பேராசிரியர் சுந்தரனார் போர் வடு,

"வெற்றித் திருமகள்
முத்தமிட்டு அளித்த முத்திரை"[4]

—என்றார்.

## வடிந்த யாக்கை-

தோயன்மாறன் இத்தகைய முத்திரை வீரன். இம்முத்திரையாம் வடுக்கள் வீரர் உடலுக்குத் தனி அழகாகப் பொலிந்து விளங்கின.

---

1 குறள் : 776.
2 மனோன் ; 4 : 1 ; 160.
3 "அலகில் வெற்றியும் உரிமையும் இவையென
அவயவத்தினில் எழுதிய அறிகுறி
அவையெனப்பல வடுநிரை யுடையவர்"—கலிங். ப : 340.
4 மனோன் : 4 : 1 : 149, 150.

"பயில் வடுப் பொதிந்த யாக்கை"[1]

-என்றார் சேக்கிழார்.

தோயன் மாறன் உடலில் குழியும் கோடும், வாரும் கூறுமாகக் கண்டபடி அமைந்த வடுக்கள் அவ்வீரனது உடலுக்குத் தனி அழகாயின. அவ்வடுக்களினால் அவன்,

"வடிந்த (அழகுபெற்ற) யாக்கையன்"[2] என்று புகழப் பட்டான்.

நாடுகாவலுக்குத் துணைநின்று உதவியமைக்காக மன்னன் பெரும்பொருள் வழங்குவான். போரில் தீரங்காட்டி வெற்றி ஈட்டித் தந்தமைக்காகப் பெரும் பரிசுகள் நல்குவான். அவ்வாறு பெற்ற வற்றைக் கொண்டு வறிஞர்க்கும் புலவர்க்கும் பாணர்க்கும் வேண்டியன வழங்கியும் பசி நீக்கியும் "பாண் பசிப் பகைஞன்" என்று போற்றப் பட்டான்.

ஈகைத்துறையில் இவன் ஒருபடி மேலே சென்றவன். புலவர் முதலியோரது வறுமைப் பிணியைக் காணின் அதைத் தீர்த்துவைக்கச் செல்வம் தேட முனைவான். வேலை வடிக்கும் கொல்லனிடம் ஓடுவான். 'கொல்லனே! வறுமைப் பிணியாளர்க்கு உதவ வேண்டும்; வேலை வடித்துக் கொடு' என வேண்டுவான். பெற்ற வேலொடு நாடு காவலை நாடிச் சென்று பணிபுரிந்து, செல்வம் பெற்று வந்து வறிஞர்தம் வறுமைப் பிணியைப் போக்குவான். இவன் பிறர்க்கென்றே முயன்று செல்வம் ஈட்டினான். இவனை அடைந்த செல்வம் ஒப்புரவிற்கும் ஈகைக் குமே பயன்பட்டது.

திருவள்ளுவப் பெருந்தகை இத்தகையோனைப் (ஒப்புரவு ஆற்றும் பெருந்தகவான எண்ணங்கொண்டவன்) "பெருந்தகை யாளன்" என்றார்.

## மருந்து மரம்.

மரங்களில் மருந்து மரங்கள் உள்ளன. அவற்றது வேர், பட்டை, இலை, பூ, காய், கனி, பால், பிசின் முதலியன மக்கள்தம் பிணிக்கு மருந்தாகப் பயன்படும். அத்தகு மரங்கள்

---

1 பெரி பு : கண்ணப்பர் : 12

2 புறம் : 180 : 6.

மக்கள் காண முடியாத இடத்தில் — புக முடியாத காட்டில் அமைந்தால் பயனில்லை. வேண்டும்போது உடனே விரைவாகப் பெறத்தக்க எளிதான இடத்தில் அமைதலே நலம். ஊரின் நடுவே அமைதலே நலம். அத்தகு மரம் மக்களுக்குப் பயன்படுவதைத் திருவள்ளுவர் ஒப்புரவாளனாம் பெருந்தகையாளனது செல்வத் திற்கு உவமையாக்கி,

> "மருந்தாகித் தப்பா மரத்தற்றால்; செல்வம்
> பெருந்தகை யான்கண் படின்" [1]

இக்குறளின் கண்கண்ட இலக்கியமாய் விளங்கினான் ஈரந்தூர் கிழான் தோயன்மாறன். இக்குறளில் கூறப்பட்ட உவமை யின் கருத்தில் மட்டுமன்றிக் காட்சியிலும் இலக்கியமானவன் இவன்.

'மரம் பிணிக்கு மருந்தாய் உதவுவது போன்று ஏழையர்க்கு உதவினான்' என்ற கருத்தோடு தோற்றத்திலும் மருந்து மரம் போன்று காட்சியளித்தான்.

மரத்தின் பாலை மருந்துக்கு எடுக்கக் கருவியால் குத்துவர். பால் வடிந்தபின் காய்ந்த இடம் குழியாக வடுப்பெறும். அது போன்று போரில் வேலால் குத்துண்ட தோயன்மாறன் உடலிலும் குழி வடுக்கள் காட்சியளித்தன. மரத்தின் பட்டையை மருந்தாக்கக் கருவியால் வெட்டிச் சீவி எடுத்தபின் அந்த இடம் காய்ந்து வடுப் பெறும். அது போன்று, போரில் வாளால் வெட்டுண்டு புண் பட்டுக் காயம் ஆறி, வார் வாரான வடுக்கள் மாறன் உடலில் காட்சியளித்தன. மருந்து எடுக்கப்படும் மரங்கள் பின்னர் சாறோ பாலோ வடிவதால் காய்ந்து பிசினாக – முடிச்சு முடிச்சாகத் தொங் கும். அதுபோன்று மாறனது உடலிலும் வாள்வீச்சில் சரிந்த தோல்புண் ஆறி முண்டும் முடிச்சுமாகத் தொங்கிக் காட்சியளித் தது.

இவ்வாறாக, ஈர்ந்தூர்கிழான் தோயன்மாறன் போர்ப் புண்களின் வடுக்களால் 'மருந்து கொள்ளப்பட்ட மரம்' போலக் காட்சியளித்தான்.

---

1 குறள் : 217.

## பால் கொண்ட அத்தி

மருந்துமரத்தில் குத்தி, சீவி, சரித்து வெட்டக் கையாண்ட இரும்புக் கருவிகள் அம்மரச் சாற்றின் சுவையைக் காணும். மாறன் உடலில் புண்ணை உண்டாக்கிய வேலும் வாளும் அம்பும் முதலிய வற்றின் இரும்பு அவனது குருதிச் சுவை கண்டவை. அவ்வாறு இருப்புச் சுவை கண்ட விழுப்புண், நோய் தீர்ந்து ஆறி ஆறி வடுக்களாகக் காட்சியளித்தன. அப்புண்களை அவன் ஏற்றது ஒப்புரவு செய்வதற்காகவே. இவற்றோடு அவன் வடுக்களை நோக்குங்கால் அவை, அவன் உடலுக்கு அழகாகத் தோன்றின. இந்த நோக்கோடு மாறனைப் பார்த்தார், மதுரைப் புலவர் குமரனார் என்பார். திருவள்ளுவர் கூறிய, "மருந்தாகித் தப்பா மரம்" இப்புலவரது நினைவில் ஓடிவந்தது; பாடினார் :

"இரும்புசுவைக் கொண்ட விழுப்புண்நோய்தீர்ந்து
மருந்துகொள் மரத்தின் வாள்வடு மயங்கி
வடுவின்று வடிந்த யாக்கையன், கொடையெதிர்ந்து
ஈர்ந்தை யோனே பாண்பசிப் பகைஞன்"[1]

— என்று பாராட்டினார்.

ஒரு தோழி பேசினாள் :

என் தலைவியது பாட்டன், தந்தை, தமையன், மாமன் மைத்துனன், தனயன் முதலிய உறவினரது உடல்களைப்பார். போர்ப்புண்களில் வடுப்பெற்றவர் அவர்;

"பால்கொண்ட அத்தியெனவே
உடல்வடுப்பட்ட எமர்"[2]

— என்று அவளைப் பேச வைத்தார் துறைமங்கலம் சிவப்பிரகாசர்.

பொதுவாக மருந்து கொள்ளப்பட்ட மரத்தை உவமையாகக் காட்டியதை முன்னே கண்டோம். இங்கு, சிறப்பாக அத்திமரத் தைக் குறித்து — அதனினும் குத்தியெடுத்த பாலைக் குறித்து - காய்ந்த வடுவைக் குறித்து விளக்கமாக்கி உவமை காட்டியதைக் காண்கிறோம்.

---

1 புறம் : 180 : 4 — 7.
2 திருவெங்கைக் கோவை : 99.

## உவமையால் உணரல்.

ஒரு பொருளின் தொழில், பயன், வடிவம், நிறம் ஆகிய வற்றை விளக்கமாகக் காட்ட, ஒத்த மற்றொரு பொருத்தமான பொருளை உவமையாகக் கூறுதல் மரபு. உவமை காட்டுவது செய்யுள் அழகுக்கு மட்டுமன்று; உவமிக்கப்படும் பொருளின் உள் தன்மை, உயர்வு, சிறப்பு, விளைவு முதலியவற்றின் விரிவு களையெல்லாம் வெளிப்படுத்திக் காட்டவே உவமை பயன்படும். உவமையாகக் கூறப்படும் பொருளின் தன்மைகள் எல்லாம் உவமிக் கப்படும் பொருளிலும் பொருத்திக் காணவேண்டும் என்பதன்று. காணுவதற்கு இடம் இருப்பின் இடம்கொடுக்கும் வழியெல்லாம் காணுவதே சிறப்பு.

பவளம் போன்ற இதழ் என்றால், பவளத்தின் செம்மைநிறம் மட்டில் இதழுக்குப் பொருந்தும். முள்முருக்கை மலர்போன்ற இதழ் என்றால் அம்மலரின் செம்மை நிறமும், மென்மையும் பொருந் தும். கொவ்வைக் கனி போன்ற இதழ் என்றால் அக்கனியின் செம்மை நிறமும், மென்மையும், வடிவும், திரட்சியும், உள்நரம்பு ஓட்டமும் பொருந்தும். மேலும், பொருத்தம் காண எண்ணி இதழைப் பிளந்து விதை இருக்குமோ எனக் காணுவதோ?

எனவே, உவமையில் உற்ற தன்மைகளை விரிவாக உணர்ந்து அத்தன்மைகள் எவ்வளவில் உவமிக்கப்படும் பொருளுக் கும் உற்றனவாக ஒத்து வருகின்றனவோ அவ்வளவில் பொரு ளின் சிறப்பு இயல்புகளை உணரலாம். இதற்குத் தொல்காப்பியம்

> "உவமைப் பொருளின் உற்ற துணரும்
> தெளிமருங் கிலவே திறத்திய லான" [1]

— என இடம் வகுக்கின்றது.

இதனை விளக்கும் பேராசிரியர் என்றும் உரையாசிரியர்,

> "உவமை கூறுவோர் உவமையில் பகுதி பலவும் உணராமற் சொல்லியவழியும் அஃது உணரவரும் என்பது கருத்து" – என்று உரை வகுத்தார்.

எனவே, விரிவாக உணர விரும்புவோர் உவமை கூறியவர் கருதிக் கூறாத கருத்துகளும் பொருந்தி வருமானால் கொள்ளலாம். அவ்வழியில் இங்கு அத்திமர உவமையைக் காணலாம்:

---

1 தொல் : பொருள் : 291

அத்தி மரம் — வீரர் உடல்;
குத்திய ஆணி — பாய்ந்த வேல்;
வடிந்த பால் — வடிந்த குருதி;
மரச் சிதைவு — குழிப் புண்;
காய்ந்த இடம் — ஆறித் தோன்றிய வடு.

இவ்வாறு நேருக்கு நேர் உவமையை விரித்துப் பொருத்திக் காண்பது போன்று நேருக்கு நேர் வெளிப்படையாக அன்றி, உள்ளீடாக விளையும் கருத்தையும் விரித்துப் பொருத்தலாம்.

அத்திமர உவமையின் உள்ளீட்டுக் கருத்துகள் யாவை?

அத்திமரத்துப் பாலால் பாதரசத்தைச் சாம்பல் தூள் போன்று ஆக்கலாம். வேல் பாய்ந்து குருதியால் கிளர்ந்தெழுந்த வீரனது வீர உணர்வு பகைவரது தாக்குதலாம் பாதரசத்தை தூசித் தூளாய் முறியடித்ததாக விரிவாக்கலாம். இங்கே அத்திப் பால் நேரே பாதரசத்தோடு கலந்து தூசி ஆனது போன்று, குருதி நேரே பகைவருடன் கலந்து தாக்கியதாகக் கொள்ளமுடியாது. இது நேர் பொருத்தமன்று. குருதி வெளிப்பாட்டின் விளைவால் நேர்ந்த விளைவுப் பொருத்தம்.

அத்திப்பால் பலவகைப் பிணிகளையும் போக்க வல்லது. இதனை மருத்துவ நூல்கள் குறிக்கின்றன. அதுபோன்று குருதி வெளிப்பாட்டில் வீரம் பொங்கி விளைந்து, வெற்றி தந்து, அவ் வெற்றியால் மன்னனது மனக் கவலையாம் பிணியைப் போக்கும்; மக்கள் தம் அடிமையாம் பிணியைப் போக்கும்.

இவ்வழியில் தோயன்மாறன் விழுப்புண் வடுக்களைக் கொண்ட உடம்பிற்குக் காட்டப்பட்ட உவமையாகிய, மருந்து கொள்ளப்பட்ட மரத்தின் தன்மைகளை விரிவாகக் காணலாம். கண்டு, மாறனது சிறப்பியல்புகளின் பயன்களை விரிவாக உணரலாம்.

இதனால் இரண்டு பயன்கள் விளையும். ஒன்று மருத்துவப் பயன்; மற்றொன்று இலக்கியப் பயன்.

மருந்துக்குப் பயன்படும் மரங்கள் பல. அவை மக்களுக்கு எளிதாகக் கிடைத்தலே நலம். இந்நாளிலும் எளிதாகக் கிடைக்கும் மருந்து மரங்கள் ஓதி, பூவரசு, நாவல், இலந்தை,

மா, வேம்பு, இருப்பை, புன்னை, அகத்தி முதலியன. முற்காலத்தில் இம்மரங்கள் தனியாரது உடைமைகளாக இல்லை. பொதுப் பொருள்களாக இருந்தன. நோய் யாவருக்கும் பொதுவுடைமையாக இருப்பது போன்று மருந்துகளும் பொதுவுடைமைப் பொருள்களாக இருந்தன. இந்நாளிலும் இவற்றில் சில மரங்கள் பொதுமக்கள் பயன்கொள்ளும் பொதுவுடைமைப் பொருள்களாக உள்ளன. இவற்றின் உறுப்புகள் பலவும் மருந்துக்குப் பயன்படுவன. ஆயினும், அவை ஒவ்வொன்றையும் விரித்துப் பயன் காண்பது மிக அகலமாகிவிடும்.

எனவே, இவற்றினது உறுப்புகளில் மிகுதியும் பயன் நல்கும் பட்டைகளின் தன்மைகளை விரித்துக் காணலாம். அப்பட்டைகளின் எல்லாவகைப் பயன்களையும் முற்றக் காணல் இயலாது. பட்டையை மட்டும் தனித்துப் பயன்கொள்ளும் முறைகளைமட்டும் விரிவாக்கலாம். அவ்விரிவை மாறனுடன் பொருத்தி அவனது சிறப்பு இயல்புகளால் விளைந்தவற்றையும் உணரலாம் அவ்வுணர்வால் பல பொதுமைக் கருத்துகள் வெளியாகும்.

## ஒதிய மரம்.

'ஒதி பருத்தால் உத்திரத்திற்கு உதவாது' என்பர் ஆனால், மரம் பருத்துப் பலகையாக்கினால் அப்பலகையில் படுத்தல் உடலுக்கு நலந்தரும்.

ஒதியம் பட்டையை இடித்து, இடித்த நிலையிலேயே. உடல் வீக்கத்திற்குக் கட்டினால் கெட்ட நீரை வாங்கி வீக்கத்தை வடியச் செய்யும். இதனை மருத்துவக் குறள் என்னும் நூல்,

> "ஒதியம்பட் டையிடித்து வீக்கத்திற் கட்டித்
> திதிசெய் வதாற்கடி வார்"

-என்று குறிக்கின்றது.

பட்டையின் சாற்றைப் பாலில் கலந்து அளவோடு அருந்திவரப் 'பெரும்பாடு' என்னும் நோய் அரும்பாடுபட்டு அழியும், ஆண்களுக்கு விந்து கசிவதைத் தடுத்து வீரியத்தை உண்டாக்கும்.

ஒதிய வேரின் பட்டையை எடுத்து நீரிலிட்டுக் கறுக்கு நீராக்கி அந்நீரால் புரையோடிய புண்களைக் கழுவக் கழுவு நீராகப் (Lotion) பயன்கொள்ளலாம். அது புண் அழுகலைப்

போக்கும். அந்நீரால் பல்வலி, வாய்ப்புண், நாப்புண் ஆகிய வற்றிற்குக் கொப்புளிக்கப் புண் ஆறும்.

இவ்வாறு,

ஓதியம்பட்டைச் சாற்றின் விளைவு,
வீக்கத்தைப் போக்கி,
பெரும்பாட்டை நூக்கி,
விந்தைத் தேக்கி,
புரையோட்டத்தைத் தாக்கி,
புண்களை நீக்குவது

போன்று,

மாறனது வடுக்களின் வீர விளைவும்
விளைவால் நேர்ந்த செல்வமும்
வறுமையாம் வீக்கத்தைப் போக்கி,
பகைவரின் பெரும்படையை நூக்கி,
வீரத்தைத் தேக்கி,
துன்பமாம் ஊடுருவலைத் தாக்கி,
மனப்புண்களை நீக்கியதாகக்
கொள்ளலாம்.

## பூவரசு.

நூறாண்டு முற்றிய பூவரசினது பட்டை பெரும்பயன் நல்கும் மருந்து. இப்பட்டையின் சாற்றால் புழுத்த புண்ணைக் கழுவப் புண் ஆறும். காணாக் கடிநஞ்சுக்கு ஒருவாய் ஒருவாயாக மூன்றுவாய் சாறு கொடுக்க நஞ்சின் கொடுமை தீரும். சோகை யால் வீங்கிய பெருவயிற்று வீக்கத்திற்குத் தொடர்ந்து ஒரு கிழமை (ஏழுநாள்) ஒவ்வொரு வாய் கொடுத்து வர நோய் நொடியும். இம்மரப்பட்டையின் குணம்பற்றி அகத்தியர் எழுதிய குணபாடம்' என்னும் மருத்துவ நூல்,

'பூவரசம் பட்டை (காயும் பூவும்) தொழுநோயாம் குட்டப் புண்ணையும், சூலையாம் மிகுதியான வயிற்று நோவையும் தொல்லும். பொல்லாத மகோதரம் என்னும்

பெருவயிறு, சோகைநோய், உடம்பைச் சேர்ந்து பரவும்
கரப்பான் என்னும் அரிப்பு நோய், கிரந்தி, குளிர் மேக
நோய் ஆகிய இவற்றையெல்லாம் போக்கும்''[1]
—என்று பேசுகின்றது.

இவ்வாறு,

பூவரசம்பட்டைச் சாறு,

புழுத்த புண்ணை ஆற்றி,
காணாக் கடிநஞ்சை மாற்றி,
பெருவயிற்றைத் தேற்றி,
பெருநோய்களைத் தூற்றிப்
பயன் நல்குவது

போன்று

மன்னனது வீரத்தினால்
விளைந்த செல்வமும்
மன்னனது புழுத்த பழியைஆற்றி
உட்பகையை மாற்றி,
மக்கள் அச்சத்தைத் தேற்றி,
கோழைகளைத் தூற்றித்
திகழ்ந்தது என்று உணர
முடிகின்றது.

## நாவல்.

நாவல் பட்டையின் சாறு இரும்பைச் செந்தூரமாக்கும் வல்லமை கொண்டது. நாவல் கனியின் சாற்றில் பொன்னே உண்டாக்கப்படும். அப்பொன் சிறந்தது. நாவற்பொன் (சாம்பூநதம்) என்னும் பெயரால் அப்பொன் தமிழ் இலக்கியங்களில் குறிக்கப்படுகின்றது.

நீண்டநாள் இருமல், ஈளை இவற்றிற்கு நாவற்பட்டையின் சாற்றைப் பாலுடன் கலந்து ஒரு மண்டிலம் (48 நாள்கள்)

1 ''குட்டம் கடிதூலை கொல்லும்; விடபாசம்
துட்ட மகோதரஞ் சோகையொடு — கிட்டிமெயில்
தாவுகரப் பான்கிரந்தி தண்மேகம் போக்கிவிடும்
பூவரசங் காய்பட்டை பூ'' —அகத்தியர் குணபாடம்: 72

கொடுத்துவர மிகு பயன் விளையும். குழந்தைகளுக்கு உண்டாகும் புள்குற்றப் பிணிகளுக்கு இதன் சாற்றைத் தேனுடன் கலந்து ஒரு சங்கு அளவு நாளுக்கு ஒருவேளையாக 15 நாள்கள் கொடுக்கலாம். எவ்வகைப் பிணியும் அறும்.

இவ்வாறு,
நாவற்பட்டைச் சாறு,

நாட்பட்ட நோயைத் தகைத்து,
குழந்தைப் பிணியைப் பகைத்துத்
தீர்ப்பது

போன்று

மாறனது விழுப்புண்களின் விளைவும்
பழம்பகையைத் தகைத்து,
தொடக்கப் பகையையும் தோற்றத்திலேயே பகைத்தது
—எனக் கொள்ளலாம்

## இலந்தை.

'இலந்தை மரப் பட்டையை இடித்து அறுகம் புல்லோடு சேர்த்துப் பாலூற்றி அரைத்து ஒரு மண்டிலம் என்புருக்கி நோயால் வற்றிய உடம்புக்கு உண்' [1]
—என்னும் மருத்துவக் குறளின்படி ஒரு மண்டிலம் கொடுத்துவர என்புருக்கி போகும்; மெலிந்த உடல் மெருகேறும்.

இதேபோன்று,

மாறனது தோற்குருதியின் விளைவுகளால்
நாட்டு எளிய மக்களின் என்புருக்கியாம் இல்லாமைப் பிணி
இல்லாமற்போயிற்று —என அறியலாம்.

## மா.

மாமரத்தினது பட்டைச் சாறு ஓர் ஊட்ட மருந்து. நான்கு வாய் ஆவின் பாலுடன் அதிற் பாதி அளவு மாம்பட்டைச்

1 "இலந்தையின் பட்டை யிடித்தறுகுபா லிலரைத்
துலர்ந்ததேக த்திற் குண்"— —மருத்துவக்குறள்,

சாற்றைக் கலந்து இரண்டு திங்கள் அருந்திவர உடல் வலுப் பெறும். பட்டையை வேறு மருந்துப் பொருள்களுடன் கூட்டித் தைலமாக்கி நீராடக்கொள்ளலாம். வேரின் பட்டைச் சாற்றை வாந்திக்குக் கொடுக்க வாந்தி நிற்கும்; வயிற்றுக் கடுப்பும் போகும்.

இது போன்று,

மாறனது வீரம்
நாட்டு மக்களுக்கு ஊட்டம் அளித்தது
என்றும்,
பல வீரருடன் ஒத்துநின்றமையால் பெரும்படைக்கு
வெற்றி விளைத்தது என்றும்,
அவனது தாள் ஊன்றிய முயற்சியால்
வறிஞரது தளர்ச்சிகள் நீங்கின என்றும் காண முடிகின்றது.

## வேம்பு.

வேப்பம்பட்டையின் சதைப்பகுதியில் 5 பலம் எடுத்து ஒரு படி நீர்விட்டு அரைப்படியாகச் சுண்டவைத்து வடிகட்டி. இளஞ் சூட்டோடு மூன்று வாய் அளவு கொடுக்க, பரவும்வெப்பக்காய்ச்சல் வராது. அந்நோய் கண்டு நீங்கிய அயர்ச்சிக்கும் இவ்வாறு கொடுக்கலாம். 20 ஆண்டுகள் முதிர்ந்த மரத்தின் பட்டையைக் காயவைத்துப் பொடி செய்து 2 வராகன் எடை தேனில் குழைத்துக் கொடுக்கத் தொடர்ந்து இருந்துவரும் நீர் வேட்கை தணியும். நாச்சுவையின்மை போய்ச் சுவை ஊறும். மேலும் பயன்கள் பலவாம்.

வேப்பம் பட்டை போன்று
மாறனது வடுவால் வடிந்த யாக்கையைக் காணும் போதெல்லாம்
பொதுமக்களிடம் பரவியிருந்த பழைய அச்சம் பறந்தது; மீண்டு வரினும் அவனை நினைத்தாலே ஓடி ஒழிந்தது;
மக்களது சோர்வு எண்ணம் மாறி நாட்டுப்பற்று ஊறியது - என்று கொள்ளலாம்.

## இலுப்பை, புன்னை, அகத்தி.

இலுப்பைப் பட்டையின் கறுக்குக் குடிநீர், வளி நோயைப் போக்குவது. புன்னைப்பட்டைச் சாற்றால் வயிற்று புழு சாகும். அகத்திப் பட்டையால் கறுக்கு நீரிட்டுக் குடிக்க அம்மைக்காய்ச்சல் குறையும்; நச்சுக் காய்ச்சல் நண்ணாது.

இவைபோன்று,

மாறனது சிறப்பியல்புகள்,

பொதுமக்களது பல்வகைத் துன்பத்திற்கும் துணை யாய்ப் பூசற் புழுக்களை கொல்லுவதாக,

நற்பாதுகாப்பாக விளங்கின - எனக் கருதமுடிகிறது.

இத்தகைய பெரும்பயன் நல்கும் மருந்து மரங்களைப் பொது மக்களும், மன்னரும், பகைவரும் பாதுகாத்தனர். அள வோடு அவற்றைப் பயன்படுத்தினர். பட்டையை மரத்தின் அளவிற்கேற்பச் செதுக்கி எடுத்தனர். அதிகம் வேண்டுமென்று பட்டையை அடியோடு உரிக்க மாட்டார்.

'அறிவுடையார் அப்போதைய நலன் கருதி, எப்போதும் நலம் பயக்கும் ஆக்கங்களை அழிக்க மாட்டார்?' 1 என்கின்றது திருக்குறள். அவ்வாறு அழிக்கக் கூடாதவற்றைப் பூங்குன்றனார்

உயிரைக் காக்க வேண்டிய இன்றியமையாதநிலையில் பயன்படும் மருந்தாயினும் அம்மருந்தைக் கொள்ள அம் மரம் பட்டுப் போகும்படி அதன் உறுப்புகளைக் கொள்ள மாட்டார் மாந்தர்' — என்று முதலில் குறித்து,

தொடர்ந்து,

'உடல் உரம் கெடும் அளவில் உயர்ந்த தவமாயினும் செய்யார்'

- என்றும்,

'மக்களது வளம் கெடும் அளவில் வரியாக மன்னர் பொன்னைக் கொள்ளார்' 2

— என்றும் எழுதினார்.

1 "ஆக்கங் கருதி முதலிழக்குஞ் செய்வினை
ஊக்கார் அறிவுடை யார்" — குறள் : 463.

2 "மரஞ்சாம் மருந்துங் கொள்ளார் மாந்தர்;
உரஞ்சாச் செய்யார் உயர்தவம்; வளங்கெடப்
பொன்னுங் கொள்ளார் மன்னர் ... ... ...' - நற் : 226.

ஒருசிறு நன்மைக்காக மற்றொரு பெருநன்மையை அழித்த ஒரு செய்திக்கு உவமை கூற எழுந்த பெருங்கதை ஆசிரியர் கொங்கு வேளிர் என்பார்,

"மரமுதல் சாய மருந்து கொண்டாங்கு" [1]

— என்று 'மரத்தின் வேர் மருந்துக்கு வேண்டுமென்று அடியோடு தோண்டி அம்மரத்தையே சாய்ப்பதாகிய' தீமையைக் காட்டினார்.

தோயன்மாறனைக் கொண்டு விளக்கியமை அவனை ஒரு சான்றாகக் கொண்டு அக்கால நன்மக்களது தன்மைகளையும் அவர்கள் ஒப்புரவு ஆற்றுவதில் வாழ்க்கையை ஊன்றியிருந்ததையும் எடுத்துக்காட்டும் நோக்கத்தைக் கொண்ட இவ்விளக்கக் கட்டுரையால்,

1. இயற்கை மூலிகை மருந்துகள் அந்நாளில் பெரிதும் நடைமுறையில் இருந்தன.
2. அம்மருந்துகளும் பொதுவுடைமைகளாக அமைந்திருந்தன.
3. மக்களும் தம் கடமையறிந்து பயன்கொண்டு ஒழுகினர்.
4. வீரர் பெரும் இடையூற்றையும் ஏற்று மக்களுக்கு உதவினர்
5. ஒப்புரவினாலேயே உலகம் மிளிர்ந்தது.
6. "தமக்கென முயலா நோன்றாள்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே ... உலகம் உண்டு" — என்பனவற்றை அறியலாம்.

மருந்து மர உவமையால் இத்துணைக் கருத்துகளும் விளக்கிய பாங்கில் மலர்ந்தமை கொண்டு மருந்து மரத்தில் மலர்ந்த இலக்கியமாக இதனைக் கொள்ளலாம்.

இதனால்,

**இது மருந்தில் மலர்ந்த இலக்கியம்.**

---

1 பெருங் : 1 : 37 : 188.

# 6. குட்டுவன் எடுத்த கோட்டம்.

சிலப்பதிகாரம் ஒரு வரலாற்றுக் காப்பியம். அதற்குச் சான்றுகள் பல. ஒன்று சேரன் செங்குட்டுவன் எடுத்த கண்ணகியார் சிலை. அவன் எழுப்பிய கோட்டம் மற்றொன்று. அஃது எங்கு உள்ளது? சான்று எவற்றில்?

மலையில்; சிலையில்.

மூலப் பின்னணி.

**அறுவை அன்று;**
**சுவை உண்டு.**

*சேரன் செங்குட்டுவன் எழுப்பிய கண்ணகியார் கோட்டம்பற்றிய கருத்து தமிழ்நாட்டில் எழுந்தது. தமிழ்நாட்டரசு இதிற் கவனங்கொண்டது. கண்ணகியார் கோட்டம் 'தமிழ்நாட்டு மலை முகட்டில்' என்றனர் தமிழறிஞர்.*

*'கேரளத்து நிலமட்டத்தில்' என்றனர் மலைஞால அறிஞர்.*

*தமிழ்நாட்டு 'நெடுவேள் குன்றமே' எனப் பதி வாக்க எழுந்த கட்டுரை இது.*

*படித்தவர் பாராட்டு :*

> *"பொதுவாக ஆய்வுக் கட்டுரை என்றால் அறுவைக் கட்டுரையாக இருக்கும். ஆனால், "***குட்டுவன் எடுத்த கோட்டம்***" —சுவையாக இருந்தது. கட்டுரை தந்த கோவை. இளஞ்சேரன் தமிழ் மக்களின் பாராட்டுக்கு உரியவர்"*

*—எசு. ஆர். சந்திரன், கோவை—1.*
*('பார்த்தோம்; படித்தோம்' பகுதி—'தமிழரசு')*

வெளியீடு :
"தமிழரசு"
தி. ஆ. 2004—வைகாசி—15;
1—6—1973.

குட்டுவன்
எடுத்த
கோட்டம்.

# புதிர்க்கு ஓர் அதிர்வு.

கண்ணகியார்க்குச் சேரன் செங்குட்டுவன் சிலைநாட்டிக் கோட்டம் எடுத்த நிகழ்ச்சி,

தமிழக வரலாற்றில் ஒரு புகழ்முடி;

உலக வரலாற்றில் ஒரு புதுமை ஏடு;

தமிழர் மறக்கக் கூடாத பெருமைச் சின்னம்.

இது,

மறுக்க முடியாத வைரத் தூணாகவும் திகழ வேண்டும்.

இதற்கு,

ஓர் ஆய்வு முத்திரை குத்தியாக வேண்டும்.

கண்ணகியார் தம் இறுதிக் காலத்தில் ஏறி நின்ற நெடுவேள் குன்றம் எது? அக்குன்றிற் பதினான்கு நாள்கள் நின்று இயற்கை எய்திய வேங்கைக் கானலின் தடத்தைக் காண முடியுமா? சேர மன்னன் குட்டுவன் எடுத்த கோட்டம் எங்கே? வடித்த சிலையைக் காணக் கூடுமா?

—இவ்வினாக்கள் நிறைவாக விடுவிக்கப் படாப் புதிர்களாகவே நின்றன. அவிழ்க்க முடியா முடிச்சுகளாகவும் இறுகி இருந்தன.

புதிர்கள் சிறிது அதிரக் கேட்கின்றோம்;
இறுகிய முடிச்சுகள் நெகிழக் காண்கின்றோம்.

அதிர்விற்கும் நெகிழ்விற்கும் காரணராகத் தமிழக ஆய்வு அறிஞரும் கேரள ஆய்வாளரும் தத்தம் ஆய்வு முடிவுகளை வெளியிட்டுள்ளனர்.

தமிழக அறிஞர் புலவர் சி. கோவிந்தராசனார் சிலப்பதி காரத்தை அடியொற்றிய ஆய்வுப் பணியை மேற்கொண்டார். 'வேங்கைக் கானலின் தடங் கண்டேன்' என்றார். 'அக்கானல் சுருளிமலை மீது உள்ளது; அங்குதான் குட்டுவன் எடுத்த கோட்டம் சிதைவுடன் உள்ளது; அவன் வடித்த இமயக் கற்சிலை இதோ' என்று படமெடுத்துக் காட்டியுள்ளார்.

'கேரள நாட்டிலுள்ள கிரங்கனூர் பகவதி
கோவிலே குட்டுவன் எடுத்த கண்ணகிக் கோட்டம்'
—இதுதான் கேரள ஆய்வாளரது அறிவிப்பு.

கேரள ஆய்வாளரது முடிபும், தமிழ் ஆய்வாளரது முடிபும் மாறுபடுகின்றன. இவ்விரண்டையும் ஒருங்கு நினைந்து மேலும் ஆய்வுகள் தொடர்தல் வேண்டும். இரு முனைகளிலும் இவ்வாய்வு நிகழ வேண்டும். இருவகைக் கருத்துகளையும் அவ்வப்படியே தூங்கவிட்டு விட்டால் உண்மை வெளிப்படாது. மேலும் 'ஒரு வரலாற்று உண்மையை நிலைநாட்ட முடியாத எளியவர்கள்' என்னும் பழிச்சொல் தென்னக ஆய்வாளரைச் சாரும்.

எனவே, ஆய்வு தொடர வேண்டும். ஆய்வின் ஒருமித்த முடிபு, ஒரு கருத்திற்கு அரண்கட்ட வேண்டும். உண்மை ஒன்றாகத்தானே இருக்க முடியும்? அவ்வுண்மையை ஏற்றுப் போற்றி மதிப்பது ஆய்வாளரது இயல்பு என்பதும் உண்மையாக வேண்டும்.

இந்நோக்கில் இக்கட்டுரை எழுகின்றது.

## கானலும் கோட்டமும்.

நம்முன் எழுந்துள்ள இவ்வாய்விற்குக் களமாக அமைந்த கருத்துகள் இரண்டு.

ஒன்று : கண்ணகியார் ஏறிநின்ற வேங்கைக் கானல்.

இரண்டு : செங்குட்டுவன் இமயக் கல்லில் சிலை வடித்து எடுத்த கண்ணகிக் கோட்டம்.

முதற்கருத்தாகிய சிலப்பதிகாரத்தில் குறிக்கப்படும் வேங்கைக் கானல் அமைந்த 'நெடுவேள் குன்றம்' திருச்செங்கோடு என்றும், திருச்செங்குன்று என்றும் தமிழகத்து இலக்கிய அறிஞர் களால் கருதப்பட்டது. இந்த அடிப்படையில் இரண்டு ஊர் களிலும் கண்ணகியார்க்கு விழாக்கள் எடுக்கப்பட்டன.

இதுபோது கம்பம் பள்ளத்தாக்கை அடுத்துள்ள சுருளி மலைதான் நெடுவேள் குன்றம் என்னும் கருத்து வெளிப் பட்டுள்ளது.

இவ்வேங்கைக் கானல் அமைந்த நெடுவேள் குன்றம் பற்றிய கருத்தைக் கேரள ஆய்வாளர் அணுகியதாகத் தெரியவில்லை. 'நெடுவேள் குன்றம் என்பது சுருளிமலைப்பகுதி அன்று' என்றா வது மறுக்கும் கருத்தையும் அறிவித்தார் அல்லர். எனவே, அன்னார் 'இதில்—கண்ணகியார் நின்று மறைந்த வேங்கைக் கானல் கருத்தில்—கருத்தைச் செலுத்த வேண்டியதில்லை' என்று கருதியிருக்கலாம்; அன்றி, உடன்பாடாகவும் அமையலாம்.

ஆனால், இம் முதற் கருத்து இரண்டாவது கருத்திற்குத் துணை நிற்பது மட்டுமன்றி அரண் கோலுவதும் ஆகும்.

எவ்வாறு?

எவ்வகை ஆய்விற்கும் அகச்சான்றுகள், புறச்சான்றுகள், தடயங்கள், சின்னங்கள் முதலியவற்றை நாடவேண்டும். இவ் ஆய்விற்கும் அவையே கைகொடுப்பன. அவற்றுள் மூலச் சான்றாகத் தலைநிமிர்ந்து நிற்பது சிலப்பதிகாரம் என்பது முடிந்த முடிபு. இது மறுக்கப்பட்டால் ஆய்விற்கு அடித்தளமே இல்லாமற் போகும். எனவே, சிலம்பைச் சுண்டிக் காண்போம்.

## வையை வழி.

மதுரை தீக்கிரையாயிற்று. கண்ணகியார் மதுரை நகரின் மேற்குத் திசை வாயில் வழியாக மதுரை நகரைவிட்டு வெளி யேறினார், இரவும் பகலுமாக நடந்து மயங்கிய நிலையில்,

"உரவுநீர் வையை ஒருகரை கொண்டு"[1]

மேற்கு நோக்கி நடந்தார். மேடு, பள்ளம் – மலை, பள்ளத்தாக்கு எங்கும் ஏறி இறங்கி நடந்தார். பாண்டி நாட்டு எல்லையை விட்டு நீங்கிச் சேரநாட்டு எல்லையில்,

"நெடுவேல் குன்றம் அடிவைத் தேறிப்
பூத்த வேங்கைப் பொங்கர்க் கீழ்"[2]

பதினான்கு நாள்கள் நின்றார். பின்னர் இயற்கை எய்தினார்.

இவ் அகச்சான்றை அடியொற்றிச் சென்றால் கம்பம் பள்ளத் தாக்கை அடைந்து சிறு மடிப்பு மலைகளில் ஏறி இறங்கிச் சுருளி மலையை அடையலாம். இம்மலையே சிலப்பதிகாரம் குறிக்கும் முருகனுக்குரிய நெடுவேள் குன்றம் ஆகின்றது. சுருளிமலை, முருகன் இடங்கொண்ட இடம் என்பதை,

"சுருளிமலை மீதில் மேவும் சீலா — உன்னைத்
தோத்தரித்தேன் சுப்பிரமணிய வேலா"

– என்னும் பிற்காலப் பாட்டும் குறிக்கின்றது.

எனவே, சிலம்பின் கருத்தையொட்டி நடந்து சென்ற தமிழ் ஆய்வாளர் கண்டுள்ள சுருளிமலையே 'நெடுவேள் குன்றம்' என்பது பொருத்தமாகப்படுகின்றது. இன்று செல்லினும் அஃது ஒத்து வருதல் காணலாம்.

தொடர்ந்து சிலப்பதிகாரம் ஒலிபரப்பும் கருத்து இதனை உறுதிப்படுத்துகின்றது.

மலைவளங் காண வந்த சேரனிடம் மலைவாழ் குறவர் தாம் வேங்கைக் கானலில் கண்ட கண்ணகியார் பற்றி அறிவித்தனர். செங்குட்டுவன் கண்ணகியார்க்குச் சிலை வடித்துக் கோட்டம் அமைக்க முனைந்தான். வடநாடுசென்று இமயத்தில்கல்லெடுத்துக் கனக விசயர் தலையிலேற்றிக் கங்கைக் கரை வரை தூக்கச் செய்து, நீராட்டிச் சேரநாடு மீண்டு சிலைவடித்துக் கோட்டம் எடுத்தான்.

---

1 சிலம்பு : கட்டுரை : 185.
2 சிலம்பு : கட்டுரை : 190, 191.

கண்ணகியார் இயற்கை எய்திய சில திங்களுக்குப்பின்னரே குன்றக் குறவர் சேரனிடம் அவரது வருகையை அறிவித்தனர் இமயத்தில் கல் எடுத்துவரச் சேரன் வஞ்சி நகரத்திலிருந்து நீங்கி இமயம் சென்று கல்லைத் தேர்ந்து எடுத்துக் கங்கையாற்றில் நீராட்டிக் கரையில் தங்கியிருந்த நாளில் காலத்தைக் கணித்துரைக்கும் கணி எழுந்து,

"எண்ணான்கு மதியம் வஞ்சி நீங்கியது" [1]

— என்றான். எனவே, இந்த இடைக்காலம் 32 திங்கள்கள் ஆகின்றது. பின்னர் வடநாட்டினின்றும் வஞ்சி நகர் மீண்டு சிலை வடித்துக் கோட்டம் அமைக்க 30 திங்களேனும் ஆகியிருக்கும். எனவே, கண்ணகி மறைவிற்குப் பின்னர் ஏறத்தாழ ஆறு ஆண்டுகள் கழிந்த பின்னரே கண்ணகியார் கோட்டம் அமைக்கப்பட்டிருக்க வேண்டும் என்றாகின்றது.

## தேவந்தி நடந்த வழி.

கோட்டம் அமைந்த செய்தி சோழ நாட்டிலும் பரவியது. கண்ணகியாரின் வளர்ப்புத்தாயாகிய காவற்பெண்டு, தோழியாகிய தேவந்தி முதலியோர் கண்ணகியார் கோட்டம் சென்று கண்ணகியார் சிலையைக் கண்டு வழிபடும் ஆர்வத்தில் புறப்பட்டனர். இச்செய்தியைச் சிலப்பதிகாரத்து வாழ்த்துரை காதையின் முன்னுரையாக அமைந்த உரைப்பாட்டு மடை பின்வருமாறு அறிவிக்கின்றது :

"... ... ... ... ... காவற் பெண்டும் அடித்தோழியும் கடவுட் சாத்தனுடன் உறைந்த தேவந்தியும் உடன் கூடிச் **சேயிழையைக் (கண்ணகியாரைக் காண்டும்** என்று மதுரை மாநகர் புகுந்து, முலைப் பூசல் கேட்டாங்கு அடைக்கலம் இழந்து உயிரிழந்த இடைக்குல மகள் (மாதரி) இடம் எய்தி, (ஐயையோடும்) வையையொரு **வழிக் கொண்டு,**

1 சிலம்பு : நீர்ப்படை : 149.

மாமலைமீமிசை யேறிக் கோமகள்தன் கோயில்
புக்கு நங்கைக்கு சிறப்பயர்ந்த செங்குட்டுவன்
திறம் உரைப்பர்மன்"

இப்பகுதியில் தடித்த எழுத்தில் காட்டப்பட்டுள்ளவை கவனத்திற் கொள்ளத் தக்கவை. 'காவற்பெண்டு முதலியோர் கண்ணகிப் படிமத்தைக் காணப் புறப்பட்டனர். மாதரி மகள் ஐயையை (வழிகாட்டுதற்காகவும்) உடன் கூட்டிக் கொண்டனர். கண்ணகியார் சென்ற வழியாம் வையைக் கரையை, வழியாகக் கொண்டனர். மலையின் உச்சியில் ஏறினர் (அங்கிருந்த) கண்ணகியார் கோட்டத்துள் புகுந்தனர்' -என்னும் இவை கண்ணகியார் வையை வழியே சென்றேறிய இடம் சுருளிமலை வேங்கைக் கானல் என்பதை உறுதி செய்கின்றன. மேலும் அங்கேதான் கண்ணகிக் கோட்டம் இருந்தது என்பதை இறுதித் தொடர் சுட்டுகின்றது. இக்கோட்டமே 'மங்கல தேவிக்கோட்டம்' என்னும் பெயரால் பிற்கால மக்களால் வழங்கப்பட்டது. 'மங்கலதேவி' என்பது கண்ணகியாரையே குறிக்கும்.

**மங்கல தேவிக் கோட்டம்.**

கண்ணகிக் கோட்டம் 'மங்கலதேவிக் கோட்டம்' என்ற பெயருடன் வரந்தருகாதையில்,

"மங்கல மடந்தை கோட்டத் தாங்கண்
செங்கோட் டுயர்வரைசேணுயர் சிலம்பில்"[1]
—எனவும்

"மங்கல மடந்தை கோட்டத் தாங்கண்
அங்குறை மறையோ னாகத் தோன்றி" —எனவும்

இரண்டு இடங்களில் குறிக்கப்படுவதும் நினைக்கத்தக்கது. இம்மங்கலதேவிக் கோட்டமாம் கண்ணகியார் கோட்டமே இது போது இடிபாடுகளோடு காணப்படும் சின்னங்கள், கல்வெட்டு கள் எல்லாம் 'இதுதான் சேரன் அமைத்த இமயக் கற்சிலைக் கோட்டம்' என்பதற்குச் சான்றுகளாக நிற்கின்றன.

---

1 சிலம்பு : வரந்தரு : 53, 54 ; 88, 89

**கோவலன் அடக்கம்.**

மேலும், இக்கண்ணகியார் கோட்டம் காலப் போக்கில் விரிவடைந்துள்ளது. இக்கோட்டம் அமைந்த பரப்பில் மேலும் கோட்டங்கள் பக்கத்தில் எடுக்கப்பட்டுள்ளன. கண்ணகியார் கோட்டத்தின் பக்கத்தில் அடக்க மேடை (சமாதி) அமைப்பான சிறு கோட்டங்கள் இடிபாடுகளுடன் தென்படுகின்றன. இவற்றில் ஒன்று கோவலனது நினைவாக அமைக்கப்பட்டதாகலாம். இதற்கு இயைபான கருத்து மணிமேகலைக் காப்பியத்தில் உள்ளது.

கண்ணகிக் கோட்டத்திற்கு மணிமேகலை வந்தாள் இதனை அறிவிக்கும் மணிமேகலைக் காப்பிய அடிகள் ஒரு புதுச் செய்தியையும் தருகின்றன. அது கோவலனுக்கும் படிமம் அமைக்கப்பட்டது என்பதாம். அக்காப்பியத்து வஞ்சிமாநகர் புக்க காதையின் தொடக்கத்தில், மணிமேகலை,

> "தனியாக் காதல் தாய்கண் ணகியையும்
> கொடைகெழு தாதை கோவலன் தன்னையும்
> கடவுள் எழுதிய படிமங் காணிய
> வேட்கை துரப்பக் கோட்டம் புகுந்து
> வணங்கி நின்று குணம்பல ஏத்தி"னாள்[1]

இதுகொண்டு, கண்ணகிக் கோட்டம் எடுக்கப்பட்டதற்குப் பின்னர், சேரன் செங்குட்டுவனாலோ பிறர் எவராலோ அக் கோட்டத்திலேயே கோவலனுக்கும் படிமம் அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

இவ்வாறு, பல்வகைப் பொருத்தங்களும் சான்றுகளும் கூடிநிற்கும் சுருளி மலை மங்கலதேவிக் கோட்டமே நெடுவேள் குன்றத்துக் கண்ணகிக் கோட்டம் எனக் கொள்ள வைக்கின்றது

---

1 மணி : வஞ்சிமாநகர் : 2—6

## கிரங்கனூர்ப் பகவதிக் கோவில்.

கேரள ஆராய்ச்சியாளர் காட்டும் கிரங்கனூர்ப் பகவதிக் கோவில் எவ்வகைச் சான்றுகளுடன் கண்ணகிக் கோட்டமாகக் (இமயக் கல்லில் சிலையமைத்த கோட்டமாகக்) கொள்ளப்பட்டது என்பதற்கு விளக்கம் வெளிவரவில்லை. பெரும்பாலும் செவி வழிச் செய்திகளாலும் அப்பக்கத்துக் கதை வழக்காலும் கொள்ளப்பட்டுள்ளது.

கேரள ஆய்வாளர் கருத்திற்கும், தமிழக ஆய்வாளர் கருத்திற்கும் ஒரு பெரிய முரண்பாடு உள்ளது. அது மலைக்கும் மடுவிற்கும் உள்ள முரண்பாடாகும். ஆம்; கேரளத்தார் அறிவிக்கும் பகவதிக் கோவில் உள்ள கிரங்கனூர் நிலமட்டத்தில் உள்ளது. தமிழறிஞர் அறிவிக்கும் மங்கலதேவிக் கோட்டம் மலையுச்சியில் உள்ளது. இது மலைக்கும் மடுவிற்கும் உள்ள முரண்பாடு அன்றோ?

இம்முரண்பாட்டின் முடிபு காண இரண்டு வினாக்கள் எழுதல் இயல்பு.

கண்ணகிக் கோட்டம் அமைந்த இடம்,

நிலமட்டமா?

மலை உச்சியா?

இவ்விரு வினாக்களுக்குக் கிடைக்கும் ஒரு விடை ஆராய்ச்சியின் முடிவிற்கு உறுதி கூட்டும்.

## மலைமுகட்டிற்குச் சான்றுகள் ஆறு.

சிலப்பதிகாரம் விடை கூறுகின்றது. காவற்பெண்டு, தேவந்தி முதலியோர் கண்ணகிக் கோட்டம் காணவந்த செய்தியை அறிவிக்கும் உரைப்பாட்டு மடையில் விடை துவங்குகின்றது.

1 "வையையொரு வழிக்கொண்டு மாமலை மீமிசை
யேறிக்
கோமகள்தன் கோயில் புக்கு"

—இத்தொடர் குறிக்கும் கருத்து 'மலைமீது கண்ணகியார்க்குக் கோவில் இருந்தது; அதிற் புகுந்தனர்' என்பதன்றோ? இந்த "மாமலை மீமிசை கோமகள்தன் கோயில்" என்பது மலைமேல்தான் கண்ணகிக் கோட்டம் இருந்தது என்பதற்கு முதற் சான்று.

இத்தொடரைத் தொடர்ந்து வரும்,

2 *"நங்கைக்குச் சிறப்பயர்ந்த செங்குட்டுவன் திறம்*
*உரைப்பர்மன்"*

—என்னும் தொடர் அவர்கள் வந்த போது 'அம்மலைமேல் கோட்டத்தில் சேரன் செங்குட்டுவனும் இருந்தான்' என அறிவிக்கின்றது. பின்னரும் வரந்தருகாதையில்,

"தெய்வமுற் றெழுந்த தேவந் திகைதான்
கொய்தளிர் குறிஞ்சிக் கோமகன் தன்முன்
கடவுண் மங்கலங் காணிய வந்த
மடமொழி நல்லார்"[1] —எனத் தேவந்தி கூறுவதாக உள்ளது.

"குறிஞ்சிக் கோமான் (மலையரசன் செங்குட்டுவன்) முன் கடவுள் மங்கலம்" —என இங்கே குறிக்கப்படுவதும் 'சேரன் மலை மீது கண்ணகிக் கோட்டத்தில் இருந்தான்' என்பதைக் காட்டு கின்றது. இம்மலைமேல் கண்ணகிக் கோட்டத்தில் நிற்கும் செங்குட்டுவன், கண்ணகியாரது மின்னொளிக் காட்சியைக் காண் கின்றான். கண்டு வியந்து பேசுகின்றான்:

"பொன்னஞ் சிலம்பில் புனைமே கலைவளைக்கை
மின்னுக்கொடியொன்றுமீ விசும்பில்தோன்றுமால்"[2]

—என்னும் அடிகள் பொன்போன்ற அழகிய மலையில் கண்ணகியாரது காட்சியைக் கண்டதாக குறிக்கின்றது. மலைமேல்தான் கண்ணகி யார் கோட்டம்இருந்தது என்பதற்கு இஃதுஇரண்டாவதுசான்று.

---

1 *சிலம்பு : வரந்தருகாதை : 45—48*
2 *சிலம்பு : வாழ்த்து ; செய்யுள் 9,*

(3) இதைத் தொடர்ந்து, கண்ணகியாரது வான்நிழல் மொழியாக,

**வெண்வேலான் குன்றில்** விளையாட்டு யான்
அகலேன்''[1]

—என்று குறிக்கப் படுகின்றது. இங்கும் நெடுவேள் (வெண்வேலான்) **குன்றின்மேல்** (கோட்டத்தில்) எனப்படுவது மூன்றாவது சான்று.

(4) வரந்தருகாதையில் தேவந்தி தெய்வமுற்றுப் பேசுகின்றாள்:

''மங்கல மடந்தை கோட்டத்து ஆங்கண்
செங்கோட்டு உயர்வரை சேணுயர் சிலம்பில்
பிணிமுக நெடுங்கற் பிடர்த்தலை நிரம்பிய
அணிகயம் பல உள''[2]

—என்னும் இவ்வடிகளில் கண்ணகியார்க்குக் கோட்டம் அமைத்த மலை '**நேராக உயர்ந்த உச்சியை உடைய** மலை' என்று குறிக்கப்படுகின்றது. இது, நான்காவது சான்று.

(5) இம்மலைப் பகுதியில் பல அழகிய சிறு நீர்ச்சுனைகள் இருந்தன என்பதை ''**அணிகயம் பல உள**'' என்பதனால் அறிகின்றோம். இதற்கேற்பச் சுருளிமலை மேல் இன்றும் நீர்ச் சுனைகள் காணப்படுகின்றன. இஃது ஐந்தாவது சான்று.

(6) சிலப்பதிகாரம் நிறைவேற்றும் இறுதிப் பகுதியில் மலைமேல் நிற்கும் சேரன் செங்குட்டுவன்,

''பத்தினிக் கோட்டப் படிப்புறம் வகுத்துத்
தேவந் திகையைச் (வழிபாடு) செய்கென் றருளி
வலமுற மும்முறை வந்தனன் வணங்கி''[3]

நின்றான் எனப்படுகின்றது. இது மலைமேல் நின்று சொல்லிய தாகலின், இஃது ஆறாவது சான்று.

---

1 *சிலம்பு ; வாழ்த்து : செய்யுள்* 10.
2 *சிலம்பு : வரந்தரு* : 53—56.
3 *சிலம்பு : வரந்தரு* ; 151—155.

இவ் ஆறு அகச்சான்றுகளையும் தொடர்புடன் நோக்குங் கால் 'கண்ணகியார் கோட்டம் மலைமேல் எடுக்கப்பட்டதே' என்பது உறுதியாகின்றது.

## கிரங்கனூர் அன்று.

கேரளத்தார் கூறும் கிரங்கனூர் மலைப்பகுதியன்று. அவ்வூர்க்கு 20 கல் தொலைவிலேயே மலை உள்ளது. அம்மலை மேல், குறிக்கப்படும் பகவதி கோவில் இல்லை எனவே எவ்வகை யிலும் கிரங்கனூர் ஈடுகொடுக்க இயலாததாகின்றது.

**சென்று வகுத்தான்.**

மற்றொன்றும் இங்கே நோக்கத்தக்கது. சேரன் செங்குட்டுவன் முன்னர் மலைவளங் காணச் சென்ற செய்தி அது. அவன் வஞ்சிமாநகரி லிருந்து புறப்பட்டுக் கிழக்கே செல்பவன் யானை முதலிய கூட்டத்துடன் சென்றதால் மடிப்பு மலைகளை ஏறிக் கடக்காமல் பள்ளத்தாக்குகளின் வழியாக வளைந்து வளைந்து நெடுந்தொலைவு கடந்து மலைமேல் ஏறினான். அவன் சென்றதை,

"பைந்தொடி ஆயமொடு பரந்தொருங் கீண்டி
வஞ்சி முற்றம் நீங்கிச் செல்வோன்"[1]

—என இளங்கோவடிகள் அறிவிக்கின்றார். "நீங்கிச் செல்வோன்" என்பது கொண்டு இதனை ஒரு பயணமாகவே கொள்ள வேண்டும். இதனை (செல்வோன் என்பதை) மனத்திற் கொண்டு பின்னர் வரும் கண்ணகிக் கோட்டத்தில் கண்ணகிச் சிலையினைக் கடவுள் மங்கலம் செய்ய முனைந்த நிகழ்ச்சியோடு காணவேண்டும்.

இமயக் கல்லில் கண்ணகியாரது வடிவம் வடித்தாகி விட்டது. அதற்கெனக் கோட்டமும் எழுப்பியாகிவிட்டது. அதிற் சிலையை நாட்டிக் கடவுள் மங்கலம் செய்ய வேண்டும். இதற்கு முனைந்தான் செங்குட்டுவன். இதனைக் குறிக்கும் சிலப்பதிகாரம்' வஞ்சிமாநகரிலிருந்து 'சென்று' அப்பணியை நிறைவேற்றிய குறிப்பைத் தருகின்றது. செங்குட்டுவன், அந்தணன், ஆசான், பெருங்கணி,

---

1 சிலம்பு : காட்சி : 8, 9.

"சிறப்புடைக் கம்மியர் தம்முடன் சென்று
"பால் பெற வகுத்த பத்தினிக் கோட்டத்து"[1]

— கடவுள் மங்கலம்

செய்ததாகப் பேசுகின்றது. இங்கு "சென்று" என்று குறித்திருப்பதையும் முன்னர் "நீங்கிச் செல்வோன்" என்றதோடு இணைத்து நோக்கினால் சிலையை நாட்டவும் வஞ்சியிலிருந்து ஒரு பயணம் செய்ததாகவே கொள்ள நேரும். அப்பயணம் எவ்விடம் கருதியது? அண்மையில்உள்ளகிரங்கனூர்க்கு எனக்கொள்ள இயலாது. கண்ணகியார் இயற்கை எய்திய இடத்தில் கோட்டம் எடுப்பது பொருத்தமானது என்னும் கருத்தோடு இயைவதால் அம்மலை நோக்கிய பயணமாகவே கொள்ளலாம். இதற்கு முன்னே கண்டுள்ள கருத்துகளோடு பொருத்திப் பார்த்தால் இக்கருத்து வலிந்து கொள்வதாகாது. எனவே, "சென்று" என்னும் சொற்குறிப்பு பக்கத்துணையாக நின்று கண்ணகிக் கோட்டம் அமைந்தது வேங்கைக் கானல் அமைந்த நெடுவேள் குன்றமாம் சுருளி மலையே என்பதைக் குறிக்கின்றது.

இறுதியாகக் கண்ணகியார் சிலையை ஆராயவேண்டும்,

## சிலைக் கல்.

இதுபோது காணப்பட்டுள்ள சிலை (சுருளிமலை மீது காணப்பட்டுள்ளது) அமர்ந்த தோற்றமுடையது. அடிப்பீடமும் சேர்த்து 2 அடிக்கும் குறைவான உயரமும், ஓர் அடி அகலமும், முக்கால் அடி பருமனும் கொண்டது. இஃது ஓர் அம்மிக் கல் அளவினதேயாகும். இவ்வளவுக் கல்லை இருவர் தூக்கலாம். நின்ற கோலத்தில் உள்ள கிரங்கனூர்க் கோவில் பகவதிக் சிலைக்கல் இருவர்எந்நிலையிலும் தூக்கவோ, தாங்கவோ முடியாததாகும்.

மேலும் சுருளிமலைச் சிலையின் அடிப்பகுதியில் ஒரு மூளி உண்டாகி, வேறு வகையான கல் பொருத்தப்பட்டுச் சிலை நிறைவேற்றப்பட்டுள்ளது. ஓரளவு கவனத்தோடு நோக்கினாலும் இதனைக் காண முடிகின்றது. இவ்வாறு நேர்வதற்குக் காரணம் உண்டு.

---

1 சிலம்பு : நடுகல் : 218 – 225.

கனக விசயர் தலையின் கல்லை ஏற்றினான் என்பது அவர்களைத் தூக்கச் செய்யவேண்டும் என்பதன் அறிகுறிச் செயலேயாகும். அன்றி, இமயத்தில் ஏற்றி வஞ்சியில் இறக்கினான் என்பது அன்று. ஆயிரம் கல் தொலைவு தூக்கிவரச் செய்தல் இயலாத ஒன்று. சிலப்பதிகாரப்படி நோக்கினாலும் கல்லை எடுத்த இடத்திலிருந்து, நீராட்ட வேண்டிய கங்கைக் கரை வரைதான் கனக விசயர் தலையில் கல் கொணரப்பட்டது என்பதை உணரலாம். இவ்வாறு கங்கைக் கரை வரை வந்த கல் பின்னர் வஞ்சி மாநகர் வரையிலுமோ – கோட்டம் அமைத்த இடம் வரையிலுமோ கொண்டு வரப்பட்டிருக்கும். இவ்வாறு கொணரப்பட்ட போக்குவரத்து வகையால் விழுந்தோ மோதியோ மூளியாக வழியுண்டு. இமயத்தினின்றும் மீண்டும் ஒரு கல்லைக் கொணர்தலில் உள்ள பெரும்பணியைக் கருதி இம்மூளி பெரிதாகக் கொள்ளப்படாமல் மூளியிடம் வேறு கல்லால் நிரப்பப்பட்டுப் பொருத்தப்பட்டுச் சிலை வடிக்கப்பட்டிருக்கலாம். இந்த மூளியும் ஒருவகைச்சான்றாகின்றது.

## கல் சான்று ஐந்து.

மேலும்,

1. சுருளிமலையில் காணப்பட்டுள்ள கண்ணகியாரது சிலைக்கல் 1800 ஆண்டுப் பழமையைக் காட்டும் தேய்மானத்துடன் உள்ளது.

2. அத் தேய்மானத்திலும்,

 "கைவினை முற்றிய தெய்வப் படிமத்து
 வித்தகர் இயற்றியவிளங்கியகோலத்து"[1]

 –எனச் சிலப்பதிகாரம் குறிப்பதற்கு ஏற்பக்கலைத் திறம் விளங்குகின்றது. அதனில் மேலோட்ட வரிகளாக அணிகலன்களது அமைப்புகளும் தெரிகின்றன.

3. சிலையில் இடது பக்க மார்பின் காம்புப் பகுதி சிதைந்து தோற்றமளிக்கின்றது. கண்ணகியார் மதுரையைத் தீக்கிரையாக்கியபோது திருகி எறிந்

1 சிலம்பு: நடுகல்: 227, 228.

தது மார்பின் காம்புப் பகுதியேயாகும். (இது எனது 'முடிச்சுவிழ்கும் சொல்' என்னும் கட்டுரையில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது)

4. சிலையமைப்பு, தெய்வப் படிமமே யாயினும் தெய்வ வடிவக் குறிகளுடன் மாந்தர் வடிவக் குறிகளும் தென்படுகின்றன.

5. கல்லின் நிறம் வெளிரிய மஞ்சள்நிறமாகத் தோற்றமளிப்பது கந்தகக் கலப்புடைய இமயக் கல்லின் தன்மையைச் சுட்டிக் காட்டுவதாக உள்ளது.

இவ்வைந்து சான்றுகளுடன் முன்னே காட்டப்பட்ட ஆறு சான்றுகளையும் பிற சின்னங்களையும் தடயங்களையும் இயைத்து நோக்குங்கால் 'சுருளிமலை மங்கலதேவிக் கோட்டத்தில் காணப் பட்டுள்ள கண்ணகியார் சிலையே சேரன் செங்குட்டுவன் வடித்த சிலை' என்று கொள்ளும் உறுதி நிலைக்கின்றது. இதன் தொடர்பில் 'குட்டுவன் எடுத்த கோட்டம்' சுருளிமலை என்று இப்போது வழங்கப்படும் கம்பம் பள்ளத்தாக்கை அடுத்த நெடு வேள் குன்றத்தின் மீதுள்ளதுதான் என்ற உறுதியும் நிலைக்கின்றது.

## இறுதி முத்திரை.

இவ்வுறுதிக்கும் ஒரு முத்திரை குத்த இறுதியானதும், வேறு எவ்வகை மறுப்பும் கூற இயலாமற் போவதுமான ஆய்வு ஒன்று உண்டு. கருத்து மாறுபாடு எழுந்துள்ள இரண்டு சிலைக் கற்களினின்றும் ஒவ்வொரு சில்லளவு கல் துண்டை எடுத்து ஆய்வதே அது. இக்கால அறிவியலின் துணைகொண்டு எக்கல் இமயக்கல் எனக் கண்டு விடலாம். அவ்வாறு காண்பது முடிந்த முடிபான முத்திரை ஆகும்.

## 7. முடிச்சவிழ்க்கும் சொல்

பஞ்சு நூல் பின்னலாகி முடிச்சாகும். ஊசி முனையால் முடிச்சவிழ்த்துச் சிக்கலைப் போக்குவர். இலக்கிய நூலிலும் முடிச்சு நேர்ந்து கருத்து முடக்கப்படும். நுணுக்கமான ஆய்வே இதற்கு ஊசிமுனையாகும். ஆய்வில்,

ஒரு சொல்லே
முடிச்சை அவிழ்க்கும்;
முடக்கத்தைக் கவிழ்க்கும்.

மூலப் பின்னணி.

## பின்னலும் முடிச்சும்.

'தமிழ் நூல் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு வட மொழி நூல் மூலம்' -என்பது ஒருவகையார்க்கு வாடிக்கை நோய். அன்னார் சிலப்பதிகாரத்தி லும் வாய் வைத்தனர்; பின்னர் பொத்திக் கொண்டனர்.

நாகைத் தமிழ்ச் சங்கத்தில் நிகழ்ந்த சிலப்பதி கார வகுப்பில் பல கருத்தினரும் பயின்றனர்.

பயின்றவருள் ஒருவகையார் 'கண்ணகியார் மார்பைத் திருகி எறிந்தது போன்றவை நம்பத் தகாதவை' என ஒரு சிக்கலைப் பின்னினர். மறுவகையார் இதனை வாய்ப்பாக்கிக்கொண்டு 'நிகழாத கதைதானே' என்று பின்னலை முடிச்சாக்கினர்.

மறு வகுப்பில் ஒரு சொல் கொண்டு முடிச் சவிழ்த்துப் பின்னலைப் பிரிக்க முடிந்தது.

ஏற்ற இருவகையாரும் இதனைக் கட்டுரை யாக்க வேண்டினர். 'தமிழரசு' இதழ் வெள்ளி விழா மலர்க்குக் கட்டுரை வேண்டுகையும் இணைந்தது.

**"முடிச்சவிழ்க்கும் சொல்"**

எழுந்தது.

வெளியீடு :
**"தமிழரசு"** வெள்ளிவிழா மலர்.
தி. ஆ. 2002 : கி. பி. 1971.

# மணிப்பொருள் பத்து.

**மணி**- என்னும் சொல் ஓர் அழகான சொல்;

இச்சொற்கு **அழகு** என்ற ஒரு பொருளைப்[1] நிகண்டுகள் சொல்கின்றன.

**மணி**- ஒரு நல்ல சொல்.

இதற்கு **நன்மை** என்ற ஒரு பொருளைப்[1] பிங்கல நிகண்டு பேசுகின்றது.

**மணி**- ஒரு முத்துச் சொல்.

இதனை முற்றிய வித்து —**முத்து**— கண்களால் காணப் படுவது.

**மணி**- ஓர் ஒளி வீசும் சொல்.

ஒன்பது வகை மணிகளுக்கும் பொதுவான இச்சொற்கு 'ஒளி' என்னும் பொருள் இயல்பாகின்றது.

---

1 ''வனப்புநவ மணியும் மௌத்திகமும் (முத்தும்) நீலமும்
கருநிறமும் நன்மையும் கண்டையும் (கண்டாமணி) மணியே''
—பிங். நி : 3917

**மணி**– இனிமையாக ஒலிக்கும் சொல்;

அரண்மனை முற்றத்திலும் திருக்கோவில் மண்டபத்திலும் யானையின் இரு மருங்கிலும் காளையின் கழுத்திலும் தொங்கி ஒலிக்கும் மணியை இலக்கியங்கள் இசைக்கின்றன.

**மணி**– ஒரு மங்கலச் சொல்;

பாட்டின் முதலில் அமையவேண்டிய [1]**மங்கலச் சொற்களின்** பட்டியலில் இதையும் அமைத்துப் பாட்டியல் நூல்கள் பகர்கின்றன.

**மணி**– ஒரு கருஞ்சொல்லுமாகும்;

இதற்குக் கருமை என்னும் பொருளை[2] நிகண்டுகள் வகுக்கின்றன.

**மணி**– ஒரு காலக் கண்ணாடிச் சொல்;

இதனை மணியடித்து **நேரத்தைக்** காட்டும் [3]மணிப்பொறி நாளெல்லாம் ஒலித்துக்கொண்டுள்ளது.

**மணி**– உயிருள்ள உடலைத் தோற்றுவிக்கும் சொல்;

இஃது உயிர்களைத்தோற்றுவிக்கும் **ஆண், பெண் உறுப்புப்**[4] பகுதிகளுக்குப் பெயராக அமைந்தது.

இவ்வாறு ஒன்பது வகையான பொருள்களில் விளங்கும் இச் சொல்லுக்கு ஒன்பது என்றொரு பொருளும் அமைந்திருப்பது வியப்புக்கு உரியது அன்று.

தைலவருக்கச் சருக்கம் என்னும் நூல் ஒன்பதாவது நாளை "மணிநாள்" என்று குறிக்கின்றது.

---

1 *"சீர்பொன் பூமணி திங்கள் பரிதி*
*... ... ... ... ... ... ... ... ... ... ... ...*
*திகிரி பிறவும் செப்புமங் கலமே"*
—இலக்கண விளக்கம் : பாட்டியல் : 11

2 *"வளப்புனவ மணியும் மௌத்திகமும் (முத்தும்) நீலமும்*
*... ... ... ... ... ... ... ... ... ...*
*திகிரி பிறவும் கண்டையும் (கண்டாமணி) மணியே"*

3 *"........................... ஒலித்தது சுவரின்*
*அண்டையில் இருந்த அடிக்கும் மணிப்பொறி"*
—குடும்ப விளக்கு 79, 80

4 *யாழ்ப்பாணத்தகர முதலி,*

இவ்வாறு 'மணி' என்னுஞ் சொல் பத்து பொருள்களைக் கொண்டது.

இந்த மணியான சொல் சிலப்பதிகாரத்தில் ஒரு முடிச் சவிழ்க்கும் சொல்லாகின்றது.

## கண்ணகியார் முதன்மை உறுப்பினர்

சிலப்பதிகாரம் என்றவுடன் நமது நினைவின் முனையில் வருபவர் கண்ணகியார். கண்ணகியார் சிலம்பில் தலையாயவர்; சிலப்பதிகார முதன்மை உறுப்பினர் என்பதை இளங்கோவடி களார் தமது நூலில் எங்கணும் பரவலாகக் காட்டியுள்ளார். அம் முதன்மையைச் சிலம்பின் தொடக்கமாகிய மங்கலவாழ்த்துப் பாடலிலேயே அமைத்துள்ளார். அவர் முதலில் அறிமுகப்படுத் தும் காப்பிய உறுப்பினர் கண்ணகியாரே.

கண்ணகிக்கு ஆர் விகுதி கொடுத்துச் சிறப்பித்துக் 'கண்ணகியார்'' என்றவர் சிலப்பதிகார உரையாசிரியர் அடியார்க்குநல்லார் ஆவார்.

''கண்ணகியார் மதுரை மூதூர் யாதென வினாவின திறத்தையுடைய"[1] –என்பது அவரது வாய்மொழி. பின்னும் ஓர் இடத்தில் ''இக்கருத்தானன்றே கொலைக்களக் காதையிற் கண்ணகியார் ....................... என்றதூஉமென்க'[2] என்று சிறப்பித்தார்.

## மணிக் கண்ணகியார்

மணி என்னும் சொல்லுக்கமைந்த பத்து பொருளிலும் கண்ணகியார் பின்வருமாறு சிலம்பில் ஒளிவிடுகின்றார். அதனை முன்னே கண்ட வரிசைப்படியே காண்போம்:

**அழகு மணி :** ''போதிலார் திருவினாள் புகழுடை வடி''[3] வால் அழகு மணியாய்த் திகழ்கின்றார்.

---

1 சிலம்பு : பதிகம் : 77 உரை
2 சிலம்பு : மனையறம்படுத்தகாதை : 89 உரை
3 சிலம்பு : மங்கலவாழ்த்து : 26.

**நன்மை மணி :** "வானம் பொய்யாது வளம்பிழைப் பறியாது நீள்நில வேந்தர் கொற்றம் சிதையாது" நாட்டு நன்மை காக்கும் பத்தினிப் பெண்டாய் நின்று நன்மை மணியாகப் பொலிகின்றார்.

**முத்து மணி :** "மாசறு பொன்னே, வலம்புரி முத்தே"—என்னும் வண்ணனையில் முத்துமணியாகக் காண்கின்றோம்.

**ஒளி மணி :** மகளிர்க்குரிய பண்பு ஒவ்வொன்றும் ஒவ்வொரு வண்ண ஒளிஎனலாம். அவ்வண்ண மணிகளாகக் கண்ணகியாரது பண்புகள் ஒளி விடுகின்றன.

கற்புத் திறத்தால் **வைரம்**; மதுரையிற் காட்டிய நெஞ்சுரத்தால் **வைடூரியம்**; பெருங்குணத்துக் காதலால் **புட்பராகம்**. எள்ளி நகையாடியவர்பாலும் இரக்கங் காட்டிய பசுமைக் குணமாம் **அருளால்** பச்சை மணியாம் **மரகதம்**; தீயன பயிலாத **செஞ்சொல்லால் பவளம்**; மஞ்சள் கலந்த சிவந்த **உடல்நிறத்தால் கோமேதகம்**; **செஞ்சொல்** கொண்டு **வழக்காடிய துறத்தால்** செம்மணியாம் **மாணிக்கம்**. ஆழ்ந்த **அடக்க** உணர்வால் ஆழ்கடல் **முத்து**; குடிக்கு ஏற்பட்ட பழிக்கு **நஞ்சாய் நின்று** பழியைக் கொன்றமையால் **நீலம்**.

இவ்வாறு ஒன்பான் ஒளிமணியாய் ஒளிர்கின்றார்.

**ஒலி மணி :** பாண்டியன் அவையில் புகார் நகரின் சிறப்பை விளக்குங்கால் "வாயிற் கடைமணி நடுநா நடுங்"கிய நிகழ்ச்சியைக் கூறி, பாண்டியன் வாயிலில் "வாயிலோயே, வாயிலோயே" என்று கண்டாமணியாக ஒலித்தமையால் ஒலிமணியாய் ஒலிக்கிறார்.

**மங்கல மணி :** மங்கலவாழ்த்துப் பாடலில் திருமணம்பெற்று மங்கல அணி அணியப்பெறுகின்றார். 'மங்கல மடந்தை' எனப் போற்றப்பட்டுத் தாம் சிலையான கோட்டத்திற்கும் 'மங்கல மடந்தைக் கோட்டம்'

எனும் புகழ்ப் பெயர் பெறச் செய்த மங்கலத்தால் மங்கல மணி.

**கால மணி :** "ஆடிக்குட்டத்து அட்டமி ஞான்று" மதுரையைத் தீக்கு இரையாக்கியதாகச் சிலம்பு குறிக்கின்றது. இந் நாட் குறிப்பால் ஒரு பெரும் வரலாற்றுக் கால அறிவிப்பை வழங்கியமையால் காலக் கண்ணாடியாம் மணிப் பொறியாகின்றார்.

**கருமணி :** மதுரையில் தீமூட்டிக் கரியாக்கியமையால் கருமணி.

**உறுப்புமணி:** தாய்மைபெறாக்கரு உறுப்பால் உறுப்பு மணி.

ஒன்பது மணிப்பொருள்களிலும் ஓரிரும் கண்ணகியார் 'மணி' என்னும் சொல் கொண்ட 'ஒன்பது' என்னும் பொருளுக்கு ஏற்ப ஒன்பான் காப்பியச் சுவைகளிலும் ஒன்றி நிற்கின்றார்.

இவ்வாறு மணிப்பொருள்கொண்டு கண்ட விரிவான விளக்கத்தால் கண்ணகியார் சிலப்பதிகாரத்தின் மணியான உறுப்பாகின்றார். மணியான உறுப்பிற்கு ஏற்ப அடிகளார் கண்ணகியாரை மணி மணியாய் — பெண்மணியாய் — மணிப் பெண்ணாய் அமைத்துள்ள திறம் ஒரு வியத்தகு பாங்காகத் திகழ் கின்றது. அப்பாங்கை முறையே காண்பது இன்றியமையாத தாகின்றது.

## மணிக்கோவைக் கண்ணகியார்.

கண்ணகி கோவலனுக்கு முதல் இரவு. எழு நிலை மாடத்தின் இடைநிலை மாடத்து நிலாமுற்றத்தில் கட்டிலின்மேல் இருவரும் குலாவினர். அக்கட்டில் மணிக்கட்டில்.[1] குலவும் கட்டிலும் மணி திகழ்ந்தது. கண்ணகியாரது அழகைச் சுவைத்த இன்பத் தினவில் கோவலன் பேசுகின்றான். முதலில் இனிய சொற்களால் அழைக்கின்றான். 'பொன்னே, முத்தே, மணமே, கரும்பே, தேனே, பாவாய், மருந்தே' என்றெல்லாம் அழைத்தான். இவை யாவும் விளிகள். அடுத்துப் புகழத் தொடங்கினான். 'எவ்வாறு புகழ்வேன்; எவ்வாறு புகழ்வேன்' என்று அடுக்கும் புகழ்ச்சி வருகின்றது. அப்புகழ்ச்சியின் தொடக்கத்தில் கண்ணகியார் மணியாகின்றார்:

1 "மயன் விதித்தன்ன மணிக்கால் அமளி" -- சிலம்பு ; மனையறம்.,,12.

"மலையிடைப் பிறவா **மணியே** என்கோ"[1]

—என்பது கோவலன் புகழும் முதற் புகழ்ச்சி. முதற் புகழிலேயே மணியாகப் புகழவைத்து மகிழ்கின்றார் அடிகளார். கண்ணகியாரை மணியாக்கும் அடிகளார் முதன்முதலில் கண்ணகிக்கு உரியவனான கணவன் வாயால் ஆக்கியது ஒரு சிறப்பான அமைப்பு எனலாம்.

அடுத்து, வேட்டுவ வரியில் சாலினி என்னும் பூசாரிச்சி தெய்வமுற்று எழுந்து கண்ணகியாரைப் புகழ்கின்றாள் :

"இவளோ, கொங்கச் செல்வி, குடமலை யாட்டி,

ஒரு**மா மணி**யாய் உலகிற் கோங்கிய

**திருமா மணி**"[2]

— என்ற சாலினியின் புகழ்ச்சியில் கண்ணகியாரை ஒரு **மாமணி**யாகக் காண்கின்றோம்; **திருமாமணி**யாகக் காண்கின்றாம். கணவன் வாயால் மணியாகக் காட்டிய அடிகளார் தெய்வ முற்றவள் வாயால் மாமணியாகக் காட்டினார்.

அடுத்து, அடைக்கலக் காதையில் கண்ணகியார் மணியாகின்றார். மதுரை மாநகரின் புறஞ்சேரியில் மாடல மறையோன் என்னும் அந்தணன் கண்ணகியாரையும் கோவலனையும் காண்கின்றான். கண்டவன் கோவலனது பெருமையெல்லாம் பேசுகின்றான். பேசி நிறைவேற்றுபவன்,

"இத்திருத்தகு **மாமணிக்** கொழுந்துடன் போந்தது"

— எனக் கண்ணகியாரை மணிக்கொழுந்தாகப் புகழ்கின்றான்.

அடிகளார் முதலில் உரியவன் வாயால் **'மணி'** என்று புகழவைத்தார். அடுத்துத் தெய்வமுற்ற சாலினி வாயால் 'மணி மணியாகப் போற்ற வைத்தார். அடுத்து, மாடலன் என்னும் துறவி வாயால் **'மணிக்கொழுந்'**தாகப் பெருமைப்படுத்தினார். இவற்றிலெல்லால் படிப்படியாக உயர்வைக் காண்கின்றோம்.

---

1 சிலம்பு : மனையறம்... : 77'
2 சிலம்பு : வேட்டுவ வரி : 47—50,

**மணி**யாகத் தொடங்கி **மாமணி** ஆகியது;
**மாமணி திருமாமணி**யாக வளர்ந்தது;
**திருமாமணி**யும் **திருத்தகுமாமணி** ஆகியது;
அத்துடன் நில்லாமல்,
**திருத்தகு மாமணிக் கொழுந்தாக** நிறைந்தது.

இவ்வகையில் கண்ணகியாரை மணி மணியாகச் சிலம்பில் பதித்து மணிக்கோவையாக்கியுள்ளார் அடிகளார்.

## மணி மாலை

இம்மணிக்கோவையில் தொடர்ந்து மணிகள் தொடுக்கப் படுகின்றன. கண்ணகியார் தொடர்புள்ளவை மணிகளாகின்றன. அம்மணிகள் கோவையில் தொடுக்கப்பட்டு கோவை, மாலையாகின்றது.

கண்ணகியாரது புகழ் வெளிப்பட்டமைக்கு அடிப்படை நிகழ்ச்சிகள் இரண்டு.

ஒன்று சிலம்பால் வென்றமை;
மற்றொன்று மார்பால் மதுரையை எரித்தமை.
இவை இரண்டுமே மணி மணியாக விளக்கம் பெறுகின்றன.

## மணிச் சிலம்பு

சிலம்பு பெண்கள் அணியும் காலணி. சிலம்புதல் என்பதற்கு ஒலித்தல்– எதிரொலித்தல் என்பது பொருள். கலீர் கலீர் என்று ஒலித்தலால் இவ்வணி 'சிலம்பு' எனப் பெயர் பெற்றது சிலம்பு மகளிரது கன்னிப் பருவத்திற்கு உரிய அணி. மகளிரது கன்னித் தன்மையின் சின்னம். திருமணத்திற்கு முன்னர் 'சிலம்பு கழிநோன்பு', என்றொரு நிகழ்ச்சி உண்டு. அதுபோது கன்னிப் பருவங் கழிந்து கற்புப்பருவத்தினை மேற்கொள்வதால் சிலம்பைக் கழற்றிப் பேணி வைப்பர். அதன்பின் பெரும்பாலும் அணியும் பழக்கம் இல்லை.

சிலம்பு அவரவர்தம் செல்வநிலைக்கு ஏற்பச் செய்யப்படும். செம்பாலும், வெள்ளியாலும் பொன்னாலும் செய்யப்படும். எளிய மக்கள் தோலாலும் புல்லாலும் செய்துகொள்வர், உள்ளே குழலாக-

உட்கூடாக அமையும். அந்த உட்கூட்டில் ஒலியெழுப்புவதற்காக உள்ளேபரல்கள்–சிறு சிறு உருண்டை வடிவுள்ளவை–இடப்படும். அப்பரல், சிலம்பிற்கு ஏற்பக் கல்பரல், வெள்ளிப்பரல், பொன்பரல், முத்துப் பரல், மாணிக்கப் பரல், என அமையும்.

பாண்டிமாதேவியின் சிலம்பு பொன்னால் செய்யப்பட்டு முத்துப் பரலை உள்ளே கொண்டது. இதனைப் பாண்டியன் நெடுஞ்செழியன்,

"யாமுடைச் சிலம்பு முத்துடை அரியே"[1]

– என்றான். 'அரி' என்றால் உள்ளே கிடைக்கும் விதை போன்ற பரல். உள்ளே வெண்மையான விதையை – அரியைக் கொண்ட காயை வெள் – அரி – காய் வெள்ளரிக்காய் என்பதை அறிவோம். ('வெள்வரி' என வழங்குவதும் உண்டு.)

கண்ணகியாரது சிலம்பு பசும்பொன்னால் செய்யப்பட்டது. உள்ளே மாணிக்கக் கற்களைப் பரலாக – அரியாகக் கொண்டது.

"என்காற் பொற் சிலம்பு மணியுடை அரியே"[2]

— என்றார் கண்ணகியார்.

ஒன்பது வகை மணிகளுள் இங்கே குறிக்கப்படும் மணி செம்மணியாம் மாணிக்கத்தைக் குறிக்கும்.

எனது சிலம்பின் உட்பரல் 'மணி' என்று கண்ணகியாரை அறிவிக்கச் செய்த இளங்கோவடிகளார், அம் மணி அறிவிப்பை ஒரு முறையோடு நிறுத்தச் செய்தாரல்லர். தொடர்ந்து அடிகளாரே கோவையாக்கினார் :

"அணி**மணி**க் காற்சிலம்பு உடைப்ப, மன்னவன்
வாய்முதல் தெரித்தது **மணி**யே; **மணி**கண்டு
தாழ்ந்த குடையன், தளர்ந்தசெங் கோலன்"[3]

— என அமைத்தார்.

---

1 — சிலம்பு : வழக்குரை : 69.
2 சிலம்பு : வழக்குரை : 97.
3 சிலம்பு : வழக்குரை : 71, 72.

இவ்வாறு மேலும் மேலும் அடுக்கி மணியைக் கோப்பதில் ஆர்வம் காட்டுகின்றார்.

சிலம்பின் உள்ளே மட்டும் மணி அமைந்ததோடு நின்று விடவில்லை. சிலம்பின் புறத்திலும் அச் செம்மணி அமைந்துள்ளது. இச் சிலம்பை அடிகளார் வண்ணித்துள்ளார். அச் சிலம்பு 'கிளிச்சிறை' என்னும் பசும்பொன்னால் செய்யப்பட்டது. சித்திர வேலைப்பாடுகள் நிறைந்தது. அதன் கூடுவாய் மேடாக அமைந்தது. மேட்டில் ஒரு குழி (கேவணம்) உள்ளது. அக் குழியில்) செம்மணி பதிக்கப்பட்டுள்ளது. அம்மணி மிகச் சிறந்த தலையாய மணி (மத்தக மணி). அதனைச் சுற்றித் தாழ்வாக வைரக் கற்கள் பதிக்கப்பட்டுள்ளன. இவ்வமைப்பு மட்டும் குடை போன்று காட்சியளிப்பது. இவற்றையெல்லாம் அடிகளார்,

"மத்தக மணியோடு வைரங் கட்டிய
பத்திக் கேவணப் பசும்பொற் குடைச்சூழ்
சித்திரச் சிலம்பு"[1] —எனப் பாடுகின்றார்.

மணிக் கண்ணகிக்கு வெற்றியளித்த சிலம்பும் அகத்தேயும் புறத்தேயும் மணியைப் பெற்று மணிச்சிலம்பாகியது.

மேலும் தொடர்ந்து கண்ணகியாரது உணர்ச்சிக் கொப்பளிப்பிற்கு இலக்கான மார்பைக் காணலாம்.

## மணி மார்பு

சீற்றங்கொண்ட கண்ணகியார் மதுரையை எரியூட்ட இடது முலையைத் திருகி எறிந்தார் என்பதை அறிவோம். (இக் காலத்தில் 'முலை' என்னுஞ்சொல் அவையல் சொல்லாகிவிட்டமையால் 'மார்பு' என்று குறிக்கின்றோமாயினும், சில இன்றியமையாத கருத்துகொண்டு அவ்வவ்விடங்களில் 'முலை' என்னும் சொல்லைக் குறிக்க நேர்கின்றது.)

அம்முலையிலும் மணி உள்ளது. இங்கேதான் 'மணி' என்னுஞ் சொல் முடிச்சவிழ்க்குஞ் சொல்லாக அமைந்துள்ளது.

---

1 சிலம்பு : கொலைக்களம் ; 117—119

அதனைக் காணும் முன்னர் முடிச்சைக் கண்டுகொள்ள வேண்டும். அம்முடிச்சு யாது ?

பஞ்சு நூல் ஒழுங்கின்றிப் பின்னிப் பிணைந்துவிட்டால் இழைகள் ஒன்றோடு ஒன்று சிக்கிக்கொண்டு சிக்கல் ஆகும். இச் சிக்கல் இறுகிவிட்டால் முடிச்சாகிவிடும். வாழ்விலும், சிக்கலும் முடிச்சும் நேர்வதுண்டு. இலக்கியங்களிலும் பொருள் விளக்கம் ஒழுங்காகாமல் முடிச்சு விழும். வரலாற்றுப் போக்கிலும் இம்முடிச்சு நிறைய விழுவதுண்டு.

## வரலாற்றுக் காப்பியம்.

சிலப்பதிகாரம் வரலாற்று அடிப்படை கொண்ட காப்பியம். காப்பியச் சுவை கருதியும், அணிநலங் கருதியும், நாடக உத்தி கருதியும் சில நிகழ்ச்சிகள் நம்பிக்கைக்குப் பொருந்தாதனவாக அமைந்துள்ளன. இது காப்பிய இயல்பு.

தமிழ் நூல்கள் யாவும் வடமொழி நூல்களின் வழி வந்தவை என்று முணகும் பெருமக்கள் எந்நாளிலும் உளர். இவ்வஞ்சப் பேரவா சிலப்பதிகாரத்தில் நிறைவாகச் செல்லுபடியாகவில்லை. அதனால், 'கதை கட்டுக்கதை; உண்மை வரலாறு கொண்ட தன்று' என்று முணகினர்.

இதனைத் தம் வாழ்நாட் காலத்திலேயே உணர்ந்த அடியார்க்கு நல்லார் வேண்டுமென்றே ஒரு குறிப்பை எழுதியுள்ளார். அக்குறிப்பு 'சிலப்பதிகாரம் கதை' என்பார்க்குச் செம்மையான மண்டையடி. அக்குறிப்பையும் நூலின் உரையைத் தொடங்கும் முன்னர் அமைந்த 'உரைப்பாயிரம்' என்னும் உரைமுன்னுரையில் அமைத்துள்ளார். அஃது இஃது :

> "இதனைக் கதையென்றல் வலியுடைத்து என்பார்க்கு அற்றன்று: கதையென்பது பொய்ப்பொருள் புணர்த்துக் கூறுவது; என்னை? 'கதையெனக் கருதல் செய்யான்; மெய் யெனத் தானுங் கொண்டான்" (சீவகசிந்தாமணி) என்றமை யாலும், வழக்கினுள்ளும் 'இஃது ஒரு கதை' என்பவாகலானும் 'நாடகக் காப்பியம் (மணிமேகலை) கதை என்பது அல்லது. இனி, அது நல்ல (கதை) புலவராற் பொய்ம்மொழியால் நாட்டப் பட்டு வருவதாகலின். இஃது (சிலப்பதிகாரம்) அவ்வாறன்றி யோனி என்னும் நாடக உறுப்பும் நாடகமும் தழுவி,

உள்ளோன் தலைவனாக உள்ளதொரு பொருள்மேல் சித்தரிக்கப்படாது (கற்பனையாகக் கதைக்கப்படாமல்) பட்டாங்கு கிளந்து (-நிகழ்ந்தபடி எடுத்துச் சொல்லி) பலவினப் பாட்டால் வருதலின் ஈது அன்னது (கதை) அன்று என்பார்க்குக் காப்பியம் என்றலுமாம்''

இவ்வாறு அடியார்க்குநல்லார் குறித்துள்ளமை போன்று சிலப்பதிகாரம் பட்டாங்கு – அதாவது நிகழ்ச்சி நிகழ்ந்தபடி கூறு வதே. இஃது உண்மை நிகழ்ச்சியை அடிப்படையாகக் கொண்ட வரலாற்றுக் காப்பியமேயாகும்.

அவ்வாறாயின், 'நம்பத் தகாதவையும், பகுத்தறிவால் ஏற்றுக்கொள்ள இயலாதவையும் ஆகிய நிகழ்ச்சிகள் வரலாறு ஆகாவே; அத்தகைய நிகழ்ச்சிகள் சிலம்பின் இடையிடையே ஒலிக்கின்றனவே' என்ற வினா எழல் இயல்பே. அந்நிகழ்ச்சிகள் ஆர ஆயத்தக்கனவே. அவற்றுள்ளும் 'எவை ஆயத் தக்கவை? எவை ஆய்வின்றி அமைதி காணத் தக்கவை' எனப்பகுத்த பின்னரே ஆய்வில் புகவேண்டும்.

நம்பத் தகாத நிகழ்ச்சி ஒன்றை நூலிலிருந்து எடுப் பதனால் வரலாற்றுத் தொடர்பிற்குச் சிதைவு நேரு மானால், வரலாற்றுத் தொடர்பு இடையற்றுப் போகு மானால், வரலாறு நிறைவேறாமல் குறைபட்டுப் போகு மானால் அந்நிகழ்ச்சி ஆய்தற்கு உரியதாகும். ஏனெனில், அந்நிகழ்ச்சி இன்றிக் காப்பியம் அமையாதாகையால் அஃது இன்றியமையா நிகழ்ச்சியாகும். அவ்வாறன்றி, நம்பத்தகாத நிகழ்ச்சி ஒன்றைக் காப்பியத்தினின்றும் எடுப்பதனால் வரலாற்றுப் போக்கில் இடைவெட்டு நேராதாயின் அந்நிகழ்ச்சி ஆய்விற்கு உரியதாகாது. ஏனெனில், அந் நிகழ்ச்சி இன்றியே காப்பியம் அமை வதால் அஃது இன்றியமையும் நிகழ்ச்சியாகும்.

எனவே, ஆய்வதற்கு உரியது இன்றியமையாத நிகழ்ச்சி என்று ஆகின்றது. அவ்வாறு இன்றியமையாததாக, அதேபோது நம்பத் தகாததாகக் காணப்படும் நிகழ்ச்சியே வரலாற்று இலக் கியத்தில் சிக்கலை உண்டாக்கி முடிச்சுவிழச் செய்வதாகும்,

அவ்வாறு சிலப்பதிகாரத்தில் முடிச்சுபோல் அமைந்துள்ளவை இரண்டு. ஒன்று கண்ணகியார் மார்பைத் திருகி எறிந்தமை. மற்றொன்று மார்பை திருகி எறிந்து மதுரையை எரித்தமை.

இங்கு மார்பைத் திருகி எறிந்த நிகழ்ச்சி மட்டிலும் ஆயப்படுகின்றது.

## மார்பைச் சிதைத்துக் கொள்ளும் மரபு

மார்பைச் சிதைத்துக் கொள்ளுதல் என்பது இலக்கியச் செய்தி மட்டும் அன்று. சிலப்பதிகாரத்தில் மட்டும் வரும் நிகழ்ச்சி அன்று. அஃது ஒரு நடைமுறையாக இருந்தது.

மான உணர்வால் உயிரை விடுவதற்கு ஏதேனும் உயிர் முடிச்சான உறுப்பைச்சிதைத்துக்கொள்ளுதலை மக்கள் முன்னாளிலும் கைக்கொண்டதுண்டு. நாக்கைப் பிடுங்கிக் கொள்தல், தூக்கிட்டுக்கொள்தல், மலையிலிருந்து விழுதல், நெருப்பில் பாய்தல், கழுமரத்தில் ஏறுதல் முதலிய பலவற்றைத் தற்கொலைச் செயல்களாக கொண்டனர். இக்காலத்திலும் நாம் கண்டுவருகிறோம். இலக்கியங்களும் அக்கால நிகழ்ச்சிகளாகப் பேசுகின்றன. நீலகேசி என்னும் சமண சமயக் காப்பியமும் இதனை அறிவிக்கின்றது.[1] இந்நாளிலும் 'மானமிருந்தால் நாக்கைப் பிடுங்கிக்கொண்டு செத்துப் போ' என்று பேசப்படுவதைக் கேட்கின்றோம்.

இவைபோன்றே தமக்கு ஒரு பழி நேர்ந்துவிட்டால் அதன் போக்குவீடாகத் தம் உயிரைப் போக்கிக்கொள்ளும் உணர்ச்சிக் கொப்பளிப்பில் நிற்கும் பெண்கள் தம் மார்பைச் சிதைத்துக் கொண்டனர். இதற்கு முதற்சான்றாகப் புறநானூற்றில் செய்தி உள்ளது:

போருக்குச் சென்ற தனது 'வீர மகன் புறங்கொடுத்தான்' என்று கூறப்பட்ட பழிச்சொல்லைக் கேட்டாள் வீரத் தாய். அப்பழியைப் பொறாதவளாக உணர்ச்சிக் கொப்பளிப்பில் எழுந்தாள். எழுந்து சூளுரை கூறினாள்:

---

1 "தூக்கல் தம்மை ஆக்கலே தொல்லை நல்ல றம்மெனில்
நாக்களைப் பறித்தலும் நான்று வீழ்ந்து பொன்றலும்
தீக்கள் பாய்ந்து சாதலும் தீயசெங் கழுவ்வின்மேல்
மேக்கி னைக்கொண் டேறலும் மேன்மை யென்ன லாம்பிற,"
— நீலகேசி : 853.

மண்டிய போரினில் என் மகன் புறங்காட்டினன் ஆயின் அவன் பால்,

" ..................... உண்ட என்
முலையறுத் திடுவன் யான்"[1] என்றாள்.

அச்செய்தியை அறிவிப்பவர் காக்கைப்பாடினியார் நச்செள்ளையார். அவர் ஒரு பெண்பாற்புலவர் என்பது ஒரு நல்ல இயைபு ஆகின்றது. பெண் இனத்துச் செய்தி ஒன்றைப் பெண் பாலார் அறிவிப்பதுகொண்டு அதனை நடைமுறை உண்மை யாகக் கொள்ளவேண்டும்.

மதுரையில் வாழ்ந்த மருதன் இளநாகனார் என்பார் மார்பறுத்த செய்தி ஒன்றை அறிவிக்கின்றார்.

அயலான் ஒருவனது பழிச்சொல்லால் கவலை மனத்தை வருத்த, "ஒருமுலை அறுத்த திருமா வுண்ணி"[2] -என்பது அது. இது நிகழ்ந்த இடம் வயற்பகுதி என்று இந்நற்றிணைப் பாடல் குறிப்பதால் 'ஒருமுலை அறுத்தவள் கண்ணகி அல்லள், என்று கருதுவர். அவ்வாறாயின் மார்பைச் சிதைத்துக்கொள்ளும் செய்திக்கு இது மேலும் மற்றொரு சான்றாகின்றது. கண்ணகியையே குறிப்பதாயின் கருத்து உறுதிப்படுகின்றது.

பழிச்செயல் புரிந்த பெண்ணைப் பழி வாங்க அவள் மார்பைச் சிதைத்துத் தண்டனை கொடுக்கப்படுவதும் உண்டு. இதனை இராமாயணக் கதை காட்டுகின்றது. இராமனிடம் தகாத முறையில் நடந்த சூர்ப்பனகையின் மூக்கொடு மார்பை இலக்குவன் சிதைத்த செய்தியைக் காண்கின்றோம்.

மேலும், பகை காரணமாகப் பழிசெய்ய முனைவோர் பகைவரது ஆவினங்களின் மார்பைச் சிதைத்ததைப் புறநானூறு கூறுகின்றது. அறமல்லாத கொடிய செயல்களைப் பட்டியலிடும் புறநானூறு,

"ஆன்முலை யறுத்த அறனில்லோர்"[3] -என்று குறிக்கின்றது. பிற்காலத்து நூலான நீதிநெறி விளக்கமும்,

1 புறம் : 278 : 4, 5.
2 நற் : 216 : 9
3 புறம் : 34 : 1.

"குடிகொன்று இறைகொள்ளும் கோமகற்குக் கற்றா
மடிகொன்று பால்கொளலும் மாண்பு"[1] என்று

ஆன்முலை அறுக்கும் செய்தியைக் குறிக்கின்றது.

ஆடவரை இழந்த மகளிர் மார்பில் அறைந்துகொண்டு ஓலமிடுவர். இப்பழக்கம் இன்றும் உண்டு.

"பந்தரடி மாரடித்து உறவினர்கள் வாய்க்கரிசிப்
படிநெற் கொணர்ந்து கொட்ட"

என்றொரு தனிப்பாடல் பாடுகின்றது.

புறநானூற்றிலும், போரில் கணவனை இழந்த மகளிர் 'முலைபொலியும் மார்பில் கைகளால் அறைந்துகொண்டு ஓலமிட்டனர்'[2] என்றும், 'மார்பில் கொதிப்பு எழும் அளவு அடித்துக்கொண்டனர்' என்றும் பாடுகின்றது.

ஒரு கன்னிப்பெண். அவளுக்குக் கண்ணன்மேல் தீராக் காதல். அவனை அடையத் துடிக்கின்றாள் அவனது தோள்களில் தனது கொங்கைகள் நெருங்குமாறு தழுவிக்கொள்ளத் துடிக்கின்றாள். அவனைத் தழுவாமல் பருக்கின்ற கொங்கைகள் பயனற்றவை எனக் குமுறுகின்றாள். அவன் இசைந்து வாராது போனாலும் தானே வலியக் கட்டித் தழுவிக்கொள்ளவும் எழுகின்றாள். அஃதும் இயலாத நிலையில் நிலைகொள்ளாது தவிக்கின்றாள். எவ்வாறேனும் தனது கொங்கைகள் அவன் மார்பில் பட்டாகவேண்டும் என்று பதறுகின்றாள். துடிப்போடு வாய்விட்டுப் பாடுகின்றாள்:

"உள்ளே உருகி நைவேனை
உளளோ இலளோ என்னாத
கொள்ளை கொள்ளிக் குறும்பனைக்
கோவர்த் தனனைக் கண்டக்கால்

1 நீதிநெறிவிளக்கம் : 29.

2 "முலைபொலி ஆகம் உருப்ப நூறி
மெய்ம்மறந்து பட்ட வரையாப் பூசல்
ஒண்ணுதல் மகளிர் கைம்மை கூர"—புறம் : 25; 10—12.

கொள்ளும் பயனொன் றில்லாத
**கொங்கை தன்னைக் கிழங்கோடும்**
**அள்ளிப் பறித்திட்** டவன்மார்பில்
எறிந்தென் அழலைத் தீர்வேனே"[1]

தனது கொங்கையை அடிநரம்போடு பறித்து அவனதுமார்பில் எறிய வேண்டும். அவ்வகையிலாயினும் தன் காமக்கொதிப்பைத் தீர்த்துக் கொள்ள வேண்டும். இவ்வாறு துடித்துப் பாடியவள் சூடிக்கொடுத்த நாச்சியார் என்னும் ஆண்டாள். ஆண்டாள் ஒரு கன்னிப் பெண் என்பது இங்கே நினைவுகூரத் தக்கது.

இப்பாடல் இறையுணர்வில் பொங்கிய பாடலாயினும், அவ்வுணர்வுடனே ஒரு கன்னிப்பெண் தன் காம உணர்வை வடித்த பாடலாயினும், ஒரு பருவப் பெண்ணின் நிலையில் வடிக்கப்பட்ட (ஆண்டாள் பாடல்கள் அவளது தந்தையார் பெரியாழ்வாரால் பாடப்பட்டவை என்றொரு கருத்தும் உண்டு) பாடலாயினும் இக்கருத்து பற்றிய முதல் நோட்டம் இஃது ஓர் இலக்கிய நயம் என்பதே. ஆனால், இலக்கிய நயம் என்பதோடு இக்கருத்தை முடித்துக் கொள்ளவேண்டியதில்லை. இந்த இலக்கிய நயத்திற்கும் அப்பால் ஓர் உண்மை வெளிப்படுகின்றது.

> பெண்களது ஆழ்ந்த உணர்வில் வெளிப்படும் மெய்ப்பாடுகளில் மார்பைப் பற்றிய செயல் உண்டு என்பதற்கு இதனையும் ஓர் அடையாளமாகக் கொள்ளலாம். அதனிலும் 'பறித்து எறியும் செயல்' குறிப்பில் கொள்ளத் தக்கது.

இன்பத்தை இழந்தவெறுப்புணர்ச்சிமேலிட்டாலும், துன்பப் பெருக்கில் அவல உணர்ச்சி பீறிட்டாலும் மார்பில் அறைந்து கொள்ளலும், சிதைத்துக்கொள்ளலும் தமிழக மரபாக இருந்தது.

கண்ணகியார் பெற்ற அவலமோ கொடுமையிலும் கொடுமையானது. வாழ்வை நிறைவாக்கிக் கொள்ள வந்தவளுக்கு வாழ்வு அறவே அடைப்பட்டுப் போயிற்று. வாழ்வின் பற்றுக்கோடான கணவனை இழந்தாள். அவனுக்குநேர்ந்த சாவு இயற்கை நிகழ்ச்சியன்று. நோய்ச் சாக்காடில்லை. போர்க்களச் சாவில்லை.

---

1 நாச்சியார் திருமொழி : கண்ணனென்னும் ; 8.

கொலைக்களக் கொடுமை. பழிச்சொல்லும் கொடுவாளும் சேர்ந்து அவன் உயிரைப் பறித்துவிட்டன, அவலத்தின் உச்சியில் குமுறி நிற்கும் கண்ணகியாரிடம் சினமென்னும் பெருநெருப்பு கொழுந்து விட்டு நிற்கின்றது. இரண்டும் கூடின. ஒரு போக்குவீடும் காணாதவள் வெடித்தெழும் உணர்வால் விம்மிக் குமுறும்மார்பைப் போக்குவீடாக்கிக் கொண்டார்.

எனவே, கண்ணகியார் மார்பைச் சிதைத்துக் கொண்ட நிகழ்ச்சி உணர்ச்சிப் பிழம்பின் வெளிப்பாடு. நிகழக்கூடியதே; நம்பத்தகாதது அன்று; கட்டுச்செய்திஅன்று; உறுதியாக நிகழ்ந்த தேயாகும்.

## முப்பகுதி.

அடுத்து, 'எவ்வாறு ஒரு பெண் தானே தன் மார்பைச் சிதைத்துக்கொள்ள முடியும்?' —என்னும் ஐயம் எழலாம். இங்கே 'சிதைத்தல்' என்று குறிப்பது திருகிப் பறிப்பதைக் குறிப்பதாகும்

"இடமுலை கையால் திருகி"[1]

—என்று சிலம்பு குறிக்கின்றது. எனவே திருகல் இயலும். அதனிலும், இடது மார்பை வலது கையால் திருகினார் என்பதும் வாய்ப்பானதே.

எவ்வாறு தனியே பிய்த்து எடுத்து எறிய முடியும் என்பதை நோக்கலாம். அதற்கு 'மார்பு' அதாவது 'முலை' பற்றிய உறுப்பு அமைப்பைப் புரிந்துகொள்ளல் நலம்.

'கொங்கை, முலை' என்னும் உறுப்பு மூன்று பகுதிகளாக அமைந்தது. [சொல்லாராய்ச்சி அறுவை மருத்துவம் போன்றது. அறுவை மருத்துவத்தின்போது மறைப்பு உறுப்பு, காட்சி உறுப்பு என்று உணர்ச்சிக்கு இடமில்லை. அது போன்று இங்கு 'முலை' என்னும் சொல்லை அடிக்கடி சுட்டுவதைக் கொள்ளவேண்டும்.] சதைத் திரட்சி அமைப்பின் அடிவட்டமாகிய அடிப்பகுதியாம் தடம் ஒன்று. அது 'முலைத்தடம்' 'முலை முன்றில்' எனப்படும். இங்கேதான் பெண்கள் மணச்சாந்து களைக் கலையழகோடு பூசிக்கொள்வர். இப்பூச்சு, 'தொய்யில் எழுதல்' எனப்படும். இதனைச் சிலப்பதிகாரம்,

---

1 சிலம்பு : வஞ்சினமாலை : 48.

"திருமுலைத் தடத்திடைத் தொய்யில் அன்றியும்[1]"

–என்றும்

"கொங்கை முன்றில் குங்குமம் எழுதான்"[2]

–என்றும் பேசுகின்றது. இப்பகுதி 'தடம், முன்றில்' என்னும் இடம் ஆகும். இடத்தைத் திருகல் என்பது பொருந்தாது. எனவே, திருகப்பட்டது இவ்வடிவப்பகுதி அன்று.

அடுத்த பகுதி சதைத் திரட்சியான பகுதி. இது 'கொங்கை, முலை' என்றும் 'மார்பு' என்னும் இடத்தில் அமைந்த தால் இடவாகுபெயராக 'மார்பு' என்றும் வழங்கப்படுவது. மேலும், 'அம்மம், குயம், சேக்கை, கொம்மை, பரம்பு, என்னும் தமிழ்ச் சொற்களை நிகண்டுகள் வகுக்கின்றன. ஆவிற்கு அமைந்த இப்பகுதியை 'மடி' என வழங்குகின்றோம். முன்னரும் நீதிநெறிவிளக்கப் பாடலும், "மடிகொன்று பால் கொளலும்" –என்று குறித்தமை கண்டோம். பெண்களுக்கு அமையும் இப் பகுதி சதைத் திரட்சியாதலின், இது கையால் திருகி எடுக்க இயலாதது.

## முலைக் கண்.

மூன்றாவது பகுதி தாய்ப்பால் வெளிப்படும் குமிழ் போன்ற பகுதி. இது 'முலைக்காம்பு, குருக்கண் முலைக்கண்' எனப்படும். ஆவின் பால் வெளியாகும் இப்பகுதியை 'மடிக்காம்பு' என்கின்றோம். இதுபோன்றே திருவரங்கக் கலம்பகம் என்னும் நூல் இப்பகுதியைக் 'காம்பு'[3] எனக் குறிக்கின்றது. அடுத்த பெயர் 'குருக்கண்'. 'குரு' என்றால் 'நிறம், கொப்புளம்' எனப் பொருள். இவ்வுறுப்பு கொப்புளம் போன்று குமிழாகக் கருநிறத் தோடு பால்சுரக்கும் ஊற்றுக்கண்ணை உடையதால் 'குருக்கண்' எனப்பட்டது. பால் வெளிப்படச் சிறு துளைபெற்றுக் கண்ணாக இருப்பதால் 'முலைக்கண்' எனப்பட்டது. இப்பகுதி முலையின் ஈற்றில் அமைந்தபகுதி என்பதையும் விளக்கிப் பிங்கல நிகண்டு,

---

1 சிலம்பு : மனையறம்படுத்த : 69

2 சிலம்பு : அந்திமாலைச்சிறப்பு : 49

3 "கச் சொடு பட்டைக் கிழித்துக்
காம்பு துகிலவை கீறி"—பெரியாழ்வார் திருமொழி : 184.

"சிலீமுகம் சூசகம் ஈற்றுமுலைக் கண்ணே"[1]

—என்று விளக்கத்தோடு குறிக்கின்றது. திவாகரமும்,

"சூசகம் சிலீமுகம் முலைக்கண் சொல்லும்"[2]

—என்றும் சூடாமணி நிகண்டு,

"திகழ்முலைக் கண்ணின் நாமம் சிலீமுகம்
சூசகங்கள்"[3]

—என்றும் முலைக்கண்ணை முலையின் தனிப்பகுதியாக வடமொழிப் பெயர்களுடன் குறிக்கின்றன.

கலிங்கத்துப் பரணியில் போரில் மார்புப் புண்பட்ட வீரரது வலித்துன்பத்தை மறக்கடிக்க அவரவர் மனைவிமார் தழுவிய செய்தியை,

"பொருங்கண் வேலிளைஞர் மார்பின் ஊடுருவு
புண்கள் தீர இரு **கொங்கையின்**
**கருங்கண்** வேதுபட ஒற்றி"[4]

—என்று முலைக்கண்ணைக் குறிக்கின்றது.

'முலைக்கண்' என்னும் பகுதி இதுதான் என்பதை அடையாளத்துடன் நாம் காணச் சிவபெருமான் காட்சி தருகின்றார். சிவன் நெருப்பு போன்ற சிவந்த உடம்பினர். உடல் முழுதும் வெண்ணீறு தோய்ந்துள்ளது. அதனால், சிவந்தமார்பும் வெண்ணிறமாகப் பொலிந்து. மார்பின் சிவந்த ஒளியை மூடி மறைத்துள்ளது. அம்மார்பில் புள்ளி அளவில் இரண்டு இடங்களில் திருநீறு கலைந்துள்ளது. அப்புள்ளிகளின் வழியே மார்பின் செந்நிற ஒளி பொங்கித் தெரிகின்றது. அப்புள்ளிகள் எவ்

1 பிங். நி : 1018.
2 சேந். தி : மக்கட்பெயர்த் தொகுதி
3 சூடா. நி : மக்கட்பெயர்த் தொகுதி : 90.
4 கலிங். ப : கடைதிறப்பு : 36.

வாறு ஏற்பட்டன என்று மாணிக்கவாசகர் தம் திருவாசகத்தில் வெளிப்படுத்தியுள்ளார். காஞ்சிபுரத்தில் ஆற்றுவெள்ளம் பெருக்கெடுத்தது. அதுகண்டு அஞ்சிய உமையம்மையார் சிவனாரை இறுகத் தழுவிக்கொண்டாராம். அம்மையாரது இரண்டு 'முலைக்கண்கள்' சிவனார் மார்பில் அழுந்தின. அழுந்திய அவ்விடங்களில் உண்டான சுவடுகளே புள்ளிகள் என நயமாகப் பாடுகின்றார்:

"துடிகொள் நேரிடையாள் சுரிகுழல் மடந்தை
துணை **முலைக்கண்கள்** தோய்சுவடு
பொடிகொள் வான்றழலிற் புள்ளி போ லிரண்டு
பொங்கொளி தங்கு மார்பினனே" [1]

—என்பது அப்பாட்டு. இங்கும் கண்ணைக் காணுகின்றோம்.

"**முலைக்கண்**ணும் முத்தும் முழுமெய்யும்புல்லும்" [2]
— என நாலடியாரிலும்,

"முத்து க்கனபோன் முகத்தாலி **முலைக்கண்** வீழ" [3]
— எனக் கம்பராமாயணமும்

இன்னும் பல இலக்கியங்களும் முலைக்கண்ணைத் தனியொரு பகுதியாகக் காட்டிச் செல்கின்றன. இவை யாவும் கொண்டு 'முலைக்கண்' என்றொரு மூன்றாவது பகுதி தனி உறுப்பு போன்று குறிக்கப்படுவதை உணரலாம்.

சிலப்பதிகாரம் இதனை '**முலை முகம்**' என்று குறிக்கின்றது. பெருங்கதை ஆசிரியரும்,

"காமங் கனிந்த கருத்தடங் கண்ணின்
இமைதீர் வெம்பனி **முலைமுகம்** நனைப்ப [4]
— எனக் குறியிடுகின்றார்.

இம் முலைமுகத்தைத்தான் கண்ணகியார் திருகிப் பறித்து எறிந்ததாகக் காண்கின்றோம். சிலப்பதிகாரப் பதிகத்தார்,

---

1 திருவா : அருட்பத்து : 5.
2 நாலடி : 399.
3 கம்ப : சடாயு உயிர்நீத்த படலம் : 106.
4 பெருங் . 191, 192.

"முத்தார மார்பின் முலை முகம் திருகி" [1]

— என்று பாட அதற்கு உரைவகுத்த அடியார்க்குநல்லார்,

"தன் முலைத் முகத்தெழுந்த தீயை உண்ணப்பண்ணின பத்தினி" என்று விளக்கினார். வரந்தரு காதையிலும்,

"கலிகெழு கூடல் கதழெரி மண்ட
முலைமுகந் திருகிய மூவா மேனி"[2]

—என இளங்கோவடிகள் பாடுகின்றார்.

கம்பராமாயணத்தில் சூர்ப்பனகையின் மார்பை இலக்குவன் சிதைத்ததைக் குறிக்குமிடத்தே,

"மூக்குங் காதும் வெம்முரண் முலைக்கண்களும்
முறையாற் போக்கி"[3]

—என முலைக்காம்பாம் முன் பகுதியையே சிதைத்ததாகக் குறிக்கப்படுவதும் துணைச் சான்றாகின்றது.

கண்ணகியார் இந்நிகழ்ச்சியை நிகழ்த்தியதை அறிவிக்கும் இடத்தில் இளங்கோவடிகள் திருகப்பட்ட பகுதியின் நிறத்தை மனத்திற்கொண்டு சொல்லை அமைத்துள்ளார். மார்பிடத்தில் இப்பகுதி தனி நிறத்தினது. முன்னரும் கலிங்கத்துப் பரணி 'கருங்கண்'' எனக் கருமை நிறமாகக் குறித்ததைக் கண்டோம். இக்குமிழ் கருமை நிறம் கொண்டது என்பது உண்மையாயினும் இலக்கியங்கள் இதனை ஒரு குறிப்பாகக் காட்டுவதை நினைக்க நேர்கின்றது. இங்கு எடுத்துக்கொண்ட கருத்திற்காகவும் இந் நினைவு வேண்டப்படும் ஒன்றாகின்றது.

"அந்தநறுங் கோங்கின் அரும்பெனலாம் அவ்
வரும்புக்கு
இந்த முகக் கருமை எய்தாதே"[4]

---

1 சிலப்பதி : பதிகம் : 33.
2 சிலம்பு வரந்தரு காதை : 149, 150
3 கம்ப : சூர்ப்பனகை : 94
4 வருணகுலாதித்தன் மடல் : கண்ணி 85

"வட்டவிரு மந்தரத்தை மார்பிற் பதித்திறுகக்
கட்டுமணி ஆணியாற் கண்கறுத்து"[1]

-என்று இவ்வடிகள் இவ்வாறு அப்பகுதியின் கருமை நிறத்தைப் பேசுகின்றன.

இதனை அடிகளார் நீல நிறமெனக்கொண்டு 'மணி' எனக் குறிக்கின்றார். இங்கேதான் 'மணி' என்னுஞ்சொல் அமைந்து வரலாற்றில் விழுந்த முடிச்சை அவிழ்த்து விடுகின்றது.

"இடமுலை கையால் திருகி, மதுரை
வலமுறை மும்முறை வாரா, அலமந்து
மட்டார் மறுகின் மணிமுலையை வட்டித்து
விட்டாள் எறிந்தாள் விளங்கிழையாள்"[2]

-என்னும் அடிகளை நோக்கினால் கண்ணகியார் இந்நிகழ்ச்சியை எவ்வாறு ஆற்றினார் என்பதை உணரலாம். 'மணிமுலை' என்பதற்கு 'வனமுலை' என்றொரு பாடம் குறிக்கப்பட்டுள்ளது. மட்டார் என்பதன் மோனைக்கு மணி என்பது பொருந்திய மோனையாக அமைவதையும், பிற அடிகளிலும் மோனைகள் பொருத்தமாக அமைந்திருப்பதையும் நோக்கினால் 'மணி' என்னும் பாடமே உரியதாகின்றது. மேலும், முன்னர் 'மணி' என்னும் சொல்லைக் கண்ணகியார்க்கும், சிலம்புக்கும் அமைத்த தொடர்பையும் நோக்கவேண்டும்.

இவ்வாறு 'மணி' என்று அடைமொழியை முலைக்கு அமைப்பது இளங்கோவடிகளார் மட்டும் கைக்கொண்டதன்று

சீவகசிந்தாமணி ஆசிரியர் திருத்தக்க தேவர்,

"... ... ... ... ... இருஞ்சிலை முத்தம் சேர்த்தித்
திருமணி முலையின்"[3]

-என்று பாடுவதும், அதற்கு உரை எழுதிய நச்சினார்க்கினியர் "வானவிற் போலும் முத்து

1 வருணகுலாதித்தன் மடல் ; 96
2 சிலம்பு : வஞ்சினமாலை : 43, 46,
3 சீவ. சி ; 625,

வடத்தை முலைத்தலையிலே சேர்த்தி' என்று விளக்குவதும் இணைத்துப் பொருத்திக் காணத்தக்கன.

இந்த முலைத்தலையின் கருமை நிறம் ஓரளவு நீல நிறங்கலந்தது. நீல மணிபோன்ற கருமை நிறத்தது. இதையொரு வண்ணனையாக,

"காமன் இமை யாமல்வைத்த
கண்கருப்புப் பாய்ந்ததுவோ?
வாமமுலைக் கண்கள்
மணிக்கருப்பை என்சொல்வேன்?[1]
—என்று சுப்பிரதீபக் கவிராயர் பாடியுள்ளார்.

இளங்கோவடிகளார் இப்பகுதியை 'மணி' என்ற அடைமொழியோடு குறித்ததை வழிமொழிந்து பாடுவதுபோன்று திருவரங்கக் கலம்பகத்தில் ஒரு பாடல் உள்ளது. அப்பாடல் உடல் உறுப்புகளை மட்டும் தக்க உவமைகளுடன் அடுக்கிக் காட்டும் பாடல். அடிக்குப் பதினான்காக 56 சீர்களைக்கொண்ட அப்பாடலில் நான்கு சீர்களே அடைமொழிகள். மற்றவை யாவும் உறுப்பினைக் குறிக்கும் சொற்களாக அமைந்து ஆசிரியர் பிள்ளைப்பெருமாள் ஐயங்காரது செய்யுள் ஆற்றலை முழக்குகின்றன. உடல் உறுப்புகளை 32 ஆக, அது அடுக்கிப் பாடுகின்றது. அம்முப்பத்திரண்டு உறுப்புகட்கும் 32 உவமப் பொருட்களை அடுக்கி நிரல்நிறையாக அமைத்துள்ளது.

பாடலின் முன்னடிகள் இரண்டிலும் உவமப்பொருட்கள் அடுக்கப்பட்டுள்ளன. பின்னிரண்டு அடிகளில் உறுப்புகள்விளங்குகின்றன.

"மழை, பிறை, சிலை, வேல், வள்ளை, எள், ..."[2]
—என முதல் அடியில் உவமை தொடங்கி "குழல், நுதல், புருவம், விலோசனம் (கண்), காது,

---

1 கூளப்பநாயக்கன் காதல் : கண்ணி 196.
2 திருவரங்கக் கலம்பகம் : 53.

நாசி ... ... ...'' - என நிரல்நிரையாக உறுப்பைக் குறிக்கும் சொற்கள் அமைந்துள்ளன.

இவ்வமைப்பில் கொங்கை ஒரு உறுப்பாகவும் 'முலைக்கண்' என்பது தனியொரு உறுப்பாகவும் காட்டப்பட்டுள்ளன:

''கூர்உகிர், **கொங்கை, கண்**, வயிறு'' இவற்றிற்கு உவமப் பொருளாகக் காட்டப்பட்டுள்ளவை.

"தத்தைவாய், கலசம், மணி, வடபத்திரம் (ஆலஇலை)'' கொங்கைக் **கண்ணிற்கு** உவமமாக **மணி** கூறப்பட்டுள்ளது.

இப்பாடலாசிரியர் இலக்கிய வழக்கிலும், பேச்சு வழக்கிலும் உள்ள உவமைகளையே பட்டியலிட்டுள்ளார். எனவே முலைக்கண் ணிற்கு மணியை உவமப்பொருளாகக் கூறியது சான்றோர் கை யாண்ட அடிப்பட்ட வழக்கு. இவ் வடிப்பட்ட வழக்கின் முதல்வராக இளங்கோவடிகளார் திகழ்வார் போலும்.

இவ்வுறுப்பு கொண்ட கருநீல நிறத்தாலும், குமிழ் போன்ற உருண்டை வடிவத்தாலும் மணி போன்றதாகும்.

## மணி மார்பு

எனவே, அடிகளார் 'மணிமுலை' என்று - மணிபோன்ற முலைக்கண்' என்று உவமத்தொகையாக்கிக் குறித்துள்ளார் என்பது விளங்கும். இந்த மணி உவமையை நோக்கினால் கண்ணகியார் சிதைத்துப்பறித்தது முலைக்கண்ணாம் காம்பையே என்பது தெளிவாகும். இக்கருத்துக்குக் கண்காணும் சான்றாகச் சேரன் செங்குட்டுவன் நாட்டிய கண்ணகியார் சிலை உள்ளது. கண்ணகியார் சிலையின் இடது புற மார்பின் காம்புப் பகுதி சிறு சிதைவாகக் காணப்படுகின்றது.

இவ்வாறமையும் பற்பல சான்றுகளைக் கொண்டு நோக் குங்கால் 'கண்ணகியார் உணர்ச்சிக் குமுறலில் நின்று தம்வலது கை நகங்களால் இடது மார்புக் காம்பை ஆழமாகக் கிள்ளித் திருகிப் பறித்து எறிந்தார்' என்பதை உணரலாம். இச்செயல் நடக்கக் கூடியதே என்பதையும் உறுதியாகக் கொள்ளலாம்.

'மணி' என்னும் சொல் இம்முலைப் பகுதிக்கு அடைமொழி யாக்கப்பட்டமைதான் திருகி எறியப்பட்ட பகுதி இந்த முலைக்கண் எனப்படும் நீல நிறமான குமிழ்ப்பகுதியே என்பதைத் தெளி வாக்குகின்றது. இத்தெளிவால் கண்ணகியார் இவ்வாறு செய் திருக்க இயலாது —'கட்டுக்கதை' என்று போடப்பட்ட முடிச்சும் எடுபடக் காண்கின்றோம். இக்காம்பு நரம்பின் முடிச்சாய் அமைந்தது. இது சிதைக்கப்படின் நெடுநாள் உயிர் வாழ முடியாது. நாளுக்கு நாள் குருதிக் கசிவால் இறக்க நேரிடும். 'கண்ணகியார் பதினான்கு நாள்கள் வேங்கைக் கானலில் இருந்து பின்னர் இயற்கை எய்தினார்' என்னும் கருத்தும் இயைபாக அமைகின்றது.

நரம்பு முடிச்சாம் முலைக்காம்பை முடிச்சவிழ்த்து விளக்கிக் காட்டும் பாங்கில் 'மணி' என்னும் சொல் அமைந்து வரலாற்று முடிச்சை அவிழ்ப்பதும் ஒரு நயமான பொருத்தமே.

இக்கட்டுரையால்,

'கண்ணகியார் சிலம்பின் முதன்மை உறுப்பினர்;

சிலம்பை உடைத்தமையும், மார்பைச் சிதைத்தமையும்

அவர்தம் பெருமையை வெளிப்படுத்தின;

**மார்பைச் சிதைத்துக்கொள்வதும் நிகழக்கூடியதே;**

**'சிலப்பதிகாரம் வரலாற்றுக் காப்பியமே — கட்டுக்கதையன்று'**

—என்னுங் கருத்துகள் நாட்டப்பட்டுள்ளன. இக்கருத்துகளை 'மணி' என்னும் சொல் கருவியாக நின்று வெளிப்படுத்து கின்றது. வரலாற்று ஆய்விற்குச் சொல் ஆய்வு உறுதுணை யாகக் கூடியது என்னும் உண்மையும் புலனாகும்.

வாழ்க மணியான தமிழ்ச் சொற்கள்!

# 8. கடல் நடுவே காரானை.

கதையில் வெள்ளானையைக் கேட்கிறோம்; காட்டில் கருப்பு யானையைக் காண்கிறோம்; நாட்டிலும் நடமாடக் காண்கிறோம்; நீரில் நீர்யானை தென்படும்; கடல் நடுவே காரானை கண்ணிற் படுமோ?

கண்ணிற்படும்; விண்ணிற்படும்.

மூலப் பின்னணி:

**வானமும் கடலும்**
**ஆடிய விளையாடல்.**

*சங்க இலக்கியங்கள் தன்மைநவிற்சிப் பேழைகள். பின் விளைந்தவை உயர்வுநவிற்சி விளை நிலங்கள்.*

*'வெண்முகில் கடல் நீரைக் குடித்துக் கருகொள்ளும்'*

*-என்னும் கருத்தை இருவகை இலக்கியங்களும் பேசுகின்றன. இது தன்மை நவிற்சியா? உயர்வு நவிற்சியா? இவ்வகை ஐயம் எழுதல் இயல்பு.*

*தி. ஆ. 1997-கி. பி. 1966-இல் மலைநாட்டுப் பயணத்தை மேற்கொண்டு கலத்தில் சென்ற போது வானமும் கடலும் ஆடிய விளையாட்டில் ஐயம் நீங்கியது. முகில் கடல்நீரை முகப்பதைக் கண்ணாரக் கண்டேன். அக்காட்சியின் எழுத்துப் படிவமாக எழுந்த கட்டுரை,*

**"கடல் நடுவே காராணை"**

வெளியீடு :
"தமிழ்ப் பொழில்"
*2005-தை மலர்*
(சனவரி – 1974)

கடல்
நடுவே
காராணை.

# இலக்கியம்
## இயற்கையின் வண்ணப் பதிப்பு.

'ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு ... ... — ... — ஒரு சிறுவன் எண்ணிக்கொண்டிருக்கின்றான்.

'... ... ... பதின்மூன்று, பதினான்கு, பதினைந்து — அந்திப் பொழுதில் இருள் கவ்வுகின்ற நேரம்; தொடர்ந்து எண்ணுகின்றான்.

'... ... இருபத்தாறு, இருபத்தேழு, இருபத்தெட்டு ...' .... .... — நாகர்பட்டினம் கடற்கரையில் நின்றவாறு எண்ணுகின்றான்.

' ... நாற்பத்தேழு, நாற்பத்தெட்டு ... ' – ஆள்காட்டி விரலைக் கடல் நோக்கி நீட்டியவாறே தொடர்ந்து எண்ணுகின்றான்:

'... ... எழுபத்திரண்டு, எழுபத்துமூன்று, எழுபத்துநான்கு ... ' –'இத்துணை ஆர்வத்துடன் எவற்றை எண்ணுகின்றான்' என்று நின்று நோக்கினேன்.

'... ... எண்பத்தேழு, எண்பத்தெட்டு ... ...' – வங்கக் கடலில் நிற்கும் கலத்தில் எரியும் மின்விளக்குகளை ஆர்வத்தோடு ண்ணுகின்றான். எண்ணிக்கை தொடர்ந்தது.

நாகைச் சிறுவன் பொழுதுபோக்கு விளையாட்டாக எண்ணிக்கொண்டிருந்தான். எண்ணும் காட்சியைப் புலவனாகிய யான் நின்று கண்டேன். கண்ட எனக்கு,

பன்மாண் பொருளொடு விண்மீன் தொகுத்து
வங்கக் கடலில் வருகலன் விளக்கொளி
பொங்கிருள் கவ்வும் பொழுதிற் கரையிருந்(து-)
ஓகைச் சிறுவன் எண்ணும்
வாகை குடிகொள் நாகை நகரே[1]

—என்று பாடத் தோன்றியது.

'இஃதும் காணத்தக்க அருங்காட்சியோ?
இது பூணத்தக்கதும் ஒரு பாடலோ?'

— என வினவலாம்.

இதற்கு நற்றிணை விடை கூறுகின்றது.

சங்கப் புலவர் உலோச்சனார் இதுபோன்ற காட்சியொன்றைக் கண்டார். இங்கே சிறுவன் கரையில் நின்று எண்ணக் கண்டோம்; அங்கே ஒரு பெண் மனையிலிருந்து எண்ண, அவர் கண்டார். சிறுவன் அந்தியில் எண்ணினான்; மனைக்கிழத்தி விடியலில் எண்ணினாள். இங்கு வெளிநாட்டுப் பொருள்களைத் தொகுத்து இறக்கும் வணிகக் கலம் நின்றது; அங்கு கழிகளில் மீனைத் தேடித் தொகுக்கும் பரதவர் படகுகள் வந்தன. இங்கு ஒரு கலத்தில் பல விளக்குகள் எண்ணப்பட்டன; அங்கு ஒவ்வொரு திமிலுக்கும் (படகு) ஒவ்வொன்றாக எரியும் விளக்கம் எண்ணப்பட்டது. கண்டு நின்ற உலோச்சனார் பாடினார்:

"... ... ... மனையிருந்து
இருங்கழி துழவும் பனித்தலைப் பரதவர்
திண்டிமில் விளக்கம் எண்ணும்
கண்டல் வேலிக் கழிநல் லூரே"[2]

---

1 நூலாசிரியன் பாடல்.

2 நற் : 372 : 10—13.

இப்பாடலைக்கொண்டு நோக்கும்போது இக்காலச் சிறுவன் செயலைப் பண்டை நிகழ்ச்சியின் பழக்க நிழல் எனலாம். அத்துடன்,

'இலக்கியம் இட்டுக் கட்டுவது அன்று;
இயற்கையின் வண்ணப் பதிப்பே'

—எனவும் குறிக்கத் தோன்றுகின்றது.

இக்காட்சியைக் கண்ட எனக்கு 'நாமும் இவ்வாறு எண்ணிப் பார்க்க வேண்டும்'-என்னும் ஓர் எளிய அவா பிறந்தது. 'கரையிலிருந்தன்று; கலத்திலிருந்து, கரைப்பகுதியில் தெரியும் விளக்குகளை எண்ணவேண்டும்' — என்னும் அவா எழுந்தது. இவ்வவாவைப் பட்டினப்பாலை ஆசிரியர் உருத்திரங் கண்ணனார் உள்ளத்தில் வந்து நின்று தூண்டினார்:

'பூம்புகார் நகரில் மாடிக் கட்டடங்கள் உயர்ந்த நெடிய தூண்களோடு விளங்குகின்றன. அம்மாடத்தில் விளக்குகள் ஏற்றப்பட்டு எரிகின்றன. வங்கக் கடலில் வளைந்த படகுகளில் மீன் பிடித்துத் திரும்பும் பரதவர் அந் நன்னிற விளக்குச் சுடர்களை நோக்கி எண்ணிப் பொழுது போக்கியவாறே வருகின்றனர்'

—இக்காட்சியைக் கண்டிருக்கிறார் உருத்திரங் கண்ணனார். அதனை,

"நெடுங்கான் மாடத் தொள்ளெரி நோக்கிக்
கொடுந்திமில் பரதவர் குரூஉச்சுடர் எண்ணவும்"[1]

—எனப் பாடினார். இவ்விலக்கியத்தை எண்ணத்தில் சுவைத்த யான் எண்ணியும் சுவைக்கக் கருதினேன். இதற்குரிய வாய்ப்பு திருவள்ளுவர் ஆண்டு 1997-சித்திரை-நான்காம் நாளுக்கு நேரான 16—4—1966-இல் கிட்டியது.

அந்நாள் யான் என் மலைநாட்டுப் பயணத்தை மேற்கொண்ட நாள். பினாங்கு எழுத்தாளர் மன்றத்தாரது அன்பழைப்பை ஏற்றுப் புறப்பட்ட நாள். அத்திங்களில் கோலாலம்பூரில்

---

1 பட். பா : 111, 112.

முதல் உலகத் தமிழ் மாநாடு நிகழவிருந்தது. அதிற் பார்வையாளனாகக் கலந்துகொள்ளும் ஆர்வமும் பயணத்தை உந்தியது.

அந்நாட் காலையில் நாகைப் பெருமக்கள் சிறப்போடு வழியனுப்பப் படகேறிச் சென்று 'மாநிலச் சென்னை' (*State of Madras*) என்னும் கலத்துள் புகுந்தேன். அதிற்பணியாற்றும் நண்பர்களும் எனது பழைய மாணவச் செல்வர்களும் வாயிற் புழையில் நின்று மாலையிட்டு வரவேற்று அன்பைப் பெய்தனர்.

எனதுயிரனைய மாணவச் செல்வம் திரு சு. அசனல்ஆரிபு உள்ளம் பொங்கும் அன்புடன் கலத்தில் தங்கும் அறை முதலிய வாய்ப்புகளை நலஞ்சூழ ஏற்பாடு செய்திருந்தார். உடன் பயணங்கொண்டு மகிழ்வித்தார்.

மாலை 6 மணியில் கலம் புறப்பட இருந்தது. ஒளி ஒளிந்துகொள்ளத் துவங்கி, இருள் பையப் பையப் படர்ந்தது. எனது எளிய அவா முந்தியது. நாகைக் கடற்கரையில் மஞ்சள் மணிக்கோவை போன்று ஒளிவிளக்குகள் தோன்றின. கரையின் தென்பகுதியில் 'மதுரைக் கப்பல் நிறுவன'க் கட்டடம் உயர்ந்த மாடங் கொண்டது. அதன் முகப்பில் 25 அடி உயரமுள்ள நெடுந்தூண்கள் நான்கு நான்காய் இரு வரிசைகளில் நிவந்து நின்றன. எனவே, அது 'நெடுங்கால் மாடம்'. அதில் ஏற்றப் பட்டு எரிந்து கொண்டிருந்த ஒளி விளக்குகளை நோக்கிக் கலத்தில் நின்ற புலவன் யான் சுடர்களை எண்ணி மகிழ்ந்தேன்.

உருத்திரங் கண்ணனாரது பட்டினப்பாலை அடிகள் இரண்டையும் பகுத்து பகுத்துப் பார்த்தேன். "நெடுங்கான் மாடம்"... ஆகா! இதோ நெடுந்தூண்களைக் கொண்ட மாடம். "ஒள்ளெரி நோக்கி"... இங்கும் ஒளிவிடும் விளக்கத்தை நோக்குகின்றேன். "கொடுந்திமில் பரதவர்"... யான் பெருங்கலத்தில் புலவன்; "குருஉச் சுடர் எண்ணும்"... மஞ்சள் நிறச் சுடர்களை எண்ணினேன். சொல்லுக்குச் சொல் இயைந்து நிற்கும் சங்க இலக்கியம் காலங்கடக்கினும் காட்சி கடக்காமல் நிற்பதை உணர்ந்தேன். கலம் புறப்பட்டு ஒளி விளக்குகள் மின்மினியாகும் வரை உவந்து கண்டு நின்ற யான் அண்டையில் நின்ற ஆரிபுச் செல்வரிடம்,

'இலக்கியம் இயற்கையின் எழுத்துப் பதிவு மட்டும் அன்று; இயற்கையின் தொலைக்காட்சிப் பேழை'—என்றேன். இலக்கிய உணர்வுடைய இனிய மாணவர், 'உங்கள் பயணம் இலக்கியப் பயணமாக விளங்குக' —என்றார். அஃது உண்மையாயிற்று.

இவ்விலக்கியப் பயணத்தில் ஓர் இலக்கியக் குடும்பத்தவர் எனக்கு உடன் பயணியாக அமைந்தார். எனது தந்தையார் ஆத்திசூடி உரைகாரர் கோ. வைத்தியலிங்கனார். அவர் "உத்தரம் வரை உரை எழுதியவர்" எனத் தமிழவேள் உமாமகேசுவரனாரால் போற்றப்பட்டவர். ஆத்திசூடி உரையின் கையெழுத்துப் படியின் அடுக்கு, உத்தரம் வரை உயர்ந்திருப்பது என்பதால் அவ்வாறு போற்றப்பட்டார். அத்துடன் திருக்கோவையாரைப் பாடஞ் சொல்லும் திறனில் புகழ் பெற்றவர் என் தந்தையார். அத்திறன் கருதியும், என் தந்தையாரது 'கோ. வை.' என்னும் பெயர் எழுத்துகளின் இயைபு கொண்டும் பண்டிதமணி மு. கதிரேசனார் காரைக்குடி மன்று ஒன்றில் எனது தந்தையாரைக் 'கோவையார்' என்று சிறப்பித்தார். இருவரும் நண்பர்கள். அப்பண்டிதமணியாரது இளைய மகனார் திரு க தியாகராசன் என்னுடன் பயணஞ் செய்தார். இவரும் எம். ஓ. எல். பயின்ற புலவர். இவரது தமையனார் திரு க. மாணிக்கவாசகம் எனது மாணவர் என்பதிலும் ஒரு தொடர்பு உண்டு.

கலத்தின் தலைவர் பழகற்கினியவர்; பண்புடையாளர். தமிழ்ப்புலவர் என்பார் தனிமதிப்புக்குரியவர் எனக் கருதி அளவளாவினார். கலத்தில் அமைந்த சிறு நூலகத்திற்கு எனது நூல்களை அன்பளிப்பாக அளித்தேன். 'தங்களைத் தாங்கிய பெருமையின் அணியாக, என் கலம் தங்கள் நூல்களைச் சூடிக் கொள்ளும்; நன்றி' என்ற அவரது உளப்பாங்கு எண்ணி உவத்தற்குரியது.

கலம் செல்லும் பாதை மணிமேகலை கண்ட பாதை என்பதன் குறிகள் தென்பட்டன. நீர்ப்பரப்பின் அலையில் தவழ்வது போன்று அலையோடு அலையாக ஒருவகைப் பறவைகள் ("திரைதவழ் பறவை") தென்படத் தொடங்கின. நேரம் செல்லச் செல்லச் சிறகை விரித்துப் பறக்கும் பறவைகள் ("விரிசிறைப் பறவைகள்") உயரே அலைந்தன. சிறகடித்தபடியே வானில் நின்று மீனைப் பிடிக்க நீரில் விழும் மீன்கொத்திப் பறவை இனம்

("எழுந்து வீழ் சில்லை") வீழ்ந்து எழுந்தது. கிளி போன்று சிறகை ஒடுக்கிப் பாய்ந்து பறக்கும் ஒருவகைப் பறவை ("ஒடுங்கு சிறை முழுவல்")கள் பாய்ந்துகொண்டிருந்தன.[1] இவை யாவும் அண்மையில் நிலப்பகுதி உள்ளது என்பதை அறிவித்தன.

மணிமேகலை குறிக்கும் நாகர் தீவு —மாநக்கவாரம் —நிக் கோபார் தீவுகளின் மலைகள் காட்சியளித்தன. அத்தீவுகள் இந்திய அரசுக்கு உரிமையானவை. அந்நோக்கில் கப்பல் அரை மணி நேரம் அங்கு நின்று புறப்படுதல் கப்பல் துறை மரபு. அவ்வாறே நின்று புறப்பட்டது.

## நீர் குடித்த காட்சி.

மறுநாள்,

என் உள்ளத்தில் ஊன்றி நிற்கும் நிகழ்ச்சி நேர்ந்த நாள் தாழ்வாரத்துச் சாய்காலியில் அமர்ந்து கடற்காற்றையும் காட்சியையும் சுவைத்துக்கொண்டிருந்தோம். அவ்வழியே நடந்த ஒரு பெரியவர்,

'காரானை தண்ணி குடிக்குது, பாருங்க ...

தண்ணி குடுக்குது பாருங்க' —என்று கடற்குள் கையை நீட்டிக் காட்டிக் கூறியவாறே நடந்தார். எல்லாரும் அப்பக்கம் பார்வையைப் பாய்ச்சினோம். புதுமைக் காட்சி. ஆம்; கடல் நடுவில் ஒரு யானை தன் தும்பிக்கையை நீரில் நீட்டிக்கொண்டிருந்தது. ஏறத்தாழ மூன்று நான்கு கல் தொலைவில் அக்காட்சி தென்பட்டது. அவ்வருங்காட்சி என்னைப் போன்ற புதுப் பயணிகளது முகத்தில் ஆர்வத்தை எழுதிவிட்டது. அடிக்கடி பயணம் செய்வோர் நடந்துகொண்டே பார்த்துச் சென்றனர். இலக்கிய நினைவில் நின்ற எனக்கு அக்காட்சி பெருவியப்பை எழுப்பி, அகல விழித்து நோக்கவைத்தது.

காட்சியில் எனது புறக்கண்கள் தோய்ந்து நின்றன. அகக் கண்ணோ அக்காட்சியைச் சூழ்ந்து சங்ககாலப் புலவர்

1 "திரைதவழ் பறவையும் விரிசிறைப் பறவையும்
எழுந்துவீழ் சில்லையும் ஒடுங்குசிறை முழுவலும்"
—மணி : 8 : 28, 29.

களும் பிற்காலப் புலவர்களும் சூழ்மி நிற்பதாகக் கண்டது அவர்களது இனிய பேச்சுகளை உள்ளச்செவி கேட்டுப் பூரித்தது. முல்லைப் பாட்டின் ஆசிரியர் நப்பூதனார் பேசினார்:

'எழில் தவழும் வெண்முகில் ஒலிமுழக்கந்தரும் குளிர்ந்த கடலினது **நீரைக் குடித்தது**. குடித்த முகில் கொம்புகொண்டது போன்று எழுந்தது'[1] -என்ற அவர் அதற்கொரு கதை உவமையையும் குறித்தார்.

'வாமனனாகத்தோற்றமெடுத்துமாவலிமன்னன்பால் மூன்றடி மண்ணைப் பெற நீரேற்றவுடன் நிமிர்ந்து வளர்ந்த நெடிய திருமால் போன்று நீருண்ட முகில் கருங்காராக எழுந்தது'[2] —என்று அகவிப் பாடினார். அவரையடுத்துப் புறநானூற்றுப் புலவர் பெருஞ்சித்திரனார்,

'தொடர்ந்த ஒலியால் பேரிரைச்சலை எழுப்பும் கடல்நீர் குறைபடுமாறு நீரை முகந்துகொண்டுவிரைந்து செல்லும் கருமுகில்'[3] — என்றார்.

அவரைத் தொடர்ந்து பரிபாடலில் நல்லந்துவனார்,

''கடல் குறை படுத்த நீர்''[4]

-என இயற்றமிழ் தர, அவர்வழி நின்று நல்லச்சுதனார் அதனைக் காந்தார இசையில் இசைத்துக் காட்டினார்.

மற்றொரு புலவர் தனிமகனாக நின்று,

''குணகடல் முகந்து குடக்கேர்பு இருளி

... ... .... ... ... ... ... ... ...

தன்றொழில் வாய்த்த இன்குரல் எழிலி''[5]

—என இன்குரல் எழுப்பினார்.

---

1 'பாடிமிழ் பனிக்கடல் பருகி, வலனேர்பு
'கோடுகொண் டெழுந்த கொடுஞ்செல வெழிலி'' முல். பா ; 4, 5.

2 ''நீர்செல நிமிர்ந்த மாஅல் போல''
பாடிமிழ் பனிக்கடல் பருகி'' —முல் பா : 3—4.

3 ''நீண்டொலி யரவங் குறைபட முகந்துகொண்
டீண்டுசெலற் கொண்மூ வேண்டுவய குழீஇ'' —புறம் : 161 : 1, 2.

4 பரி: 20 : 1

5 நற்: 153 : 1, 4

"கடல்நீர் முகந்த கமஞ்சூல் எழிலி"[1]

—என்று காருக்கென்றே நாற்பது பாடிய மதுரைக் கண்ணங் கூத்தனார் செப்பலோசையில் செப்பினார்.

சங்க காலப் புலவரோடு இடைக்காலப் புலவரும் இது பற்றிப் பேசினர். பெரியபுராணச் சேக்கிழார்,

"கருங்கடல் முகந்த மாமுகிற் குலம்"[2]

என்றார். கல்வியிற் பெரிய கம்பர் சிவனையும் திருமாலையும் உவமையாக்கி,

'வெண்ணீற்றைப் பூசிய சிவபெருமானது வெண்மை நிறங்கொண்ட முகில்கள் கடலில் நீரைப் பருகித் திருமாலின் உடல் நிறத்தைப் போலக் கருத்து மீண்டன,[3] —என்றார்.

ஆண் கடவுளரை உவமையாக்கிக் கம்பர் பாடினால் பெண் கடவுளரை உவமையாக்கிப் பாடவேண்டாவோ? அதனை நைடதத்தில் அதிவீரராமர் செய்தார் :

'தொகுதியான முகில்கள் வெண்மை நிறத்தை யுடைய கலைமகளைப் போன்று விளங்கி, வானத்திற் சென்று, பரந்த கடலில் அலைநீரைப் பருகிப் பனிமலை (இமயம்) பெற்ற உமையம்மையின் பச்சை — கருமை நிறங்கொண்டு மீண்டன'[4]

பிற்காலப் புலவரில் முக்கூடற் பள்ளின் ஆசிரியர்,

---

1 கார்: 33: 1.

2 பெரி. பு : அதிபத்தர் : 2.

3 "நீறணிந்த கடவுள் நிறத்தவான்
ஆறணிந்துசென் றார்கலி மேய்ந்தகிற்
சேறணிந்தமுலைத் திருமங்கைதன்
வீறணிந்தவன் மேனியின் மீண்டவே"- கம்ப. ஆற்றுப்படலம் : 2.

4 "கருவி மாமழை கலைமகள் உருவென விளங்கி
இருவி சும்பிடைப் படர்ந்துசென் றினமணி கொழிக்கும்
டரவை வெண்டிரை மேய்ந்துயர் பனிமலை உயிர்த்த
உருவ வோடரித் தடங்கணார் உருக்கொடு மீண்ட"—நைடதம் : நாட்டுப் படலம்: 1.

"வேலா வலய முந்நீர் மேய்ந்து
கருக்கொண்ட முகில்
காலமுறை ஊன்றி அந்தக் காலமுறை
காட்டியதே"[1]

—என்றார்.

இவ்வாறே புலவர் பலரும் யான் கண்ட காட்சியைச் சூழ்ந்து நின்று பேசுவதாக உணர்ந்தேன். புலவனாகிய யான் இவ்வாறு புலவர்களைக் கடல்நடுவே ஒன்றுகூட்டிக் கண்டது கற்பனையாக இருக்கலாம். புலவர்களால் ஒருமுகமாகப் பாடப் பட்டுள்ள செய்தி கற்பனையன்று என்பதை யான் கண்ட காட்சி பதிப்பித்துக் காட்டியது.

'வெண்முகில் கடல் நீரில் படிந்து தண்ணீரைக் குடித்துக் கருநிறம் பெற்று மேலே எழும்' – என்ற அடிப் பட்ட கருத்தை வண்ணனையாகவே கருதி வந்தோம். இதனை அப்பட்டமான உண்மையாகக் கண்டேன். கண்ட காட்சியை அப்பாங்கிலேயே எழுதி மகிழ்வேன்:

காட்சி ஏறத்தாழ நான்கு கல் தொலைவில் தெரிந்தது:

அவிழ்ந்த பஞ்சுப் பொதி போன்ற வெண்முகிற்கூட்டம் கடல்மட்டத்தினின்றும் ஏறத்தாழ ஒரு கல் உயரத்தில் குழுமித் தொகுதியாகத் தெரிந்தது.

அதன் மையமான அடிப்புறத்தினின்று ஒரு கால் இறங் கியது. இறங்கும் தொடக்கத்தில் ஆவின் பால்மடிக் காம்பு ஒன்றைப் போன்று காட்சியளித்தது. அஃது ஆலம் விழுது போன்று வளர்ந்தது.

வளர்ந்து இறங்கிக் கடல்மட்ட நீரில் கால்படிந்தது. காலும் வெண்மை நிறமாகக் காட்சியளித்தது.

இஃது இரண்டு, மூன்று மணித்துளி அளவில் நிகழ்ந்தது.

---

1 மூக்கூ. ப: 87.

காலின் அடி சற்றுப் பரவியதாகக் கடல் நீரில் பாவிற்று. இந்நிலையில் ஓர் ஆலமரம் அடி பரவி வெண்மைத் தழைகளுடன் மேலே தழைத்து நிற்பது போன்றிருந்தது.

உடன் வெண்ணிறக் கால் முழுதும் பருத்து விரிவடைந்தது.

விரிந்த காலின் உள்ளே துளை பெறுவது போன்று விரைந்து மையத்தில் இடைவெளி ஏற்பட்டது.

அவ்விடைவெளி வழியே முதலில் புகையோட்டம் ஏறுவது போன்று நீர் ஏறுவது தெரிந்தது.

தொடர்ந்து புகையோட்ட நீர் செறிந்து நீரலை ஏறுவதாக ஆயிற்று. இந்நிகழ்ச்சி ஓரிரு இமைப்பிற்குள் நேர்ந்தது.

இக்காட்சி தூண்போன்ற ஆடிக் குழாய்க்குள் நீர் அலையலையாக ஏறினால் எவ்வாறிருக்குமோ அவ்வாறு இருந்தது.

மூன்று நான்கு மணித்துளி அளவில் இந்த உறிஞ்சல் நிகழ்ந்தது. ஆலமரத்தின் வெண்மைநிறம் சாம்பல் நிறமாகியது.

அடுத்துக் கடற்பரப்பில் பரவியிருந்த கால்அடி, தூண் அளவில் ஒடுங்கியது. முன்னர் தூணினது அடிப்புறம் இறங்கிய நிலையில் மீண்டும் விழுதின் அடி போன்று உயர்ந்து மேலே சென்றது. அவ்விழுது மேலே குறைவது தெரியா அளவில் ஏறியது.

விழுது ஏற ஏற வெண்முகிலில் கருநிறமும் ஏறுகிக்கொண்டே இருந்தது.

விழுது ஆவின் பால்மடிக் காம்பாகி அஃதும் குறைந்து காரின் அடிமட்டமாயிற்று.

கருங்கார் நல்ல திரட்சியாக உயரே எழுந்தது; பின் நகரத் தொடங்கியது.

இக்காட்சியைப் புலவர்கள் காலந்தோறும் கண்டு பாடியுள்ளனர். அவர்களது கூற்று எழுத்திற்கெழுத்து பொருந்தி வரும் உண்மைப்பொருள் கொண்டது என்பதை இக்காட்சி முத்திரையிட்டுக் காட்டியது.

## காட்சியும் இலக்கிய ஆட்சியும்.

இப்பொருத்தத்தை ஆழ்ந்து காணவும் இலக்கியங்கள் இடந்தருகின்றன:

வெண்முகிலிலிருந்து மடிக்காம்பு முளைத்து அது விழுதாகி ஊன்றியதைக் **கால் ஊன்றியதாக** இலக்கியங்கள் பேசுகின்றன:

"*ஆர்கலி யாணர்த் தரீஇய* **கால்வீழ்த்துக்**
*கடல்வயின் குழீஇய அண்ணலங் கொண்மூ*"[1]

—என்று பெருந்தலைச் சாத்தனார் பாடியுள்ளார். இதற்கு உரை கண்ட பழைய உரைகாரர்,

"**கால் வீழ்த்துக்** *கடலிடத்தே திரண்ட தலைமையை யுடைய முகில்*'

—என விளக்கினார்.

பெருஞ்சித்திரனார் பாடல் அடிகளில் குறிக்கப்படும் 'கால் ஊன்றிய' கருத்தை ஊன்றி நோக்க வேண்டும்.

இப்பாடல் கடிய நெடுவேட்டுவன்மேல் பாடப்பட்டது. 'அவனை அடையும் பரிசிலர் கூட்டம் தேரோடு மருப்பேந்திய யானையையும் பரிசாகப் பெறாமல் மீளாது'—என்பதைக் கூற எழுந்தது இப்பாடல்.

'பரிசிலர் பரிசை உறுதியாகப் பெற்றே மீள்வர்; பெறாமல் மீளார்'— என்பதை விளக்குவதற்கு உவமையாகவே முகில் கால் இறக்கிய கருத்து இப்பாடலில் வைக்கப்பட்டுள்ளது, அதனைக் கூறும்,

*... .. .... ... ... ... ...அண்ணலங் கொண்மூ*
*நீர்இன்று பெயரா ஆங்கு*"[2]

---

1 புறம் 205 : 10 11
2 புறம் : 205 ; 11, 12.

என்னும் பகுதி 'காலூன்றிய முகில் நீரைக் கொள்ளாமல் மீளாது; கொண்டே மீளும்' என்னும் உறுதிக் கருத்தை வழங்குகின்றது. இக்கருத்துடன் நீரைக் கொண்டு முதிர்வதனாலே 'கொள்-மூ' 'கொண்மூ' எனப்பெயர் பெற்றது என்பதையும் குறிப்பாக அறிகின்றோம்.

சேக்கிழாரும் குளத்தில் மலர்ந்த மலர்களை மேய இறங்கிய எருமைக்கு உவமையாக,

"மருமேவு மலர் மேய,
மாகடலின் உட்படியும்
உருமேகம் எனமண்டி"[1]

எனப் பாடினார்.

உவமையாகக் கூறப்படுவது யாவரும் பரவலாக அறிந்துள்ள – கண்டுள்ள தெரிபொருளாகும். இங்கு உவமையாகக் கூறப்பட்ட 'முகில் நீரைப் பருகும்' நிகழ்ச்சி பண்டைக் காலத்தில் யாவராலும் காணப்பட்ட தெரி பொருளாகவே நிகழ்ந்திருக்கின்றது. இன்றோ, நாம் உவமிக்கப்பட்ட பொருளைக் (உபமேயத்தை) கொண்டு உவமையைத் தெரிந்து கொள்ள வேண்டிய தெரியா – அறியாப் பொருளாகி விட்டது.

## காரானை.

மேலும் பெருஞ்சித்திரனார் பரிசிலர்பெறும் பரிசாகக்குறித்த மருப்புள்ள யானை' எனும் சொல் 'காரானை' என்னும் சொல் விளக்கத்திற்கு முடுக்கி விடுகின்றது.

பெரியவர் 'காரானை தண்ணீரி குடிக்குது' என்று முகிலைத் தான் 'காரானை'' எனக் குறித்தார். 'காரானை' என்றால் 'கருமைநிற யானை' என்னுப் பொருள் முதலில் எழும். முகிலின் திரட்சி, யானை உருவம் போன்று தோன்றும். முகில் கால் இறக்குவது யானைக்கு மருப்பு முளைத்தது போன்று தோன்றும். கால் கடலில் படிவது யானையின் தும்பிக்கை நீரில் படிந்திருக்கும் காட்சியாகும். காலிறக்கிய தூணில் உண்டான உள்துளையும் தும்பிக்கையின் தும்பித்துளையாகும். அத்துளையில் நீர் ஏறுவது, யானை தும்பிக்கையால் நீர் உறிஞ்சுவதாகும் (வெண்) முகில் (கருங்) கார் ஆவது கருநிற யானையாகும்.

---

1 பெ. பு: திருநாவு : 8,

எனவே, காட்சியின் ஒற்றுமையைக் காணின் நீர் குடித்த முகிலைக் காரானை என்றது பொருத்தமே. யானை, ஆனை என்று மருவிய பிற்காலத்தில் உருவானதே 'காரானை' (கார் ஆனை) என்னும் சொல். அதனால் இச்சொல் பண்டை இலக்கியங்களில் இல்லை.

இச்சொல் இலக்கியத்தில் இல்லையேயன்றி, நீர் பருகும் முகிலுக்கு உவமையாக யானையைக் குறிக்கும் மரபு இருந்ததைக் காணலாம் :

"நெய்யணி **குஞ்சரம் போல்** இருங்கொண்மூ
வைகலும் ஏரும் வலம்"

— என்கிறது கார் நாற்பது (12). நீருண்டு கருத்த கார் சூல் கொண்டு மினுமினுப்புற்றுத் தோன்றுதற்கு ஏற்ப, நெய் பூசிய யானையாகக் குறித்ததில் நயமும் கண் சிமிட்டுகிறது.

திருத்தக்கதேவர்,

"இலங்கல் ஆழியினன் (மன்னர் மன்னன்)
**களிற்று ஈட்டம்போல்**
கலங்கு தெண்டிரை மேய்ந்து கணமழை"[1]

— என யானைக் கூட்டத்தையே உவமையாக்கினார்.

இவ்வாறு யானை – ஆனை போன்ற தோற்றத்தால் கார், 'காரானை' என்னும் சொல்லால் குறிக்கப்பட்டது. எனவே, 'கார் — ஆனை' என்பது கருப்பு யானை என்பதன்றிக் 'காராகிய யானை' எனக் காரையே குறிப்பதாயிற்று.

இச்சொல் இன்றும் இப்பொருளில் இலங்கை — யாழ்ப்பாணத்தில் வழக்கில்உள்ளது. பிற்கால அகரமுதலிகள்சிலவற்றில் காரானை இப்பொருளுடன் இடம் பெற்றுள்ளது. சென்னைப் பல்கலைக் கழகத்து அகரமுதலி பதிப்பில் இச்சொல், வழக்குச் சொல்லாகக் காட்டப்பட்டு, அதற்கு,

"காரானை — கடலின் மீது குவிந்து கீழிறங்கிநீரைமுகந்து
பெருந்தூண்போல நிற்கும் மேகம்"[2]

— எனப்பொருள் விளக்கம் தரப்பட்டுள்ளது.

1 சீவ : சி : 32. 2 TAMIL LEXICON : 1 : 885

இதுகொண்டு முகில் யாவும் கடலில் நீர் பருகியே காரா கின்றன என்று கொள்ளக் கூடாது. இஃது ஒருவகை அருகிய நிகழ்ச்சியேயாகும். அறிவியல் தொடர்பிலும் இந்நிகழ்ச்சி மின் பிழிவாலும், மின் கவர்ச்சியாலும் நிகழக்கூடியதாகவே கருதப் படுகின்றது.

''மறந்து கடல்முகந்த கமஞ்சூல் மாமழை
பொறுத்தல் செல்லாது இறுத்த வண்பெயல்''

–என நற்றிணை (99) பாடுகின்றது. இதனைப் பாடியவர் கடல் அலையைத் தனது பெயரில் கொண்ட இளந்திரையன் என்பதும் ஒரு சுவையைத் தருகின்றது.

கடல் நீரை முகக்கும் காரானைக் கருத்து தமிழ் இலக்கியங் களில் பரவலாகப் பேசப்படினும் அப்பேச்சு ஒரு தனிப்பெருமைக் குரியது என்பது மற்றொரு கோணத்தில் நோக்கும் போது வெளிப்படுகின்றது.

''உலக இயற்கையின் வியப்புகள்'' (Wonders of the Universe) என்றொரு படத்தொகுப்பு ஏறத்தாழ ஐம்பது ஆண்டு களுக்கு முன்னர் பதிப்பாகி வெளிவந்துள்ளது. அது மேலை நாட்டு வெளியீடு. உலகில் வியக்கத்தக்க காட்சிப்பொருள்கள், நிகழ்ச்சிகள் புகைப்படம் எடுக்கப்பட்டு அச்சேற்றப்பட்டுள்ள தொகுப்பு அது. அதனில் ஒரு படம் இக் காரானைப் படம். கடலில் இக்காட்சி அப்படியே புகைப்படம் எடுக்கப்பட்டுள்ளது. அப்படம் முன்னர் விவரித்த பாங்கிலே அமைந்துள்ளமை குறிக்கத் தக்கது.

உலக வியப்புகளில் ஒன்றாக இக் காரானை சேர்க்கப் பட்டிருப்பதை நோக்குங்கால் தமிழ் இலக்கியங்களில் உள்ள இவ்வமைப்பு தனிப்பெருமைக்கு உரியதே.

# 9. இனிமைத் தமிழில் இறை வழிபாடு.

கோல் ஆட்சியில் தமிழ் ஒலிக்கும் கோவில் ஆட்சியில் தமிழ் ஒலிக்காதா? "தமிழ் சிவம் இனிமை என்னும் தனிப் பொருள்" எனப் பட்டது. இறைப் பொருளான தமிழ், வழிபாட்டில் இனிமைப் பொருளாகாதா?

தோன்றிய வழிபாடு தாய்மொழியில்;
அதற்குச்
சான்றுகள் சான்றோர் வாய்மொழியில்,

மூலப் பின்னணி.

## கருத்தாழமும் சொல்லழகும்

*தவத்திரு குன்றக்குடி அடிகளார் 'தமிழில் வழி பாடு' என உரிமைக்குரல் எழுப்பினார். 'தமிழில் வழிபாடா? மரபில்லையே' என்றனர் இனம் புரியாதார்.*

*'தமிழ்வழி வழிபாட்டிற்கு மரபுகாட்டி எழுதுக' என்றார் அடிகளார். எழுதினேன்; வெளிவந்தது. பார்த்துப் படித்த புலவர் ஒருவர் எழுதினார்:*

> *"அக்டோபர் முதல் தேதியத் தமிழரசு இதழில் வெளிவந்துள்ள* **'இனிமைத் தமிழில் இறை வழிபாடு'** *என்ற கட்டுரை கருத்தாழமும் சொல்லழகும் கொண்டு மிளிர்கின்றது. பல்கலைக் கழக மாணவர்களின் ஆராய்ச்சிப் பிரிவிற்குப் பாடமாக வைக்கத் தகுதி படைத்தது இக்கட்டுரை என்றால் அது மிகையாகாது. கட்டுரையாசிரியருக்கு எம் அளவற்ற பாராட்டுகள்."*

—புலவர் மாணிக்கனார், திருச்சி.
('பார்த்தோம் படித்தோம்' பகுதி
தமிழரசு இதழ் 1—11—1971)

வெளியீடு :

**"தமிழரசு"**
*தி. ஆ. 2002-புரட்டாசி-15*
*1—10—1971.*

மறு வெளியீடு :

**"சுதந்திரன்"** கொழும்பு, இலங்கை.
*தி. ஆ. 2002-ஐப்பசி-28;* **கார்-5.**
**14, 21—11—1971.**

இனிமைத்
தமிழில்
இறை
வழிபாடு.

# உணர்ச்சி வடிவம்.

"இடம்பத்தையும் ஆரவாரத்தையும் பிரயாசத்தையும் பெருமறைப்பையும் போதுபோக்கையும் உண்டுபண்ணுகின்ற ஆரியம் முதலிய பாசைகளில் எனக்கு ஆசை செல்ல ஒட்டாது, பயிலுதற்கும் அறிதற்கும் மிகவும் இலேசுடையதாய்ப் பாடுதற்கும் துதித்தற்கும் மிகவும் இனிமையுடையதாய்த் திருவருள் வலத்தாற் கிடைத்த தென்மொழி ஒன்றினிடத்தே மனம்பற்றச் செய்து அத்தென்மொழிகளாற் பலவிதத் தோத்திரப் பாடல்களைப் பாடுவித்தருளினீர்" 1

மேற்காணப்படுவது கருத்துரை நல்கவேண்டும் என்னும் எண்ணத்தில் எழுதப்பட்டதன்று. இறைவனிடம் பேசும் உணர்வில் எழுந்தது. ஒரு பட்டறிவின் அடிப்படைக் கருத்து இது.

இவ்வாறு எழுதியவர் தாம் வெளிபடுத்தும் கூற்றின் தன்மையை,

"வாய்மட்டிற் சொல்லுகின்ற வார்த்தையன்று;
இது என் மனமொத்துச் சொல்லுகின்ற வாய்மை"
— என்று விளக்கியவர்.

---

1 சத்தியப்பெரு விண்ணப்பம் : 2

இவர் மொழித்துறையில் ஊக்கங்கொண்டவர் அல்லர்; இறை அருளில் தோய்ந்தவர். அருளையும் பட்டறிவையும் குழைத்து ஆயிரக் கணக்கில் பனுவல் தீட்டியவர். தம் பாடல்களில் 'அருள்' என்னும் சொல் 3738 இடங்களில் இயல்பாக அமையப் பாடியவர். அதன் இயைபாகத் தம் பாடல்களுக்கு 'அருட்பா' எனப்பெயர் சூட்டியவர். ஆம்; வள்ளலார் இராமலிங்க அடிகளாரது உள்ளம் வழங்கிய கருத்து இது. இதனை உணர்ச்சியின் சொற்றொடர் உருவம் எனலாம்.

மேலே காணப்பட்ட கருத்துரை வள்ளலார் இராமலிங்க அடிகளாரது உணர்ச்சி வடிவம் என்ற உணர்வில் மீண்டும் ஒரு கால் படித்து மேலே செல்லலாம்.

வள்ளல் இராமலிங்க அடிகளார் இறைவன் அருளைப் பெறுவதற்குத் துணையாகக் கொண்டது, இனிமைத் தமிழ் மொழியையே. அவர்க்கு முன்னே திகழ்ந்த சமயச் சான்றோர் களும் தமிழ் கொண்டே இறைவனை அணுகினர்.

## மொழிகளும் இறைவனும்.

மொழிகள் யாவும் இறைவனால் ஒலிக்கப்பட்டவை என்பது சமயத் துறையினரது ஒருவகைக் கருத்து. அவை சான்றோரால் வழங்கப்படுங்கால், இறைவனது அறத்தைச் சொல்லவே பயன்படுத் தப்பட்டன என்பதும் சமயத்துறைக் கருத்தேயாகும். இதனைச் சைவப் பெருநூலாம் திருமந்திரத்தை வழங்கிய திருமூலர்,

"பண்டிதர் தங்கள் பதினெட்டு பாடையும்
அண்ட முதலான் அறஞ்சொன்ன வாறே"[1]

—என்று ஆகமச் சிறப்பை விளக்கும் பகுதியில் பாடினார். இப்பதினெட்டு மொழி களுள்ளும் தேர்ந்த மொழிகள் தமிழும் ஆரியமும். இவ்விரண்டும் இறைவனால் வெளிப்படுத்தப்பட்டவை என்பர் சமயத்துறையினர். இறைவன் 'தமருகம்' என்னும் தனது தோற்கருவியின் ஒரு புறத்தில் ஒலியெழுப்பித் தமிழையும், மறுபுறத்தில் ஒலியெழுப்பி ஆரியத்தையும் வெளிப்படுத்தினன் என்பர். இவ்விரண்டு மொழி

1 திருமந் : ஆகமச் சிறப்பு : 3.

களையும் சிவபெருமான் உமையம்மைக்கு அருளினான் என்பதாகத் திருமூலர் திருமந்திரம்,

"ஆரியமும் தமிழும் உடனே சொல்லிக்
காரிகை யார்க்குக் கருணைசெய் தானே"[1]

–என்று பேசுகின்றது.

இவ்விரண்டு அடிகளும் ஆகமச் சிறப்பைக் கூறும் பகுதியில் உள்ளவை. இதன் மூலம் தமிழும் ஆரியமும் ஆகம மொழிகளே என்பதனைத் திருமூலர் உணர்த்தியுள்ளார். 'ஆகமம்' என்பது 'முதல்வனது மொழி' என்றும், 'சான்றுக்குரிய அறமொழி' என்றும் பொருள்படும். எனவே, 'தமிழும் ஆரியமும் முதல்வனது மொழிகள்; சமயத் தொடர்பில் சான்றுக்குரிய மொழிகள்' என்று ஆகின்றன. சமயத் துறையினர் ஒருபடி மேலே சென்று இவ்விரண்டு மொழிகளும் இறைவனது இரண்டு கண்கள் என்பர். அதனினும் மேலே சென்று இறைவன் இவ்விரு மொழிகளாகவே உள்ளான் என்று சமயச் சான்றோர் பாடியுள்ளனர்:

இறைவன்,

"ஆரியந் தமிழோடு இசையானவன்"[2] என்றும்

"வானவன்காண் வானவர்க்கும் மேலா னோன்காண்
வடமொழியும் தென்தமிழும் மறைகள் நான்கும்
ஆனவன்காண்"[3]

–என்றும் திருநாவுக்கரசர் உள்ளம் குழைந்து அறிவிக்கின்றார்.

"செந்திறத்த தமிழோசை வடசொல் லாகி"[4]

—என்று திருமங்கையாழ்வாரும் தம் திருநெடுந்தாண்டகத்தில் அறிவித்துள்ளார்.

இவ்வாறே இவ்விரு மொழிகளையும் இணைத்தும் தனித்தும் இறைவனோடு தொடர்புபடுத்திப் பலஅருமறை ஆன்றோரும்

1 திருமந் : ஆகமச் சிறப்பு : 9.
2 அப். தே: திருக்கடம் : 3 : 1.
3 அப். தே: திருச்சிவபுரம்: 1 : 1.
4 நாலா : திருநெடு : 4 ; 2

சமயச் சான்றோரும், சிற்றிலக்கிய நூலாரும், தனிப் பாடல்தந் தோறும் பாடியுள்ளனர். இவை கொண்டு தமிழும் ஆரியமும் இறைவனுக்கு உகந்தமொழிகள் என்பது அறியப்படும். இரண்டும் பாடிப் பரவுதற்கு உரிய தகுதி வாய்ந்தவை; போற்றித் தொழு வதற்குரிய ஏற்றங் கொண்டவை; அருச்சித்து வழிபடற்குரிய மந்திரமானவையாகும். இரண்டும் தெய்வ மொழிகளே எனலாம்

இவ்வாறிருந்தும், 'இவ்விரு மொழிகளிலும் ஆரிய மொழி ஒன்றுமே மறைமொழி; அதன்கண் உள்ளனவே மந்திரங்கள்; அஃதொன்றே அருச்சனை செய்து வழிபடற்குரியது; எனவே ஆரிய மொழியே தெய்வ மொழி—தேவ பாடை' என்று தமிழர்களே நம்பும் நிலை வந்தது. கோவில்களில் இறைவன் திருமுன் அணுக்க மொழியாய் ஆரியமாம் வடமொழியே நடைமுறை மொழி யாயிற்று. அசைக்க முடியாமல் நிலை பெற்றது. தமிழர்தம் குறைபாட்டால் நேர்ந்த வியப்புகளில் இஃதும் ஒன்று.

தமிழ்நாட்டில் தமிழர் எழுப்பிய கோவில்களில், தமிழர் வழிபடுதற்குத் தமிழ் இல்லை என்பதை வியப்பு என்று குறிக்க வேண்டும். அல்லது,

*"காற்செருப்பைப் பிறனொருவன்*
*கழிவிடத்தில் தள்ளிடினும்*
*பொறாத உள்ளம்*
*மேற்படுத்தும் எவற்றினுக்கும்*
*மேற்பட்ட தென்மொழியைத்*
*தமிழைத் தீயோர்*
*போற்றுவதற் குரியதொரு*
*பொதுவினின்று நீக்கி வைத்தால்*
*பொறுப்பது துண்டோ?"*[1]

— என்று பாவேந்தர் உணர்வில் நின்று 'பொறுக்க இயலாத நிலை' என்று கூற வேண்டும்.

---

1 *தமிழியக்கம்*

இவ்வியப்பு எவ்வாறு நேர்ந்தது? இவ்வகையில் வினா எழ எவ்வகை நிகழ்ந்தது?

## கோவிலும் வழிபாடும்.

மிகத் தொன்மை நாளில் இறைவனுக்குக் கோவில் இல்லை. இயற்கை மரத்தின் அடியிடமே இறைவன் அமரும் இடமாக இருந்தது. ஆலமரத்தின் கீழ் இருந்து அரன் ஐயம் தீர்த்தான். அரச மரத்தின் அடியில் அமர்ந்து புத்தன் அறம் கண்டான். அசோக மரத்தின் அரும் நிழலில் அருகன் அறம் உரைத்தான். இவற்றின் குறிப்பாகவே மக்கள் மரத்தின் கீழ் இறைவனை அமர்த்தி வழிப் பட்டனர். இதன் அறிகுறியாக இன்றும் ஒவ்வொரு கோவிலிலும் ஒவ்வொரு மரம் 'திருமர'மாக உள்ளது.

காலப்போக்கில் இறைவன் உருவைத் தூய்மையாகப் பேண விரும்பிச் சிறு குடில்களாக - சிறு இல்லங்களாக அமைத்தனர். இறைவனாம் 'கோ' அமரும் 'இல்' - 'கோவில்' ஆகியது. படிப் படியாகக் கதைகள் பிறந்தன; கரணங்கள்தோன்றின; புராணங்கள் எழுந்தன. ஆயினும், மக்கள் தாமே நீரும் பூவும் கொண்டு சென்று இறைவனை வழிபட்டனர். பூ, நீரோடு, படைக்கும் அமுதாம் பலிப் பொருளும் இணைந்தது. இறையன்பர் தாமேஇறைவனை நீராட்டினர். மலர்களை இறைவன் திருவடியில் குவியலாகப் படைத்தனர். படைப்புப் பொருள்களையும் திருமுன் வைத்தனர். தம் குறை சொல்லியும், குறையற்ற இறைவனின் நிறைகுணம் பேசியும் போற்றினர். தம் உள்ளத்து உணர்வைத் தம் வாயால் - வாய் மொழியாம் தாய்மொழியால் வெளியிட்டு ஏற்றினர். மலரை இரு கைநிறைய ஏந்திக் குவியலாகப் படைக்கும் வழிபாடே தமிழர்தம் வழிபாடாக இருந்தது.

மலர்ப் படைப்பையும் ஏற்றுதலையும் இணைத்து ஒவ்வொரு போற்றுதலுக்கு ஒவ்வொரு மலராக இடும் பழக்கத்தை உண்டாக்கினர் பிறர். இஃதே அருச்சனை எனலாயிற்று. அருச்சனை என்ற வடமொழிச் சொல்லே இம்முறை வடமொழி யாளரால் ஏற்படுத்தப் பட்டது என அடையாளம் கூறி நிற்கின்றது.

இந்நிலையில் தமிழில் மந்திரம் சொல்லி வழிபடுவதற்குத் துணையாகப் போற்றிகள் உருவாயின.

"மந்திரம் கொண்டு வழிபடு வோர்க்குச்
சுந்தர நாதன் சொல்லிய மந்திர"[1]

—மாம் 'மந்திரம் முந்நூறு' என்னும் நூல் எழுந்தது. சுந்தரநாதன் என்னும் இயற்பெயரையுடைய திருமூலர் இந்நூலை உரைத்தார் என்பதை,

"மூலன் உரைசெய்த முந்நூறு மந்திரம்"[2]

—என்று திருமந்திர இறுதிப் பாடல் அறிவிக்கின்றது. இவ்வாறு ஒருநூல் உருவானதைக் கொண்டு இறைவழி பாட்டில் வடமொழி ஆட்சிக்கு மாற்றாக அக்காலத்திலேயே ஓர் உணர்வு எழுந்ததாகவும் கொள்ளலாம்.

தமிழ்ப் போற்றி நூல்கள் — தமிழ் மந்திர நூல்கள் — உருப்போடும் பனுவல்கள் பல முன்காலத்தில் இருந்தன. அவற்றைக் கடல் கொண்டது. இதனை,

"ஏரணம் **உருவம்** யோகம்
இசைகணக் கிரதம் சாலம்
தாரணம் மறமே சந்தம்
தம்பநீர் நிலமு லோகம்
மாரணம் பொருளென் றின்ன
மானநூல் யாவும் வாரி
வாரணம் (கடல்) கொண்ட தந்தோ
வழிவழிப் பெயரும் மாள"

—என்னும் பாட்டு குறிக்கின்றது.

இப்பாடலின் முதலடியில் குறிக்கப்பட்டுள்ள "உருவம்" என்பது ஒருவகை நூல். இது உருப்போடும் மந்திரத்தைக் குறிப்பது. மீண்டும் மீண்டும் உருப்போடப்படும் இறைமொழி

1 மந்திரம் முந்நூறு: சிறப்புப்பாயிரம்.
2 திருமந் : 3046.

'உருவம்' எனப்பட்டது. "நின்று இரண்டு உருவம் ஓதி"[1] எனச் சீவக சிந்தாமணி பாடுகின்றது. இவ்வகை உருவில் போற்றியும் அடங்கும். எனவே, தமிழில் போற்றி நூல்கள் இருந்து கடல் கோளால் அழிந்தன என்று அறிய முடிகின்றது.

மக்கள் தாமே நீராட்டி, மலர் படைத்து ஏற்றும் முறை தேவார மூவர், திருவாதவூரர், திருமூலச் சான்றோர் காலத்திலும் இருந்ததை அவர்களது வாய்மொழிகள் பேசுகின்றன.

"பூவோடு நீர்சுமந்து ஏத்திப் புகுவார்"

—திருநாவுக்கரையர்.

"பூவும் நீரும் பலியும் சுமந்து புகலூரரையே
நாவி னாலே நவின்று ஏத்தல் ஓவார்"

—திருஞானசம்பந்தர்.

"குடமெடுத்து நீரும் பூவுங் கொண்டு"

—சுந்தரர்.

"பரந்துபல் ஆய்மலர் இட்டு முட்டாது அடியே இறைஞ்சி
இரந்த எல்லாம் எமக்கே பெறலாம் என்னும் அன்பர்"

—மாணிக்கவாசகர்.

"சிறப்பொடு பூநீர் திருந்தமுன் ஏந்தி"

—திருமூலர்.

இவர்கள் காலத்தில் மக்கள் தாமே வழிபாடியற்றும் பழக்கத்தோடு வடமொழி மந்திரமும் ஓதி அருச்சிக்கும் பழக்கமும் ஆங்காங்கு தலையெடுத்தது.

"மறைகலந்த மந்திரமும் நீரும் கொண்டு வழிபட்டார்
வானாளக் கொடுத்தி யன்றே"[2]

—என்றார் அப்பரடிகள்.

---

1 சீவ. சி : 1289 : 4.
2 அப். தே : திருமழபாடி : 2: 2.

பல்லவர் ஆட்சி தமிழகத்தில் தலையெடுத்த போது வட மொழிக்கும் வடமொழியாளர்க்கும் ஏற்றம் கிடைத்தது. பல்லவ மன்னர் வடமொழியைப் போற்றி வளர்க்க இயலுவன யாவும் செய்தனர். வடமொழியாளரை மிக மதித்து வந்தனைசெய்தனர். பல்லவர்களது பேராதரவோடு இறைவனது திருக்கோவில்களில் வடமொழி ஒன்றே ஆட்சி பெறும் நிலை வேரூன்றியது. வடமொழி ஒன்றே தெய்வமொழி-தேவபாடை என்னும் கருத்து நிலைத்தது

வடமொழி ஆட்சி இறைவனது அணுக்கத்தில் திகழ்ந்தது ஆயினும், கோவிலில் தமிழுக்கும் இடமிருந்தது. கருவறையில் அன்று; அதற்கு இப்பாற்பட்ட எல்லையில் இடம் ஒதுக்கப் பட்டது. (தமிழ் ஒதுக்கப்பட்டது) இறைவனின் திருவிழாவில் வடமொழியே இறைவனுக்கு அணுக்கமாய் ஒலித்தது. தமிழ் ஒரு கோடியில் இசைத்தது.

இந்நிலையில்தான் நாம் இறைவழிபாட்டிற்கும் தமிழுக்கும் உள்ள தொடர்பைக் காண வேண்டியவர்கள் ஆகின்றோம். இறைவனுக்கும் தமிழ் மொழிக்கும் உள்ள இயைபு என்ன? தமிழ்ச் சான்றோர் இறைவன் தொடர்பில் தமிழுக்கு எத்தகுதி யைக் கண்டனர்? சமயத் துறையினர் கொண்ட தமிழ் உள்ளப் பாங்கு எத்தகையது? இவ்வினாக்களின் விடைகளில்தான் தமிழ் வழிபாட்டு முறை இயற்கையாகவே வலுப்பெறுகின்றது.

## தமிழின் தகுதி

"இனிமையும் நீர்மையும் தமிழ் எனலாகும்"

–என்று பிங்கல நிகண்டு (3610) தமிழுக்குப் பொருள் கூறு கின்றது. தமிழ் இனிமை என்னும் பொருள் உடையது. நீர்மை என்ற பொருளால் நீரின் தன்மையாகிய தண்மையைக் (குளிரை கொண்டது.

மாணிக்கவாசகரும், "தண்ணார் தமிழ்"[1] என்றார். நீர்மை என்னும் சொல் பல பொருள்களைக் கொண்டது. அப் பொருள்களில் தமிழோடு இயைந்து பொருந்தும் பொருள்களில் 'இயல்பு' என்னும் பொருளும் ஒன்று. இப்பொருளால் தமிழ்

1 திருவா : திருவம்மானை : 10 : 3.

இயல்பான மொழி என்பது உணரப்படும். எனவே, தமிழ் இனிமைத் தமிழ்; தண்மைத் தமிழ்; இயல்பு மொழி.

## தமிழ் தெய்வ மொழி.

கழாரம்பர் என்னும் தொல்லாசிரியர் தமிழின் தனிப் பொருளைக் கூற எழுந்தவர்,

"தமிழ் சிவம் இனிமை எனும்
தனிப்பொருளாம்"

என்று தம் "பேரிசை" நூற்பாவில் குறித்தார். அவர் கருத்தில் இனிமைத் தமிழுக்கு முன்னர் சிவத்தமிழ் – தெய்வத்தமிழ் – இறைத் தமிழ் எழுகின்றது. தமிழே இறைவனாய், இறைவனே தமிழாகின்றான். தமிழ்ச் சான்றோர் தமிழுக்குத் தந்த இயல்பான தகுதி இறை. இறைவனேயாகும் தகுதி உடையது தமிழ். தமிழும் தெய்வ மொழியே. வடமொழிதான் தேவபாடை என்பதன்று. தென் மொழியும் தெய்வத் தமிழே.

இதனைச் சேக்கிழார் சொல்லிக் காட்டுகின்றார்.

"ஞாலம் அளந்த மேன்மைத் தெய்வத் தமிழ்"[1]

சேக்கிழாரது இந்த உண்மைப் பேச்சில் தமிழ், தெய்வத் தமிழ் மட்டுமன்று மேன்மைத் தமிழ்; மேன்மைத் தெய்வத் தமிழ். உலக வழக்கு அழிந்து ஒழிந்து சிதையாது உலகத்தை அளந்து நிற்கும் தமிழ். ஞாலம் அளந்த தகவால் தமிழ் மன்பதை மொழி. மன்பதை மொழியே தெய்வ மொழியாகும் தகுதி உடையது.

சுந்தரரும்,

"பண்ணார் இன்றமிழாய்ப் பரமாய பரஞ்சுடர்"[1]

என்று பரமனைப் பாட்டுத் தமிழ் ஆனவன் என்கின்றார்.

## தமிழ் அருள்மொழி

இத்தெய்வத் தமிழால் போற்றியே சமய குரவர் நால்வரும் இறையடியார் பலரும் வியத்தகு அருட்செயல்களை இறைவன் அருளால் செய்தனர்; பெற்றனர் –என நூல்களில் காண்கின்றோம்

1 சுந். தே: திருமழபாடி : 5 : 2.

தமிழ்ப்பாட்டு வியத்தகு செயல்களை விளைவித்தது என்பர்,

தமிழ் எழுதப்பட்ட ஏடு நீரில் ஏறி, நெருப்பில் நின்றது. மறைக்காட்டுக் கதவு திறந்தது; அடைத்தது. ஆண்பனை பெண் பனை ஆகியது. எலும்பு, பெண்ணாகியது, நஞ்சு நீங்கியது; நஞ்சு அமுதாகியது. சுடுகாளவாய் சுரும்பு சூழ் தடாகம் ஆனது. யானை பணிந்தது. கடலில் கல் மிதந்தது. நெல்லும் பொன்னும் சோறும் வந்தன. ஆரூர்த் தெருவில் இறைவனே நடந்தான்; இழந்த கண்கள் மீண்டன. முதலை உண்ட குதலை மீண்டான். வெள்ளை யானை வந்தது. நோய்கள் தீர்ந்தன. பகைகள் முறிந்தன. இவ்வாறு பட்டியல் நீண்டது. யாவும் தமிழ்ப் பாடலால் என்று காண்கின்றோம்.

வள்ளலார் இவையெல்லாம் கூட்டி,

*"வடிக்குறுந் தமிழ்கொண்டு அன்பருக் கருளும்*
*வள்ளல்"*[1]

— என்கின்றார்.

தமிழ் இறைவனது அருளைப் பெறும் தகுதி உடையதாகின்றது.

## தமிழ் இறைவன் உணவு.

தமிழ்ப்பாட்டு இறைவனுக்கு உவப்பானது; அவனது அருளைச் சுரக்கவைப்பது மட்டும் அன்று, இறைவனுக்கு உணவாகவும் அமைந்தது.

இறைவனை வந்திக்கும் முறைகளுள் வெந்தழல் வளர்த்து வேள்வி செய்யும் முறை வடவரால் உண்டாக்கப்பட்டுத் தமிழகத்தில் புகுத்தப்பட்டது. திருவள்ளுவப் பெருந்தகையார்,

*"அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்*
*உயிர்செகுத் துண்ணாமை நன்று"*[2]

— என்று மாற்று முறையால் வேள்வியைக் குறிப்பாகக் கண்டித்தார். இக்குறளில் குறிக்கப்படும். 'அவி' இறைவனுக்கு உரிய உணவு என்னும் பொருளி

---

1 *திருவருட்பா : திருமுறை* : 2 : 48 : 8.
2 *குறள் :* 259

னது. இறைவனுக்குரிய உணவாகப் பலிப்பொருள்களை வேள்வியின் தீக்குழியில் நெய் சொரிந்து இடுவர். அஃது அவி எனப்படும். தீயில் வெந்து ஆவியாய் அவிவதால் – ஆவியாவதால் (அவி — ஆவி — அவி) அவி எனப்பட்டது. வேள்வித் தீ இல்லாமலே — வேள்வி செய்ய மாட்டாராய் — தமிழ்ப்பாட்டை அவியாக இறைவனுக்கு ஊட்டினார் திருமூலர். காலையில் பாடி ஊட்டினார்; மாலையில் பாடி ஊட்டினார். அதைப் பாடுகின்றார்:

"வேட்டுஅவி உண்ணும் விரிசடை நந்திக்குக்
காட்டவும் யாமிலம் காலையும் மாலையும்
ஊட்டுஅவி யாவன உள்ளம் குளிர்விக்கும்
பாட்டுஅவி காட்டுதும் பால்அவி யாமே"[1]

–என்பது அவர் ஊட்டும் பாட்டு. அதன்கண் உள்ளம் குளிர்விக்கும் பாட்டை அவி என்கின்றார். தீக்குழி வழியாகச் செல்லாத அவி அன்றோ? அதனால் அது குளிர்ந்து பால் போன்ற சுவையான உணவு ஆயிற்றாம்.

வெந்தழல் வளர்க்கும் வேள்விமுறை செந்தமிழ்த் திருமூலர்க்கு ஒத்தது அன்று போலும். அதனால்தான், "காட்டவும் யாம் இலம்" என்று இப்பாடலிலும் குறித்தார். பின்னரும்,

"நன்னெறி செல்வார்க்கு ஞானத்தின் ஏகலாம்;
**புன்னெறி யாகத்திற்** போக்கில்லை தானே"[2]

–என்றார். வேள்வி முறை தாழ்வானது என்பதை "புன்னெறி யாகம்" என்பதால் குறித்தார்.

இப்பாடல் ('வேட்டு அவி' பாடல்) "சிவ பூசை"யை விளக்கும் பகுதியில் அமைந்த பாடல் என்பதைக் குறிக்க நேர்கின்றது. வழிபாட்டு — பூசெய் முறையாகத் தமிழ்ப்பாட்டைப் படைத்தலைக் கூறினார் என்பதை இவ்விடத்தில் நினைவிற் கொள்ளவேண்டும்.

---

1 திருமந் : 1824.
2 திருமந் : 555.

### அருச்சனை தமிழ்ப்பாட்டே.

இவற்றையெல்லாம் உள்ளத்துக் கொண்டே சேக்கிழார், 'அருச்சனை பாட்டேயாகும்' என்றார். அதனையும் தாம் கூறுவதாக அன்றி இறைவனே சுந்தரமூர்த்தியிடம் ஏவவிடுவதாக,

"அருச்சனை பாட்டே யாகும்
ஆதலால் மண்மேல் நம்மைச்
சொற்றமிழ் பாடுக என்றார்.
தூமறை பாடும் வாயார்"[1]

—என்று பாடினார். தூமறை பாடும் வாயை உடையவரையே 'தமிழ்ப் பாட்டே அருச்சனை யாகும்' என்று பேச வைத்துள்ளார் சேக்கிழார். இதில் சேக்கிழாரின் உள்ளெண்ணம் புலனாகின்றது. இறைவன், "சொற்றமிழ் பாடுக" என்று சுந்தரரைப் பணித்தான். ஒருவரைத் தமிழ் பாடுவதற்குப் பணித்தவன் மற்றொருவரைத் தமிழ் மந்திரம் பாடுவதற்காகப் படைத்தானாம். அவ்வாறு படைக்கப்பட்டவர் திருமூலர். அவரே பேசுகின்றார்:

"என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ்செய்யு மாறே"[2]

தன்னை நன்றாகத் தமிழால் போற்றவேண்டும் என்பது இறைவனது பேரவா. அதனால் நன்றாகவே படைத்துள்ளானாம். இறைவனே பெரும் புகழ் விரும்பிதான். அந்தப் புகழையும் தமிழால் கேட்பதில் பெருவிருப்பினன். அப்பெருவிருப்பில் இறைவன் தன்னைத் தானே தமிழில் பாடிக்கொண்டவன். வைணவப் பெரியார் நம்மாழ்வாரைக் கருவியாகக் கொண்டு பாடிக் கொண்டான். இதனை, நம்மாழ்வாரே

"அன்றைக்கன்று என்னைத்தன் னாக்கியென்
னால்தன்னை
இன்றமிழ் பாடிய ஈசன்"[3]

1 பெரி பு : தடுத்தாட்கொண்ட ; 100
2 திருமந் : 81
3 திருவாய் : 7 ; 9 : 1.

—என்று பாடிப் பூரித்துள்ளார்.

அங்கு நன்றாகப் படைத்தான். இங்குத் தானே அடியவராகி நாளுக்குநாள் —அன்றைக்கு அன்று —ஆக்கிக்கொண்டான். தன் புகழைத் தானே புதிது புதிதாகத் தமிழில் சுவைத்துள்ளான் இறைவன்.

இதுவரை கண்ட சான்றுகளால் தமிழினது தனித் தகுதிப் பாடு பலமுனைகளில் மிளிர்வதைக் காணலாம். தமிழ் தெய்வ மொழித் தகுதி உடையது. அருள் மொழியாம் தகுதி கொண்டது. இறைவற்கு உணவாகும் தகுதி கொண்டது. இறைவற்கு மிக உவப்பாகும் தகுதி கொண்டது. இறைமைக்குரிய இத்துணைத் தகுதிப்பாடுகள் இருந்தும் தமிழ் எவ்வாறு கோவிலில் கருவறைக்கு வெளியே நிறுத்தப்பட்டது? வழிபாட்டு — அருச்சனை — போற்றி மொழியாக வடமொழி எவ்வாறு முடிசூடிக்கொண்டது? எவ்வாறு கருவறைக்குள் தனியாட்சி செலுத்தி வருகின்றது? இந்த நிலை தமிழருக்கு ஒரு மானக்கேடான நிலையே. இந்த அளவுக்குத் தமிழரின் சூழல் நெடுங்காலத்திற்கு முன்னரே கெட்டத் துவங்கி விட்டது. இக்கேட்டின் துவக்கத்திற்குத் தமிழ்ச் சமயச் சான்றோரும் அறிந்தோ அறியாமலோ ஓரளவில் துணை போயினர் எனலாம்.

## வடமொழிக்கும் இடம்.

தேவார மூவர் காலத்தில் தமிழ்நாட்டு ஊர்ப்பெயர்கள் யாவும் தமிழ்ப் பெயர்களாகவே இருந்தன. அவர்களது பாடல் களில் இதனைத் தெள்ளத் தெளிவாகக் காண்கின்றோம். ஆனால், பிற்காலச் சமயத்துறையினர் தேவார மூவர்க்கு வேறு பட்டு வடமொழியில் பெயர்களை மாற்றி வழங்க இடந்தந்தனர்; தாமும் வழங்கினர். இடைக்காலத்தில் சிறுகச் சிறுக வடமொழிப் பெயர்கள் செருகப்பட்டன. இதுபோன்றே, சிறுகச் சிறுக வட மொழி மந்திரங்கள் தமிழோடு இடம்பெற்று 'ஒண்டவந்த பிடாரி ஊர்க் கடாரியை விரட்டிய'தாய், 'இடத்தைக் கொடுத்தால் மடத்தையே பிடுங்கிய' துறவிக் கதையாய் ஆகிவிட்டது.

இந்நிலைக்கு முற்காலச் சமயச் சான்றோரின் பெருந் தன்மையே காரணமாயிற்று. நந்தம் செந்தமிழோடு வடமொழி யும் இறைவனின் அணுக்க மொழியாய் இடம் பெற்றது. இவ்வாறு இடம் பெறச் சான்றோர் தம் பெருந்தன்மையாலும், பரந்த உளப்பாங்காலும் இசைந்தனர்; ஏற்றனர்; போற்றினர்.

ஞானசம்பந்தராம் ஆளுடைய பிள்ளை,

"தம் மலரடியொன்று அடியவர் பரவத்
தமிழ்ச்சொலும் வடசொலும் தாள்நிழல் சேர"[1]

—என்று பாடினார். இவ்விரண்டு அடிகளும் கூர்ந்து நோக்கத் தக்கன. முன் அடி, அடியவர்கள் பாடலாலும் தொழுகையாலும் பரவியதைக் குறிப்பது. பின் அடி, இறைவனது நிறைகுணப் புகழைப் போற்றியாகச் சொல்லி, அப்போற்றியை இறைவன் தாளில் படைக்கும் அறிகுறியாய்; மலரைத் தூவி வழிபாடு இயற்றும் — அருச்சனையைக் குறிப்பது. அப்புகழ்மொழி தமிழ்ச்சொற் போற்றியாகவும், வடசொற் போற்றியாகவும் தனித்தனியே அமைவதைக் குறிப்பது. வழிபாட்டில் தமிழ் வழக்கோடு வடமொழியும் இடம்பெற்றுப் புகுந்துள்ளதை உணரலாம்.

"முத்தமிழும் நான்மறையும் ஆனான் கண்டாய்"[2]

—என்று பாடிய திருநாவுக்கரையர் அவ்விரு மொழிநிலைக்கும் ஏற்ப இறைவனையும் இருநிலையில் கண்டவராய்,

"ஆரியன் கண்டாய், தமிழன் கண்டாய்"[3]

—என்று பாடினார். இறைவனை ஆரியனாகக் காணும்போது செந்தமிழோடு ஒட்டிய ஆரியனாகக்கொண்டு,

"செந்தமிழோடு ஆரியனைச் சீரியனை"

—என்று பாடினார். 'செந்தமிழ் ஆரியனை' என்று குறிக்காமல் 'ஓடு' சேர்த்துச் "செந்தமிழோடு" என்று குறித்ததில் ஒரு தனிக்கருத்து உண்டு.

'ஓடு' என்னும் மூன்றாம் வேற்றுமை உருபு, உயர்ந்த பொருளையே சாரும். "ஒருவினை ஓடுச்சொல் உயர்பின் வழித்தே"[4] என்றார் தொல்காப்பியர். 'ஆசிரியனோடு மாணாக்கன் வந்தான்' என 'ஓடு' வை உயர்ந்த ஆசிரிய

1 அப் தே : திருமறை : 9 : 1
2 அப் தே : திருமறை : 5 : 1
3 அப் தே : திருமறை : 5 : 1
4 தொல் : சொல் : 87

னோடு சேர்த்தே கூறவேண்டும். 'மாணாக்கனோடு ஆசிரியன் வந்தான்' எனக் கூறக்கூடாது. இவ்வகையில், "செந்தமிழோடு ஆரியன்" என்னும் தொடரில் செந்தமிழ் ஆரிய நிலைக் கடவுளுக்கு உயர்வாய்க் கூறப்பட்டது. இக்குறிப்பால் செந்தமிழில் வழிபாடு இயற்றல் தனியாகக் குறிக்கப்பட்டதாகக் கொள்ளலாம். அவரவர் தம் தம் மொழியில் பூசித்தனர் என்பதை நம்மாழ்வாரும்,

"உலகர்கள் எல்லாம்
தங்கள் அன்பு ஆரத் தமது சொல்வலத்தால்
தலைத்தலை சிறந்து பூசிப்ப"[1] —என்றார்.

இவ்விடத்துப் பகவத் கீதையில் கண்ணன் கூறியதையும் காணல் பொருத்தமாகும்.

"யார் என்னை எப்படி வழிபடுகின்றார்களோ யான்
அவர்களுக்கு அப்படியே அருள்புரிகின்றேன்." —இது

கொண்டு வடமொழி நூலிலும் அவரவர் விருப்பப்படி அவரவர் மொழியிலே வழிபடல் விலக்கப்படவில்லை என்பதை உணரலாம்

திருமூலர்,

"தமிழ்ச்சொல் வடசொல் எனுமிவ் விரண்டும்
உணர்த்தும், அவனை உணரலும் ஆமே"[2]

—என்று பாடியமை கூர்ந்து நோக்கத்தக்கது. இவ்விரண்டு அடிகளுக்கு முன்னே இரண்டு அடிகள் உள. அவற்றில், ஆன்மா பற்றால் பிணிக்கப்படுவதும் விடுபடுவதும் முடிவில் போதலும் குறிக்கப்படுகின்றன. இங்குள்ள 'உணர்த்தும்' என்னும் சொல் 'ஆன்மாவின் நடப்பைஉணர்த்தும்' என்றும் 'அவனை' என்பது 'இறைவனை - உணர்த்தும்' என்றும் இயைந்து பொருள்படும். 'உணரலும் ஆம்' என்பது தமிழ்ச் சொல்லாலும் வடசொல்லாலும் இறைவனை உணர முடியும் என்பதை வலியுறுத்துவது. 'தமிழ்ச் சொல், வடசொல்' என்று சொல்லைக் குறித்திருப்பதால் இது போற்றி வழிபடும் அருச்சனையைக் குறிப்பதாகும். 'தேவபாடை

---

1 திருவாய் : 9 : 2 : 8.
2 திருமந் : ஆகமச் சிறப்பு : 10.

வடமொழிதான், அதுதான் இறைவனை உணர்த்தும்' என்று கூறும் இக்காலத்துப் பெருமக்களுக்கு இவ்வடிகள் தக்க குறிப்பைத் தருவன. தமிழ்ச் சொல்லோடு வடமொழிக்குத் தமிழரால் பெருந் தன்மையோடு கூடிய பரந்த மனப்பாங்கோடு இடமளிக்கப்பட்டது என்பதை "தமிழ்ச் சொல்" முன்னே அமைந்து அறிவிக் கின்றது.

திருமூலர் காலத்தில் போற்றிக்கு இருமொழிகளையும் காட்ட வேண்டிய சூழல் இருந்தது. ஆயினும், அப்பர், "செந்தமிழோடு ஆரியனை" என்றது போன்று திருமூலரும் மற்றோரிடத்தில் செந்தமிழ் வளத்தை வலியுறுத்தியுள்ளார்.

"செந்தமிழ் **ஆதி** தெரிந்து வழிபடு
நந்தி இதனை நவம்உரைத் தானே"[1]

இது 'வயிரவி மந்திரம்' என்னும் பகுதியில் வருவது. இதில் நந்தியாம் தலைவனே உரைத்ததாகக் கூறினார். 'செந்தமிழ் முதலியவற்றால் இறைவியின் நிலையைத் தெளியலாம். அவ்வாறு தெளிந்து வழிபடு' என்று ஆணையிடுகின்றது இந்த அடி. இங்கேயுள்ள "வழிபடு" என்னும் சொல்லை நினைக்கவேண்டும். இப்பாடல் அமைந்த பகுதி மந்திரம் (வயிரவி மந்திரம்) என்ற சொல் இணைந்து நிற்பதையும் நினைக்க வேண்டும். இந்த நினைப்பாலும் இணைப்பாலும் வழிபாட்டுக் கருத்து அறிவிக்கப் பட்டுள்ளதைஉணரலாம். வடமொழி, "ஆதி" (முதலிய) பட்டிவில் அடக்கப்பட்டதும் ஒரு குறிப்பே.

சமயச் சான்றோர் ஆங்காங்கு குறித்துள்ள கருத்து களைக் கொண்டு,

மக்கள் தாமே (குருக்கள் இன்றி) வழிபட்டனர்;
அருச்சனை செய்யும் வழிபாட்டு முறை புகுத்தப்பட்டது;
அஃதும் தமிழ்ச்சொல் போற்றியாகவே நிகழ்ந்தது;
காலப்போக்கில் வடசொற் போற்றியும் ஒட்டிஇடம்பெற்றது;
காலப்போக்கில் வழிபாடு இயற்றி வைக்கக் குருக்கள்—
பூசாரிகள் அமைந்தனர்;

---

1 திருமந் : 1089

குருக்கள் வடமொழியாளராய் அமைந்தமையால் வட மொழியைப் புகுத்தினர்;

தமிழ்ப் போற்றி முறை தள்ளப்பட்டது.

"ஓசை ஒலியெலாம் ஆன" இறைவன் தமிழ் ஒலியை மட்டும் நீக்கியவனாக ஆக்கப்பட்டுள்ளான்.

## தமிழில் வைதாலும் வாழ வைப்பான்.

நம் காலத்துப் பாரதியாருக்கும் தமிழ் வழிபாட்டு எண்ணம் தோன்றியது. எந்தச் சொல்லால் இறைவனை விரைவில் வரவழைக்கலாம் என்று எண்ணினார். அவ்வெண்ணத்தை "சொல்" தலைப்பிட்டுச் சில பாடல்களால் வெளியிட்டார். தொடக்கப் பாடல்,

"தேவர் வருகவென்று சொல்வதோ? - ஒரு
செம்மைத் தமிழ்மொழியை நாட்டினால்
ஆவலறிந்து வருவீர்கொலோ? – உம்மை
அன்றி ஒரு புகலும் இல்லையே"[1]

—என்பது, தமிழ் மொழியால் போற்றினால் இறைவன் ஆவலை அறிவான் என்ற கருத்தின் வெளிப்பாடு இது. தொடர்ந்து பல தமிழ்ச் சொற்களைப் பாடிய பாரதியார் இறுதியில்,

"அமிழ்தம் அமிழ்தம் என்று கூறுவோம் — நித்தம்
அனலைப் பணிந்து மலர் தூவுவோம்;
தமிழிற் பழமறையைப் பாடுவோம்—என்றும்
தலைமை, பெருமை, புகழ் தேடுவோம்"[2]

—என்று முடித்துள்ளார். இறைவனைப் போற்ற "அமிழ்தம்" என்ற தமிழ்ச் சொல்லைக் கூறினார். "மலர் தூவி" என்று குறித்திருப்பதைக் கொண்டு அருச்சனை செய்வதற்குப் போற்றிச் சொல்லாகத் தமிழ்ச்சொல்லைப் பயன்படுத்தலாம் என்று குறித்ததாகக் கொள்ள

1 *பாரதி* : *சொல்* : 1
2 *பாரதி*: *சொல்*: 10

முடிகின்றது. 'தமிழில் பாடுவதுதான் தமிழர்க்குத் தலைமை; தமிழர்க்குப் பெருமை; தமிழர்க்குப் புகழ்' என்றார்.

ஆனால், முருகன் அடியார் ஒருவர் இவ் ஐயம் இன்றி உறுதியான குரல் கொடுத்தார்:

"மொய்தார்குழல் வள்ளியை வேட்டவன்
முத்தமிழால்
வைதாரையும் இங்கு வாழ வைப்பான்"

—என்று பாடினார், தமிழில் புகழ்ந்து பாடும் வாழ்த்துக்கும் அருள்செய்வான்; வசைக்கும் அருள்செய்வான். இயற்றமிழால் ஓர் ஏச்சு; இசைத்தமிழால் ஒரு வசை; நாடகத் தமிழால் ஒரு திட்டு. முத்தமிழால் வைதாரையும் வாழ வைப்பவன் முருகன்' என்றன்றோ இப்பாடல் பேசுகின்றது. முருகன் புகழைத் திருப்புகழாகப் பாடிய அருணகிரியாரது கருத்து இது. இது நயந்தோய்ந்த கருத்தாயினும், இதில் முருகன் தமிழைக் கேட்டால் உள்ளம் குளிர்பவன் என்ற கருத்து நிறைவாக விளங்குகின்றது. முருகன் தமிழ்க் கடவுள் அன்றோ? அதனால்தான் தமிழால் வைதாலும் வாழவைப்பவனானான்.

## முற்காலத் தமிழர் உணர்வு.

இவ்வாறு தமிழருமையை உண்மையாக அறியாதவர்கள் எக்காலத்திலும் இத்தமிழ் மண்ணில் வாழ்ந்திருக்கிறார்கள். அவர்களை எண்ணி ஒரு புலவர் (யாரென்று அறிதற்கில்லை) சினங்கொண்டார். சிறிது வன்மையாகவே சாடிப் பாடினார்:

"பேயறிவார் முழுமூடர் தமிழருமை அறிவாரோ
பேசுவாரோ?
நாயறியா தொருசந்திச் சட்டிபா னையுமிந்த
ஞாயந் தானே."[1]

—என்பது அப்பாட்டு. இது தண்டலையார் சதகம் என்னும் நூலில் உள்ளது. 'மூடர்; பேய் அறிவார்; நாய் போன்றவர்'

---

1 தண். ச: 23 : 3, 4.

என்னும் சொற்கள் மிகக் கடுமையானவை என்றாலும் 'வேண்டும் இவர்களுக்கு' என்று சொல்லச் சிலருக்காகிலும் தோன்றும்.

இந்த ஏச்சையும் மீறிய வன்செயலாக நக்கீரர் நடந்து கொண்ட கதையும் வழங்கப்படுகின்றது. 'ஆரியம் நன்று; தமிழ் தீது' என்று கூறிய குயக்கொண்டான் என்பவனை எதிர்த்துச் சாகடித்துவிடவும் நக்கீரர் எழுந்தாராம். இது வேண்டாத ஒன்றானாலும் அப்படி ஓர் உணர்வு முற்காலத்திலேயே நக்கீரருக்கோ மற்று எவருக்கோ எழுந்தது நினைக்கத் தக்கதே.

இவற்றிற்கெல்லாம் பின்னரும் இறைவனை அண்ட இயலாமல் தமிழ் தள்ளித் தடுக்கப்பட்டிருப்பதை உணர்ந்தும் உணராதவர்போல் 'சிவனே" என்றிருக்கும் தமிழர்களைப் பார்த்தார், பாவேந்தர் பாரதிதாசனார்:

"உயிர்போன்ற உங்கள் தமிழ்
கடவுளுக்கே உவப்பாதல் இல்லை போலும்;
உயிர்போன்ற உங்கள்தமிழ்
உரைத்தக்கால் கடவுளதை ஒப்பார்
போலும்"[1]

—என்று தமிழ் உணர்வைக் கெல்லப் பார்த்தார். அசையாத தமிழர்களை எண்ணி நொந்து தமிழையே பார்த்துத் தமிழன்னாய்!

"...... ..................... ...............வன்பு
தொடுத்துமகிழ் நெஞ்சுடையார்
துறைதோறும் நின்னெழிலைத் தோன்றாவண்ணம்
தடுத்துவரல் நினைக்கையிலே
நெஞ்சுபதைக்கும் சொல்ல வாய் பதைக்கும்"[2]

—என்று பதைத்து நின்றார். அவர் அத்துடன் நிற்பவர் அல்லர்; நின்றவரும் அல்லர்.

---

1 தமிழியக்கம் : கோயில்: 1.
2 தமிழியக்கம் : தமிழ்: 2.

"சொற்கோவின் நற்பொற்றித்
திருஅகவல் செந்தமிழில் இருக்கும் போது
கற்கோயில் உட்புறத்தில்
கால்வைத்த தெவ்வாறு சகத்திர நாமம்?"[1]

என்று விடைகாண முடிந்த வினாவை எழுப்பினார்.

## தமிழ் மந்திரம் எது?

தமிழின் பேரிலக்கண நூல் தொல்காப்பியம், மறையையும் மந்திரத்தையும் பின்வருமாறு விளக்குகின்றது:

"நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப"[2]

இந்நூற்பா 'குறையற்ற நெஞ்சோடு நிறைமொழிகளை வழங்கும் சான்றோர் தம் ஆணையாகக் கிளந்தவை யாவும் மறைமொழிகள் எனப்படும்; அவைதாம் மந்திரம் என்று முந்தைச் சான்றோர். கூறினர்' என்று விளக்குகின்றது. எனவே, சான்றோர் ஆணைச் சொற்களே மறை என்றாகின்றது. தமிழ்ச் சான்றோரது இறை பற்றிய ஆணை மொழிகள் யாவும் மறைகளே. மேலும், இந் நூற்பாவில் உள்ள 'என்ப' என்னும் சொல் கொண்டு இக்கருத்து தொல்காப்பியத்திற்குப் பல்லாண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த சான்றோர்களது கருத்து என்பதும் பெறப்படுகின்றது. தமிழ்ச் சான்றோர் யாவரும் நிறைமொழியினரே. அவர்கள் வலியுறுத்திக் கூறும் யாவும் மறைகளே. அம்மறைகளே மந்திரங்கள் என்பதை

"மறைமொழி **தானே** மந்திரம் என்ப" —என்னும் அடியில் உள்ள 'தானே' என்னும் சொல் உறுதிப் படுத்துகின்றது. இங்குக் குறிக்கப்படும் மந்திரம் தமிழ் மந்திரமே. இதற்கு உரை எழுதிய பேராசிரியர் என்னும் உரையாசிரியர்,

"தானே என்று பிரித்தார், இவை
**தமிழ் மந்திரம்** என்றற்கு" —என்றார். எனவே, தமிழ்ப்பெருஞ் சான்றோர்களது நூல்களாம் தமிழ் மறைகளி லிருந்து இறைவன் புகழ் தோய்ந்த பெயர்த்தொடர்களைத்

1 தமிழியக்கம் : கோயில்: 5
2 தொல். பொருள் : 480

தொகுத்துப் போற்றியாக்க வேண்டும். திருக்குறள் முதல் தமிழ்த் தெய்வ நூல்கள் யாவற்றிலிருந்தும் அவற்றைத் தொகுக்கலாம். தொகுத்து வழிபாடு இயற்றலாம். அருச்சனை – வழிபாடு என்பதைப் **போற்றி** என்றே வழங்கலாம்.

## முடிவுரை ஒன்றே.

தமிழ்ப் போற்றிக்கு விரிவான விளக்கம் கூறுதலும், சமய சான்றோரைச் சான்றுக்கு அழைத்தலும், இலக்கண இலக்கியங்களிலிருந்து சான்றுகள் காட்டுதலும் இவைபோன்ற எவையும் ஒரு **தொடருக்கு** முன் வேண்டாதனவே. அந்தத் தொடர் பின் வருவது. இத்தொடரே முடிந்த முடிவுரை:

**தமிழ் நாட்டில் தமிழ்.**

## 'புதையலும் பேழையும்'
## கட்டுரைகள் நாட்டும் ஆய்வு முடிபுகள்.

1 'அம்மா' என்னுஞ் சொல் தமிழ்மொழியின் முதற்சொல்.

2 ஒரு சொல் தனித்து நின்றும் தொடர்மொழியில் அமைந்தும் பொருட் கிளை விடும். ('தலை' என்னுஞ் சொல் சான்று)

3 பிறந்த நாள் விழா தமிழ் நாட்டு மரபு.

4 முகவை மாவட்டப் பகுதி, திருவள்ளுவர் வாழ்ந்த நிலப்பகுதியாகும்.

5 தமிழ்நாட்டில் குடியிருப்பின் தோற்றமும் வளர்ச்சியும்

6 ஆறு பருவ காலங்களுக்கேற்ற ஆறு மாடிகளாக எழுந்தது எழுநிலை மாடம்.

7 தமிழ்நாட்டுக் கம்பம்-சுருளிமலைப் பகுதி நெடு வேள்குன்றக் கோட்டமே சேரன் செங்குட்டுவன் எடுத்த கண்ணகியார் சிலையமைந்த கோட்டம்.

8 மகளிர் மார்பெனும் உறுப்பு மூன்று பகுதிப் பெயர் கொண்டது.

9 கண்ணகியார் திருகி எறிந்தது முலைக்காம்புப் பகுதி; அது நிகழ்ந்ததே.

10 சிலப்பதிகாரம் வரலாற்றுக் காப்பியமே.

11 'முகில் கடல் நீரை முகந்து கருக்கொள்ளும்' என்பது, கண்காணும் உண்மை.

12 கடவுள் வழிபாட்டு முறைகள் வடமொழியாளரால் உண்டாக்கப்பட்டவை.

13 தோற்றத்தில் வழிபாடு தமிழ் மொழியிலேயே இருந்தது.

14 தமிழ் மொழி கடவுள் வழிபாட்டிற்குப் பொருத்தமும் தகுதியும் உடையது.

| நெறித்துணை நூல்கள் : | | குறியீடு : |
|---|---|---|
| **இலக்கியம்.** | | |
| திருக்குறள் | ... | குறள். |
| பொருநராற்றுப்படை | ... | பொருந். |
| சிறுபாணாற்றுப்படை | ... | சிறுபாண். |
| பெரும்பாணாற்றுப்படை | ... | பெரும்பாண். |
| முல்லைப் பாட்டு | ... | முல். பா. |
| மதுரைக் காஞ்சி | ... | மது. கா. |
| நெடுநல் வாடை | ... | நெடு. வா. |
| குறிஞ்சிப் பாட்டு | ... | குறி. பா. |
| பட்டினப் பாலை | ... | பட். பா. |
| மலைபடு கடாம் | ... | மலை. |
| நற்றிணை | ... | நற். |
| குறுந்தொகை | ... | குறுந். |
| பரிபாடல் | ... | பரி. |
| கலித்தொகை | ... | கலி. |
| அகநானூறு | ... | அகம். |
| புறநானூறு | ... | புறம். |
| நாலடியார் | ... | நாலடி. |
| பழமொழி | ... | பழ. |
| ஐந்திணை எழுபது | ... | ஐந். எ. |
| கார் நாற்பது | ... | கார். |
| மணிமேகலை | ... | மணி. |
| சிலப்பதிகாரம் | ... | சிலம்பு. |
| சீவக சிந்தாமணி | ... | சீவ. சி. |
| பெருங்கதை | ... | பெருங். |
| நீலகேசி | ... | நீல. |
| திருநாவுக்கரையர் தேவாரம் | ... | திருநா. தே. |
| திருஞானசம்பந்தர் தேவாரம் | ... | ஞா. தே. |
| சுந்தரர் தேவாரம் | ... | சுந். தே. |
| திருவாசகம் | ... | திருவா. |
| திருமந்திரம் | ... | திரும. |
| மந்திரம் முன்னூறு | ... | மந். மு. |
| திருவாய்மொழி | ... | திருவாய். |
| பெரியாழ்வார் திருமொழி | ... | பெரியா. திரு. |

| | | |
|---|---|---|
| நாச்சியார் திருமொழி | ... | நாச்சி. திரு. |
| திருப்பாவை | ... | திருப். |
| பெரிய திருமொழி | ... | பெரி. திரு. |
| நான்முகன் திருவந்தாதி | ... | நான். திரு. |
| உபதேசரத்தின மாலை | ... | உப. மா. |
| பெரிய புராணம் | ... | பெரி. பு. |
| கம்பராமாயணம் | ... | கம்ப. |
| கந்த புராணம் | ... | கந். பு. |
| வில்லி பாரதம் | ... | வில்லி. |
| பாகவதம் | ... | பாக. |
| கலிங்கத்துப் பரணி | ... | கலிங். ப. |
| நைடதம் | ... | நை. |
| அறநெறிச்சாரம் | ... | அற. சா. |
| முக்கூடற் பள்ளு | ... | மு. பள். |
| திருப்புகழ் | ... | திருப். |
| திருவெங்கைக் கோவை | ... | திருவெங்கை. |
| மதுரைக் கலம்பகம் | ... | மது. கல. |
| பாண்டி மண்டல சதகம் | ... | பா. ம. ச. |
| தண்டலையார் சதகம் | ... | தண். ச. |
| வருணகுலாதித்தன் மடல் | ... | வருண. ம. |
| திருவருட்பா | ... | அருள். |
| மனோன்மணீயம் | ... | மனோன். |
| பாரதியார் கவிதைகள் | ... | பார. க. |
| அழகின் சிரிப்பு | ... | அழ. சி. |
| தமிழியக்கம் | ... | தமிழி. |
| தனிப்பாடல் திரட்டு | ... | தனி. தி. |

**இலக்கணம்.**

| | | |
|---|---|---|
| தொல்காப்பியம் | ... | தொல். |
| அணியியல் | ... | அணி. |
| பேரிசை நூற்பா | ... | பே. நூ. |
| புறப்பொருள் வெண்பா மாலை | ... | பு. வெ. மா. |
| நன்னூல் | ... | நன். |

**நிகண்டு.**

| | | |
|---|---|---|
| சேந்தன் திவாகரம் | ... | சேந். தி. |
| பிங்கல நிகண்டு | ... | பிங். நி. |
| சூடாமணி நிகண்டு | ... | சூடா. நி. |

**மொழிநூல்,**

ஒப்பியன் மொழிநூல்
—ஞா. தேவநேயப் பாவாணர் ... ஒப். மொ.
வடமொழி வரலாறு " ... வட. வ.
முதல் தாய்மொழி " ... மு. தாய்.
*A Hand Book of The Tamil Language*
*— G. U. POPE*

**மருத்துவம்.**

அகத்தியர் குணபாடம் ... அக. கு.
அவ்வைக் குறள் ... அவ். கு.
இராசராசன் கல்வெட்டு
*Tamil Lexicon — University of Madras*
*Wonders of The Univers.*

## அருங் கருத்துகளின் அகர நிரல்

| கருத்து | | பக்கம் |
|---|---|---|
| அகர, மகர ஒலிப்பின் எளிமை | ... | 16, 17. |
| அகரமும் மகரமும் அடுத்தடுத்து ஒலித்தல் | ... | 17, 18. |
| 'அம்ம' என்னுஞ் சொல்லின் கூட்டொலி விளக்கம் | ... | 15. |
| 'அம்மா' என்னுஞ் சொற்கு உணர்வுப் பொருள்கள் | ... | 20—22 |
| அம்மா-பெயர்ப்பொருள் தரல் | ... | 7, 8. |
| அம்மாவின் மூலச்சொல் 'அம்ம' | ... | 11—13 |
| அம்மா விளிப்பொருள் தரல் | ... | 6, 9, 10, 13. |
| ஆகுபெயரும் பொருட்கிளையும் | ... | 42, 43. |
| ஆண்டில் பிறந்தநாளுக்கு முன், பின்நாள்களில் விழா | ... | 65. |
| ஆய்விற்கு உரியது இன்றியமையா நிகழ்ச்சி | ... | 195. |
| இராமலிங்க வள்ளலாரது தமிழ் உணர்வு | ... | 228, 229. |
| இளவெயில் முற்றம் | ... | 148. |

இறைவன் தமிழானவன் ... 230.
உத்தரம் வரை உரை எழுதிய
ஆத்திசூடி உரைகாரர் ... 215.
'ஊருணி' ஓர் அடையாளச் சொல் ... 82, 83.
எழுநிலை மாடத் தொடர்பில் வள்ளலார்
கருத்து ... 129
எழுநிலை மாடம் ஏன்? ... 126, 127.
ஒரு குறளில் விதியும் மாற்று வழியும் ... 109.
கடற்கரையில் எண்ணிக்கையிடும்
பொழுது போக்கு ... 211, 214.

கட்டில் வகைகள்:

கச்சுக் கட்டில் ... 143.
பூவணைக் கட்டில் ... 144.
மணிக்கால் கட்டில் ... 145.
கண்ணகியார் மணி மணியாகக்
கூறப்பெறல் ... 189—191.
கருங்காரே காரானை ... 222—224.
காரண இடுகுறிப்பெயரிடும் வழக்கம் ... 88.
'காரானை தண்ணி குடிக்குது' ... 216.
காரானை புகைப்படச் சான்று ... 224.
கிணறு, கேணி வேறுபாடு ... 83—85.
கி. மு. இல் சதய விழா ... 75.
குழந்தையின் முதற்குரல் 'அம்ம'
என்னுஞ்சொல் ... 18—20.

கூரை முதல் இல் வரை தமிழ்
நாட்டுக் குடியிருப்பு வளர்ச்சி:

உவலைக்கூரை ... 114, 115.
இலைவேய் குரம்பை ... 114.
புல்வேய் குரம்பை ... 114, 115
ஓலைக் குரம்பை ... 115.
இருவிக் குரம்பை ... 115.
வாடுமடல் மனை ... 115.
சுடுமண் மனை ... 116.
வளமனை ... 118.
நல்லில் ... 117.
காண்பின் நல்லில் ... 117.

சிலப்பதிகாரம் உண்மை வரலாற்றுக் காப்பியம் ... 194—196.
சிலம்பின் அகத்தும் புறத்தும் மணி ... 191—193.
சும்மா இருத்தலின் பொருள் ... 102.
சொல் என்னும் நெல் ... 28, 29.
  பதரில் சொல் ... 30.
  சொவியில் சொல் ... 30.
  களையில் சொல் ... 30, 31.
  சோற்றில் சொல் ... 32.
  வித்தில் சொல் ... 32, 33.
சொல் நிழலும் நெல் நிழலும் ... 21, 22.
சொல்—நெல் பொருட்டொடர்புத் தொகுப்பு ... 36.
தடவுத் திரை ... 141.
தமிழ் தெய்வ மொழி ... 234—236.
தமிழ்ப்பாட்டே வழிபாட்டிற்குரியது ... 238.
தமிழ்ப்போற்றிக்குத் தனிநூல்கள் இருந்தன ... 232.
தமிழ்ப்போற்றியில் பாரதியார் கருத்து ... 243.

தலை—பொருட்கிளை

(தனிமொழி)

  உறுப்பு ... 44.
  கவிழ்வு ... 52.
  சிறப்பு ... 46.
  முளை ... 45.
  மேம்பாடு ... 47, 48.

(எண்ணுப்பெயருடன்)

  ஒருதலை ... 49, 52.
  இருதலை ... 52.
  துணைவினையுடன்: படு ... 48, 49.
  வினைச்சொல்லுடன் ... 49—51.
  பெயர்ச்சொல்லுடன் ... 51, 52.
தலை பொருட்கிளைத் தொகுப்பு ... 53.
திருக்கோயில்களில் அவரவர் தாமே வழிபாடியற்றியமை ... 233, 234.

திருவள்ளுவர் வாழ்விடம் முகவை
மாவட்டப் பகுதி .... 91.
தொல்காப்பியர் காட்டிய சொல்லின்
தன்மை .... 41, 42.
தோயன்மாறன் வடிந்த யாக்கையன் .... 153—155.
நபியவர்களது உயிர்க்கொலை பற்றிய
அருளெண்ணம் .... 105, 106.
நிலவுப் பயன்கொள்ளல்
(இடக்கரடக்கல் தொடர்) .... 130, 131.
நெடுநிலைப் பெயரில் உயர்
கட்டடங்கள் .... 118, 120.
'நோ', 'அவம்' முகவை வழக்கு .... 87.
படிப்படியாக அறவுரைஎளிமை-திருமூலர் .... 98, 100.

*பருவகாலப் பள்ளியறைகள் :*

இளவேனிற் பள்ளியறை .... 132, 133.
வேனிற் பள்ளியறை .... 133, 134.
கார்ப் பள்ளியறை .... 135.
கூதிர்ப் பள்ளியறை .... 134.
முன்பனிப் பள்ளியறை .... 135.
பின்பனிப் பள்ளியறை .... 136.
பருவகாலத்திற்கேற்ற ஒப்பனைகள் .... 137.
பள்ளியறைகளில் பருவத்திற்கேற்ற
பொருள்கள் .... 137—150.
பிடி பிடியாக எருவிடும் முறை .... 90.
பிறந்த நாளில் பிணி கடுமையாதல் .... 72, 73.
பிறந்த நாளில் புணர்ச்சி கூடாமை .... 72.
பிறந்த நாட் கொண்டாட்டத்தில்
தமிழ்நாடு, மேலைநாடு. .... 63.
பிறந்த நாள் விழா தமிழ்நாட்டு மரபு .... 62, 65.

*பிறந்த நாள் :*

இலக்கணம் .... 64.
இலக்கியம் .... 67.
திங்கள் தோறும் .... 65.
நன்மைகள் .... 69, 70.
பெயர்கள் .... 66,
பிறந்த நாள் விழாவில் சேரிப்போர் .... 70.

பிறந்த விண்மீனாற் பெயர் இடல் ... 67.
பிறவாத கடவுளர்க்கும் பிறந்த
விண்மீனாற் பெயர் ... 61.
புலவன் உழவனாக உருவகம் ... 33—36.
புழுதி உழவும் தென் மாவட்டங்களும் ... 89.
புழுதி உழவும் திருவள்ளுவரும் ... 80, 90.
பூம்புகார்க் கலைக்கூட எழுநிலைமாட
முகப்பு ... 150.
பூம்புகார் முகப்புக் கோபுரம்எழுநிலை
மாடமாகக் காரணம் ... 112.
போற்றி மொழிபற்றிய பாரதிதாசனார்
கருத்து ... 230, 245, 246.

மகளிர் மார்பிடம் மூன்று பகுதி:

முலைத்தடம் ... 200, 201
கொங்கை ... 201.
முலைக்கண் ... 201, 207.

'மணற்கேணி' ஓர் அடையாளச் சொல் ... 85, 86.
மணிமேகலையில் விட்டுக்கொடுக்கும்
அறவுரை ... 107.
மணியின் பொருள் பத்து ... 185, 186.
மறை என்பது தமிழ் மந்திரம் ... 246.
மனமாசுகள்—திருவள்ளுவர் விளக்கம் ... 103.

மரப்பட்டையின் பயன்கள்:

ஓதியம்பட்டைச் சாறு ... 160.
பூவரசம்பட்டைச் சாறு ... 160, 161.
நாவற்பட்டைச் சாறு ... 162, 163.
இலந்தம் பட்டைச் சாறு ... 163.

மரம் கெடுமாறு மருந்து கொள்ளாமை ... 165, 166.
மருந்துகொள்ளப்பட்ட மரம் ... 156, 157.

மாடத்தில் சாளரங்கள்:

மான்கண் காலதர் ... 119, 142.
கால்போகு பெருவழி ... 146.
நேர்வாய்க் கட்டளை ... 142.
கூதிர்க் குறுங்கண் ... 139.

மாடம் சொல்லாய்வு ... 122, 123.

மாட வகைகள்:

வேயா மாடம் ... 121.
நெடுங்கால் மாடம் ... 129.
நெடுநிலை மாடம் ... 125.
எழுநிலை மாடம் ... 118.
தன்னக மாடம் ... 124.
நீரணி மாடம் ... 122.
மாட ஈட்டகம் ... 122.
'மாடு, உறக்கம்' சொற்களும் முகவையும் ... 86--88.
மார்பு ஒரு மணி 207, 208.
மார்பைச் சிதைத்துக்கொள்ளுதல் மரபு ... 196—199.
மாளிகையின் உள்ளமைப்புகள் ... 118.
மாளிகை-மாடம் வேறுபாடு ... 121.
முகில் கடல் நீரை முகத்தல்-சான்றோர் கருத்துக்கள் ... 217—219.
முகில் கடல் நீரை முகந்த காட்சி விளக்கம் ... 219—221.
முகில் கால் ஊன்றுதல் .... 221.
முகில் கால் கொள்ளின் நீரை முகக்காமல் பெயராது .... 222.
முற்கால முகத் தூளி (Face Powder) ... 140.
மேன்மேல் ஆறு மாடிகள் அமையக் காரணம் .... 126—136.
முற்காலத்தில் மரத்தடியில் கோவிலும் வளர்ச்சியும் ... 231, 232.
வள்ளுவர் கூறும் மாற்று வழிகள் ... 108—110.
வழிபாட்டுப் போற்றிக்கு வடமொழியினும் தமிழ் சிறந்தது ... 240—242.
'வாழைப்பழச் சோம்பேறி' என்பதன் காரணம் ... 96.
விண்மீனால் வாழ்த்துதல் ... 71.
விண்மீன்கொண்டு பிறந்தநாள் விழா. .... 60, 61.
வேள்வி தமிழர் மரபு அன்று ... 237.

"கவிஞர்கோ"
கோவை. இளஞ்சேரனாரது
படைப்புகள்:

கோவை.
இளஞ்சேரன் கவிதைகள்
பதிப்பு 2 — அச்சில்

வள்ளுவர் வாழ்த்து பதிப்பு 2

நகைச்சுவை நாடகங்கள்.

குறள் நானூறு.

முல்லை மணக்கிறது.

தடம் புரண்ட தமிழ் மரபுகள்.


பாரதியின் இலக்கியப் பார்வை.
பதிப்பு 2

புதையலும் பேழையும்.

இலக்கியம் ஒரு பூக்காடு.
(சென்னை, (இ)ராக்போர்ட்டு
வெளியீடு)

SALES RIGHT

Rock Fort Publications (P) Ltd.



wrapper printed by :
prabhu printing house, madras-17